# தக்ஷிண கைலாச புராணம்

மொழிபெயர்ப்பு
யாழ்ப்பாணத்து வதிரி, வித்துவான்
**சி. நாகலிங்கபிள்ளை**



பதிப்பாசிரியர்:
**பிரம்மஸ்ரீ ச. பத்மநாபன்**

உ

சிவமயம்

# தக்ஷிண கைலாச புராணம்

யாழ்ப்பாணத்து வதிரி
வித்துவான்

**சி.நாகலிங்கம்பிள்ளை**

அவர்களால்

சம்ஸ்கிருத மூலத்திலிருந்து
தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

பதிப்பாசிரியர்

**பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன்**

தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர்,
சம்ஸ்கிருதத்துறை,
கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தானம்,
முன்னேஸ்வரம், சிலாபம்.
2018

***தக்ஷிண கைலாச புராணம்*** / பதிப்பாசிரியர் : ச.பத்மநாபன் / முதற்பதிப்பு : மார்ச் ***2018*** / வெளியீடு : ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தானம், முன்னேஸ்வரம், சிலாபம்/ பக்கம் : iv + 156 / தாள் : ***70கி.*** / அச்சு : குரு பிறிண்டேர்ஸ் ***39/2***, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

ISBN : 978 - 955 - 0877 - 56 -0

# பதிப்புரை

ஸ்ரீதக்ஷிண கைலாச மஹாத்மியம் எனும் சம்ஸ்கிருதமொழி மூலமாக அமைந்திருக்கும் இந்நூல் சம்ஸ்கிருத மொழியில் விளங்கும் ஸ்காந்த மஹாபுராணத்தின் உத்தரகாண்டத்தில் அடங்கும் பகுதியாகும். இலங்கையின் சைவ சமய மற்றும் பண்பாட்டு மரபுகளைக் கூறும் சிறப்புடன் விளங்கும் இந்நூலை தொண்ணூறு ஆண்டுகளின் பின்னர் மீண்டும் நவீன தொழிநுட்பத்தை பயன்படுத்தி அதே வடிவத்தில் மீள்பதிப்பு செய்வதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

யாழ்ப்பாணத்து வதிரி நாகலிங்கம்பிள்ளை அல்லது நாகலிங்க பண்டிதர் என அழைக்கப்படும் இந்நூலின் சம்ஸ்கிருத மொழியிலிருந்து சாரமாக மொழிபெயர்த்து வெளியிட்ட நூற்பதிப்புக்கு ஏட்டுப்பிரதியை உபகரித்தவரும், பொருளளித்தவருமாக விளங்குபவர் முன்னேஸ்வரம் தேவஸ்தானத்தின் பிரதமகுருவாகவும் தர்மகர்த்தா வாகவும் விளங்கிய பிரம்மஸ்ரீ நா. குமாரசுவாமிக்குருக்களாவார். அம் மரபில் மீண்டும் இந்நூல் ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானத்தின் வெளியீடாக வெளிவருவது காலத்தின் தேவையும் திருவருட் சிறப்புமாகும்.

இலங்கையின் சைவசயப் பண்பாட்டுக்கு கருவூலங்களுக்கு நிலைக்களமாக விளங்கும் வரலாற்றுக்கு முற்பட்ட இலக்கியங்களாகிய மஹாபாரதம், இராமாயணம் ஆகிய இதிகாசங்களின் தொடர்புகளும் புராணங்களுள் ஸ்காந்தம், வாயு புராணம், சூதசம்ஹிதை, லிங்க புராணம், மத்ஸ்யபுராணம் ஆகியவற்றுடனான தொடர்புகள் பண்டைய மரபையும் சிறப்பையும் இலக்கியச் சான்றாகக் கூறவிழைகின்றன. அம்மரபின் ஸ்ரீமத் தக்ஷிண கைலாச மாஹாத்மியம் எனும் சம்ஸ்கிருத மூல நூலும் அதன் மொழிபெயப்பான தக்ஷிண கைலாச புராணம் எனும் இரு நூல்களும் இலங்கையில் சிறப்புப் பெற்று விளங்கிய நதிகள், தலங்கள் பற்றிய சிறப்புக்களை இருபத்திரெண்டு படலங்களில் முதற் காண்டம் என ஒன்று முதல் பதினொரு படலம் வரையாகவும் உத்தர காண்டம் என பன்னிரெண்டு முதல் இருபத்திரெண்டு படலம் வரையாகவும் கொண்டு அமைந்து விளங்குவது இந்நூலின் உள்ளடக் கமாக விளங்கும் அதேவேளை சிவாலயங்கள், சுப்பிரமணி

யராலயங்கள், வைணவ ஆலயங்கள் பற்றிய சிறப்பினையும்; பாரம் பரியமும் மரபுமுடைய இடங்களது மகிமைகளையும் எடுத்துரைப்பனவாக விளங்குவது சிறப்பம்சங்களாக அமைகின்றன.

இவ்விரு நூல்களையும் மிகக்குறுகிய காலத்தில் பதிப்பிப்பதற்கு பல வழிகளிலும் உதவிய எனது அன்புக்குரிய யாழ்ப்பாணப் பல்கலைகழக இந்துநாகரிகத்துறை விரிவுரையாளரும், சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் செயலாளருமாகிய திருவாளர் தி. செல்வ மனோகரன் அவர்கட்கு எனது மனமார்ந்த நன்றிகள். இந்நூலின் பழைய வடிவத்தை பேணும் அதேவேளை அழகுற மறுசீரமைத்து தந்த குரு பிறிண்டேர்ஸ் நிறுவனத்திற்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

காலத்தின் தேவை கருதிய இந்நூலின் வெளியீடு நேரடியான தமிழ் மொழிபெயர்ப்பு, ஆங்கில மொழிபெயர்ப்பு என்பன மேற் கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றன.

இலங்கையின் புராதன சைவ சமய வரலாற்றிக்கான தனித்து வமான ஆவணமாக விளங்கும் இந்நூலை ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னநாத சுவாமியின் திருவருளைத் துணைக் கொண்டு பதிப்பித்து வைக்கின்றோம்.

**பிரம்மஸ்ரீ ச. பத்மநாபன்**
பிரதம குருவும் தர்ம கர்த்தாவும்,
முன்னேஸ்வர தேவஸ்தானம்,
முன்னேஸ்வரம், சிலாபம்.

தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர்,
சம்ஸ்கிருதத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
25.03.2018

உ

சிவமயம்.

பதினெண்புராணங்களுளொன்றாகிய

காந்தத்திலுள்ள

# தக்ஷிண

# கைலாச புராணம்.

இது

யாழ்ப்பாணத்து வதிரி

வித்துவான்

## சி. நாகலிங்கபிள்ளையால்

வடமொழியிலிருந்து

மொழிபெயர்த்துக் கத்தியரூபமாக

இயற்றி,

கொழும்பு

பிரமஸ்ரீ

## நா. குமாரசுவாமிக்குருக்கள் அவர்கள்

விருப்பத்தின்படி

விநாயக சுந்தரவிலாச யந்திரசாலையில்

அச்சிடப்பட்டது.

வதிரி, யாழ்ப்பாணம்,

---

விபவ ௵ வைகாசி ௴

# இதில் அடங்கிய படல அட்டவணை.


| | முகவுரை. | |
|---|---|---|
| | சிறப்புப்பாயிரம். | பக்கம் |
| 1. | புராண வரலாற்றுப்படலம். | 1 |
| 2. | கிரித்திரய மகிமை யுரைத்த படலம். | 5 |
| 3. | தட்சிண கைலாச மகிமை யுரைத்த படலம். | 9 |
| 4. | தட்சிண கைலாசச் சிறப்புரைத்த படலம். | 17 |
| 5. | கன்னியா கங்கை மகிமை யுரைத்த படலம். | 19 |
| 6. | கங்கோற்பவ முரைத்த படலம். | 28 |
| 7. | கங்கைப் பெருமை யுரைத்த படலம். | 35 |
| 8. | கங்கா ஸ்நான தானப்படலம். | 52 |
| 9. | கதிர்காம மகிமை யுரைத்த படலம். | 61 |
| 10. | கதிர்காம கிரி மகிமை யுரைத்த படலம். | 78 |
| 11. | கதிர்காம தல விசேடப்படலம். | 88 |
| 12. | சப்பிரகாம மகிமையுரைத்த படலம். | 97 |
| 13. | அநுராசபுர மகிமை யுரைத்த படலம். | 99 |
| 14. | வாரிவன லிங்க மகிமை யுரைத்த படலம். | 101 |
| 15. | யமுனை மகிமை யுரைத்த படலம். | 107 |
| 16. | முனீசுவர மகிமை யுரைத்த படலம். | 112 |
| 17. | இராமன் பிரமகத்தி நீங்கிய படலம். | 123 |
| 18. | சுயம்புநாதப் படலம். | 127 |
| 19. | நவசைலப் படலம். | 130 |
| 20. | அசுவகிரிப்படலம். | 131 |
| 21. | வல்லிபுர வைபவ முரைத்த படலம். | 133 |
| 22. | பொன்னாலயப் பெருமை யுரைத்த படலம். | 139 |

உ

சிவமயம்.

# முகவுரை.

உலகின்கண் புகழ் பெற்று விளங்காநின்ற இவ்விலங்கையின் மகிமைகளை எடுத்து விரித்துக் கூறுவது வடமொழிக் காந்தபுராணத்திலுள்ள தக்ஷிண கைலாச மான்மியம் என்னும் இந்நூலேயாகும். வடமொழியாவது தமிழாவது இதுவரையில் அச்சிட்டு வெளிப்படுத்தப்படாமலே இருந்துவிட்டபடியால் அநேகருக்கு இலங்கையின் பெருமை நன்றாய் விளங்காது. ஆனால், மிகச் சில பகுதி இடையிடையே சிலரால் அச்சிட்டு வெளிப்படுத்தப் பட்டும் இருப்பதால், கொஞ்சங் கொஞ்சம் விளங்காமல் இருக்கவில்லை

இறைவனால் அருளிச்செய்யப்பட்ட வேதாகம புராண இதிகாசங்களில் இந்நாளில் அநேகருக்கு நம்பிக்கை எள்ளளவு மில்லை; கெதாநுகெதி நியாயத்தினாலே அவர் வழிச் செல்வாரும் பலருளர். சுத்தாத்துவித சித்தாந்த சைவ நெறியே உண்மை நெறியெனவும், வேத சிவாகம புராண இதிகாசமுதலியன வெல்லாம் இறைவன் வாக்கெனவும் கடைப்பிடித்தொழுகும் பெரியோர் அவர் புரை மொழிகட்குச் செவி கொடாரெனினும், மயங்கும் ஏனையோர் உண்மை தெரிந்து நல்வழிப்படும் பொருட்டு இறைவன் திருவாக்காகிய பதினான்கு வித்தைகளுள் ஒன்றாகிய புராணங்களின் பெருமையுள் ஒரு சிலவற்றை எடுத்துக் காட்டுவேன்.

பரம கருணாமூர்த்தியாகிய பரமேசுவரன் மாயா மயமாகிய இப்பிரபஞ்சத்தகப்பட்டுழலும் ஆன்ம கோடிகளை ஆனந்த பரிதர்களாகச் செய்யத் திருவுளங்கொண்டு பதினான்கு வித்தைகளை வெளியிட்டனர். பதினான்கு வித்தைகளாவன இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்னும் வேதங்கள் நான்கும், வேதாங்கங்கள் ஆறும் ஆகிய பத்தும், மீமாஞ்சை நீதி புராணம் தரும சாஸ்திரம் என்னும் நான்கும் ஆகிய பதினான்குமாகும். இப்படியே யாக்ஞவல்கிய முனிவர் கோமானும் புராணம் நீதி மீமாஞ்சை தருமசாஸ்திரம் அங்கங்களோடு கூடிய வேதங்கள் என்பன தருமத்துக்கும் வித்தைகும் தானங்கள் என்றார்.

அவ்வித்தைகள் வேதத்தை முதன்மையாகப் பெற்றன; வேதமோ சகல அனர்த்தங்களையும் ஒழித்து நற்பயன் கைகூடச்செய்யும் சிந்தாமணியென்பது வைதிகரும் சைவருமாகிய இருபகுதியாருக்கும் ஒப்ப முடிந்த சித்தாந்தமாகும், சமய வரம்பு கடந்து வாயில் வந்தன கூறிப் புறந்தூற்றும் மையறியா மாந்தரைப் பெரியோர் கணக்குமதியாரென வுணர்க; மேலும், "வேதவாக்கியங்களாற் கேட்கற்பாலன்; அவ்விவன்றன்னை வேத வசனங்களால் அந்தணர் அறிய விரும்புவார்" என்பன முதலிய வேதவசனங்களினாலே பரம வஸ்து விசாரம் வேதத்தைக் கொண்டே செய்யவேண்டும் என்பதும், அவ்வேதமே பரமாத்வைதானந்தம் விரும்பும் முத்தி காமனுக்கு மாயாமய பிரபஞ்ச வாதனையையும் ஆணவாதிகளையும் ஒழித்து ஆன்மலாபத்தில் பரமோபகாரகம் என்பதும் பசுமரத்தாணியேயாகும். பரமேசுவரனது சப்தமய திவ்விய சரீரமாகிய அவ்வேதங்கள் அநேக சாகைகளாய் விரிந்து, ஆதி சூட்சும கம்பீராநேகார்த்தங்களுடன் கூடியிருத்தலால், அகில வேதங்களையுங் கற்றுணர்ந்த ஆசிரியர் இன்றி அவைகளைக் கற்றுணர்வது மிகவுங் கடினம். ஆதலால், பரம ஆசிரியராகிய பரமேசுவரன் சர்வ சிரவணாதிகாரம் பெற்றதும், அகில வேதாந்த ரகசியம் நிறைந்ததும், சொல்வன்மையென்பது சிறிதுமற்றதும், கேட்போர் மனதுக்கு ஆனந்த விருத்தி செய்வதும, இனிய புண்ணிய சரித்திரங்கள் நிறைந்ததும், உபபிருங்கணம் என மங்கலப் பட்டம் பெற்றதும், நூறு கோடி கிரந்த அளவு கொண்டதும் ஆகிய புராண சங்கிதையை முதலில் வெளியிட்டார். அதனையே கிருதயுகத்தொடக்கத்தில் பிரமதேவன் முதலிய பதினெண் மகரிஷிகள் கோடி கிரந்தமாய்ச் சுருக்கிப் பதினெட்டாகவே பிரித்து வெளியிட்டனர். பிறகு கலி வருமுன் துவாபர யுகத்தில் அக்கால மாந்தரின் ஆயுட்குறைவை யுத்தேசித்து அவர்களறிந்துய்யுமாறு நாலு லட்சங் கிரந்தமாய்ச் சுருக்கிப் பதினெட்டாகவே பிரித்தவர் சத்தியவதி புத்திரரும் கிருஷ்ணத்துவைபாயனரும் ஆகிய வேதவியாச முனிவரேயாம். இதுவே புராணங்களின் வரலாற்றுமுறைமையென்று பெரியோர் சொல்வர். இந்நாளிலே பலர் இவ்வுண்மைகளை அறியாமல் இருக்கிறார்கள்; வேதவியாச பகவானால் சுருக்கப்பட்ட அப்பதினெண்புராணங்களே இக்கலிகாலத்தில் தோன்றிய நம்மனோர்க்கு வேதார்த்தவுண்மை விளக்கி மோட்சமளிக்குங் கற்பகவல்லியாய் நிலவுகின்றன.

இனி, தட்சிணகைலாச புராணம் என்னும் இவ்வருமையாகிய நூல் அப்பதினெண்புராணங்களுள் ஒன்றாய் மகாதேவன் பெருமையை விரிப்பதாய் விளங்குங் காந்த மகா புராணத்தில் உள்ள தட்சிணகைலாச மான்மியத்தின் மொழிபெயர்ப்பாகும். தட்சிணகைலாசம் என்றது திருக்கோணமலையை. திருக்கோணமலையை யுள்ளிட்டு இலங்கையிலுள்ள எல்லாத் தலங்களையும், புண்ணிய நதிகளையும் நதங்களையும் பரிசுத்தமான திரிகூடமலை சிவனொளிபாத மலை கதிர்காம சைல முதலியவைகளையும் பூசித்துப் பேறு பெற்ற முனிவர் அரசர் தொண்டர் முதலாயினோர் சரித்திரங்களையும் இந்நூல் நன்றாய விளங்க எடுத்துக் கூறும். வடமொழியாவது அதன் மொழிபெயர்ப்பாவது இதுவரையில் அச்சிட்டு வெளிப்படுத்தப்படாமையினாலே இவ்விலங்கையின் பெருமை அநேகருக்குத் தெரியாது; ஆயினும் இதன் சில பகுதி அச்சிடப்பட்டும் இருக்கின்றன.

இது இருபத்தேழு அத்தியாயங்களும் சுமார் 2500 கிரந்தங்களுமுள்ளது. இதனைத் தமிழில் மொழிபெயர்த்தச்சிட்டு வெளியிடும்படி கொழும்பில் இருபத்திரண்டு வருடங்களுக்கு முன்னர் பிரமஸ்ரீ நா. குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் கையெழுத்துப் பிரதியும் நன்கொடையாக ஒரு தொகைப்பொருளும் அளித்தனர். இவர் தந்த பிரதியோடு வேறு பிரதிகளையும் வைத்து ஒப்பிட்டுத் திருத்தி அச்சிடுவதே சிறப்பாதலால், வேறு பிரதிகளையும் தேட முயன்றேன. முயன்று வருகையில் கீரிமலை ஸ்ரீமத் கா. சபாபதிக்குருக்கள் அவர்களும் ஒரு ஏட்டுப்பிரதி தந்தனர். இது பதினோரத்தியாயங்கொண்டது. வேறு பிரதிகளும் அகப்படுமென்றெண்ணி இன்று வரையில் விசாரித்தும் அகப்படவில்லை.

இதனை யான் தமிழில் மொழிபெயர்த்து இருபது ஆண்டுகள் சென்றன. வடமொழிப்புராணம் 138 ம் பக்கத்தில் உள்ள 27 - ம் சுலோகம் வடமொழி இராமாயண சம்புவிலிருக்கின்றது. ஷை புராணம் 64ம் பக்கம் 8 ம் அத்தியாயம் 39 ம் சுலோகமுதல் ஸ்நான விதி கூறும் பகுதிச் சுலோகங்களுட் சில வைத்தியநாததீட்சிதீயத்தில் ஆன்னிககாண்டத்திலே ஸ்நான விதி யுரைக்குமிடத்திலுள்ள சுலோகங்களாயும் இருந்தன; இவைகளைப் பார்த்தவுடன் எனக்கு மனக்குழப்பம் அதிகமாய்விட்டது. காலஞ்சென்ற கொழும்புக் குமாரசுவாமிக்குருக்கள் தந்த பிரதியில் பதினோந்தாம அத்தியாயத்தின் முடிவில் பத்துச் சுலோகங்களை எழுதி இவ்வாறு உமாசங்கிதையி

லே காணப்படுகின்றன என்றும், அதன்மேல் இருபத்து மூன்று சுலோகங்களை எழுதி இவ்வாறு இராமேசுவர தலமான்மியத்திற் காணப்படுகின்றன என்றும், அதன்மேலும் வேறு ஐந்து சுலோகங்களை வரைந்து இவையும் உமாசங்கிதையிற் காணப்படுகின்றன என்றும் ஆக முப்பத்தெட்டுச் சுலோகங்கள் எழுதப்பட்டிருந்தன. இவைகளையும் இவை போன்ற வேறு சிலவற்றையும் நீக்கிவிட்டேன்.

வேறு பிரதிகளின்றி அச்சிட மனம் வராமலிருந்தது. இதுவே இந்நூலை வெளியிடாமைக்குக் காரணமென அறிக; யாரிடமாவது பிரதிகள் இருப்பின், அவைகளை எனக்கு அனுப்பி வைத்தால் இரண்டாம் பதிப்பு அச்சிட உபகாரமாயிருக்கும்.

இத்தமிழ்ப் புராணத்திற் காணப்படும் பிழைகளைப் பொறுத்துக்கொள்ளும்படி கற்றறிந்த பெரியோர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். பிரமஸ்ரீ கா. குமாரசுவாமிக்குருக்கள் அவர்களும் இங்குள்ள அன்பர் பலரும் மனமுவந்தளித்த பொருள்கொண்டு இப்புராணமும் வடமொழிப் புராணமும் அச்சிடப்பட்டன. ஒன்றுக்கும் பற்றாத சிறியேன் இவ்வரிய முயற்சியில் தலையிட்டமை இந்நூல் வெளிவர எண்ணிய அவாவே யன்றி வேறன்று; தோன்றாத்துணையாய் நின்று ஏழையேனை இம்முயற்சியிற் புகுத்திய எம் இறைவன் திருவருளைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

திருச்சிற்றம்பலம்.

விபவஹு வைகாசிமீ<br>வதினி

இப்படிக்கு<br>சி. நாகலிங்கபிள்ளை.

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

யாழ்ப்பாணத்து நவிண்டில் ஸ்ரீமத்

## சு. கனகசபாபதிக்குருக்கள் அவர்கள்

இயற்றியவை

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மறைதெரி வியாத னென்னு மாமுனி வடமொழிக்க
ணறைதரு மரிய நூலா வறிஞர்க ளேத்துகின்ற
விறைகொடென் கயிலைக் கேய்ந்த வின்புறு மான்மியத்தை
முறைபெறத் திராவிடத்தின் முன்னாகத் தியம தாக்கி. (௧)

உலகினா ரொளிதர வோர வுன்னியே யூக்கி யச்சி
னிலகுறப் பதித்தே யீந்தா னிங்கிவ னேவ னென்னிற்
பலர்புகழ் குணக்குன் றன்னோன் பாவுறு மாரி யத்தி
னலமுறு தென்மொ ழிக்க ணண்ணாபன் னூல்க டம்மை. (௨)

ஐயமுன் னேத மின்றி யடைவுட னாய்ந்த தீரன்
பையர வணிந்த தேவைப் பற்றுறப் பயனார் பூசை
செய்யுறு நியமன் சைவச் சீர்மத மாண்பை யென்றும்
வையமே னிறுவ வாற்றும் வளர்பிர சார ணத்தோன். (௩)

காற்பொருட் பயத்த வான கலத்தகு பனுவ றம்மைப்
பாற்படு மாணவர்க்குப் பதிவுறப் பயிற்று மோசன்
ஏற்புறு கீர்த்தி தன்னை யெங்கணு மேற்று சீரான்
மேற்படு மொழுக்கா னென்று மேதினி விழையு மேந்தல். (௪)

மன்றுறு குவளைத் தார்கொண் மாகுல விளக்க மானோன்
றலமுறு கமையார் சின்னத் தம்பிமுற் றவத்து வந்தோன்
பலமுறு நாக லிங்க பண்டிதன் பகர வொண்ணா
நலமுறு வதரி யென்னு நாடுசேர் நகரி னானே. (௫)

அல்வாய்ச் சைவப்பிரகாச வித்தியாசாலை

ஸ்ரீமத்.

## க. சின்னத்தம்பி யுபாத்தியாயரவர்கள்

இயற்றியது.

நேரிசையாசிரியப்பா.

மதியணி யீசன் மன்னுயி ரெல்லாங்
கதிபெற் றுய்வான் கருத்திடை யுன்னி
நண்ணரு மறையி னவிலுறுந் தன்மையாய்
எண்ணு பன்னூன் கெனும்வித் தைகளை
யருளின னம்மறை யானது திவ்விய
வுருவமாய் விரிந்துபி னோங்குறு மனேக
சாகைக ளமைந்த தன்மைய வாயின
வோகைகொள் குருமு னுணர்ந்தா லன்றி
யுண்மைப் பொருளை யுணருதல் கூடா
தொண்ணுமவ் வேதத் துயர்வுறு சாரமாய்
உபவிருங் கணமென வோங்கு மங்கலத்
தபுதலி லாத சதகோடி யாருங்
கிரந்தமா யுள்ள கெழுமிய புராண
வரந்தரு சங்கிதை வகுத்துமு னமைத்தனன்
கிளத்திய வதனைக் கிருத யுகத்தில்
வளப்படப் பிரமா மகரிஷி முதலாப்
பண்ணும் பதினெண் பாற்படு மிருடிகள்
நன்ன யமபெற நவின்றிடு கோடி
கிரந்தமாய்ச் சுருக்கிக் கிளரும் பதினெண்
புராண மாகப் பொலிவுற வகுத்தனர்
பின்னர்க் கலியுகம் பெயராமு னெய்க்தே
யுண்ணுச் துவாபர யுகத்தினி னொரு
லட்சங் கிரந்த மாகச் சுருக்கிப்
பெல்ப்படப் பதினெட் டாகப் பிரித்து
வியாச முனிவரால் வெளியிடப் பட்டு
துயாவுறு முண்மைச் சரிதை யான
பதினெட் டாகப் புகர்புரா ணங்களு

ளதிகமாம் பதின்மூன் றுவதாய் நின்ற
காந்த மெனப்பெயர் கவினுறு புராண
மாந்திருக் கதையென வழங்கு மற்றதன்
சார மாகித் தகுசிங் களமெனும்
பேரால் விளங்கும் பெரியவித் தேசத்
தியல்வுறு மகிமைக ளெடுத்து விளக்கும்
நயமுறு தெட்சிண கற்கயி லாச
புராண மாமிது புகல்வட மொழியொடு
திராவிட முணர்ந்த தெள்ளியோ னாகிச்
சிதம்பர தலஞ்சேர் செய்யகொற் றங்குடி
சதம்பெறு முமாபதி சிவாசா ரியரின்
சீடரி லொருவர் பாடிய பெருமை
தேடிய காசைப் புராண மதற்கு
மூலமாய் விளங்கி முதன்மை பெற்றது
சாலுமத் தெட்சிண தகுபுரா ணத்தைப்
பலவளங் குலவி யிலகிய கொழும்புக்
குமார சுவாமிக் குருக்கள் சொற்படி
யுமாபதி திருவரு ளுள்ளத் திருத்தி
அமிழ்தினு மினிய தமிழ்வள மொழியின்
மக்க ளுணர்ந்திடக் கத்திய ரூபமாய்
விக்கின மின்றி விளங்கிட வச்சினிற்
பதித்தன னல்லோர் பயில்யாழ்ப் பாண
நிதிப்புர மதற்கு நேர்வட பாலினி
லோங்குமா வதரி யொண்பதி வாசன்
தேங்கு கங்கா குலோத்தம சிரேட்டன்
எண்டிசை தனிலு மிசையினை நட்ட
பண்டுறு முயர்குல பாரம் பரியன்
மையுறு கண்டன் மலரடிக் கர்ச்சனை
செய்யுறு நியமச் சைவ சிகாமணி
வடமொழி தென்மொழி வளம்படக் கற்றோன்
அடக்கம் பொறைதயை யன்பு முடையன்
சின்னத் தம்பியாஞ் செல்வ னீன்றெடுத்த
பொன்னங் குன்றன புயாசல முடையன்
ஆண்டகை யாக வமருங்
காண்டகு நாக லிங்க கலைஞனே.

உ

சிவமயம்.

# கடவுள் வணக்கம்.

## விநாயகர்.

ஓங்கு தாரகத் தோருரு வாகிய
தாங்கு மைங்கரத் தந்தி முகத்தனை
யீங்கு போற்றுது மிம்ப ருணர்ந்திடத்
தேங்கு தென்கயி லைத்திறஞ் செப்பவே.

## சிவபெருமான்.

உலகெலா மாகிநின்ற வுயர்பரம் பொருளை யம்மை
நிலவுறு பாகத் தானை நிமலனை மதிதோய் சென்னி
குலவிய சடையான் றன்னைக் கோலமா றேடிக் காணு
திலகுமுண் டகத்தா ளுற்ற விறைவனை யேத்தல் செய்வாம்

## உமாதேவியார்

பூரண ஞானப் பாலைப் புனிதவேட் கருத்துந் தெய்வ
வாரணங் குயிர்க ளீன்ற வன்னைமா தருமச் செல்வி
யாரண நூபு ரங்க ளாற்று மாமலர்த்தா ட்மைப்
பேரணங் குறுத்தும் பாசப் பிணிவிடப் போற்று வாமே.

## விநாயகர்.

அங்குசப் படைகொளு மானை மாமுகத்
துங்கவைங் கரமுறு சோதி யாயொளி
தங்குமோர் மருப்புடைத் தலைவன் றுண்மலர்
பொங்குபே ரன்பினுற் போற்றி செய்குவாம்.

## சுப்பிரமணியர்.

தேறுமெய் யடியவர் சிந்தை தன்னிடை
வேறற நின்றொளி விளக்கு மூர்த்தியாய்
மாறிலா திருந்திடும் வடிகொள் வேலுடை
ஆறுமா முகனடி யன்பிற் போற்றுவாம்.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

# தக்ஷிணகைலாச புராணம்.

## முதற்காண்டம்.

### முதலாவது
### புராண வரலாற்றுப்படலம்.

நைமிசாரண்ணிய வாசிகளாகிய சௌனகர்முதலான முனிவர்கள் கோமதியாற்றங்கரையில் தீர்க்கசத்திரமென்னும் பெயருடைய யாகமொன்றைச் செய்யத்தொடங்கினார்கள். அச்சமயத்தில் சூதபௌராணிகர் அந்தயாகத்தைக்காணும் விருப்பத்தினால் அவ்விடத்தையடைந்தனர். அவர்வருகையைக் கண்டவுடன் முனிவர்யாவரும் சந்தோஷமடைந்தவர்களாகி அவரை ஆசனத்தில் வீற்றிருக்கச்செய்து அருக்கிய பாத்தியங்களினாலே பூசித்துவணங்கி யாகமுடிவில், சுபகதைகளைக் கேட்கும்விருப்பத்தோடு உலகநன்மையின் பொருட்டுச் சூதமுனிவரைப் பார்த்துப் பின்வருமாறு வினவுவாராயினர்.

சூதமுனிவரே! மகானுபாவரே! சகலதருமங்களையுமுணர்ந்தவரே! நாங்கள் தேவரீரிடத்திலிருந்து யாவற்றையும் கேட்டிருக்கிறோம். இனிக்கேட்கவேண்டியவை இல்லை. தக்ஷிணகைலாசம் உத்தரகைலாசம் என்னும் இரண்டும் எல்லா மோக்ஷங்களையும் அளிக்கும் என்று முன்னே உம்மால் எங்களுக்குச் சொல்லப்பட்டது. அவ்விரண்டின் தோற்றத்தையும் வைபவத்தையும் இப்போது கேட்கும் விருப்பமுடையோம், அவைகளைக்கிருபையுடன் எங்களுக்கு அருளிச்செய்தல்வேண்டும் என்று கேட்டார்கள். கேட்டவுடன் சூதபௌராணிகர் பின்வருமாறு சொல்லத்தொடங்கினர்.

பேரறிவுடையவர்களே! நன்று! நன்று! புத்திமான்களும் மகான்களுமாகிய உங்களால் சகலலோகங்களுக்கும் நன்மையுண்டாகும்பொருட்டு நல்லவிஷயம் கேட்கப்பட்டது. இரகசியமாகிய இதனை உங்களுக்குச்சொல்லுகின்றேன். அன்புடன் கேளுங்கள். இருகைலாசங்க

ளின் வரலாறும் மகிமையும் முற்காலத்தில் பக்திமான்களுள் த[illegible]கிய திருநந்திதேவருக்குச் சிவபெருமான் அருளிச்செய்தனர். அத்திருநந்திதேவர் சனற்குமாரமுனிவருக்கு உபதேசஞ்செய்தார். அவர் முனிகணங்களுள் வியாசமுனிவருக்குக் கூறினர். அவ்வியாசமுனிவர் அன்புடன் எனக்குக்கூறினர். நான் அவையாவற்றையும் இப்போது உங்களுக்குச்சொல்லுகின்றேன். அன்புடன் கேளுங்கள். புராணங்கள் பதினெண்வகைப்படும். அவை பிரமம் பதுமம் வைணவம் சைவம் பாகவதம் பவிஷியம் நாரதீயம் மார்க்கண்டேயம் ஆக்கினேயம் பிரமகைவர்த்தகம் லிங்கம் வராகம் காந்தம் வாமனம் கூர்மம் மற்சம் காருடம் பிரமாண்டம் என்பவையாம். அவற்றுள், பிரமமும் பதுமமும் ஆகிய இரண்டும் பிரமபுராணமாகும். ஆக்கினேயம் அக்கினிபுராணமாகும். பிரமகைவர்த்தகம் சூரியபுராணமாகும். நாரதீயம் பாகவதம் காருடம் வைணவம் என்னும் நான்கும் விஷ்ணுபுராணங்களாகும். சைவம் பவிஷியம் மற்சம் லிங்கம் கூர்மம் வாமனம் மார்க்கண்டேயம் பிரமாண்டம் காந்தம் வராகம் என்னும் பத்தும் சைவபுராணங்களாம்.

வாமனம் சனற்குமாரம் தௌர்வாசம் நாரசிங்கம் சிவதருமம் பவிஷியம் நாரதீயம் காபிலம் காந்தம் பிரமாண்டம் காளீகம் மாகேசம் சௌமியம் பார்க்கவம் சௌரம் பாராசரம் மாரீசம் வாருணம் என்னும் உபபுராணங்களும் பதினெண்வகைப்படும். இவைகள் முனிவர்களால் உலகநன்மைக்காக அருளிச்செய்யப்பட்டன. புராணங்கள் பலவாயிருத்தலின், அவைகளில் சாரமுடையதை எடுத்துத்தக்ஷிணகைலாசமாகாத்மியம் என்று என்னால் சொல்லப்படுகிறது. முனிவர்களே! ஆதரவோடு கேளுங்கள் என்று முதலில் முனிவர்களுக்கு வணக்கத்தால் விளங்குபவராய்க்கூறி, அஞ்சலியஸ்தராய்த்தேவர்களை நமஸ்காரஞ்செய்து புராணஞ்சொல்லத்தொடங்கினர்.

அங்கம் வங்கம் கலிங்கம் காம்போசமுதலான ஐம்பத்தாறு தேசங்களுள் சிங்கள தேசம் மேலானது. எந்தத்தேசத்தில கல்வி அபிவிருத்தியில்லையோ? எந்தத்தேசத்தில் பொருள்வரவு இல்லையோ? எந்தத்தேசத்தில் ஆன்மசுகம் இல்லையோ? அப்படிப்பட்டதேசத்தில் ஒருநாளேனும் வாசஞ்செய்வது கூடாது. கருணையற்ற தேசத்தை நீக்குதல்வேண்டும். இடையூறுசெய்யும் பந்துக்களையும், கொடூரமானமுகத்தையுடைய மனையாளையும், ஞானமில்லாத குருவையும் நீக்குதல்வேண்டும். தேசாந்தரம் செல்வோரும் தீவாந்தரஞ்செல்வோரும் தீர்த்தயாத்திரை செய்வோரும் புண்ணியசாலிகளாவார்.

தவமும் மரணமும் வாசமும் புண்ணியதேசத்தில் விசேஷம்
டையும். நித்தியவாசஞ்செய்தலும் மரித்தலும் கேரளதேசத்திலும்
கொங்கணதேசத்திலும் ஆகா. மேருமலையானது பூமிக்குநடுவில் இருக்
கின்றது. நாற்றிசைகளிலும் இருக்கின்றசனங்களுக்கும் உத்தரத்திக்கி
லுள்ளதாய் இருப்பது அம்மகாமேருவென அறிந்துகொள்க. சேது
முதல் கைலாசம்வரைக்கும் உள்ள இடம் கர்மபூமியென்று சொல்லப்ப
டும். அதன் அகலம் ஒன்பதினாயிரம் யோசனையாகும். அதன் நீளம்
நூறாயிரம் யோசனை விஸ்தீரணங்கொண்டது. சேது முதல் கைலாசம்
வரைக்கும் உள்ள இந்தத்தேசமோ நன்மைவாய்ந்த தேசமாயும் புண்ணி
யத்துக்குக்காரணமாயும் உள்ளது. மேருவுக்குத்தென்பாகத்தில் சேது
வுக்கும் இமயத்துக்கும் நடுவில் காமாசலம்வரைக்கும் உள்ள இடம்
பாரததேசமெனப்பெயர்பெறும். பாரததேசம் முற்காலத்தில் ஒன்பது
கண்டங்களாய்ப் பிரிக்கப்பட்டுள்ளது. அவ்வொன்பது கண்டங்களுள்
குமரிகண்டம் உத்தமமானது. பலகாலம்செய்து அடையும் புண்ணியப்
பயன் இதில் அற்பகாலஞ்செய்யும் புண்ணியத்தால் கிடைக்கும். இக்
குமரிகண்டத்தில் பிறகண்டங்களில் பலதவங்களைச்செய்து அவற்றினால்
அடையத்தக்கமேலான பலன் அற்பதவத்தினால் உண்டாகும். அக்கா
ரணத்தாலன்றோ உலகத்தில் குமரிகண்டம் புகழ்படைத்துளது. அந்த
ணர்களே! சர்வாபீஷ்டங்களையும் அளிக்கும் குமரிகண்டத்தில் இரு
சமுத்திரங்களுக்கு நடுவில் இருப்பது சிங்களதேசம். இச்சிங்களதேசத்
துக்குச்சமமாகியதேசம் இதற்குமுன் இருந்ததுமில்லை. இனி உண்டா
கப்போவதுமில்லை.

அரசன் உலகபரிபாலனத்துக்காக ஆறிலொருபாகம் திறை
வாங்குவானேயானால் அவன் தூர்ப்புத்தியுடையோன் ஆவான். அவ்வ
ரசன் புத்திரன்முதலியோருடன் பிரமகற்பம் வரையில் நரகத்தையனு
பவிப்பான். அந்தச்சிங்களதேசத்திலோ அரசர்கள் பிரசைகளுக்குநன்
மைசெய்யும் நோக்கமாய்ப் பத்தில் ஒருபாகம் இறைப்பணம்பெற்று,
தருமத்தோடுபரிபாலனஞ்செய்கின்றனர். கன்னிகையைவிற்கும் மூர்க்
கர்கள் மகாபாதகம் செய்தோராவார். அவர்கள் உலகமுள்ளவரையி
லும் கோரமான நரகத்தில மூழ்குவார்கள்.

கடனாலும் பூமியை அபகரித்துக்கொள்வதாலும் புத்திரி பசு
இவர்களைவிற்பதாலும் வீண்கலவரத்தாலும் வாக்குத்தோஷத்தினாலும்
உண்டாகும் ஐந்துவகையான பாவங்களினாலும் குலம் நாசமெய்தும்.
அந்தச்சிங்களதேசத்தில் உள்ள ஜனங்கள் யாவரும் கன்னிகையைவிற்

கமாட்டார்கள். சர்வ ஆபரணங்களோடும் எருது பசு வீடு தோட்டம் வீட்டுச்சாமான் வேலைக்காரன் வேலைக்காரிகளோடும் சர்வாங்கசுந்தரியாகிய கன்னிகையை குணசாலியான வரனுக்கு மனப்பிரியத்துடன் மணஞ்செய்து கொடுக்கின்றனர். சர்வசாத்திரங்களையும் விசாரித்துணர்ந்தவர்களே! சிங்களமென்னும் மேலானதேசமோ நானாவகையான க்ஷேத்திரங்களால் பிரகாசிப்பது. நானாவகைத்தீர்த்தங்களால் விளங்குவது. நானாவித பட்சிகளும் விலங்குகளும் நிறையப்பெற்றது. அநேக மரங்களையும் வாவிகளையும் கூபங்களையும் தடாகங்களையும் உடையது. கந்தமூலபலம் புல் காட்டம் என்னும் இவைகளால் மேலாய் விளங்குவது. தானியங்களும் அடருகளும் நிறையப்பெற்றது. எப்போதும் மலர்கள் மலர்கின்றன; பழங்கள்பழுக்கின்றன. அத்தேசவாசிகள் எல்லாரும் **சுகசீவனதற்பரர்கள்.**

அயோத்தி மதுரை அவந்தி மாயை காஞ்சி காசி துவாரகை தக்ஷிணகைலாசம் என்னும் இவ்வெட்டுத்தலங்களும் இவ்வுலகத்திலே சனங்களுக்கு மோக்ஷமளிக்குந்தலங்களன்றோ! குமரியென்னும் பெயரிய மகாகண்டமானது கர்மபூமியென்று சொல்லப்படும். குமரிகண்டத்தில் ஆயிரத்தெட்டுச் சிவதலங்களும், நூற்றெட்டு விஷ்ணுதலங்களும் இருக்கின்றன. இவைகளுள் பதினெட்டுச்சிவக்ஷேத்திரங்கள் இவ்வுலகத்தில் மிகவும் முக்கியமானவை.. மறையவர்களே! சிங்களதேசத்தில் சிவக்ஷேத்திரங்கள் இரண்டும் விஷ்ணுக்ஷேத்திரங்கள் இரண்டும் சுப்பிரமணிய க்ஷேத்திரங்கள் மூன்றும் அற்புதமுள்ளனவாய் விளங்குகின்றன. திரிகோணமலை திருக்கேதீச்சரம் என்னும் இரண்டும் சிவக்ஷேத்திரங்களாம். இவை ஜனங்கள் விரும்பியவைகளை அளிக்கும் என அறிக. சுவர்ணாலயம் வல்லிபுரம் என்னும் இரண்டும் விஷ்ணுதலங்களாகும். கண்டகிவடகாந்தாரம் கந்தாத்திரி காமபர்வதம் ஆகிய இம்மூன்றும் சுப்பிரமணியதலங்களெனப்படும். இவை மூன்றும் புண்ணியதலமெனவும் உத்தமதலமெனவும் அறிந்துகொள்க. விநாயகர்முதலான தேவர்களுக்கு அநேக ஆலயங்கள் உள்ளன. இந்த சிங்களதேசமானது சுவர்க்கலோகத்தைப்பார்க்கினும் பெருமையுடையது. அந்தணோத்தமர்களே! தேசங்களுக்குள் எல்லாம் உத்தமதேசம் சிங்களதேசம் எனவுணர்க. மகிமைவாய்ந்த தக்ஷிணகைலாசமானது சிவனது சாந்நித்தியத்துக்குக் காரணமாகும். அதன் பெருமையைக்கூறுவதற்கு வல்லவர் பரமசிவனேயாகும். ஆதலினால், நான் உங்களுக்கு [illegible] மகிமையைச் சங்கிரகமாய்க் கூறுகின்றேன். இந்தப்படலத்தைப் படிப்

பேருக்குச் சௌபாக்கியமும் ஆயுள்விருத்தியும் சுகவிருத்தியும் சம்பத்துவிருத்தியும் சகல இஷ்டசித்திகளும் உண்டாகும். இதனைக்கேட்போர் ஆனந்தமடைவர்.

முதலாவது

புராணவரலாற்றுப்படலம்

முற்றிற்று.

---

## இரண்டாவது

# கிரித்திரய மகிமை யுரைத்த படலம்.

சூதமுனிவர் சொல்லுகிறார்.

நைமிசாரண்ணியமுனிவர்களே! சிங்களதேசமான்மியமும் தலதீர்த்தவிசேடங்களும், தக்ஷிணகைலாச மகிமையும் அற்புதமானவை. இதற்குமுன் என்றால் ஒருவருக்கும் சொல்லப்படவில்லை. உத்தரகைலாசம் எப்படிமிக அற்புதமுடையதோ அப்படியே தக்ஷிணகைலாசமும் மேலான அற்புதமும் பொருந்தியது. அந்தணர்களே! மனத்தை ஒருநிலைப்படுத்திப் பத்திபூர்வமாய்க்கேளுங்கள். பிண்டாண்டம பகிரண்டம் பிரமாண்டம் என்னும் இவைகளை அசையாமல் நிலைநிறுத்தும் பொருட்டுச் சதாசிவன் ஈசன் விசுவரூபி மகேசுவரன் என்னுந் திருநாமங்களையுடைய சிவபெருமானானவர் சிங்களதேசத்திலிருக்கிற திரிகூடமலையில் இடைநாடியையும், இம்மலையில் பிங்கலைநாடியையும், தில்லைவனத்தில் சுழுமுனைநாடியையும் வைத்தனர். விப்பிரர்களே! இம்மூன்று தலங்களும் சர்வலோகங்களிலும் உத்தமோத்தம தலங்களாம். இவைகளை மகேசுவரன் எல்லாவுலகங்களுடைய நன்மையின்பொருட்டு அல்லவோ முற்காலத்தில் படைத்தனர். பூவுலகத்தில் மோக்ஷத்துக்கு அங்கமான தானங்கள் மூன்று இருக்கின்றன. அவை துவாரகையும் தக்ஷிணகைலாசமும் பிரயாகையும் என்று சொல்லப்படும். துவாரகை சமுத்திரமத்தியிலுள்ளது. தக்ஷிணகைலாசமும் அவ்விதமாகவே கடல் நடுவில் உள்ளது. பிரயாகையோ நதிமத்தியிலுள்ளது. பிரயாகை பிரமக்ஷேத்திரம். துவாரகை விஷ்ணுதலம். தக்ஷிணகைலாசம் சிவதலம்.

இம்மூன்று தலங்களும் வேதங்களினால் முழங்கப்படுவன. சிங்களமென்னும் பெயருடைய தேசமானது சர்வதேசங்களிலும் மேலானது. அதில் பலதலங்களும் பலதீர்த்தங்களும் இருக்கின்றன. இதற்கு உவமை மூவுலகத்தும் அறியப்படவில்லை.

திரிகூடபருவதத்தின் உற்பத்தியையும், அதன்மகிமையையும் திருக்கேதீசுவர பருவதத்தின் தோற்றத்தையும், தலதீர்த்த மகிமையையும், உத்தரகைலாசத்தின் உற்பத்தியையும், அதன் சரித்திரத்தையும், தக்ஷிணகைலாசத்தின் தோற்றத்தையும், அதன் மான்மியத்தையும், திருக்காளத்தி திருச்சிராப்பள்ளி என்பவற்றின் வரலாறுகளையும், பெருமைகளையும், பாபநாச தீர்த்தமகிமையையும், விஷ்ணுவின் வழிபாட்டையும், கன்னியாகங்கையின் வரலாற்றையும், வைபவத்தையும், மற்சியேத்திரபருவதம் கந்தகிரி இவற்றின் மகிமையையும், மாணிக்ககங்கைகாவேரி மாவலிகங்கை சிவனொளிபாதமலை சமனொசலம் என்பவைகளின் மகிமைகளையும், கரசைமான்மியத்தையும் கங்காஸ்நான வைபவத்தையும், அமுதகளி உகந்தைமலை அம்சுகாமம் நவகங்கை கதிரைமலை விநாயகர்மலை என்பவைகளின் மகிமைகளையும், சபரையென்னும் பெயர்வாய்ந்த சுவேலாத்திரி திரிகூடம் அநுராசபுரம் கண்டகி வடகாந்தாரம் குதிரைமலை முனீசசரம் சுயம்புநாதம் மாயவனாறு கல்லாறு சுடுநீராறு கோடிதீர்த்தம் கடதீர்த்தம் கங்காவர்த்தபுரம் பொன்னாலயம் கீரிமலை மாவிட்டபுரம் நவகிரி வல்லிபுரம் வாரியப்பர்கோயில் பளை வைரவ க்ஷேத்திரம் யமுனாதீர்த்தம் கிருச்சாவிரதம் என்பவைகளின் பெருமைகளையும் எடுத்துமொழிதற்கு ஆயிரம் முகம்படைத்த ஆதிசேடனே வல்லமையுடையவன்.

விநாயகர் கந்தர் ஐயனார் இராமர் அனுமான் காளிசாரி துர்க்கை சிவன் உமை விஷ்ணு இலக்குமி பிரமன் சரசுவதி வைரவர் வீரபத்திரர் என்னும் சகல தேவர்களும் மகிழ்வோடு சிங்களதேசத்தில் இருக்கிறார்கள். இந்தத் தேசத்துக்கிணையான தேசம் இல்லை. இல்லை.

முனிவர்கள்வினாவுதல்:— சூதமுனிவரே! இத்தேசத்தின்கண் இருக்கும் தீர்த்தங்களின் பெருமையையும், க்ஷேத்திரங்களினது பெருமையையும் வேறுவேறு விரிவாய் உம்மிடம் கேட்கும் விருப்பமுடையோம். எங்களுக்கு அவைகளை அருளிச்செய்தல்வேண்டும்

சூதமுனிவர் விடை:— இவ்விதம் நைமிசாரண்ணியவாசிகளான முனிவர்கள் யாவரும் சூதபௌராணிகரை வினவுதலும் அதற்கவர்

மறுமொழி கூறுவாராயினர். அந்தணர்காள்! நீங்கள் இந்தப்பழமையான இதிகாசத்தைக் கேட்பீர்களாக:—

முன்னொருகாலத்தில் வாயுபகவானுக்கும் ஆதிசேஷனுக்கும் உண்டாகிய விவாதத்தினாலே உரோசமுண்டானமையினாலே இருவருக்கும் பகைவிளைந்தது. ஆதிசேஷன் தனது ஆயிரம் படங்களினாலும் மகாமேருகிரியை விரைவில் மறைத்தனன். அப்பொழுது வாயுபகவானே தனது பலத்தினாலே தாக்கி வீசியடித்தப்பின், மகாமேருசிகரங்கள் பலவற்றுள் மூன்று சிகரங்களைத் தூக்கிக்கொண்டு சென்று, அம்மூன்றனுள் ஒன்றாகிய திரிகூடசிகரத்தைச் சமுத்திரமத்தியிலிருக்கும் சிங்களதேசத்தில் தாபித்தனன். அச்செயல் உலகங்களைக்காக்கும் பொருட்டேயாம். இதனை நினைப்பவன் நினைத்தமாத்திரத்தால் பாவங்களினால் விடப்படுவான்.

அந்தணர்காள்! பின்னர், அவ்வாயுதேவன் இரண்டாவது சிகரத்தைத் திருக்கேதீசுவரத்தில் வைத்தனன். திருக்கேதீசுவரத்தில் சிவன் மகாதேவராயும் சுயம்புவாயும் நித்தியராயும் மங்களகரராயும் பிரசன்னராயும் இருக்கின்றார். பாலாவிக்கரையில் அந்தப்பகவான் கேதீசுவரமகாலிங்கத்தில் எல்லாவுலகங்களுக்கும் நன்மைசெய்யும் பொருட்டு அடியார்விரும்பியவைகளைக் கொடுப்பவராய் எழுந்தருளியிருக்கின்றார். எவன் அந்தக்ஷீரமகாகுண்டத்தில் ஸ்நானஞ்செய்து பிதிரர்களைத் திருப்திசெய்து தசதானங்கள்கொடுத்துக் கேதீசப்பிரானை வணங்குகின்றானோ அவன் சாயுச்சியம் அடைவான். இது திண்ணம். எந்தமனிதன் தன் வாழ்நாளுள் கேதீசுவரநாதனை நினைக்கின்றானோ அவன் பாவங்களால் விடப்பட்டுப் பரிசுத்தனாய்ச் சிவலோகத்தில் வசிப்பான். எவன் க்ஷீரகுண்டத்தில் முழுகிக் கேதீசுவரநாதனைத் துதிக்கின்றானோ அவனுக்குப் போகமும் மோக்ஷமும் கையிலிருக்கின்றன, இவ்விஷயத்தில் சந்தேகமில்லை.

எந்தமனிதன் பாலாவியில்தோய்ந்து கேதீசனைத்துதிப்பானோ அவன் பிரமக்கொலை முதலாகிய பாவங்களினின்றும் நீங்குவான். பாலாவிக்கரையில் பிண்டம்போட்டால், அம்மனிதோத்தமன் கயாசிராத்தத்தினாலுண்டாகிய புண்ணியத்தை அடைவான். இதில் ஐயமில்லை. பிரமன் விஷ்ணு மகேசன் முதலியோரும், தேவர் கந்தருவர் இராக்கதர் வித்தியாதரர் உரகர் சாத்தியர் கின்னரர் கருடர் ஆதித்தியர் வசுக்கள் முனிவர் மெய்ஞ்ஞானிகள் முதலானவர்களும் சந்தோஷசித்தராய் இந்தமகாக்ஷேத்திரத்தில் எப்போதும் வாசஞ்செய்கிறார்கள். இது

னுடைய பெருமையைச்சொல்ல நானும் வல்லனல்லன்; மற்றவரும் வல்லர் அல்ல.

தபோவனங்களே! திருக்கேதீசுவரத்தில் சிவாலயத்தின் முன்பாகத்தில் சிரம்வைத்து மரணமடையும் பிராணிகள் எவைகளேயாயினும் அவற்றின் வலச்செவியில் தாரகமென்னும் மகாமந்திரத்தைச் சிவன் உபதேசஞ்செய்கின்றார். பசு பட்சி மனிதன் விலங்கு முதலான எந்தப்பிராணிகளும் எவ்விதமாய் மரணமடையினும் கேதீசுரநாதன் மகிமையால் சிவாலயத்தின் பாகத்தில் சிரம்வைத்துச் சயனித்தனவகளாய் ஆகிவிடும். அப்பிராணிகளின் வலக்காதில் தருமசொரூபியாகிய சிவபிரான் மகாமந்திரமாகிய ஓங்காரத்தை உபதேசிக்கின்றார். ஆதலினால், எல்லாப்பிராணிகளும் சாயுச்சிய பதவியையடைகின்றன. இத்தலத்திற்கிணையாகிய தலம் புண்ணியமுள்ளதாய் முன் இருந்ததில்லை. இனி உண்டாகப்போவதுமில்லை. முனிவர்களே! மாதோட்டத்தில் பிறப்பவன்யாவன் அவனுக்கு முத்தியானது கையிலுள்ளதேயாம். ஆதலினால் இதைவிடவேறு பாக்கியம் என்ன இருக்கிறது. புண்ணியவானாவது பாவியாவது இந்தத்தலத்தில் மரணமுடிவில் பாலாவியில் தோய்ந்து, கேதீசுவரப்பெருமானை வணங்கிப் பிச்சையெடுத்து உண்டு எந்த மனிதன் இருக்கிறானோ அவன் இந்திரியங்களை வென்றவனாகி கோடி குலத்தோடும் பிறப்பில்லாமல் சாயுச்சியமடைவான். இந்தத்தலத்தில் ஒரு மனிதன் பஞ்சாக்ஷரமந்திரத்தைச் செபித்து ஆவிர்த்திசெய்தால் சித்தியெய்துவான். இதில் ஐயமில்லை.

முனிவர்கள் வினவுதல்:— சூதமுனிவரே! கேதீசுவரம் என்று இத்தலம் உம்மாற்சொல்லப்பட்டது. இதற்கு மகாதுவட்டாபுரம் என்னும் பெயர் எதனால் உண்டாயிற்று?

சூதர் கூறும் விடை:— முன்னொருகாலத்தில் துவட்டா என்பவன் இவ்விடம்வந்து பாலாவியில் முழுகிக் கேதீசனை நன்கு பூசித்து மேலான தவத்தைப் புரிந்தனன். மகாதேவன் தவத்தினால் மகிழ்ச்சிகொண்டு பார்வதிசமேதராய் எழுந்தருளிவந்து காட்சிகொடுத்தனர். உடனே அவரைக்கண்டு தரிசித்து பலவகையான தோத்திரங்களினாலே துதித்துப் புத்திரபாக்கியம் தருக. கிருபைசெய்க. நல்ல பத்தியைத் தருக என்று வேண்டினான். அவர்மகிழ்ந்து "ஏ துவட்டா! கேள்சொல்லுவோம். இத்தலம் உத்தமதலங்களெல்லாவற்றைக்காட்டினும் மிகவும் உத்தமமானது. ஆதலால் நீ இங்கேவாசஞ்செய். நம்மிடம் உனக்கும்

பத்தியுண்டாகும். இந்தத்தலமும் இது முதலாக இவ்வுலகத்தில் உன் பெயரால் மகா துவட்டாபுரம் என்று பெயர் பெறுக. நமது அநுக்கிரகத்தினால் உனக்குவிசுவகர்மா என்று ஒருபுதல்வன் பிறப்பான்'' என்று வரங்கொடுத்துச் சிவபெருமான் மறைந்தருளினார். இத்தலத்துக்கிணையாகிய தலம் எங்குமில்லை. இனி உண்டாவதுமில்லை.

இனி, மூன்றாவது சிகரம் கந்தமாதனமலையாகும். இதனை வாயுதேவன் சேதுமத்தியில் அடைவித்தான். அவ்விடத்தில் மகாபிரபுவும் மகாதேவரும் ஆகிய பரமாத்துமா எப்போதும் சாந்நித்தியமாய் வீற்றிருக்கிறார். அந்த மகாசேதுவில் ஸ்நானஞ்செய்து, பத்தியோடு கூடிய மனத்துடன் கந்தமாதனேசனையும், அகத்தீசனையும், மாருதீசனையும், அமரேசனையும், உமாதேவியாரோடு தரிசித்தால் சர்வாபீஷ்டங்களையும் அடைவாய் இதில் சந்தேகமில்லை. மூன்று சிகரங்களையும் எப்போதும் நினைத்தால் மகாபாதகங்கள் நாசமடையும்.

இந்தப்படலத்தைப் படிக்கக் கேட்பவர்களுக்கு நினைத்தகாரியம் சித்தியெய்தும். எல்லாநோய்களும் விலகும். சர்வதுன்பங்களும் நாசமாகும். மலடி மகப்பேறு அடைவாள். சர்வமங்களமும் உண்டாகும்.

## கிரித்திரய மகிமையுரைத்த படலம்.

முற்றிற்று.

---

## மூன்றாவது
# தக்ஷிணகைலாசமகிமையுரைத்த படலம்.

சூதமுனிவர் சொல்கின்றார். ஓ முனிவர்களே! இனி தக்ஷிணகைலாசத்தின் மகிமையைச் சொல்கிறேன். நீவிர் அவதானமுடையவர்களாய்ப் பிரியத்தோடு கேளுங்கள். பத்தியோடு கேட்போரும், பத்தியோடு படிப்போரும் பிரமகத்தி முதலான மகாபாவங்கள் நீங்கப் பெறுவர். இது திண்ணம்.

## உத்தரகைலைச் சிறப்பு.

முன்னொரு கற்பத்தில் இவ்வுலகமழியப் பிரயசமுத்திரம்பெருகியது. அச்சமுத்திர மத்தியில் விந்துவடிவினளாகிய பராசத்தி ஒரு குமிழிவடிவாயினள். நாதசொரூபியாகிய மகேசுரன் அக்குமிழிமேல் தோன்றித் தமது நெற்றிக்கண்ணாற் பார்த்தனர். அவர் பார்த்துப் பார்த்து அக்குமிழியை உலரச்செய்ய, அக்குமிழி அவ்வடிவமான பர்வதமாயிற்று. அப்பருவதமே கைலாசம் என்னும் பெயரால் எல்லாவுலகங்களிலும் புகழ்பெற்றது. அதன் மகிமைமுழுதும் சொல்வேன், நீங்கள் அன்புடன்கேளுங்கள்.

தென்னை மா பலா வாழை தேமா சண்பகம் சாதி புன்னாகம் எலுமிச்சை ஈச்சு பீசபூரம் கமுகு புளிமந்தாரம் சந்தனம் நாவல் வில்வம் விளா அரசு ஆல் என்னும் மரங்களால் விளங்குவது, சிங்கம் யானை காட்டுப்பன்றி சரபம் புலி புருஷாமிருகம் மான் காடி கஸ்தூரிமான் காட்டெருமை முயல் கரும்பாம்பு பெரும்பாம்பு தவளை வெள்ளைத்தவளை அன்னம் சாரசம் போண்டம் மயில் கருடன் வெள்ளைப்புறு பெண்கிளி கிளி குயில் என்பவைகளால் எப்போதும் சேவிக்கப்படுவதும் ஆகிய அந்தமகா கைலாசபருவதத்தில் கங்கைமுதலாகிய நதிகளெல்லாம் எப்போதும் இருக்கின்றன. சர்வதாதுப்பொருள்களும் நிறைந்தவைகளாய், பலவகை இரத்தின சோதியுடையவைகளாய், மிகுந்த சோதியுள்ளவைகளாய், மேலோங்கியவைகளாய் விளங்கும் சிகரங்களால் எங்கும் சூழப்பெற்றது அக்கயிலாயம். அதன் உச்சிசிகரம் எப்போதும் கோடிசந்திர காந்தியோடு கூடியது. விந்துநாத வடிவமானது. அது ஒளியுள்ளதும் நிலையுள்ளதும் மேலானபதமும் ஆகும். அவ்விடத்தில் ஒரு மகாவிருக்ஷமானது தேவர்களால் வழிபடத்தக்கதாயும் பெரிய பழங்களையுடையதாயும் கற்பகமென்னும் பெயருடையதாயும்விளங்கும். எப்போதும் நினைத்தவைகள் எல்லாவற்றையும் கொடுக்கும். சர்வமனோகரமானது. அந்தக்கற்பக விருக்ஷத்தின்மூலம் சோதிப்பிழம்பால் விளங்கும்.

வெள்ளி பொன் நீலம் படிகம் மாணிக்கம் சந்திரகாந்தம் சூரியகாந்தம் ஆகிய இவைகளால் செய்யப்பட்ட நான்குவாசல் உள்ள ஒன்பது பிராகாரங்கள் இருக்கின்றன.

முதலாவது பிராகாரம் வெள்ளியாற்செய்யப்பட்டது. நான்கு கோபுரங்களையுடையது. அதில் நூற்றொருகோடிகொடுமுடிகள் இருக்கின்றன. பல்வகைப்பூதங்களும் அளவிலடங்காத நதிகளும் இருக்கின்

றன, கா்ளிகளும் வைரவகணங்களும் ஐராவத முதலிய மங்களகரமான யானைகளும் வேதசொரூபமாகிய குதிரைகளும் அங்கேயிருக்கின்றன.

முனிவர்களே! இரண்டாவது பிராகாரம் ஒழுகக்காய்ந்த பொன்னால் இயற்றப்பட்டது. அங்கே பதினொருலக்ஷம் கொடிமுடிகள் விளங்காநிற்கும். சரசுவதி பிரமா ஸ்மிருதிகள் வேதங்கள் மந்திரசாஸ்திரங்கள் புராணங்கள் ஆகமங்கள் பூதசேனாதிபதிகள் வசுக்கள் உருத்திரர்கள் தேனுக்கள் தேவர் கந்தருவர் கருடர் வித்தியாதரர் உரகர் அசுரர் ஐந்துமணிகள் நவநிதிகள் அம்மைபை முதலாகிய தேவமாதர்கள் ஆகிய யாவரும் அவ்விடத்தில் எப்போதுமிருக்கின்றனர்.

அதற்கப்பால் மூன்றாவது பிராகாரம் நீலரத்தினத்தினாற் செய்யப்பட்டது. அவ்விடத்தில் வெள்ளிமயமான ஒரு லக்ஷம்கொடிமுடிகள் இருக்கின்றன. இலக்குமி நாராயணன் இந்திராணி இந்திரன் தேவரிஷிகள் பிரமரிஷிகள் ஆகிய இவர்கள் இரவும் பகலும் அவ்விடத்திலிருக்கின்றனர்.

அதற்கப்பால் நான்காவது பிராகாரம் படிகத்தினாற் செய்யப்பட்டது. அது பதினாயிரத்தொரு கொடிமுடிகளையுடையது. கணபதி கந்தர் நந்தி பிருங்கி மகாகாளர் என்னும் சிவகுமாரர் இடபம் துர்க்கை உருத்திரசக்தி கணங்கள் பஞ்சபிரம மந்திரவடிவான தேவர்கள் உருத்திராணிகளோடுகூடிய உருத்திரர்கள் என்னும் இவர்களெல்லாரும் எப்போதும் மனக்களிப்போடும் அவ்விடத்திலிருக்கிறார்கள்.

அதற்கப்பால் ஐந்தாவது பிராகாரம் மாணிக்கப்பிராகாரம். அதில் ஆயிரத்தொரு சிகரங்கள் உள்ளன. எழுகோடி மகாமந்திரவடிவினராகியநடராசர் சிவகாமசுந்தரிக்கு ஆனந்தம்விளையும் அநவரத ஆனந்தத்தாண்டவம் செய்வர்.

அதற்கும்அப்பால் சந்திரகாந்தப்பிராகாரம் ஆறாவது. நூற்றொருகொடிமுடிகள் ஒருகோடி சந்திரகாந்தியுள்ளன. ஐம்பத்தொரு அக்ஷரசத்திகளால் விளங்காநிற்கும்.

அதன் நடுவில் ஏழாவது பிராகாரம் சூரியகாந்தத்தினாற் செய்யப்பட்டது. காந்தியோடும் அற்புதத்தோடும் கூடிய பதினொரு கொடிமுடிகள் அங்கேவிளங்குவன. அவ்விடத்தில் பதினொருருத்திரர்கள் சுகத்தோடு இருக்கிறார்கள்.

அதன் நடுவில் மரகதப் பிராகாரம் எட்டாவது. அது பச்சை நிறமான ஐந்து கொடுமுடிகளோடு விளங்கும். மகேசுரன் புத்தி சக்தி சமேதராய் அங்கு எழுந்தருளியிருக்கின்றார்.

அதன் நடுவில் ஒன்பதாவது பிராகாரம் நவமணியாற்செய்யப் பட்டது. அவ்விடத்தில் சிந்தாமணிக்கிருகம் கோடி சூரியர்போன்று விளங்கும். அதன் கொடுமுடி சூடாமணியினாற் செய்யப்பட்டது. அந்தச்சிந்தாமணிக்கிருகத்தில் இரத்தின சிங்காதனத்தின்மேல் மனோன் மணிசக்தியோடு சதாசிவன் எழுந்தருளியிருப்பர். சூடாமணியினாலா கிய ஒரு கொடுமுடியையுடைய ஆலயத்தின்கண்ணே மெய்ஞ்ஞானப் பிழம்பின்மத்தியில் அம்மகா சதாசிவன் ஞானவடிவினராய் நிர்மலராய் இருக்கின்றார். அவர் பராற்பரதரும், பரமாணுவும், பராற்பரரும் ஆவர்.

அக்கிரியின்கண்ணே மகாபத்மாசனமத்தியில் நல்ல மண்டபத் தில் இரத்தின பீடத்தின்கண்ணே சுகாசீனராய் சங்கரர் லோகசங்கர ராய்வீற்றிருந்தனர். அப்போது நந்தியும் பிருங்கியும் பலவகைத்தோத் திரங்கள் சொல்லித்துதிக்கவும், தும்பு கலாவதியென்னும் வீணையையும் நாரதர் மகதியாழையும் தங்கள் தங்கள் கைமிசைத்தாங்கிப் பரமசிவ னுக்கு இருபக்கங்களிலும் நின்றுகொண்டு கானஞ்செய்யவும், சித்தர் சாரணர் கந்தருவர் எப்போதும் நல்ல ராகங்களையுடைய இசைப்பாக்க ளைப்பாடவும், தேவமாதர்கள் நாட்டியமாடவும், பிரமா விஷ்ணு இந் திரன் முதலானதேவர்கள் தம்மைவணங்கவும், இந்தவிதமாய்ப் பரம சிவன் எழுந்தருளியிருந்தனர்.

## தக்ஷிணகைலாசோற்பவம்.

இவ்வாறாக இருந்தசிவபெருமான் ஒரு திருவிளையாட்டினால் தேவர்களைப்பார்த்துப் புன்சிரிப்போடு பின்வரும்வாக்கியங்களை அருளிச் செய்வாராயினர். ஓ தேவர்களே! நீங்கள் எல்லீரும்கேட்பீராக. யாவ ரையும் படைக்கும்பொருட்டுப் பிரமதேவரையும் காக்கும்பொருட்டு விஷ்ணுவையும் அழிக்கும்பொருட்டு உருத்திரனையும் லோகங்களைத் தாங்கும்பொருட்டு ஆதிசேஷனையும் நியமித்துவைத்தோம் என்று பரம சிவன் அருளிச்செய்தார். இதனைக்கேட்டவாயுதேவன் பரமகோபங் கொண்டு இவ்வாதிசேடனுக்கு என்னைக்காட்டிலும் உலகத்தைத்தாங் குவதில் அதிகபலம் உளதோ? என்று சபைமத்தியில் கடுங்கோபவாக்கி யத்தைக் கூறினான்.

அதனைக்கேட்ட ஆயிரம்பண முடிகளையுடைய ஆதிசேஷபகவான் மிகுந்தகோபமுடையவனாய் ஓ வாயுவே! நீ எனக்கு உணவாகின்றவன். உனக்கு என்ன வலியுளது? நானோ சர்வலோகங்களுக்கும் கண்களாகிய சூரிய சந்திரர்களை உண்டும்விடுவேன். உமிழ்ந்தும்விடுவேன் என்று அவ்வாயுவுக்குவிடை கூறினன்.

அதுகேட்டு, வாயுதேவன் கோபங்கொண்டவனாய்ப் புனசிரிப்புடன் ஆதிசேடனைப்பார்த்துச் சொல்லுகிறான்; ஓ ஆதிசேடனே! நீ இவ்விதவார்த்தையை ஏன் கூறினை? உன்பிராணனை நான் அன்றோ தரித்திருக்கிறவன்? கருடன் பார்த்தமாத்திரத்திலே உனது கருவம் அழிந்துபோகின்றதே! என்றான். இந்தவிதமாய் நானே சமர்த்தன்; நானே பெரியவன்; நானேவலியவன் என்று அகம்பாவங்கொண்ட அவ்விருவருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று. இப்படிவாதம் செய்தனர் அவ்விருவரும். பின், மகாதேவரது அனுக்கிரகத்தினால் கைலாசமலையின் கொடுமுடிகளெல்லாவற்றையும் சர்ப்பராசன் தன் படங்களினால் மூடிக்கொண்டு தனதுமிக நீண்டவாலினால் அக்கைலாசமலையின் அடியையும் சூழ்ந்து சுற்றியிறுக்கிக்கொண்டனன். இதனைக்கண்டுவாயுபகவான் கோபங்கொண்டு சிவந்தகண்களையுடையவனாய் விரைந்து பிரசண்டவேகங்கொண்டு அவ்வாதிசேடனை அடித்தான். அந்தநேரத்தில் எல்லாவுலகங்களும் பயத்தினாலே கலக்கங்கொண்டன. தேவர்களும் முனிவர்களும் பயத்தினால் நடுக்கங்கொண்டார்கள். பின், அவர்கள் அக்கைலையில் கைலாசநாதரைப்பார்த்து ஓ கைலாசபதியே! சருவேசரே! பார்வதிப்பிராணநாயகரே! அடியேங்களைக்காத்தருளுக. கருணையங்கடலே! எங்களுடைய அச்சத்தை அகற்றியருளுக. என்று பலவாறுகத்தோத்திரஞ்செய்தனர்.

அப்படியான தோத்திரங்களினால் மகிழ்வடைந்த சிவபெருமான் பிரமாவை நோக்கி, ஓ பிரமாவே! திரிகோணசிகரத்தில் எமக்கு ஓர் அற்புதமாகிய பீடத்தைச் செய்வாயாக எனக்கட்டளையிட்டனர். அதனைக்கேட்ட பிரமதேவரும் அவ்வாறேசெய்வேன் என்றுசொல்லிச் சென்று மகாதேவரது அனுக்கிரகத்தினால் கைலாசம் என்னும் பெயரையுடையதும், நவரத்தின மயமானதும், சுபகரமானதும், கோடிசூரியப் பிரகாசமுடையதும், கோடிசந்திரர்களது குளிர்ச்சியையுடையதும், உத்தமோத்தமான பீடங்களெல்லாவற்றினும் சிறந்ததும் ஆகிய அழகிய சிங்காதனத்தைத் திரிகூடசிகரத்தின்மேலே விதிப்படி நிருமித்தனர். இவ்வாறு பிரமாவினால் நிருமாணஞ்செய்யப்பட்ட பீடத்தைக்கண்டு

யனமகிழ்ச்சியுடையவராய் மகாதேவரானவர் உமாதேவியாரோடு சுவர்ணலிங்கவடிவினராகி கோடி சூரியப்பிரகாசமுடையராய் பிரமா விஷ்ணு தேவேந்திரன் முதலானதேவர்கள் புடைசூழப்பெற்றவராய்ச் சென்று அப்பீடத்தின்மேலே எழுந்தருளியிருந்துகொண்டு ஆதிசேஷனைப்பார்த்துக் கூறுவாராயினர். ஒ சேஷா! நான் சொல்கின்ற மிகவும் அற்புதமும் இரகசியமும் ஆகியவாக்கியத்தைக்கேள்.

குமரிகண்டமானது மற்றைய கண்டங்களினும் மிகவும்மேலானது. தக்கிண தேசத்தவர்களின் இரட்சிப்பின்பொருட்டு நம்மனம் விரும்பியது. நீயும் வாயுதேவனும் சமபலமுடையவர்களே. ஆதலின் நும் இருவருக்கும் பகை இவ்வளவும் போதும். மிகுந்த அறிவினையுடைய சர்ப்பராசனே! லோகானுக்கிரகத்தின்பொருட்டு உன் படங்களுள் ஒன்றை உயர்த்துக என்றனர். அப்படியேசெய்வேன் என்று சேடனும் ஒரு படத்தை உயர்த்தினன். அச்சமயத்தில் பெரிய வாயுதேவன் சிவானுக்கிரகத்தினலே பெரியவலிமையும் பராக்கிரமமுமுடையவனாய் வேகத்தோடு கைலாசத்தின் தென்புறத்துள்ள மூன்று கொடுமுடிகளைப் பிடுங்கியெடுத்துக்கொண்டு தென்திசைநோக்கி வந்தனன். அச்சமயத்திலே தேவர்களெல்லாரும் பூமழைபொழிந்தனர்.

அம்மூன்று கொடுமுடிகளுள் நடுக்கொடுமுடியானது சுபமானதும், முக்கோணவடிவானதும், அவ்வியக்தமானதும், சர்வபாவங்களையும் போக்குவதும், சர்வதுக்கங்களையும் அழிப்பதும், பரிசுத்தமானதும், பரம அற்புதமானதும், ஆம். அக்கொடுமுடியை வாயுதேவனானவன் சகலலோக நன்மையின்பொருட்டு வசந்த இருதுவும் சித்திரைமாதமும் பூருவபக்கமும் ஞாயிற்றுக்கிழமையும் அத்த நட்சத்திரமும் விருத்தியோகமும் தைதுலகரணமும் கூடிய பௌர்ணிமைத்திதியிலே குருவோரையிலே சனிமகர ராசியிற்பிரவேசித்த காலமும் இடபலக்கினமுமாகிய சுபமுகூர்த்தத்திலே முன்சொல்லப்பட்ட திரிகூடத்துக்கு வடபாகத்தில் முப்பதுயோசனைதூரத்தில் சமுத்திரதீரத்தில் தாபித்தனன். அக்கொடுமுடியை அதுமுதல் இவ்வுலகத்தில் தக்ஷிணகைலாசமெனக் கூறுவார்கள்.

மகேசுவரானது மகிமையினால் இரசிதாத்திரியென்றும் திரிகூடமென்றும் திரிகோணசலம் என்றும் அக்கொடுமுடி மூன்று பேர்களைப் பொருந்தும். மதுரைக்குக்கிழக்குப்பாகத்தில் உள்ளது.

## தக்ஷிணகைலாசமகிமை.

அநேக ஆச்சரியமயமான இக்கைலாசம் சகல சித்திகளுக்கும் இருப்பிடமானது. நினைத்த மாத்திரத்தினால் சர்வப்பிராணிகளுக்கும் சர்வசித்திகளையுங்கொடுக்கும். இக்கயிலாயமலையின் உயரம் எவ்வளவிருக்கும்? இதன் விஸ்தாரம் எவ்வளவு? இதன்பெருமையாது? சூதமுனிவரே! இவை எல்லாவற்றையும் நாங்கள்கேட்கும் விருப்பமுடையோம். ஆதலின் இவைகளைக்கிருபையுடன் சொல்லியருள்க என்றனர்.

சூதமுனிவர் சொல்லுகின்றார்.

இருஷிகளே! நீங்களியாவரும் மன அவதானத்தோடு கேளுங்கள். கைலாசமலையின் மூலம் ஒருயோசனைதூரம். பூமிக்குமேல் ஆறு தண்டய உயரம். அநேக நிறங்களோடு விளங்காநிற்கும். அதனுடைய நுனியின் வி[illegible]ந்து தண்டம் என்று சொல்லப்படும். அதன் நாற்புறமும் நன்னான்கு யோசனைதூரம் விசாலம் மகாக்ஷேத்திரமும் மகாபுண்ணியத்தானமுமாய் உள்ளது தலங்களியாவற்றையும்விட உத்தமமானதென வுணரத்தக்கது. இந்தக்கொடுமுடியின் மகாகாந்தி வெண்மையானது. மனோகரமும் பொன் இரத்தினமயமும் நித்தியம் முக்கோணவடிவமும் பொருந்தியது. அழிவில்லாதது. இன்னும், அப்பர்வதமானது தன்னைத்தரிசித்த மாத்திரத்தால் போகமோக்ஷங்களையளிக்கும். நிர்க்குணமும் நிஷ்களமும் நித்தியமும் பராசத்திவடிவமுமாய் விளங்காநிற்கும். அதன்மத்தியில் பிலம் ஒன்று இருக்கிறது. அது இரகசியமானது. பரமானந்தகோவிலானது கோடி சூரியப்பிரகாசமாய், சர்வமங்களங்களோடு கூடியதாய் விளங்காநிற்கும். ஆயிரம்பொற்கம்பங்களோடும் நூறு இரத்தினக்கம்பங்களோடும் ஆறுவாடிகைகளோடும் ஒன்பது பிராகாரங்களோடும் விசித்திரமான கோபுரங்களோடும் கொடுமுடிகளோடும் கூடியது. மாணிக்கத்தோரணங்களோடு கூடியநான்கு கோபுரவாயில்களையுடையதும் கொடிகள் பலவிளங்கும் பலவகை இரத்தினமண்டபங்களையுடையதும் இரத்தினச் சன்னல்களையுடையதும் தீபவுத்தியான வனங்களையுடையதும் பொற்றாமரைத் தடாகங்களையுடையதும் பொன்மயமான நெல்லுகளோடும் அன்னமும் சாரசமும் சூழ்ந்த அனேக அதிசயங்களையுடைய சிங்காரவனங்களையுடையதுமாய் விளங்காநிற்கும்.

கற்பகதருவின் மூலத்திலே சிந்தாமணிக்கோயிலினுள்ளே பஞ்சப்பிரமவடிவமாய், திவ்வியமாய்விளங்கும் இரத்தின மஞ்சத்தின் மத்தி

யிலே அணிகள்சூழ்ந்த அன்னத்தூலத்தின்மேலே சந்திரசேகரானவர் ஒரு முகத்தினரும் மூன்று கண்ணரும் புஷ்பபாணம் கரும்புவில் பாசம் அங்குசம் என்பவைகளைக்கையிற்கொண்ட சதுர்ப்புசங்களையுடையவரு மாய்ச் சகல ஆபரண அலங்காரமுடையராய்க் கோடி சூரியப்பிரகாச ராய்ப் புன்முறுவலினராய் பதுமாசனத்திலெழுந்தருளியிருப்பர்.

அந்தச்சங்கரன் தன்மடியின்மீது உலகமாதாவாய்த் திவ்விய சௌந்தரியமுடையவராய் இளஞ் சூரியமண்டலப்பிரகாசமுடையவராய் நான்கு புயம் மூன்றுகண்கள் உடையராய் பாசம் அங்குசம் கருப்புவில் புட்பபாணம் இவைகளைத்தரித்தவராய் புன்முறுவலினராய் விளங்கும் மகாதேவியாரை வைத்துக்கொண்டு இருப்பர். வலப்பாகத்தில் விநாய கரும் இடப்பாகத்தில் சண்முகரும் வீற்றிருப்பர். நந்தி பிருங்கி மாகா ளர் வடுகர் முதலானோர் சூழ்ந்திருப்பர். நவாவரணங்களிலும் பரிவார தேவர் சூழ்ந்திருப்பர். தும்புருநாரதர் கீதம்பாடுவர். கந்தருவர் முத லியோர் நின்றுபாடுவர். தேவமாதர் நடனஞ்செய்வர். நாட்டியங்களி னுலும், கீதங்களினுலும், கூத்துக்களினுலும், வேதமுழக்கங்களினுலும் தேவதுந்துபி முழக்கங்களினுலும், தோத்திரமந்திரங்களினுலும் பொலி யப்பெற்றுக் காமேசுவரபாராணந்தராய், வேண்டியபொருள்களை வேண்டி யாங்கு அளிப்பவராய், சுந்தரவடிவினராய், இலிங்கவடிவமுடையவராய், மகாசதாசிவராய், சாந்தராய், சச்சிதானந்த வடிவினராய், சகள நிஷ்க ளராய், சாமகானப்பிரியராய், சிவனாய், விந்துநாதவடிவினராய், தேவ ராய், தாரகபிரமமாய், நித்தியராய், கோணேசப்பெருமான் இவ்வாறுகத் தக்ஷிணகைலாசகிரியில் அம்பிகையாரோடு எழுந்தருளியிருப்பர். வேதா விரிஞ்சி, பூசிருட்டா, பதுமபூதா, பிதாமகன், கமலவாசி, சுயம்புநான் முகன், விசுவசிருட்டா, என்னும் பிரமர்கள் ஒன்பதுபேரும், விஷ்ணு, தாமோதரன், கிருஷ்ணன், வாசுதேவன், அச்சுதன், தாமரைக்கண் ணன், பத்மநாபன், கேசவன், நாராயணன், சக்கிரபாணி என்னும் விஷ் ணுக்கள் பதின்மரும், கிரீசன், சங்கரன், சம்பு, சோதிக்கண்ணன், கலா தரன், விருபாக்கன், பகவான், சூலி, வாமேசன், மூர்த்திகங்கன் கங்கா தரன் என்னும் உருத்திரர் பதினொருவரும், திரிகோணமென்னும் பெய ரையுடைய சிற்சபையிலே ஒவ்வொருகோணங்களிலும் இருப்பார்கள். இச்சபையின்மத்தியில் பரமான்மாவாகிய நடேசரானவர் எப்பொழுதும் ஆனந்ததாண்டவஞ்செய்து தமது அருட்சத்தியாகிய உமாதேவியை மகிழ்வித்துக்கொண்டிருப்பர். இந்த ஞானசபையைத் தரிசனஞ்செய்த யாத்திரத்தினுலே மேற்சென்னமுண்டாகாது.

மறையவர்களே! இரண்டாவது சிகரம் திருக்காளத்திமலையாகும். இதனை நினைத்தமாத்திரத்தினால் சகல பாவங்களும் நீங்கப்பெறுவார்கள். மூன்றாவது சிகரம் திரிசிரா என்னும் பெயர்வாய்ந்த மலையாகும். இதனை நினைப்பதாலும் துதிப்பதாலும் தரிசிப்பதாலும் போக மோக்ஷங்கள்கிடைக்கும்.

தக்ஷிணகைலாசமகிமையுரைத்தபடலம்

முற்றிற்று

---

## நான்காவது

# தக்ஷிண்கைலாசச்சிறப்புரைத்தபடலம்

இந்தத் தக்ஷிணகைலாசத்திலே ஏழுகுகைகள் இருக்கின்றன. அவற்றுள் வடகதுககுகையில் அகத்தியர் வாமதேவர் புலத்தியர் பலகாரிதர் உசத்தியர் ரோமசர் வசிட்டர் முதலான பிரமஞானிகளாகிய இருடியர் வசிக்கிறார்கள். தெற்குக்குகையில் இரத்தின தீர்த்தமிருக்கிறது. கிழக்குக்குகையில் முத்துத்தீர்த்த மிருக்கிறது தென்மேற்குக்குகையில் இரசித ஆலயமிருக்கிறது அகமோயிற் கதவுகளும் இரசிதமே. ஒருபூதம் வாயில் காவல்செய்து எப்போதுமிருக்கும். மேற்குக்குகையிலே கங்கை எப்போதும் பெருகிக்கொண்டிருக்கும். வாயுதிக்கில் நாகலோகத்துக்கு மார்க்கம் இருக்கின்றது. ஈசானதிசையில் தவசித்தியும் மோக்ஷசித்தியும் இருக்கும். இந்திரன் அக்கினி யமன் நிருதி வருணன் வாயுகுபேரன் ஈசானன்முதலிய திக்குப்பாலகரும், இந்திராணி சுவாகை சாங்கரி தாமசி பார்கவி சதாகதி சம்பத்கெதி உருத்திராணி முதலிய மனைவிமாரும் கங்கைமுதலிய நதிகளும் சப்த சமுத்திரங்களும் இமயம் முதலிய மலைகளும் மலைகாடுகளோடுகூடிய பூமியும், தைத்தியர் தானவர் இயக்கர் பிசாசர் இராக்கதர் சப்தமாதர்களும் ஜயை விஜயை என்பவர்களும் ஹரீ ஸ்ரீமதி துஷ்டி சாந்தி மேதை சரசுவதி காந்தி சிரத்தை தயை கீர்த்தி புஷ்டி முதலிய சத்திகளும் நான்கு வேதங்கள், சாத்திரங்கள் தத்துவங்கள் அறுவத்திநான்கு கலைகள் சைவ வைணவ சத்திகள் எழுகோடிமந்திரங்கள் கிரகங்கள் நட்சத்திரங்கள் தாரகைகள் முதலான சோதிக்கூட்டங்களும் ஆகிய யாவரும் சந்தோஷசித்தர்களாய்

சகலலோக நாயகராகிய சதாசிவனை அனுதினமும் வழிபடுகின்றனர். சிதம்பரத்திலேயுள்ள பொற்சபையும் மதுரையிலுள்ள வெள்ளிச்சபையும் திருநெல்வேலியிலுள்ள தாமிரசபையும் தென்காசியிலுள்ள இரத்தினசபையும் இத்தக்ஷிணகைலாசத்திலுள்ள சூடாமணிசபையும் ஆகிய இவ்வைந்தையும தனது சென்மமத்தியில் தரிசிக்கும் எவர்களும் சகல பாவங்களிலும் நின்றுநீங்கிச் சீவன் முத்தராவர் இதில் சந்தேகமில்லை.

விளா அரசு வஞ்சி கல்லுளி அழிஞ்சில் அங்கோலம் புங்கு மகாவில்வம் வெள்ளைவில்வம் பச்சிலைமரம் இலவு புன்னை கருநொச்சி நாவல் எலுமிச்சை பலா வாழை மா கமுகு தெங்கு முதலிய பல விருட்சசாதிக்கூட்டங்களாலும், சிறுசண்பகம் முல்லை காட்டுமுல்லை சாதிசெங்கழுநீர் நீலோற்பலம் தாமரைமுதலிய மலர்வகைகளாலும் நிறையப்பெற்றது, வெள்ளைமாடாப்புறு வெள்ளைமுயல் வெள்ளை இருதலைப்பாம்பு என்பவைகளும், சிங்கம் சரபம் புலி முயல் கவரிமான் யாளி கரடி காட்டுப்பன்றி குரங்கு யானை என்பவைகளும் களிப்போடு வணங்கப்பெறுவது.

இக்கயிலையின் நாற்புறத்தும் நான்குயோசனை தூரத்துக்குள் மரணிக்கும் மனிதன்முதல் புழு ஈறாகிய எந்தப்பிராணிகளும் மேன்மையவாகி மகாயோகிகள் அடையும யோட்சத்தை அடையும இதில் ஐயமில்லை. மைநாகம் மந்தரம் மேருகைலாசம் கந்தமாதனம் இந்த ஐந்து மலைகளையும் நித்தியம் நினைப்பவனுக்கு மறுசன்மமில்லை. கோணேசரையும் அம்பிகையையும் விஷ்ணுவையும் கந்தசுவாமியையும் விநாயகரையும் நித்தியமும் நினைப்பவன் சிவன்முத்தனாவான். இதில் ஐயமில்லை. மாவலிகங்கை காவேரிகங்கை மாணிக்ககங்கை கன்னியாகங்கை பாவநாச தீர்த்தம் எனும் சுபகரமாகிய ஐந்துதீர்த்தங்களையும் தினமும் நினைப்பவன் தனது கோடிகுலங்களை மேம்படுத்துவான். தென்கயிலைக்கணித்தான மச்சியேந்திரமலை கந்தமலை சிவனொளிபாதமலை சமனொசலம் பின்பார்மலை பசுமலை காமபர்வதம் சுவேலைமலை திரிகூடமலை வாசிமலை குலமலைமுதலான சகலமலைகளும் வெள்ளரசு சோதிவிருக்ஷம் கண்டகிவடம் சாயாவிருக்ஷம் சுவானதரு கருநெல்லிமரம் பஞ்சவன்னக்கிளி கபிலைப்பசு என்னும்முக்கியமானகளெல்லாம் இருக்கின்றன. சிங்கள தேசத்துக்கு ஒப்பாகிய தேசம்வேறில்லை

தெட்சிணகைலாசத்தில் பாபநாசதீர்த்தத்தில் முழுகி, செபஞ்செய்து தனம் தான்னியம் பசுமுதலானவைகளைத் தானஞ்செய்து மகாதேவனை வணங்கித்துதிப்பவர்கள் சாயுச்சியம்பெறுவார்.

இந்தப்படலத்தைப்படிப்பதால் சகலபாவங்களும்விலகி இம்மையில் சகல போகங்களையும் அனுபவித்து மறுமையில் கைவல்லிய முத்தியையும் அடைவார்கள்.

தக்ஷிணகைலாசச்சிறப்புரைத்தபடலம்.

முற்றிற்று.

---

## ஐந்தாவது

# கன்னியாகங்கைமகிமையுரைத்த படலம்.

சூதமுனிவர் கூறுகின்றார்:— பிராமணர்களே! கன்னியாகங்கைமகிமையைச் சொல்வதைக்கேட்பீராக. இதனைக்கேட்பவன் யாவன் அவன் சகல பாவங்களினின்றும் நீங்கப்பெறுவான். இவ்விஷயத்தில் சந்தேகம்வேண்டாம்.

பிராமணர்களே! திரேதாயுகத்தில் கைகசி என்பவள் அழகுவாய்ந்தவடிவமுடையவள்; விச்சிரவா என்பவனுடைய மனைவி; அவள் பதிவிரதாதருமமுடையவள். இவள் எப்போதும் ப்ரேமையினால் சிவலிங்கம் ஸ்தாபித்துச் சிவபூசைசெய்துவருபவள். அச்செயலை அரக்கர்தலைவனாகிய இராவணன்கண்டு, தாயின்மீது அன்புகொண்டு சிவலிங்கங்கொண்டுவரும்படி வடகயிலைக்கேகினான். இடைவழியில் சிவன் விருத்தவேதியராய்வந்து இராவணா! எங்கேபோகிறாய் என்றார். அதற்கவன் தாயின்பொருட்டு இலிங்கங்கொணர்தற்கு நான் கைலாசஞ்செல்கிறேன் என்றான். அப்போது பகவான் பிரசன்னராய் ஒரு இலிங்கத்தை அளித்து மறைந்தனர். பொன்னாற்செய்த சிவலிங்கத்தைப்பெற்று இராவணன் தன்நகரையடைவானாயினன். இதனிடையில் தேவர்கள் இதனையுணர்ந்து மிகவும் பயங்கொண்டு யாவரும் விஷ்ணுவையடைந்தார்கள், அடைந்துபலவித தோத்திரங்களினால் துதித்து அவ்விருத்தாந்தத்தை விஷ்ணுவுக்குக்கூறினார்கள். அதனைக்கேட்டு கருணையங்கடலாகிய தேவேசன் இராவணனால் மகாலிங்கம் இலங்கையில் தாபிக்கப்படுமானால்

தேவர் அசுரர் மனிதர் என்பவர்களாலும் அந்த இலங்கை வெல்லமுடி
யாது என்று சர்வலோகதயாநிதியாகிய முற்றறிவுள்ள விஷ்ணுமூர்த்தி
அறிந்துகொண்டு வருணனைநோக்கிப் பின்வருமாறு சொல்லுகிறார். ஓ
வருணனே! நீ இராவணன் சமீபத்தை விரைவிற்சென்று, அவன் வயிற்
றிலடைந்து சலமோசனஞ்செய்க என்று விஷ்ணுசொல்ல, அப்படியே
வருணன் விஷ்ணுவாக்கியப்படி விரைந்துசென்று கெட்டவனாகிய இரா
வணனுக்கு மூத்திரோபாயைச்செய்தான். இராவணனும் மூத்திரோ
பாதியினால் யாதுசெய்வேன் என்றுவருத்தமடைந்தான். இதன்நடுவில்
பிள்ளையார் விஷ்ணுசொற்படி பிரமசாரியவேடந்தோடு இராவணன் சமீ
பஞ்சென்றார். அந்தப்பிரமசாரியாகிய விநாயகரைப் பார்த்து இராவ
ணன்சொல்லுகிறான்:—

ஓ பிராமணோத்தமரே! உமக்குவணக்கம். சலமோசனத்தி
னால் நான்வருந்துகிறேன். அந்தணருட்சிறந்தோய்! சிறிதுநேரம் நான்
தரும் லிங்கத்தை வாங்கிவைத்துக்கொள்ளுக என்றான். விநாயகர் நீ
கேட்டபடியே செய்கிறேன் என்று அந்த இலிங்கத்தை வாங்கிக்கொண்
டார். இராவணன் விநாயகர்கையில் இலிங்கத்தைக் கொடுத்துவிட்டுச்
சலமோசனத்துக்குச்சென்றான். அச்சமயம் கணேசர் இலிங்கத்தைக்
கீழேவைத்துவிட்டார். வைக்கப்பட்ட அந்தக்ஷேத்திரம் மகாபுண்ணிய
மும் தவசித்தியையளிப்பதும் மங்களகரமும் ஆகும். உலகம் வைத்திய
நாதக்ஷேத்திரம் என்று புகழ்ந்துரைக்கும். இராவணனும் திரும்பிவந்து
அந்த அந்தணரைக்காணாமல் அந்த இடத்திற்பெரிய க்ஷேத்திரம் இருக்
கக்கண்டு, மிகவியப்படைந்து, கைலாசத்தைநோக்கித்திரும்பிப்போனான்.
சென்று, முன்போலவே இலிங்கம்பெற்றுக்கொண்டு, மறுபடி திரும்பி
வரும்போது, அவ்விராவணன் முன்போல்சல உபாதியினால் துக்கம
டைந்து முன்சொன்ன தன்மைவாய்ந்த பிரமசாரியைக்கண்டு மிகுந்த
மகிழ்ச்சியுடையவனாய், அப்பிரமசாரிகையில் கொடுத்துவிட்டுச் சலமோ
சனஞ்செய்யப்போனான். இலிங்கம்பெற்ற பிரமசாரி இராவணா! இரா
வணா!! இராவணா!!! என்று மும்முறை பெருங்கூச்சலிட்டழைத்தார்.
அவ்விதம் அழைத்தும் இராவணன் அவ்விடம்வந்திலன். உடனே விநா
யகர் இலிங்கத்தைக்கீழேவைத்துவிட்டார். பிரபாசதீரத்தின் கண்ணே
இலிங்கத்தைவைத்துவிட்டுச் சந்தோஷசித்தமுடையவராய் அச்சிவகு
மாரர் மறைந்தருளினார்.

விச்சிரவாவின் புதல்வனாகிய இராவணன் அவ்விடம்போய்
இலிங்கம் பிலத்திலிருக்கக்கண்டு கையினால் பிடித்திழுத்தான். அப்

போது அவன்கையின்கண்ணே இலிங்கமானது கோகர்ணவடிவமாய் முடிந்தது, ஓ பிராமணர்களே! கையில் அகப்படவில்லை. பிரயாசை பயனில்லாமல்போயிற்று. அவ்வரக்கர் தலைவனாகிய இராவணன் பிற கும் இலிங்கம்பெறும்பொருட்டுக் கயிலைக்கேகினன். அப்பொழுது அரியானவர் கிழப்பிராமணனாய் வந்தார். வந்து, அவர் இராவணனைப் பார்த்து ஓ! அரக்கர்பதியே நீ எங்குபோகின்றாய்? சொல் எனக்கேட்க அதற்கவன் கேளும்மறையவரே! போகுங்காரணம் சொல்கிறேன். அதா வது கயிலாசகிரியிலிருந்து ஒருலிங்கம் எடுத்துக்கொண்டு வரும்படியாய் நான்செல்கின்றேன். என்று இராவணன் செப்பினான்.

கிழமறையவர் சொல்லுவது:— இராவணா! மூடாத்துமா! இலிங்கம் எடுப்பதில் ஒருபாயத்தைக்கேள்! இலங்கையின் வடபாகத்தில் மிகச்சிறந்த கடற்கரையில் மகிமைவாய்ந்த தென்கயிலையிருக்கின்றதே! நீ காணவில்லையோ? நீ அவ்விடம்போ. மகாலிங்கம் அங்குகிடைக்கும். ஐயமுறாதே. என்று இவ்வாறு மறைமுதியவர்கூற, இராவணன் அவ் விடம்போய், சிவலிங்கம் தந்தருளுகவென்று சச்சிதானந்த சொரூபியா கிய ஈசனைப்பிரார்த்தித்தான். அப்போது அருளப்பெருமையால் இரா வணன் கோபங்கொண்டு வாளை எடுத்து அடிக்கடி அட்டகாசஞ்செய்து தென்கயிலையின் நிருதிதிக்கில் போய் அந்தப்பக்கத்தை வாளால்வெட் டிக்கையினால் அசைத்தான். மலையில் அசைவுண்டானதால் கணங்கள் எல்லாம் பயங்கொண்டன. உமாதேவியாரும் பயந்து மகேசனைக்கட் டித்தழுவிக்கொண்டார். அதனைத் தேவதேவராகிய சிவபிரான் விளை யாட்டாகப்பார்த்துக்கொண்டிருந்து மகிழ்வுடன் காற்பெருவிரலால் அம் மலையினை இருத்தினார். மலையினது கனத்தினால் இராவணன் சரீரமு ழுதும் இரத்தந்தோய்ந்து துக்கத்தோடும் இரத்தம்பெருகியோட மலை யின்கீழ்விழுந்து இலவணசமுத்திரத்தில் முழுகிச்சிவபத்தி யுடையவனா கித்தனது சிரையென்னும் நரம்பு தந்திரியாகவும், தலை பத்தராகவும், கை கோலாகவுங்கொண்டு யாழாக்கிமெள்ள சாமவேதகானஞ்செய்ய ஆரம்பித்தான் அக்கானம் மனத்தை வசிகரிப்பதாயும் மங்களமாயும் அழகாயும் இருந்தது. அம்பிகை அச்சாமகானத்தினால் மகிழ்ந்து சங்கர ரைப்பார்த்து ஓ நாயகரே! இலவணசமுத்திரத்தின்கீழே அமுதம்போன் றுகாதுக்கு இன்பமாகக்கேட்கப்படுகிறதே! இதுயாது? எனக்கு அருளிச் செய்யும் என்றார். ஈசன்சொல்லுகிறார். ஓ தேவீ! சங்கரீ! கேள்! சொல்கிறேன். எவன் கருவத்தினால் பருவதம் அசைக்கப்பட்டதோ? அவனது கருவம் அடங்கும்படி பருவதத்தை எனது காற்பெருவிரலால்

சிறிது ஊன்றினேன். அவன் கடலில்விழுந்து எழுந்து என்னை மகிழ்விக்கும்படி சாமகானம் செய்கிறான். என்று கூற, அம்பிகை சிவபெருமானது வாக்கியத்தைக்கேட்டு அன்பர்களை அனுக்கிரகஞ்செய்வதில் பிரியமுள்ள ஈசுவரரைநோக்கிச் சொல்லுகிறார்.

ஓ மகானே! கோணேசரே! அன்பர்களின் தவற்றை அளிப்பவரே! பாடுகிறபக்தனைக் கூப்பிட்டு அவன் எண்ணியதை அளித்தருளுக என்றார். இவ்வாறு அம்பிகை கூறியதைக்கேட்டு, சந்தோஷித்து நந்திதேவரைக்கொண்டு அப்பக்தனை அழைப்பித்துச் சந்தோஷகாணத்தினாலே கோடீசுரமென்னும் இலிங்கத்தை அவன்கையிற்கொடுத்தார். மலையை மேலெடுத்தசமயத்தில் பேரொலி உண்டானபடியால் உனக்கு இவ்வுலகில் இராவணன் என்றுபேர் உண்டாகுக. என்றுசொல்லி அவனைப்போகும்படி விடையளித்தனர்.

இராவணன் சிவபெருமானிடம் இலிங்கம் பெற்றுக்கொண்டு கோணேசரையும் அம்பிகையையும் பத்தியோடு துதித்துவணங்கி கைலையினின்றும் புறப்பட்டுத்தன்னூருக்குப் போகும்போது விஷ்ணுவானவர் வழியில் பூக்குடலையைக் கையிலேந்திக்கொண்டு பிராமணவேடம்பூண்டு இராவணன் முன்தோன்றினார். இராவணன் அவரைப்பார்த்துக்கேட்பது: பிராமணோத்தமரே! எங்கிருந்துவருகிறீர்? எவ்விடம்போகிறீர்? என்ன, அவர் "நான் எங்குஞ்சஞ்சரிப்பவன்; புண்ணியதலங்களைத் தரிசிக்கும் விருப்பத்தினால் இலங்கையிலிருந்து கைலாசபதியைச்சேவிக்கும் பொருட்டு வருகிறேன் என்றார். இராவணன் இலங்கைநகரத்தின் விருத்தாந்தம் என்ன? என்று அவரைக்கேட்டான். அதற்கவர் கபடமாய்ச்சொல்வார். ஓ இராவணா! ஓ மேதாவியே! கேள் இலங்கையின் விருத்தாந்தம் என்னவெனில்:— இலங்காபதியாகிய அரக்கர்மேலோன் மாதாவிடத்து அன்புகாரணமாய்ச் சிவலிங்கம் பெறும்பொருட்டு உத்தமமான இத்தக்ஷிணகைலையை அடைந்து தெய்வகதியினால் கருவங்கொண்டு மலையைப்பிளந்து அதனால் உடல்காயமடைந்துமலையின்கீழ் இறந்துபோனான் என்றுசொல்லக்கேட்டு அவன்தாய் புத்திரசோகத்தினால்வருந்திப் பிராணன் நீங்கினாள். அரக்கரெல்லாம் அழுகிறார்கள், என்றார். அந்த வார்த்தையைக்கேட்டதும் இராவணன் அதிகதுக்கமடைந்து மூர்ச்சைகொண்டு கீழேவிழுந்து அறிவிழந்து அழுதுபுலம்பினான். அச்சமயம் அம்மறையவராய்வந்தபகவான் இராவணா! கையில் சிவலிங்கத்தைவைத்துக்கொண்டு அழாதே என்றுசொல்லி அவனிடம் மகாலிங்கத்தைக்கிரகித்து தானே கயிலாயத்தின் நிருதிபாகத்தில் அந்த லிங்கத்தைவைத்து

விட்டனர். இராவணன் சோகநிவிர்த்திக்காக ஞானமார்க்கத்தைகேட்டான். இராவணா! கேள்சொல்வேன்; என்றுபகவான்சொல்வது: துக்கம் மோகம் இவைகளினால் என்னபிரயோசனம் இருக்கின்றது. பிறந்தால் எல்லாப்பிராணிகளுக்கும் இறப்பது திண்ணம். உலர்ந்தபல இலைகள் வாயுவினால் மேன்மைசெய்யப்படினும், பின் வாயுவீசினால் எல்லா இலைகளும் வேறுவேறு ஆகிச்சிதறிவிடுகின்றன. அதுபோலவே பந்துக் கூட்டமும் என்பது சாத்திரசம்மதம். பிறந்தவை இறத்தலும், இறந்தவை பிறத்தலும் எப்போதும் நிச்சயமாகும். அன்னைமாரும்பலருளார் என்பர். பிதாக்களும் பலருளர் என்பர். மனைவியர் மக்கள் வீடு மாடு முன்னைய வினைத்தொடர்பினால் உண்டாவன. வினை நீங்கினால் யாவும் நீங்கிவிடுகின்றன. அவ்விஷயத்தில் ஏன்கவலைப்படவேண்டும்.

காணப்படும் இப்பொருள்கள் யாவும் நிர்மலமாகிய ஆகாயமும் மேகபடலமும்போல இருக்கும். யௌவனமும் செல்வமும் யாக்கையும் நிலையில்லாதன. பரம்பொருள் ஒன்றே நிலையுள்ளது. மற்றையவையெல்லாம் அழிந்துபோவனவாகும். ஒரு மரத்தில் பறவைகளின் கூட்டம் எப்படியோ? அப்படியே புத்திரர் சகோதரர் பந்துக்கள் என்னும் இவர்களின் கூட்டமுமென அறிதல் வேண்டும். உணவும் துயிலும் பயமும் புணர்ச்சியும் மனிதர்க்கும் மிருகங்களுக்கும் சமமாம். அறிவே மனிதர்க்கு விசேடமானது. அறிவீனன் மிருகங்களுக்கொப்பாவன். சரீரம் அநித்தியமானது. செல்வமோ நிலையற்றது. யமனோ எப்பொழுதும் சமீபத்திலிருக்கிறான். ஆதலின், தருமமே தேடத்தக்கபொருளாகும்.

இக்கையிலையில் நாற்றிசைகளிலும் நான்குயோசனைதூரம் மனிதர்முதலான சகல பிராணிகளும் வசிக்குமாயின், அவைகளெல்லாம் கோணேசர் மகிமையினால் தேவசரீரம் பெறுகின்றன. ஒருவன் மாவலிகங்கையில் தோய்ந்து நீர் அருந்தி அருச்சனைசெய்யின், சிவசாரூப்பியம் அடைவான். இதில் விசாரணைவேண்டாம். கைலாசத்தில் சங்கரியோடுகூடிய கோணேசரைப்பூசிப்பவனும், கோணேசருக்கு அபிஷேகஞ்செய்யக் கங்கைநீர் கொடுப்பவனும் கோணேசசாயுச்சியம் அடைவார்கள். இதில் ஐயமில்லை. இந்தத்தலத்தில் யாசித்தபொருளை மூன்றுபங்குசெய்து ஒருபங்கைக் கோணேசருக்குக் கொடுத்தல்வேண்டும். அவ்வாறுசெய்யும் அறிஞன் பத்தியுடையவனேயாம். ஆசையாலும் மோகத்தினாலும் அவ்விதம் கெடாதவனாகிய மனிதன் முத்தியடைவான்.

இத்தலத்தில் உண்டாகிய கந்தமூலபலங்களையும் தானியங்களையும் கீரைமுதலியனவைகளையும் மற்றும் எல்லாவற்றையும் நாலிலொருபங்குசெய்து ஒருபங்கைக் கோணேசருக்குக் கொடுக்கவேண்டும். ஆசைமோகங்களோடு கொடுப்பானேல், அவன் கடலில் ஆமையாய்ப் பிறப்பான். உச்சிட்டம் அதாவது உண்டுமிஞ்சியது புசித்தல், புணர்ச்சி, கம்பளமுதலிய ஆசனமீது இருத்தல், கெட்ட எண்ணம் துராசாரம், மலசலமோசனஞ்செய்தல், இவைகளைக் கைலாசகிரியில் செய்யும் மூடன் இரௌரவநரகமடைவான். அபிஷேகஞ்செய்யுங் காலத்திலும் நைவேத்தியஞ்செய்யுங்காலத்திலும் பிரதக்ஷிணம்செய்வதும் நமஸ்காரஞ் செய்வதும் தரிசனஞ்செய்வதும் ஆகாவாம்.

கோபுரம் சிகரம் பிராகாரம் மண்டபம் நந்தனவனம் கோயில் ஆகிய இவைகளைச்செய்பவன் சிவலோகத்தையடைவான். மகுடம் அங்கதம் கேயூரம் குடைசாமரம் இவைகளைக்கொடுப்பவன் கோணேசசாருபம் அடைவான். தவம் செபம் தியானம் தானம் பூசை பிதிர்சிராத்தம் இவைகளை பிதிர்தினத்தில்செய்யின் அளவற்றபயன் பெறுவான். இந்த க்ஷேத்திரத்துக்கொப்பாகிய க்ஷேத்திரம் முன்னும் பின்னுமில்லை. ஆகையால், இராவணா! நீ உன் தாய்க்கு அபரக்கிரியையைச் செய்தற்பொருட்டு இங்கே ஒரு தீர்த்தம் உண்டாக்குவாயாக என்று விஷ்ணுபகவான் இராவணனுக்குக் கூறினார்.

## கன்னியாகங்கை வரலாறு.

சூதர் கூறுகின்றார்:— அந்தவிஷ்ணுபகவானுடைய வாக்கியங்களைக்கேட்டு இராவணன் பிரியமன்த்தினனாகிக் கைலாசத்தின்மேற்குப் பாகத்தில் தண்டாயுதத்தினால் அடித்தான். தண்டாயுதநுனியினால் பூமியானது எழுபிரிவாய்ப் பிரிந்தது. அந்த எழு மகாகுண்டங்களில் வாசுதேவர் கட்டளையினால் கன்னியாகங்கை என்பவள் பாதாளமார்க்கத்தால் உற்பத்தியாயினள். 1. பெருஞ்சூடு, 2. சுகசூடு, 3. மெதுவானசூடு, 4. குளிர்ச்சி, 5. சமசூடு, 6. சமகுளிர்ச்சி, 7. அதிககுளிர்ச்சியென்று எழுவகையான குணத்தோடு கங்கைபிரவகித்தாள். மிகத்தெளிவாகவும் மனத்துக்கு இன்பமாகவும் இருந்தாள். இந்த எழும் சிறிதுதூரம் ஒன்றாயோடிப் பின் குளிர்ச்சியும் சூடுமாகிய இருவகையாய் ஓடுவனவாயிருக்கும். அந்தணர்களே! திரிலோகவாசிகளையும் பரிசுத்தம் செய்யும்பொருட்டே கன்னியாகங்கை உற்பவித்தாள். தரிசனத்தாலும் தொடுதலாலும் முழுகுதலாலும் நினைத்தலாலும் உண்ணு


ச.பத்மநாபன்

தலாலும் கேட்பதாலும் துதிப்பதாலும் போகமும் மோக்ஷமும் கொடுப் பாள். கன்னியாகங்கைக்குச் சமமாகிய தீர்த்தம் மூவுலகத்திலுமில்லை.

விஷ்ணு சொல்லுகிறார்:— ஓ இராவணா! சொல்லுகிறேன் கேள். உன்தாயின் தவப்பயனால் இக்கயிலையின் பாகத்தில் பாவங்களை அழிப்பவளாய், தீர்த்தங்களுக்கு மாதாவாய், சர்வலோகங்களுக்கும் அருள்புரிபவளாய் கன்னியாகங்கைவிளங்குவாள். காசியிலே நான்தவறா மல் ஆயிரம்வருடங்கள்செய்யும் கங்காஸ்நானபலனைக் கன்னியாகங்கை யில் ஒரு கிழமை ஸ்நானஞ்செய்தால் அடையலாம்.

இந்தவிதமாய்த் தீர்த்தமகிமையானது மகா விஷ்ணுமூர்த்தி யினால் கூறப்பட்டது. இராவணன் சொல்லுகிறான்:— ஓ பிராமணோத் தமரே! என்னுடையமாதாவின் அபரக்கிரியையை இந்தத்தீர்த்தக்கரை யில் நீர் செய்யவேண்டியவிதிப்படி செய்துவைத்தல்வேண்டும் என்றான். பின் விஷ்ணுவானவர் அப்படியேசெய்கிறேன் என்றுசொல்லி புரோகி தராய் இருந்து அபரக்கிரியை செய்துவைக்க இராவணன் மாதாவின் அபரக்கிரியையைச் செய்துமுடித்து மகிழ்ச்சிகொண்டவனாய் தசதானங் களும் பூரிகளும்கொடுத்து நிறைந்தமனத்தோடு ஆசாரியதட்சிணையும் கொடுத்துப் பலமுறைவணங்கினான். பிராமணவேடதாரியாகிய விஷ் ணுவும் உடனே மறைந்தருளினார். திரிமூர்த்திகளும் அந்தக்கங்கைக்க ரையில் வெளிப்பட்டார்கள். பிரமதேவர் பூதேசம் என்னும் இலிங்கத் தையும் விஷ்ணு உருத்திரேசம் என்னும் இலிங்கத்தையும் சிவன் பிறு கேசம் என்னும் இலிங்கத்தையும் இராவணன் கையிற்கொடுத்தனர். அவன் அம்மூன்றையும் வாங்கிக்கைலாசத்தின் பூர்வபாகத்தில் வடகிழக் கில் பூதேச லிங்கத்தையும் கிழக்கில் உருத்திரேச லிங்கத்தையும் தென் கிழக்கில் பிறுகேச லிங்கத்தையும் நல்ல இலக்கினத்தில் விதிப்படி மந்தி ரபூர்வமாய் பிராமணவேடங்கொண்ட விஷ்ணுவானவர் ஆசாரியராய் இருந்து கிரியைசெய்ய அந்த இராவணன் பிரதிட்டைசெய்தான்.

பின்பு விஷ்ணுவானவர் இராவணனைப்பெருமைவாய்ந்த கோ ணேசர் சந்நிதானத்தில் அழைத்துவந்து அம்பிகையையும் சங்கரனையும் நமஸ்காரஞ்செய்யும்படிசெய்து பின் விஷ்ணுவானவர் இராவணனைப் பார்த்து இலங்கேசுவரா! நீ அன்போடு சிவனைத்தரிசித்து மனம் ஒரு வழிப்பட்டு உன்தாய்க்கு முத்திதரும்படி கோணேசரைக்கேள் என்று சொல்ல, அதற்கிசைந்து இராவணன் கோணேசரைப்பார்த்துக் கோ ணேசா! கருணையங்கடலே! பத்தர்களுக்கு விரும்பியவைகளைக் கொடுப்

பவரே! என்னுடைய மாதாவுக்கு முத்திதந்தருளவேண்டும். என்னிடம் கிருபைசெய்தல்வேண்டும் என்றுபிரார்த்திக்க, பரமசிவன் புன்சிரிப்போடு அவன் கேட்டவரத்தைக் கொடுத்தனர். இராவணன் அவ்வரம்பெற்று, விடையும் பெற்றுக்கொண்டு தன்னகரைநோக்கிச் சென்றான்.

வெகுகாலம் அவன் தன் பந்துசனங்களோடும் இலங்கையை அரசாண்டு, சாமகானத்துக்குச்செய்த வீணையையும் எப்போதுங் கையில் ஏந்தி, தக்ஷிணகைலாசத்தில் அம்பிகையோடு கோணேசரையும் தினந்தோறும் தரிசனஞ்செய்து சாமகானமும் செய்துவருவானாயினன்.

இராவணனால் செய்யப்பட்டதாயும் அற்புதமுடையதாயும் உலகத்தைமயக்குவதாயும் உள்ள வீணையைச் சுசங்கீதன் என்னுங் கந்தருவன்பார்த்து மனத்தில்பிரியங்கொண்டு, அதனை அபகரித்துக்கொள்ள எண்ணங்கொண்டு காலம்பார்த்துக்கொண்டிருந்தான்.

இவ்விதமிருக்கையில் இராமபிரானுக்கும் இராவணனுக்கும் பெரும்போர் தொடங்கியது. அப்போரில் இராகவன் இராவணனது புயங்களைவெட்ட, வீணை கையினின்றும் நழுவவும் அதனைச் சுசங்கீதன் எடுத்துக்கொண்டான். பின், அவன் ஓர் விளையாட்டினால் மனிதவடிவோடு பூமியைச்சுற்றிப் பார்க்கும்பொருட்டுப் புறப்பட்டு மகிழ்வோடு சாமகானஞ்செய்துகொண்டு எல்லாவிடங்களிலுஞ் சஞ்சரித்தான்.

அவன் ஒருசமயம் சிங்களதேசத்தில் இருக்கும் நகுலாசலத்தில் அடைந்து அதன்மகிமையைநோக்கி விருப்படைந்து, அங்குள்ள கங்காசாகரசங்கம தீர்த்தத்தில் முழுகிக் குகையிலிருக்கும் ஸ்ரீநகுலேசப்பெருமானைச் சந்தனபுஷ்பங்களால் பூசைசெய்து பேரன்புடையனாகி அநேக தோத்திரங்களினால் மகா அற்புதகானஞ்செய்து, மகிழ்விக்க, வீணாகானத்தினாலே நகுலேசப்பெருமான் மகிழ்ந்தவராகி, கரவடிவங்கொண்டிருக்கும் கந்தருவனைப்பார்த்து "சுசங்கீதா! உன்னுடைய கானத்தினால் மகிழ்வடைந்தோம். நீ உன்கையில் வீணைதாங்கி எப்போதும் கானஞ்செய்கின்றாய் அதனால் இவ்வுலகத்தில் வீணாகரன் என்று பெயர் பெறுவாயாக. இந்த நகுலமலையின் பாகத்தில் அநேகம் தலங்கள் இருக்கின்றன. அவை இருளடைந்த காடுகளினால் மூடப்பட்டிருக்கின்றன. அவைகளை வெட்டியழித்து சீக்கிரத்தில் நல்லிலக்கினத்தில் நமது ஆணையினால் உன்பெயரினால் வீணாகரபுரம் என்று ஒரு நகரம் உண்டாக்குக எனக்கட்டளையிட்டருளினார். வீணாகரகந்தருவனைப்பார்த்து இவ்வாறு கட்டளை செய்துநகுலேசர்மறைந்தருளினார்.

நகுலேசப்பெருமானது கட்டளையைப்பெற்று வீரசேகரன்மன மகிழ்வுகொண்டு விரைவில் அவ்விடங்களை மரங்களை வெட்டித்திருத்தி நாட்டை நகராக்கி வீரசேகரநகரம் என்று திவ்வியமாகிய பெயரை அதற்குச் சூட்டினான். சூட்டி, நானாசாதிஜனங்களையும் அந்த நகரத்தில் குடியிருத்தி, அங்குள்ள சிவாலயங்களையும் புதுக்கிக்கட்டினான். பின்பு, அவன் நகுலேசன் திருவருளினால் தன் நகரையடைந்தான்.

கன்னியாகங்கையில் ஒரு மனிதன் தன் ஆயுள்நாளில் மூழுகுவானேல், அவன் சகலபாவங்களிலிருந்து விலகிப்பரிசுத்தான்மாவாகிச் சிவலோகத்தையடைவான். பொன் களவு செய்தவன் கட்குடியன் பிரமகத்திசெய்தவன் குருதாரகமனஞ்செய்தவன் சமுசர்க்கபாவிகள் உபபாதகர்கள் என்னும் யாவரேயாயினும் இந்தத்தீர்த்தத்தில் ஒருமுறைமுழுகினோர் சர்வபாவங்களுநீங்கிப் பரிசுத்தராவதில் சந்தேகமில்லை. வருணங்களைவிட்டவன் சண்டன் துராசாரமுடையோன் இவர்கள் இந்தத்தீர்த்தத்தில் ஒருமுறைமுழுகுவார்களேல் சர்வபாவங்களினின்றும் விடுபட்டவர்களாய் ஆவதில் சந்தேகம்வேண்டாம். இந்தத்தீர்த்தத்தில் எந்தமனிதன் முழுகித்திலதருப்பணஞ்செய்வானோ அவனது பிதிருக்கள் திருப்தியடையும். அவனும் சிவலோகத்தையடைவான். இத்தீர்த்தக்கரையில் பிராமணபோசனம் செய்வித்துத் தீர்த்தபிண்டம்போடுகிறவன் கயாசிராத்தபலனை அடைவான். கோதானம் செய்பவன் அக்கோவின்ரோமம் எவ்வளவோ அவ்வளவு கற்பகாலம் சுவர்க்கலோகம் அடைந்திருப்பான். பிரமயக்கியம் செய்யும் பிராமணன் பிரமலோகம் அடைவான். விஷ்ணுபூசைசெய்பவன் வைகுண்டம் அடைவான். சிவபூசைசெய்பவன் சிவலோகமடைவான். இந்தத்தீர்த்தத்தை நித்தியமு நினைப்பவனுக்குப் போகமோக்ஷங்கள் கையிலிருக்கின்றன

இந்தத்தீர்த்தம் பரிசுத்தமானது, பாவங்களைப்போக்குவது புண்ணியமும் தீர்க்காயுளும் அளிப்பது.

இந்தப்படலத்தைப் படிப்போரும் அன்புடன் காதோலுங் கேட்போரும் இவ்வுலகத்தில் நல்ல செல்வங்களை அனுபவித்து மறுமையில் சிவசாயுச்சியம் அடைவார்கள்

## கன்னியாகங்கைமகிமையுரைத்தபடலம்

முற்றிற்று.

## ஆறாவது

# கங்கோற்பவமுரைத்தபடலம்.

சூதமுனிவர் சொல்லுகிறார்:— ஓ மறையவர்களே! கங்கையின் உற்பவத்தைச்சொல்வேன் சிரத்தையோடு கேளுங்கள். கேட்டதால் பாவங்கள் அகலும்; போகமும் மோக்ஷமும் கையிலிருக்கும்.

முன்னொருகாலத்தில் உத்தரகைலாசத்தில் சிங்காரவனத்தில் இரத்தினசிங்காதனத்தின்மேல் உமையோடுகூடச் சங்கரன் வீற்றிருந்தனர். அச்சமயம் ஓர் திருவிளையாட்டினால் தேவி சீக்கிரமாயெழுந்து புன்சிரிப்போடுசென்று பரமேசுவரனது பின்புறமாய்த்தன்கைகளினால் அவருடையகண்களைப் பொத்தினாள். அப்போது எங்கும் இருண்டது. மூவுலகங்களும் கலங்கின. பரமேசுவரன் காருண்ணியத்தினால் தமது நெற்றிக்கண்ணால் பார்த்து இருளை அகற்றி உத்தமமான சோதியைச் செய்தனர். அது மகாதேவி சிறிதுபயந்து சிவனது கண்ணிலிருந்து தன்கைகளைவிரைவில் அகற்றினாள். அவ்வம்மையின் கைவிரல்களிலிருந்து வேர்வைத்துளிகள் உண்டாயின. அவற்றிலிருந்து பத்துவகையான கங்கைகள் உலகப்பரிசுத்தம்செய்வதற்காக உண்டாயின.

அவை விரசை அமிர்ததோயை சுரநதி சிவகங்கை மாவலிகங்கை மாணிக்ககங்கை காவேரிகங்கை நவகங்கை பாதாளகங்கை கன்னியாகங்கை என்னும் பத்துமாம். அவைகளே அம்பிகையில் கைவிரல்களினின்றும் உண்டான பத்துக்கங்கைகளென்று கூறப்படும். இப்பத்துக்கங்கைகளும் ஒன்றாய்ச்சேர்ந்து சீக்கிரம் பிரளயசமுத்திரம்போல மிகவும் பெருகின. பிரமன்முதலான தேவர்யாவரும் அதுகண்டஞ்சிக் கயிலையையடைந்து சங்கரனைக்கண்டு தரிசித்துவணங்கிக் கைகுவித்து நின்று, ‘‘கருணாநிதியே' கங்கைப்பெருக்கு உலகைவிழுங்கி விழுங்கிவிடும் போலிருக்கிறதே! எங்களைக்காத்தருளுக. பிரளயசமுத்திரம்போலப்பெருகிவரும் கங்கைப்பெருக்கினால் மிகவும் பயப்படுகிறோம். சுவாமீ அடியேங்களுடைய பயத்தை நீக்கியருளுக. முன்னே கடல்கடைந்தபோதுண்டாகிய விடத்தைத்தரித்ததுபோல சர்வலோகநன்மையின்பொருட்டு இக்கங்கையையுந்தரிப்பீராக என்று தேவர்கள்வேண்டுதலும், அவர்களுடைய வார்த்தைகளைக்கேட்டுச் சர்வலோக தயாபரனாகிய சங்கரன் அப்பிரவாககாரணத்தையும் அவர்களுக்குக்கூறியருளி அம்மகாகங்கையைத்தனது சடையில்தரித்தருளினார்.

அவ்வற்புதச்செய்கையைக்கண்டு அதிக ஆச்சரியுங்கொண்ட அரிபிரமேந்திராதிதேவர்கள் ஈசனைப்பார்த்துப் பின்வருமாறுகேட்பாரா யினர். ஓ சுவாமி சகலலோகநாயக! அடியார்விரும்பியவற்றை அளிப் பவரே! தேவரீரால் மகாகங்கைமகிமை அருளிச்செய்யப்பட்டது. அது பெரும் அற்புதமானது. தேவரீருடைய சக்தியின் விரல்களினின்றும் உற்பத்தியாகிய காரணத்தாலும் தேவரீர் திருச்சடைமிசை தரித்தகார ணத்தாலும் இக்கங்கை மகாமேன்மையும் சர்வலோகபரிசுத்தமுமாகும். இக்கங்காதீர்த்தம் கொஞ்சம் அடியேங்களுக்கு அளித்தல்வேண்டும். கருணையினால் எங்கள் உலகநன்மைக்காக கொஞ்சங்கொஞ்சம் தந்தரு ளல் வேண்டும், என்று இரந்துவேண்டினர்.

சூதர் சொல்வது:— அத்தேவர்களால் கேட்கப்பட்ட பகவான் பெருங்களிப்போடு விஷ்ணுவுக்கு விரசாகங்கையையும், பிரமனுக்கு அமிர்தகங்கையையும், இந்திரனுக்குச் சுரகங்கையையும் சிவபிரான் அளித்தனர். பின்பு, அவர்கள் சம்புவின் விடையைப்பெற்றுக்கொண்டு தத்தம் புரங்களையடைந்தனர். விரசாகங்கைவைகுண்டத்தை அடைந் தாள் சுவர்நதி சதமகனுலகையடைந்தாள். அமுததோயை பிரமன் கமண்டலத்தையடைந்தாள்.

இதன்பின், அந்தணர்களே! பகீரதன் தவஞ்செய்தான். அவ னது தவத்தினால் அந்தக்கங்கை அந்தணானுமதியோடுகூட ஈசனது சடைநடுவே பிரவாகத்தினால் சென்று, பின் சிவனது உத்தரவினால் பாதாளலோகத்தை அடைந்து பாதாளத்தில் சகரபுத்திரர் எல்லாரும் குற்றங்காரணமாகக் கபிலமுனிவர் இட்டசாபத்தால் துர்மரணமடைந்து மேற்கதியில்லாமல் பிரேதத்தன்மையடைந்திருந்தனர். அதிபரிசுத்தம் பொருந்திய கங்கையானவள் அந்தச்சகரர் என்புகளைச்சுத்தஞ்செய்த னள். என்புகள் கங்கையில்நனைந்தமாத்திரத்தில் சகரர்யாவரும் பாவம் நீங்கிப்பரிசுத்தராய் உடனே சுவர்க்கஞ்சேர்ந்தார்கள். அந்தக்கங்கை அதிகபிரவாகத்தோடு பாதாளம்விட்டுப்புறப்பட்டு யாவரையும் பரிசுத் தஞ்செய்வதற்காக இமயமலையின்வழியாய்வந்து சமுத்திரஞ்சென்றான். எந்தமனிதன் தன்வாழ்நாளில் மிருந்தபாவங்களைச் செய்திருந்தாலும் ஒரு முறை பகீரதியில் முழுகுகின்றானோ அவன் நிச்சயமாய் முத்திபெறு வான். அவ்வாறே விரசாநதியில் ஒரு முறை முழுகுவோனும், சுரநதி யில் ஒருகால்தோய்வோனும் முத்தியடைவானென்பது உண்மையாகும்.

முனிவர்கள் வினவுதல்:— சூதமுனிவரே! கேட்டமாத்திரம் பாவம்போக்கும் கங்கைமூன்றுமட்டும் தேவரீரால் சொல்லப்பட்டது. மற்றும் ஏழுகங்கைகளின் காரணங்களையும் நாங்கள் மறுபடியும் உம்மிடமிருந்து கேட்கும்விருப்பமுடையோம். எங்கட்கு அவைகளை கிருபையோடு கூறுதல்வேண்டும்.

சூதர்விடைகூறுவது:— செல்வம்பொருந்திய தெட்சிணகைலாசத்தில் சிங்காரமணிமண்டபத்தில் இரத்தின சிங்காதனத்தில் எழுந்தருளியிருக்கின்ற கோடிசூரியர்போல் விளங்கும் கோணேசரைநோக்கி, தேவியார் ஓர் திருவிளையாட்டினுலே புன்சிரிப்போடும் "தேவதேவ! உமது சிரமிசை என்ன சத்தம்? பெண்குரல்போல எனக்குக்கேட்கின்றதே! அதனை அருளிச்செய்க" என்றுகேட்டலும், தேவியின் ஐயத்தை நீக்கவெண்ணி அன்பேருசங்கரன் பார்வதியே! என்முடியில் பெண் இல்லை; அது நீ என்றார். ஈசனதுவாக்கியத்தைக்கேட்டு அம்பிகை விரைந்து விரல்களினுல் அவருடைய சடைமுழுதும் பரிசோதித்துப் பார்த்தார். அச்சமயம் கங்கையும் அதிகம் பயங்கொண்டனள். அப்போது அக்கங்கையின் பயத்தையுணர்ந்து சிவன் நகங்களால் அக்கங்கையை எடுத்து இலங்கைக்குவடக்கில் லவணசமுத்திரத்தில் விட்டனர்.

பாதாளலோகவாசிகளாகிய அக்கங்கைகள் ஈசனை அன்புடன் தோத்திரஞ்செய்யத் தொடங்கின. லோகநாயகரே! உமக்குவணக்கம். எங்களுடைய சேவகாரணரே! உமக்குவணக்கம். கருணைக்கடலே! எங்களைக்காத்தருளல்வேண்டும். ஓ பரமேசுவரரே! நாங்கள் உம்மைவிட்டு எங்கே செல்வோம், என்பதாய்க் கங்கைகள் செய்யும் தோத்திரங்களைக் கேட்டு ஆதரவோடு சங்கரன் எமக்குப்பிரியமாகிய கங்கைகாள்! உங்களுக்கு நல்லஸ்தலம் சொல்கின்றோம். நமது சிவனொளிபாதமலை நமது வடிவமானது; நமக்குப்பிரியமானது. அந்த இடத்தில் நமது பாதம்விளங்கும் நவசைலத்திலும் சிதம்பரத்திலும் தென்கயிலையின் பக்கத்தில் உள்ள கதிர்காமசைலத்திலும் எல்லாவுலகங்களின் நன்மைக்காகவும், நமது சந்தோஷத்துக்காகவும், நீங்கள் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பயனையும் கொடுக்கிறவைகளாய் மகிழ்வோடும் இருங்கள் என்றருளிச்செய்தார்.

சூதர்சொல்வது:— சம்புவின் அனுக்கிரகத்தினுல் அவைமகிழ்வோடுகூடினவைகளாய் மகாபலிகங்கை மாணிக்ககங்கை காவேரிகங்கை ஆகிய நதிகள் மூன்றும் சிவனொளிபாதமலையில் சிவபாதமத்தியில் சுப

நாளில் சுபலக்கினத்தில் சதாகாலமும் பெருகிக்கொண்டிருக்கும். அம்மூன்று கங்கைகளுக்குள்ளும் நடுவே மாவலிகங்கை அதிபிரவாகத்தோடும் பேரொலிமுழக்கத்தோடும் மகாமுதலாகிய நீர்வாழ்சந்துக்களோடும் விசித்திரமான தாமரைமுதலியவற்றோடும், அலைசுழல் குமிழ்நுரைமுதலியவற்றோடும், சக்கிரவாகமுதலிய பறவைகளோடும் இருகரைகளிலுமுள்ள பல விருக்ஷங்களோடும் இவ்விதமானபலவித வைபவங்களோடும் பத்துத்திசைகளையும் விளக்கிக்கொண்டு வடக்குத்திசையை நோக்கிச்சென்று தென்கயிலையையடைந்து அதனுடைய தென்புறத்துள்ள குகையில் இருந்தனன். அங்கு உலகங்களைக்காக்கும்படி கடலில் சங்கமமாயினன். சிவனொளிபாதமலையின் நடுவில் சிவனுடைய பாதங்கள் இருக்கின்றன. அப்பாதங்களுக்குச் சரமாய் உத்தமமாய்விளங்குவது தென்கயிலையென அறிந்துகொள்க. இந்தமலைத்தானம் இரகசியமானது. சிவனொளிபாதமலைமுதல் தென்கயிலைவரைக்கும் சிவசத்திமய க்ஷேத்திரமாகும். எப்போழ்தும் சந்தோஷத்தை விளைப்பது. தலங்களுக்குள் எல்லாம் உத்தமதலம். தீர்த்தங்களுக்குள் எல்லாம் உத்தம தீர்த்தம்.

இனி, மாணிக்ககங்கை மிகவுந் தெளிவாய்க் கிழக்குநோக்கிச் செல்லுவதாய்க் கதிர்காமமலையையடைந்து கீழ்க்கடலில் சங்கமமாகும். காவேரியாகிய மகாகங்கை மேற்குநோக்கிச் செல்லுவதாய்க் கேதீச்சர மகாதலத்தை அடைந்து பிரதக்ஷிணமாகப்போய் மகோததி சமுத்திரத்தில் கலக்கின்றது. இந்தக்கங்கை மூன்றிலிருந்து அநேக பிரவாகங்கள் உண்டாயின. புண்ணிய நதிகளும் புண்ணிய நதங்களும் பலவிருக்கின்றன. உபநதிகளும் அநேக கடலையடைகின்றன.

முனிவர்களே! தென்கயிலையின் மேற்குப்பாகத்தில் இருக்கும் கன்னியாகங்கை உற்பத்தியாவும் முன்னர் என்னால் சொல்லப்பட்டதன்றோ? சிவகங்கையின் விசேஷம் ஒன்பதாம் அத்தியாயத்தும், பாதாளகங்கையின் விசேடம் பதினெட்டாம் அத்தியாயத்தும் பின்னர்விரிவாய் அறிந்தமட்டில் உங்களுக்குக்கூறுவேன். இப்பொழுது பெரிய சிவகங்கையின் வரலாறறைக்கூறுகின்றேன், கேட்பீராக. சிதம்பரமென்னும் மகாதலத்தில் சிற்சபையின் உத்தரபாகத்தில் சிவகாமசுந்தரி அம்பாள் சந்நிதானத்தில் மிகுந்தகுளிர்ச்சியுள்ள சிவகங்கையென்னும் மகாதீர்த்தம் சிவனது அநுமதியோடிருக்கிறது. அவ்விடத்திலேயே அதற்குற்பத்தியென அறிக. திவ்வியமாகிய அத்தீர்த்தம் லோகான்

மையின்பொருட்டேயுண்டாயிற்று. பாவமிகுந்தமனிதர்கள் தம் ஆயுள் முடிவுக்குள் ஒருமுறை சிவகங்காதீர்த்தத்தில் முழுகிச் சிற்சபை தரிசனஞ்செய்து, பின் சிவகாமசுந்தரியம்பாள் தெரிசனமும் செய்வார்களேயாயின், அவர்கள் நிச்சயமாய்ப் பரமுத்தியையடைவார்கள்

முனிவர்கள் வினவுதல்:— சூதரே! மகாபாக்கியசாலியே எங்களுக்குத்தருமம் போதிப்பவரே! மகாபலி கங்கைப்பெருமையை எங்களுக்கு விரிவாய்ச்சொல்லுதல் வேண்டும் என்று முனிவர்கள் வினவுதலும், சூதர் சொல்லுகிறார். வாரீர் முனிவீர்காள்! உங்களால் வினவப்பட்ட வினா உத்தமமானது. மாவலிகங்கைப்பெருமை சொல்வதற்கு வல்லவர் பரமசிவனேயாம். ஆதலான், எனது சிற்றறிவுக்கேற்றவாறு நான்சொல்கின்றேன் கேளுங்கள்.

பத்துக்கங்கைகள் முக்கியமானவை. அவைகளுள் ஆறுகங்கைகள் சிங்களதேசத்திலிருக்கின்றன. தேவலோகத்திலும் வைகுண்டத்திலும் காசியிலும் சிதம்பரத்திலும் ஒவ்வொருகங்கையே இருக்கின்றது. அக்காரணத்தால் சிங்களதேசம் உத்தமம். முக்கியமாகியகங்கைகள் ஆறு. அவ்வாறினுள்ளும் முக்கியம் மாவலிகங்கையாகும். சதாசிவனால் சயனிக்கப்படுவதால் சர்வவேதங்களிலும் சாஸ்திரங்களிலும் புராணங்களிலும் சர்வ தீர்த்தங்களிலும் முக்கியம் மாவலிகங்கை எனக்கூறப்பட்டுளது.

முற்காலத்தில் கிருதயுகத்தில் இருளை நீக்கும்பெரிய ஒளிவடிவுடைய பரமசிவன் ஒருநாள் விசுவகருமனை அழைத்து அன்புடன்கூறுகின்றார். ஓ விசுவகர்மாவே! இப்போது நீ உத்தமமாகிய திருப்பாற்கடலை அடைந்து அதன் நடுவே மகாவிஷ்ணு யோகநித்திரைசெய்கிறார். அவரது நாபிகமலத்திலுண்டான ஞானரூபதண்டின்மேல் இருக்கின்ற தாமரைமலரிடைச் சமாதியிலிருப்பவனும் பேரொளிவடிவுடைய பாலபிரமன் மகா யோகியாய் எப்போதும் தியானித்திருப்பவனும் இருக்கின்றான். அத்தாமரையைப் பிடுங்கியெறிந்து அதனையெழுப்பித் தக்ஷிணகைலாசத்தில் கோணேசனைப் பூசிக்கும்பொருட்டு வரச்சொல்வாய் என்று சிவபெருமான் விசுவகர்மனுக்கு உத்தரவுசெய்து பின் ஆகாயமார்க்கமாய் மறைந்துபோயினர். ஈசுவரானுக்கிரகத்தினால் விசுவகர்மா விரைவாய்ச்சென்று திருப்பாற்கடல் நடுவில் நித்தியராகிய மகாவிஷ்ணுவைவணங்கி அவரிடம் அநுமதிபெற்றுப்பின் நாபிகமலத்தை அடை-

ந்து காங்களிஞல்பிடுங்கி அதிலிருக்கிறவனும் மகாத்துமாவும் சமாதிபா னுமாகிய பாலபிரமனே அன்போடு எழுப்பி ஈசனுல்சொல்லப்பட்டவை களை அவனுக்குச்சொல்ல, அவனும் அச்சிவவசனத்தைக்கேட்டு அப்ப டியே செய்வேனென விசுவகர்மனுக்குஞ்சொல்லி, எழுந்து இறுகக்கட் டித்தழுவி விசுவகர்மனைப்பார்த்து பாஞ்சோதியும் விபுவுமாகிய ஈசன் கருணைபுரிந்து அடியேனை நினைக்கின்ருரோ என்றுகூறி அவனேடும் உத்தமமான தென்கயிலையையடைந்தான்.

பாலப்பிரமன் தென்கயிலைக்குச் சென்று மாவலிகங்கையில் தோய்ந்து கோணேசாலயஞ்சென்று செபதபதியானங்களை முடித்துக் காரணகமத்தின்படி பத்தியோடு திருநந்திதேவர் அநுமதிபெற்று முத லில் விநாயகரைப்பூசைசெய்து, பின் சூரியபூசையைச் செய்துகொண்டு, பின் துவாரபாலகரைப் பூசைசெய்தான். பின்பு பத்தியுடன் கர்ப்பக்கி ரகஞ்சென்று, அம்பிகையுடன் கோணநாயகரையும் கணபதியையும் தரி சித்துவணங்கித் துதித்து ஆனந்தக்கண்ணீர்சொரிய நின்று, ஐவகைச் சுத்திசெய்து பீடபூசையும் முடித்துக்கைகூப்பிப் பத்தியோடும் தியா னித்து மகன்னியாசவிதானப்படி அபிடேகஞ்செய்யத்தொடங்கி சந்த னம் தைலம் முதலானவைகளாலும், கங்கையினுலும் திருமஞ்சனமா ட்டிப் பின், விதிப்படி மந்திரபூர்வமாய்த் தான் பரிசுத்தனுய் அம்பிகை க்கு அபிசேகஞ்செய்வதில் மிகுதியாய் அச்சங்கொண்டு பெண்வடிவமு டையவனுகித் திருமஞ்சனஞ்செய்துமுடித்து ஆடைசாத்தி உபவீதாதி களையும் சந்தனம் அட்சதை குங்குமம் பூமாலைகளையுஞ்சூட்டி அலங்கரி த்து வில்வம் புஷ்பம் முதலானவைகளிஞல் அருச்சித்து ஆவரணபூசை செய்து தூபம் தீபம் நைவேத்தியம்செய்து பானியம் பாத்தியம் அருக்கி யம் ஆசமனம் தூபதீபம் இவைகளையும் செய்துமுடித்து, அதன்மேல் நீராஞ்சனம் முடித்து, அதன்மேல் மூலமந்திரத்தால் அஷ்டோத்தரசத அர்ச்சனைசெய்து அட்டபுஷ்பஞ்சாத்தி அம்பிகையையும் சங்கரனையுஞ் தாம்பூலாதி உபசாரங்களிஞலும் குடைசாமரம் முதலிய சருவ உபசா ரங்களினுலும் பூசித்து ஓமஞ்செய்து பலவகைத் தோத்திரங்கள்செய்து சிவத்தியானஞ்செய்தான். இவ்விதம் நடத்திய காலத்தில் கோணேசப் பெருமான் ஆகிய பிரபுவானவர் உமாசகாயராய்ப் பேரொளியினராய்ச் சுந்தரவடிவினராய்க் காட்சிகொடுக்க, பரிதியாயிரம் உதித்தாற்போல் விளங்கும் தேவதேவேசராகிய அவரைக்கண்டு, பாலபிரமன் எழுந்து சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து கைகூப்பிநின்று ஆனந்தக்கண்ணீர்பெ ருக அளவற்ற தோத்திரங்கள் செய்தான்.

பாலபிரமனாற் செய்யப்பட்ட தோத்திரங்களினாலும் பூசை
அர்ச்சனைகளாலும் களிப்படைந்து பகவான் சிருட்டித்தொழிலை அவ
னுக்கு அளித்தனர். அவ்வரம்பெற்று கோணேசர் திருவருளினால் சரு
வலோகங்களையும் பிரமன்படைத்தான். அவன் எப்போதும் சந்தோஷ
சித்தனாய்ப் பத்தியோடும் கோணநாயகரைப் பூசித்து மிகுவலிமையினால்
விராட்வடிவனாகிப்பின் விஷ்ணுவோடும் வைகுண்டலோகத்தில் வசித்
துப்பின் விராட்வடிவநீங்கினான். இதனைவிஷ்ணு தென்கயிலையைய
டைந்து கோணநாயகரைப் பூசைசெய்து அவரது அனுக்கிரகசக்தியி
னாலே விராட்ரூபனாய்ப் பிரமனோடு சமபராக்கிரமசாலியாகிப் பிரமனோ
டுகூட வசித்துப்பின்பு நவத்துவாரங்களையும் ஒதுக்கிக்கொண்டு திருப்
பாற்கடல்மத்தியில் யோகநித்திரைபுரிந்தனர். அவ்விஷ்ணுவின் நாபிக
மலத்திலுண்டான பிரமனுக்கும் விஷ்ணுவுக்கும் வாக்குவாதம் உண்டா
யிற்று. நானேவல்லவன் என்னைவிடப் படைக்குந்தொழிலில் யாவர்
உளர் என்று பிரமன்சொல்லி அகந்தைகொண்டான். விஷ்ணுவும் காப்
பதில் நானே சமர்த்தன் என்னைவிட வல்லவர்யாவர் என்றார். இவ்வி
தம் வாதம்பேசி இருவருங் கோபங்கொண்டனர். அப்போது பிரம
னது முகத்திலிருந்து மகிடாசுரன் உண்டானான். விஷ்ணுவினது
முகத்திலிருந்து வியாக்கிரமுகாசுரன் உண்டானான். இருவருக்கும்
பெரும்போர் விளைந்தது. போரைக்கண்ட மூவுலகவாசிகளும் கலங்கி
னார்கள். பிரமதேவனும் விஷ்ணுமூர்த்தியும் அப்போரைக்கண்டுபயந்து
ஓடிச்சென்று விரைவாய்த் தென்கயிலையையடைந்து கோணேசரைப்
பூசித்து வணங்கித் துதித்து மகிடனாலும் வியாக்கிரமுகனாலும் நேர்ந்த
இடையூறுகளை விண்ணப்பஞ்செய்தனர்.

அவ்விருவர் சொன்னவாசகத்தையும் கேட்டுக் கருணையங்கட
லாகிய கோணநாயகர் துர்க்கையைப்பார்த்து, ஓ துர்க்கையே! மகிட
னுக்கும் வியாக்கிரமுகனுக்கும் போர் விளைந்திருப்பதால் மூவுலகமும்
நடுங்குகின்றது. ஆதலின் நீ அவ்விடம்போய் உலக நன்மைக்காக அவ்
விருவரையும் விரைவில்கொன்று, பின் இவ்விடம் வருக” என்று கட்
டளையிட்டார்.

துர்க்காதேவி அவ்வாறே செய்வேனென்றுசொல்லி, கோபத்
தினாற் சிவந்தகண்களையுடையவளாய்ச் சமீபத்திற்சென்று, வியாக்கிர
முகனைச் சூலத்தினாற் குத்திக்கொன்றனள். பின் தேவிக்கும் மகிட
னுக்கும் பெரும்போர்விளைந்தது. இச்சமயத்தில் தேவியோ மிகவும்
கொரோத்தோடுகூடமிகவும் பெரிய சூலப்படையினால் மகிடாசுரனைய்

பூமியில் தள்ளித் தமது திருவடிகளினால் தலையில் மிதித்ததும், தேவியின் திருவடிகள் பட்டமையால் அவன் ஞானமுடையவனாய்த் தனக்கு முத்திதரும்படி தோத்திரஞ்செய்துநிற்க, அவனது தோத்திரத்துக்கு இரங்கித் திரிலோகபரமேசுவரியானவள் அவனுக்கு மோட்சங்கொடுத்து, பின் தேவர்களால் தோத்திரஞ் செய்யப்பட்டவளாய்த் தெட்சிணகைலாயத் தையடைந்து கோணேசரருகில் அமர்ந்தனள்.

## கங்கோற்பவமுரைத்தபடலம்.

முற்றிற்று.

---

## ஏழாவது

# கங்கைப்பெருமையுரைத்தபடலம்.

சூதர் சொல்வது:— முன்னொருகாலத்தில் தக்கன் சிவத்துவேஷத்தினாலே சத்திரயாகஞ்செய்யத் தொடங்கினான். அப்போது பொறிவினராகிய நாரதமுனிவர் உத்தரகைலைக்கேகிச் சிவசந்நிதியை யடைந்து தக்கனது விருத்தாந்தத்தைப் பரமேசுவரனுக்குச் சொல்லவும் அதனைத்தேவி கேட்டுப் புன்சிரிப்புடன் கணவனை வணங்கிச் சத்திரயாகத்தைக்காணும்விருப்போடு "நாயகரே! எனது பிதாவினால் செய்யப்படும் யாகத்தைக்காணுதற்கு எனக்கு ஆசையுண்டாகின்றது. பிரபுவே! ஆதலினால் தயவுசெய்து விடைதந்தருளல்வேண்டும் என்றனள்.

சிவன் சொல்வது:— பிரியை! உன் பிதா நம்மைப் பலவிதமாய் நிந்தனைசெய்தான். நம்மையும் அழைத்திலன். ஆகையால், யாகத்துக்குப்போகவேண்டியதில்லை என்று சொன்னதைக் கவனியாமல் தேவி யாகசாலைக்கேகினாள். சர்வலோகேசுவரியாகிய அவ்வம்மையைக் கண்டும் அவள் பிதாவாகிய தக்கன் உபசாரஞ்செய்யாமல் பரமான்மாவாகிய சிவபிரானையும் பலவிதமாய்த் தூஷித்தான். அதுகண்டு, தேவி கோபமுடையவளாய்த்தன் சரீரத்தை நீக்கிவிட்டு, இமயமலை யரசனுக்கு மகளாய்ப்பிறந்தனள். பிறந்ததுமுதலாகப் பரமசிவத்தை நோக்கித் தவஞ்செய்தனள். கோடையில் பஞ்சாக்கினி நடுவிலும், மாரியில்நீரிலும் நின்று கடுந்தவஞ்செய்தனள். இவ்விதம் நிகழுங்காலையில் மகாதேவன்

கைலாசத்தில் வடவாலின்கீழ்ச் சனகர் சனற்குமாரர் சனந்தனர் சநுதனர் என்னும் நால்வருக்கும் அவர்களுடைய புண்ணிய மகிமையினாலும் லோகானுக்கிரகத்தினாலும் தக்ஷிணாமூர்த்தியாய் எழுந்தருளியிருந்து சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கையும் உபதேசித்துக்கொண்டு மௌனியாயிருந்தனர்.

அக்காலத்தில் சூரன்முதலான அசுரர்களால் எல்லாவுலகங்களும் கஷ்டமடைந்தன. இதைக்கண்டு பொறுக்கமுடியாமல் தேவேந்திரன் அமரருடன் சுவர்க்கத்தைவிட்டுச் சத்தியவுலகம்போய்ப் பிரமதேவரைக்கண்டு அவரது பாதங்களில் தண்டம்போல்விழுந்து வணங்கிப்பத்தியோடு துதிப்பானாயினன்.

தேவதேவேசரே! உமக்குவணக்கம்! பரமேட்டியான உமக்கு வணக்கம். சாதுக்களைக்காப்பாற்றும் தேவரீருக்கு வணக்கம். வாகீசருக்குவணக்கம். வணக்கம். படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களைச் செய்பவருக்கு வணக்கம். யோகஞ்செய்பவருக்கு வணக்கம் வணக்கம். பன்முறையும் வணக்கம்.

இந்தவிதமாய்ப் பிரமதேவரைத் துதித்துப் பகவானை இந்திரன் சொல்கின்றான்: ஓ பதுமாசனரே! மகாத்துமாவே! எங்கள் அச்சம் அகற்றுபவரே! இப்பொழுது நாங்கள் சூரன்முதலான அசுரர்களினால் துன்பமடைந்து மிகவும் பயங்கொண்டு உமது சமீபத்தையடைந்தோம். ஓ தேவரே! எங்களுடைய இந்தப்பயத்தைத் தயவுசெய்து நீக்கியருளுக. என்று இப்படியாக இந்திரன் சொல்லக்கேட்டு, பிரமதேவர்சொல்லுகிறார்.

இமயமலையின்கண் பார்வதிதேவியார் நாயகரையடையும்விருப்பத்தோடு பயங்கரமான தவத்தினைச்செய்கின்றனர். எப்போது மகேசுவரன் மகாதேவியை மணம்புரிவாரோ? அம்மகாதேவியிடம் சண்முகக் கடவுள் எப்போது பிறப்பாரோ? அப்போதுதான் நீங்கள் சூரன்முதலானவர்களுடைய பயத்தினின்றும் நீக்கப்படுவீர்கள், என்று பிரமதேவர் சொல்லக்கேட்டு இந்திரன் மனச்சந்தோஷங்கொண்டு, பின் அதன் உபாயத்தையாலோசித்துப் பின் மன்மதனைப்பார்த்து ஓ மன்மதனே! இப்பொழுது நீ சிவபெருமானுடைய சமீபத்தைவிரைவிற்சென்று பார்வதியை மணம்செய்யும்படி செய்தல்வேண்டும். அதற்காகிய முயற்சியைச்செய்வாயாகவென்று சொன்னான். மன்மதனும் அப்படியேசெய்

வேன் என்று சொல்லி, இரதியுடன் உத்தரகைலாசத்தையடைந்து வசந்தருதுவினால் செய்யப்பட்ட செல்வம்வாய்ந்த ஈசனது காட்டில் அவ்வீசன்மேல் வில்லைவளைத்துப் புஷ்பபாணத்தை விடுத்தான். ஈசனும் சுற்றிலும்பார்த்து மன்மதன் வில்லைவளைத்து பாணப்பிரயோகம் செய்து நின்றமையையறிந்து அவனது சரீரத்தைத்தமது நெற்றிக்கண்ணினால் நீறாக்கிவிட்டனர். உலகத்தில் மன்மதன் இல்லாமலே அநேக காலங் கழிந்தது. இங்ஙனம் நிகழ்ந்தகாலத்தில் பிரமதேவர் முதலானதேவோத்தமர்கள் மகாதேவனைக் குறித்து இந்தவிதமாய்த் தோத்திரஞ் செய்வாராயினர்.

சர்வலோகேசரே! உமக்குவணக்கம், பகவானே! உமக்குவணக்கம். சிவபெருமானே! உமக்குவணக்கம். பூதநாதராகிய உமக்கு வணக்கம். கருணைக்கடலே உமக்குவணக்கம். கங்காதர! விருபாக்க! சிவ! எங்களைக்காத்தருளுக. சர்வலோகங்களுக்கும் புகலிடமாய், நாதப்பிரமவடிவினராய், சச்சிதானந்தஸர்வஞ்ஞராக பிரமவடிவினராகிய தேவரீருக்குவணக்கம். தேவரீருக்குவணக்கம். தேவரீருக்குவணக்கம். வணக்கம். வணக்கம். பரமேசுவரரே! எங்களால் செய்யப்பட்ட பலவகையான குற்றங்களையும் மன்னித்தல்வேண்டும். தேவ! சூரனால் உண்டாகிய பயத்தை அகற்றுதல்வேண்டும்.

சூதர் சொல்வது:— அத்தேவர்களுடைய தோத்திரத்தினால் சந்தோஷமடைந்த சம்புவானவர் தேவர்களைப்பார்த்துச் சொல்கின்றார். பிரமன் முதலிய தேவர்யாவரும் அவதானத்தோடு கேட்பீராக. உங்களுடையதுன்பம நீங்குதற்பொருட்டும், சர்வலோகநன்மையின்பொருட்டும் பார்வதியைமணம்புரிந்து அவளிடம் மேலான குமாரனைப்பிறப்பிக்கப்போகிறேன். அவன் எப்படிப்பட்டவன் என்றால், பகைவரைக் கொல்வான்; சர்வலோகத்தாருக்கும் நன்மைபுரிவான். அந்தப்புத்திரனால் சூரனாதியர்களாகிய கொடியோர்களைக் கொல்லுவிப்பேன். ஐயமில்லை என்று ஈசன் அருளிச்செய்யக்கேட்ட தேவர்கள் தங்கள் இருப்பிடத்தைப் பயமின்றியடைந்தார்கள். இந்தக்காலத்தில் மன்மதனது மனைவியாகிய இரதிதேவி பெரியதுக்கத்துடனே தன்நாயகனை உயிர்ப்பிக்கும்படி மகாதேவரைப் பிரார்த்தித்து மாங்கல்லிய பிச்சைதரும்படி கேட்டனள்.

மகாதேவர் அருளிச்செய்வது:— ஓ இரதியே! எந்தக்காலத்தில் நாம் இமவான் மகளாகிய பார்வதியைக் கல்லியாணம் செய்வேனோ

அந்தக்காலத்தில் உனது கணவனைப் பிழைத்து எழும்பச்செய்வோம். அப்போது சுபமங்கலியத்தன்மை உனக்கு எய்தும், என்று இவ்வாறு இரதிதேவிக்கு வரங்கொடுத்து, தேவதேவேசனாகிய அரன் உமாதேவியின் மனத்தைச்சோதிக்கவெண்ணி விருத்தப் பிராமணவடிவங்கொண்டு விரைவாய் உமையை அணுகி ஈசுவரனைக்குறித்துத் தூஷணைசெய்தனர். இவ்விதவிளையாட்டினாலே தேவியைப்பார்த்து அத்தேவியின் மனம் ஈசுவரனிடத்தில் திடமாயிருக்கிறதை அறிந்து, அநேக வார்த்தைகளினால் உமையின்மனங் கலங்கும்படி முயற்சித்தும் முடியாமல் ஏற இறங்கப் பார்த்தார். தேவி அவரது வார்த்தையைத்தடுத்து மறுமொழிசொன்னாள். ஏ அந்தணா! துர்வாக்கியங்கூறவேண்டாம். வந்தவழியே சுகமாகப்போகலாம் என்று அம்பிகை விருத்தப்பிராமணரைப்பார்த்து விடைகூறிச்சிவனிடத்திலேயே நிலையானபத்தியை வெளிப்படுத்தினாள். சிவபிரானும் சந்தோஷத்துடன் பார்வதியின் முன்னிலையில் தனது நிஜவடிவத்தோடு பிரசன்னரானார். அவர் இடபாரூடராய், விளங்குகின்ற திருமுகப்பொலிவினராய் தோன்றினார். அந்தப்பரமேசனைப் பார்த்து அகமகிழ்ந்து அம்பிகைசிரித்தமுகத்துடன் வணங்கித்தனது அபீஷ்டத்தைக்கேட்டாள். பின், சிவபெருமான் அம்பிகைக்கு அபீஷ்டத்தையளித்து உத்தமமாகிய கைலயங்கிரியை அடைந்தார். அடைந்து, சப்தரிஷிகளை அனுப்பி நிச்சயதாம்பூலம் செய்வித்தனர்.

பின்னர், பகவான் பிரியமுடையவராய்ப் பிரமாமுதலானதேவர்களோடும், இயக்கர் கந்தருவர் சித்தர் வித்தியாதரர் உரகர் கருடர் ஆதித்தியர் சாத்தியர் தத்துவமுணர்ந்த இருஷிகள் மருத்துவர் வசுக்கள் தைத்தியர் உருத்திரர் முதலான கணதேவதைகளோடும், சமுத்திரங்களோடும், பர்வதங்களோடும், கிரகநக்ஷத்திரங்கள் சப்தமாதர் பூதக்கூட்டங்களோடும், வாத்தியமுழக்கத்தோடும் இடபவாகனத்தின் மீது ஆரோகணித்து, பிரசன்னமான முகத்துடன் விளங்கினவராய் வெள்ளியங்கிரியைவிட்டு இமயகிரியையடைந்தருளினர்.

ஓ மறையவர்களே! இமயமானது அதிபாரத்தினாலே அசைந்தது. பூமியின்வடதிசை பாரத்தினால் அப்படி ஆயிற்று. பூமியின்தென்திசை பாரமில்லாமையினாலே மேலேயுயர்ந்தது. இதனைக்கண்டவர் எல்லாரும் அப்போது நடுநடுங்கினார்கள். அப்பொழுது மகேசுவரன் எல்லாருக்கும் பயம் நீங்கும்பொருட்டு அதிசீக்கிரத்தில் திருநந்திதேவரைக்கொண்டு அகத்தியமுனிவரை அழைத்து இவ்வாறு அருளிச்செய்யலாயினர்: ஓ விப்பிரசிரேட்டா! நீ இப்பொழுது மலைகளுள் உத்தம

மாகிய மலயகிரியை அடைந்து அவ்விடத்திலிருப்பாயாக. அப்படிச் செய்யின், பூமிசமமாயிருக்கும். என்று சிவபெருமானால் கட்டளையிடப்பட்டு அகத்தியமகாரிஷியானவர் மகாதேவரைப்பணிந்து இவ்விதவசனத்தைச்சொன்னார்.

ஓ மகாதேவ! கருணையங்கடலே! கருணாகரா! என்னைக்காத்தருளல்வேண்டும். தேவரீருடைய திருமணத்தைத் தரிசித்துக்கொண்டு நான் செல்வேன், சங்கரா! என்றார்

சிவன் சொல்வது:— அகத்தியமுனிவனே! எல்லா முனிவருள்ளும் அதிமுக்கிய முனிவராயிருத்தலால் விப்பிர! நீயே செல்லத்தக்கவன். ஆதலின், நீயே பொதியமலைக்கு ஏகுவாயாக. திருமறைக்காடு என்னுந் திருப்பதியிலும் காசையென்னும் திருப்பதியிலும் பார்வதிசகிதமாய் சர்வதேவர்களோடும் சூழத்திருக்கல்யாண சுந்தரத்திருக்கோலத்தை ஐயமில்லாமலே காண்பிப்போம். என்று இப்படிச்சங்கரராலே சொல்லப்பட்ட அகத்தியமுனிவர் அப்படியேசெய்வேனென்று சொல்லிவிடைபெற்றுக்கொண்டு இமயமலையை விட்டுப்புறப்பட்டார். பின் அம்முனிவர் காசிமுதலான புண்ணியதலங்களை அடைந்து வழிபட்டுக்கொண்டு காடுகளால்விளங்கப்பெற்ற பொதியமலையை அடைந்தார். அப்பொழுது பூமியானது சமமாகவிருந்தது. இந்த அற்புதத்தைப்பார்த்துக் கயிலையிலுள்ளயாவரும் சந்தோஷமடைந்தவர்களாய் அநேகவிதஸ்தோத்திரங்களினாலே பக்தர்களை யனுக்கிரகிப்பவருந் தேவருமாகிய சிவபெருமானைப்புகழ்ந்து சந்தோஷப்படுத்தி அவ்விடத்தில் திருக்கல்யாணத்தைத் தெரிசித்துக்கொண்டிருந்தனர். பிறகு பங்குனி மாதமும் பௌர்ணிமைத்திதியும் சுபமான உத்திரநட்சத்திரமுங் கூடிய புண்ணியதினத்தில் நல்லலக்கினத்தில் பரமேஸ்வரன் பார்வதிதேவியாரைப்பாணிக்கிரகணம் சாஸ்திரமுறைப்படி நிறைவேற்றிமுடித்து இரத்தினசிங்காசனத்தின்கண் உமாதேவியாரோடு வீற்றிருந்தருளினார்.

அப்பொழுது அந்தநேரத்தில் ரதிதேவியானவள் அவ்விடம் வந்து பார்வதிசமேதரான ஈஸ்வரனைக்கைகூப்பி வணங்கிநின்று ஓ! ஓ! பரமேஸ்வரனே! எனக்கு மங்கல்யதானமானது முன்பே தேவரீரால் கொடுக்கப்பட்டிருக்கிறபடியால் சொல்லியசொற்படியதனை இப்பொழுது தந்தருளுக என்று அந்தரதிதேவியானவள் பரமசிவனைப் பார்த்துக் கேட்டாள். அந்தவார்த்தையைத் தேவர்களுக்குத் தலைவராகிய சிவபெருமான்கேட்டு மகிழ்ந்து தனது மனசினால் மன்மதனை நினைத்தனர்.

நினைத்தவுடன் அவ்விடத்தில் மன்மதனுந் தோன்றினான். சரணமடைந்தவர்களிடத்திற் பற்றுதலுள்ள பரமசிவன் மன்மதனைப்பார்த்து நீ இருமுதலுலகத்தின்கண் அசரீரியாகவிருப்பாய். ரதிதேவிக்குமட்டுஞ் சரீரமுடையவனாக ஆவாய். உலகமுழுமையும் வெல்லுவாய், என்று இப்படியாகக் கருணையங்கடலாகிய தேவேசன் வரமளித்து எல்லாவுலக நன்மையின்பொருட்டும் ரதிதேவியையும் மன்மதனையும் போகும்படிவிடை கொடுத்தனுப்பினார். பின்புமன்மதன் ரதிதேவியோடுகூடவுமைபொருபாகரைப்பணிந்து தனது சைனியங்களோடு சூழப்பட்டவனாய் விரைவிற்றனது நகரையடைந்தான். ஈசனும் மகிழ்வோடு பிரமவிந்திரன் தேவர்களிவர்களோடுங் கைலாசபுரியையடைந்து பார்வதிதேவியாரோடு திருவிளையாடல்செய்துகொண்டு எல்லோருக்குஞ் சுகத்தையுண்டாக்கிப் பலகாலம் வசித்தனர். இப்படி நடைபெறுங்காலத்திற் பிரமன்முதலானதேவர்கள் சிவபெருமானுடைய சமீபத்தில் விரைவிலக்கினி தேவனையனுப்பிவைத்தனர். பக்தர்களைக் காப்பதிற் பிரியமுள்ள பரமசிவனுமோர் திருவிளையாட்டினால்பார்த்து அந்தவீரியத்தை அப்பொழுது பிராணயாமமுறையினால் விரைவாய் நெற்றித்திருக்கண்ணினால் உலகநன்மைக்காக வெளிப்படுத்தினார். தேவர்களுடைய வேண்டுகோளின்படி பூமிதேவியானவள் அக்கினிப்பொறிகளான வீரியத்தைத் தரித்தனள். அந்தணர்காள்! பூமிதேவியிடமிருந்து அவ்வக்கினிப்பொறிகளை அக்கினி தேவனும் வாயுவோடும் வெகு பிரயத்தினத்துடன் சுமந்து வேகமுடன் சென்று கங்கையில்விட்டனன். அப்பொறிகளைச் சுமக்கவாற்றாமல் கங்கையும் சரவணத்தில் விட்டனள். அச்சரவணத்தில் சண்முகக்கடவுள் பிறந்தனர். ஓடவிட்ட பொன்போலவிளங்கும் சார்துலவராகிய குமாரக்கடவுளைக் கிருத்திகைமாதர் அறுவரும் தேவர்களின் வசனப்படி திருமுலைப்பாலூட்டி வளர்த்தனர்.

பின்னர், பார்வதிதேவியார் குமாரனைத்தமது இருகரங்களினுலும் வாரியெடுத்துக் களிப்புடன் திருமுலைப்பாலமுதூட்டிக் கிருபையோடும் புன்முறுவலோடும் விளங்கினார். பின்பார்வதி பரமேசுவரர்கள் குமாரனோடுகூட விரைவில் கைலையங்கிரியையடைந்தனர். பின் குமாரக்கடவுள் வீரவாகுதேவர் முதலியவர்களோடும் கூடப்பலவிளையாடல்கள் புரிபவராய் வெள்ளியங்கிரியை அகன்று, பூவுலகின்கண் வந்தருளினார். வந்து நானாவிதங்களாயும் விசித்திரங்களாயும் பயங்கரமாயும் உள்ளசெயல்களை விளையாட்டாகச் சர்வலோகத்துக்கும் காண்பித்துக்கொண்டு மகாமேருகிரியை அடைந்தனர். அம்முருகக்கடவுள் மேருகிரியில்

ஒருதிருமுகமுடையவராய், பாலவடிவங்கொண்டவராய், வீரியமுடைய வராய், மேருச்சிகரங்களை நடுநடுங்கச்செய்து, பின்பு சிங்கநாதம்செய்தார். அதனைக்கண்டு, தேவர்களெல்லாரும் அச்சங்கொண்ட மனத்தினோடும் அஸ்திரங்களையும் சஸ்திரங்களையும் எடுத்துப்போர்புரியத்தொடங்கினர். வெகுபராக்கிரமசாலியாகிய குமாரக்கடவுளும் எதிர்த்துப் போர்புரிந்து தேவர்யாவரையும் வென்று ஓர் திருவிளையாட்டினாலே அத்தேவர்க ளுக்கு விசுவரூபங்காண்பித்துக் கைலாசத்தின் சமீபத்திலுள்ள உத்தம மாகிய கந்தவெற்பையடைந்தார். அவ்விடத்தில் இந்திராதிதேவர்யா வரும் கந்தசுவாமியென்று அறிந்து பத்தியுடன் விதிப்படி சோடசோப சாரங்களோடும் பூசித்து அவரை தேவசேனாபதியாய்ச்செய்து தோத் திரங்களினாலே அநேகவிதமாய்த்துதித்து அளவிலடங்காத சோதிமய மாய் விளங்கிய குமரக்கடவுளை யானைப்பிடர்மிசை யெழுந்தருளச்செ ய்து வாத்தியங்கள் முழங்க வீதிவலம் புரிவித்து மகிழ்வோடும் அச்சமில் லாதவர்களாயிருந்தார்கள். பின், குகப்பிரான் தேவரெல்லாருங் காண மறைந்தருளினர். மறைந்து கைலைமலையை அடைந்து தம் பந்துக்க ளோடும் சுகமாய்வசித்தனர். அக்குமரன் நாரதர்செய்வேள்வியில் உண் டாகிய ஆட்டுக்கடாவை வாகனமாய்க் கொண்டனர். பிரமதேவனைப் பிரணவப்பொருள் வினவி அவர் பொருள்தெரியாமல் மயங்கக்கோபங் கொண்டு சிறைச்சாலையில்வைத்துச் சண்முகக்கடவுள் கந்தகிரியைய டைந்து உலகங்களைத்தாமே படைத்தனர். அந்தணர்களே! இங்ஙனம் சிருட்டித்தொழில் செய்துவரும் கருணாநிதியாகிய முருகன் அந்தக்கா லத்தில் சிவனது கட்டளைப்படி பிரமனை விலங்கினின்றும் விட்டுச் சிருட் டித்தொழிலையும் முன்போலவே அவனுக்களித்தனர். பின், பிரணவப் பொருளையும் சிவனுக்குபதேசித்தனர். அதன்பின் திருக்கைலாசத்தை யடைந்து அம்பிகையையும் பரமசிவனையும் வணக்கஞ்செய்து அவ்விரு வர்மத்தியில் சிங்காதனத்தின்மீது வீற்றிருந்தருளினார்.

அக்காலத்தில் முனிவர்களுக்குள் முதன்மை வாய்ந்தவரும் நல்லறிவினருமாகிய கும்பமுனிவர் மலயகிரியையகன்று, தவம் சித்திய டையும்படி சந்தோஷத்தோடும் கோணேசரைத் தரிசிக்கும்பொருட்டுத் தென்கயிலையையடைந்தார். அங்கே மாபலிகங்கையில் விதிப்படிதோய் ந்து பத்தியுடன் கோணேசரைத் தரிசித்துப் பிரார்த்தனைசெய்துகொ ண்டு நின்றார். இவ்விதசமயத்தில் உலகங்களைக்காக்கும் பொருட்டுச் சம்புவானவர் வானில் அசரீரியினாலே திவ்வியமாகிய திருவாக்கையரு ளிச்செய்தனர். அதாவது ஓ! ஓ!! தபோதனஞ்கிய அகத்தியனே! நீ கங்கையினது மகிமையைக் கேட்பாயாக. முனிபுங்கவனே! இது இதன்

முன்னர் நம்மால் ஒருவருக்கும் கூறப்பட்டதன்று. மகாபலிகங்கையில் ஸ்நானம்பண்ணிப் பொற்பசுவைத்தானஞ் செய்து, பின்பு, கோணநாயகரை வணங்கித்துதிப்பானேல், அம்மனிதன் இந்த உலகத்தில் சகல போகங்களையும் அனுபவித்து முடிவில் சாயுச்சியமுத்தியை அடைவான். யாவன் ஒருவன் தன்சன்மமத்தியில் இருந்த மகாபலிகங்கையைத் தெரிசிக்கின்றானோ அவன் தன் நூறுகோடிகுலத்துடன் நமது சாயுச்சியமடைவான்

எந்தமனிதன் தன்சன்மமத்தியில் இந்தக்கங்கையைமனசினால் நினைக்கிறானோ அவன் நிச்சயமாய் எல்லாப்பாவங்களாலும் விடப்பட்டுச் சீவன்முத்தியைப்பெறுவான்.

கங்கையென்று சொன்னயாத்திரத்தில் நூறுயோசனைவழியை ஒரு மனிதன் ஒரு கணப்பொழுதிற்றாண்டுவான். ஆகையால் அக்கங்கைக்குச் சமமாகவேறுயாது ஒன்றும். இந்தக்கங்கையில் மூழ்காவிடின் உடனே நரகத்தையடைவான். கங்கைநீரிற் பிரயாசைப்பட்டாவது நன்கு ஸ்நானம்பண்ணுகிற மனிதன் ஒன்றில் கங்கையின் நடுவே குதித்தல் அல்லது அதன் சலத்தைப்பரிசித்தல் என்னுமிவ்விரண்டினுள் ஏதாவது ஒன்றைச்செய்யின் அவன் எல்லாப்பாவங்களினின்றும் விடப்பட்டு உத்தமபதவியை அடைவான். பின் திரும்பிப்பிறத்தலில்லாத சுவர்க்கலோகவாழ்வையுமடைவான்.

ஓ! முனிசிரேஷ்டர்களே! பசுவுக்கு எவ்வளவு உரோமங்கள் இருக்கின்றனவோ அவ்வளவு சுவர்க்கலோகவாசஞ் செய்வான். எவ்வளவுகாலம் ஒளிகள் இருக்கின்றனவோ அவ்வளவுகாலஞ் சுகியாகவாள்வான். ஆகாயத்திலெவ்வளவு நட்சத்திரங்கள் எவ்வளவு சலத்துளிகள் எவ்வளவு பூமி என்று ஒருகால் எண்ணிக்கணக்கிட்டாலுமிடலாம். கங்காஸ்நான பலனோ எண்ணமுடியாது. புண்ணியகாலமான அர்த்தோதயம் ஐந்துபருவங்கள், (அதாவது துவாதசி இரண்டு அமாவாசை பௌர்ணிமை இரண்டு மாசசங்கிரமம் ஆக ஐந்து) மகோதயமிந்த நாள்களில் மகாவலிகங்கையில் ஸ்நானம்பண்ணினாற் கோடிகுலங் கரையேறுகின்றன. தைமாதப் பூசநாளிலெவன் மூழ்குகின்றானோ அவன் அநேகவகையான பிரமகொலையை உடனேதானே நாசம்பண்ணுகின்றான். இதில் ஆலோசனை வேண்டியதில்லை ஆடி அமாவாசைத்தினத்திலெவன் மூழ்குகின்றானோ அவனது பசுக்கொலைகூட நீங்கிவிடுகின்றது. மாசிமகநாளில் மூழ்குகின்றவனுக்கு எல்லாப்பாவங்களும் நிவிர்த்தியாகின்

றன. பூமியிலொருமனிதன் சந்திர சூரியகிரகணகாலங்களில் இந்தக்கங் கையிற்றோய்ந்தானேயானல் நிச்சயமாக அசுவமேதயாகத்தின் பலனை அடைகின்றான். விஷயசங்கிராந்தி இவைகளிற் பக்தியுடன் மூழ்குகிற வன் அளவற்றபலனை அடைகின்றான். இதில் விசாரம்வேண்டியதில்லை எல்லாமாசங்களிலும் வருகின்ற அமாவாசையிலும் பௌர்ணிமையிலும் பக்தியுடன் மூழ்கினல் எல்லாப்பாவங்களினின்றும் நீங்கிவிடப்படுகின் றான்.

இனி மாகமாசம் வைசாகமாதஞ் சித்திரைமாதஞ் சித்திரை நாள் இந்நான்கிலுஞ் சித்திரைமாதம் ரதசப்தமிநாளிலும் எந்தமனு ஷன் மகாவலிகங்கையில் மூழ்குவானே அவனது புண்ணியபலத்தைச் சொல்லுதற்கு எவனும் வல்லமை உள்ளவனல்ல.

ஓ! பிராமணர்களே! எந்தமனிதன் புண்ணியகாலமல்லாத கா லத்தில் ஸ்நானம்பண்ணுகிறானே அந்தமனுஷன் முத்தியை அடைகின் றானென்றால் புண்ணியகாலத்தில் மூழ்கினவனுடைய புண்ணியபலனைச் சொல்லவேண்டியதென்ன. ஆகையால் மகாவலிகங்கையின் மான்மியம் என்னாலே வருணிக்கமுடியும்? இதைமனத்தில் நினைத்தல் தெரிசித்தல் இதன்குணத்தைக்கேட்டல் தொடுதல் அங்ஙனமே மூழ்குவில் பானம் பண்ணுதல் வருணித்தல் முதலியன செய்பவர்களுக்கும் விசேஷமான தெரிசனம் பானம் ஆலாபம் பூசித்தல் செய்பவர்களுக்கும் அவர்களது மேனியைப்பரிசித்து வாயு எவன்பேரில் தொட்டு அடிக்கின்றதோ அவ னுக்கும் பிரதத்திமுதலான பாவங்கள் நீங்கிவிடுகின்றன. மகாவலிகங் கையில் மூழ்குவோன் இந்த உலகத்திலும்வேறு உலகத்திலுந்துக்கத்தை அடையமாட்டான். இதிலுற்பவித்த லிங்கத்தைப் பூசித்த அந்தணன் எல்லா அபீஸ்டங்களையும் அடைகின்றான். பின்பு நமது சாயுச்சியபதத் தையுமடைகிறான். இதன்கண் உற்பவித்த லிங்கத்தைத் தெரிசனம் பண்ணுதல் வருணித்தல் இவைகளினல் எல்லாப்பாவங்களும் நீங்கிநமது உலகத்தில் வசித்தலும் நிச்சயம். எழு நதிகளிலும் ஸ்நானம்பண்ணித் தெரிசித்தல் எந்தப்பலனுங்களுக்குக் கிடைக்கின்றதோ மகாவலிகங்கை யில் எந்தமனிதன் மூழ்கின்றானே அதனல் அவன் அந்தப்பலத்தை அடைகின்றானென்று உண்மையாகவே சொல்லுகின்றேன்.

அகத்தியமுனிவரே! பிராமணன்மூழ்கினல் பிரம்மபதத்தை யடைவான், அரசன்மூழ்கினற் சக்கரவர்த்தியாவான், வைசியன்மூழ்கி னற் பெருஞ்செல்வனவான், சூத்திரன்மூழ்கினல் எல்லோராலும் புகழக்

கூடிய சுகத்தைப்பெறுவான், ஸ்திரீமூழ்கினால் புருஷத்தன்மையைப் பெறுவாள், நீசன் மூழ்கினாற் பரிசுத்தகுலத்தவனாவான். அலிமூழ்கினால் புருஷனாவான். தேவன்மூழ்கினால் நல்லபதவியைப் பெறுவான்; முனிவன் மூழ்கினால் நல்லதவச்சித்தியைப் பெறுவான். அசுரர்மூழ்கினாற்றேவனாவான். ஆகையால் பசுக்கள் பறவைகள் சகல மிருகங்கள் கங்காஸ்நான மகிமையினாலே தங்கள்பிறப்பை நீக்கிமனிதப்பிறப்பை யடைகின்றன.

கேதாரம் நைமிசாரண்ணியங் குருக்ஷேத்திரம் புஷ்கரம் அவிமுக்தம் பிரயாகைகங்கை சமுத்திரசங்கமம் என்னுமிப்புண்ணிய கட்டத்தின்கண்ணுள்ள பலமும் மதுரைமுதலாகிய புண்ணியதலங்களில் நூறு வருஷந் தவஞ்செய்தாலென்னபலமோ அந்தப்பலமும் இந்தமகாவலிகங்கையில் ஒருதடவை மூழ்கினதினாலே உண்டாகும். நூறுபிரமக்கொலை ஆயிரமுறைகட்குடித்தல் பதினாயிரந்தடவை பொன்னைத்திருடுதல் இலட்சம்முறை தனது குருமனைவியைக்கூடுதலிவை முதலானவையுங்கோடி சம்சர்க்கபாவங்களும் இந்த மகாவலிகங்கையின்கண் ஸ்நானம்பண்ணினதினாலே நாசமடைகின்றன. ஆயிரந்திலபாத்திரம் தானங்கொடுத்தல் பதினாயிரம் காராம்பசுத்தானம் பண்ணுதல் இவைகளினால் உண்டாகும் பலன்யாதோ அந்தப்பலனை இந்த மாவலிகங்கையில் ஒருதடவை முழுகினதினால் அடையலாம்.

ஓ பிராமணோத்தமர்களே! கவனமாய்க்கேளுங்கள். முக்கிய மர்கிய துலாபாரமுதலான தானங்கள் அநேகவிதமாய்ச் செய்தால் என்னபலனோ அந்தப்பலனை ஒருமுறை அந்தமாவலிகங்கையில் முழுகின மாத்திரத்தினாலே அடையலாம். ஆயிரம் கன்னிகாதானம் ஆயிரங்கோதானம் ஆயிரம் விரதங்கள் செய்தால் எந்தப்பலனோ அந்தப்பலனை ஒருமுறை இந்தமாவலிகங்கையில் முழுகியதினாலடையலாம். எல்லாத்தேவர்களிலேயும் என்ன புண்ணியம் இருக்கின்றதோ? எல்லாமந்திரங்களிலேயும் என்னபலன் உள்ளதோ? அவைகளையெல்லாம் ஒருமுறை இந்தக்கங்கையில் முழுகியதால் அடையலாம். நான்குவேதங்களையும் சுரம அங்கமாக உபாங்கங்களோடு கூடப்பாராயணஞ்செய்தால் என்னபலனோ அந்தப்பலனை இந்தக்கங்கையில் முழுகுவதினால் அடையலாம்.

சிவனொளிபாதமலையின்கண்ணே நமது திருவடிகள் இரண்டும் எப்பொழுதும் இருக்கின்றன. இந்தக்கைலாசத்தின்கண்ணே கிரீடதினாலே விளங்காநின்ற நமது சிரமும் இருக்கின்றது. நமது பாதத்தின் அடியினின்றும் உண்டானகங்கை மூன்று பிரிவுள்ளது. அவை மாவலிகங்கை மாணிக்ககங்கை காவேரிகங்கை என்பனவாம்.

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கையும் கொடுக்கின்ற மாவலிகங்கையில் ஸ்நானஞ்செய்தால் இம்மையில் சகலபோகங்களையும் அனுபவித்து மறுமையில் நமது சாயுச்சியத்தைப்பெறுவான். ஓ பிராமணர்களே! மாணிக்ககங்கையில் மனிதர்கள்ஸ்நானஞ்செய்தமாத்திரத்திலே எல்லாப்பாவங்களும் நீங்கிப் பரகதியை அடைவார்கள். எப்பிராமணன் காவேரிகங்கையில் முழுகுகிறானோ அவன்விரும்பியவை எல்லாவற்றையும் அனுபவித்து மறுமையில் முத்திபெறுவான்.

அகத்திய! மாவலியென்னும் கங்கையின் மகிமையைக்கேள். அது வடபுறமாய் ஓடித்தென்கயிலையிலிருக்கிற குகைவழியாய்ச் சமுத்திரசங்கமஞ்செய்து குகையின் உள்ளே எப்போதும் வசிக்கின்றது. அதன்பாதம் எமது பாதத்தினிடமே. அதன்தலை எமது தலையின்பாரிசமே. அம்மாவலிகங்கை இந்தவிதமாய் எப்பொழுதும் நம்முடனே சயனஞ்செய்கின்றது. எவ்வாறு பகீரதி என்றகங்கை விஷ்ணுவின் பாதத்தினின்றும் உற்பத்தியுடையதோ அவ்வாறே நமது பாதத்தினின்று இந்தக்கங்கை பூமியின்கண் தோற்றினள்.

பருவதங்களுள் கைலாசமும், சுடர்களுள் சூரியனும், மந்திரங்களுள் காயத்திரியும், விரதங்களுள் ஏகாதசிவிரதமும், வேதங்களுள் சாமவேதமும், வருணங்களுள் அந்தணவருணமும், பசுக்களுள் கபிலைப் பசுவும், சீவர்களுள் அறிவுடையவனும் எவ்வாறுமேன்மையாய்க் கூறப்படுகின்றனவோ அவ்வாறே நதிகளுள் மாவலிகங்கை மேன்மையாய்ச் சொல்லப்படுகின்றது.

ஓ! அந்தணசிரேஷ்டனாகிய அகத்தியனே! நமது பிரியத்துக்காக நமது உத்தரவின்படி உன்னால் லிங்கப்பிரதிஷ்டை செய்யக்கடவது. இந்தவிதமாக, ஈசுவரனாலே ஏவப்பட்ட அகத்தியமுனிவர் சந்தோஷங் காரணமாய் ஆனந்தபாஷ்பம் நிறைந்தகண்களோடு கூடியவராய்ப் பின் வருமாறு தோத்திரஞ்செய்யத் தொடங்கினார்.

அகத்தியர் துதிசெய்தல்:—

வேதாந்த வித்தையில் தனித்து வீற்றிருப்பவரே! கண்ணன் முதலான தேவர்களாலும் அறியப்படாத சிரேஷ்டமான பொருளே! திரிகோணகயிலாசமலைவாசரே! தேவரே! கோணேசரே! அடியேனை எப்பொழுதும் காத்தருளல்வேண்டும். அரவணியுந் திருக்கரத்தினரே! மன்மதனது சரீரத்தை எரித்தவரே! சந்திரசூடரே! திரிகூடகைலாச

நிவாச! தேவ! அடியேனை எந்நாளும் இரக்ஷித்தல் வேண்டும். கொன்றைப்பூ, தும்பை வெள்ளெருக்கு அறுகு ஊமத்தை இவைகளையணிந்தவரே! கங்காதரரே! வேதசாரப்பொருளே! திரிகூடமென்னும் கைலாசத்தின்கண் வீற்றிருப்பவரே! தேவரே! அடியேனை எந்நாளும் காத்தருளல் வேண்டும். மலையரசன் மகள்மணந்த பாதித்திருமேனியையுடையவரே! தமது அடியார்களின் இருதயவீட்டின்கண் எப்போதும் இருப்பவரே! திரிகூடமென்கிற கைலாசத்தின்கண்ணே வசிப்பவரே! தேவரே! அன்பர்களைக்காப்பவரே! அடியேனைக்காத்தருளல் எந்நாளும்வேண்டும். முப்புரங்களை எரித்தவரே! பிநாகம் என்னும்பேர்பெற்ற வில்லையுடையவரே! ஆலாலமென்னும் காளகூடவிஷத்தினைக் கண்டத்தில் அணிந்தவரே! ஈசரே! திரிகூடமென்கிற கைலாசத்தில் இருப்பவரே! தேவரே! அன்பர்களைக்காப்பவரே! அடியேனை எந்நாளுங்காத்தருளல்வேண்டும். நான்முகனுக்குத்தலைவரே! மகாத்துமாவே! மழுவும் மானும் விளங்குந்திருக்கரத்தினையுடையவரே! திரிகூடமென்னுங் கைலாசத்தில் வீற்றிருப்பவரே! தேவரே! அன்பர்களைக்காப்பவரே! அடியேனை எந்நாளும் காத்தருளல்வேண்டும். சத்திரயாகஞ்செய்த தக்கன்தலையை அரிந்தவரே! எனது ஆன்ம அறிவே! சிவமணங்கமழும் புஷ்பமே! திரிகூடமென்னுங் கைலாசத்தில் வீற்றிருப்பவரே! தேவரே! அன்பர்களைக்காப்பவரே! அடியேனையென்றும் காத்தருளல்வேண்டும். ஞானமென்னும் ஒளிவிளக்குமுளையே! தேசிகேசரே! விசித்திர விளையாடல்களின்பொருட்டு அற்புதவேடங்களைத்தரிப்பவரே! திரிகூடமென்னுங் கைலாசத்தில் வீற்றிருப்பவரே! தேவரே! அன்பர்களைக்காப்பவரே! அடியேனை எந்நாளும் காத்தருளல்வேண்டும். உலகினுக்கு ஒருமூர்த்தியே! எனது சீவனில் இருப்பவரே! பொன்வில்லைத்தரித்தவரே! அளவிடப்படாதவரே! திரிகூடகைலாசநிவாசரே! தேவரே! அன்பர்களைக்காப்பவரே! அடியேனைக் காத்தல்வேண்டும். விபூதியணிந்து விளங்கும் விபுவே! சூக்குமத்தையறிபவரே! சமுசாரத்தை நீக்குபவரே! முதலும் முடிவுமில்லாதவரே! திரிகூடகைலாசத்திலிருப்பவரே! தேவரே! அன்பர்களைக்காப்பவரே! அடியேனை எப்போதும் காத்தல்வேண்டும். கோணேசரது இணையடிகள் இரண்டையும் வணங்குகின்றேன். அம்பிகையின் திருவடித்தாமரைகளையும் வணங்குகின்றேன். தேவேச! என் குற்றங்களைப் பொறுத்தருளுக. தேவியே! பொறுத்தருளுக. என்னிடம் பிரசன்னமாய் விளங்குக.

சூதமுனிவர் சொல்வது:—

பாவங்களை நீக்கும் இவ்விதமாகிய தோத்திரங்கள் அகத்திய

முனிவரால் சொல்லப்பட்டன. யாவன் ஒருவன் இத்தோத்திரங்களை
அன்புடன் படிக்கிறானோ அவனெல்லா இஷ்டசித்திகளையும்பெறுவான்.
இந்தப்படியாய் அகத்தியர் துதித்து மகாதேவரைப் பார்த்துப்பின்வரும்
வாக்கியத்தைச் சொல்கிறார், சுவாமியே! திரிகூடகைலாச நிவாசரே!
கருணாகரரே! எந்தத்தானம் மகாலிங்கப் பிரதிட்டைக்கு என்பதை அரு
ளிச்செய்தல்வேண்டும்; என்றுகேட்க, ஈசன் அருளிச்செய்கின்றார் —

கைலாசத்தின் தெற்கு எமது சிவனொளிபாதமலைக்கு வடக்கு
கங்கைக்குக் கிழக்கு ஆகிய இந்த அழகியஸ்தானம் சிவலிங்கத்தாபனத்
துக்கு உத்தமமானது. இரம்மியமும் கரசை என்னும் பெயர்வாய்ந்த
தும் ஆகும். என்று திருவாய்மலர்ந்தருளுதலும், அவ்வாக்கியத்தைக்
கேட்டு அகத்தியர் சந்தோஷம் நிறைந்தவராய் எந்த இடம் ஈசுவரனால்
சொல்லப்பட்டதோ அந்த இடத்தை அடைந்தார்.

அடைந்து, ஆலயம் கட்டுவித்தனர். எவ்விதம் எனில்,—
ஸ்ரீகோபுரங்களோடு கூடியதாய், அநேகமண்டபங்களோடு கூடிய
தாய், நானாவிதசித்திரங்களோடு விளங்குவதாய், நான்குதுவாரங்களோ
டுபொருந்தியதாய், ஐந்து பிராகாரங்களோடு சேர்ந்ததாய், அவ்விடத்
தில் அகத்திய முனிவரானவர் விசுவகர்மாவைக்கொண்டு விரைவாய்
ஆலயத்தை அமைத்தனர்.

பிரமா விஷ்ணு இந்திரன் தேவர் கந்தருவர் கின்னரர் இயக்
கர் வித்தியாதரர் பிரமவாதிகளாகிய இருடிகள் இவர்களோடும் ஆகாய
மார்க்கத்தில் மங்களதூரியங்கள் முழங்கவும், அரம்பை முதலான தேவ
மாதர்கள் சந்தோஷத்தோடும் நிருத்தஞ்செய்யவும், வேதமுழக்கத்தோ
டும், பதினெண்வகைவாத்திய முழக்கத்தோடும் சுபதினத்தில் சுபமு
கூர்த்தத்தில் அகத்தியமுனிவர் பத்தியுடன் ஞவசீர்த்த கணபதியையும்
சத்திமார்களோடு சுப்பிரமணியரையும் சருவதீர்த்தேசுவரர் என்கிற
மகாலிங்கத்தைச் சக்தியுடன்கூடவும், இடபம் பலிபீடம் க்ஷேத்திரபா
லர் சண்டேசுரர் கொடிக்கம்பம் முதலியயாவற்றையும் மகுடாகமவிதிப்
படி பிரதிட்டைசெய்து பஞ்சசுத்திபண்ணி, பின்பு, பரிசுத்தமானமாவ
லிகங்கை நீரையெடுத்து மகாந்யாசம் முதலிய மகாமந்திரங்களினாலே
அபிஷேகமுடித்து, பதினாறுவகையான உபசாரங்களைக்கொண்டு அகத்
தியமுனிவரானவர் சருவதீர்த்தேசுவர மூர்த்தியைப் பத்தியுடன் பூசை
புரிந்தனர். எட்டுவகையுறுப்புக்களும் பூமியிற்படும்படியாய் அவர் நமஸ்
காரமும் செய்தனர். பின், அவ்விடத்தில் பரிபூரணமனத்தோடும்
பின்வருமாறு தோத்திரஞ்செய்தார்.

அகத்தியமுனிவர் தோத்திரஞ்செய்வது:—

நாதரே! இடபாரூடரே! அறிவுக்குப்பிதா என்று பிரசித்தமானவரே! ஓங்காரமாகிய வேதத்தின்பொருளே! நித்தியசோதியே! ஈசா! நற்குணக்கடலே! அடியார் அகமலர்மிசை வீற்றிருப்பவரே! காசை நகரவாசரே! தேவரீருடைய உபயதிருவடிகளையும் வணங்குகின்றேன். மரகதரத்தினத்தினால் விளங்குகின்ற வயிரம் கோமேதகமாலைகளையுடையவரே! பிரசித்திபெற்ற பலவகைநிறங்களையுடைய ஞாலமானவிஞ்ஞானதீபமே! அமுதங்கடைந்தகாலத்தில் எழுந்த நஞ்சையணிந்த மிடற்றையுடையவரே! பிராணிகளுக்குச் சீவகருணையுள்ளவரே! காசைநகரவாசரே! தேவரீருடைய உபயதிருவடிகளையும் வணங்குகின்றேன். நிலம் நீர் நெருப்பு வளி வான் சந்திரன் சூரியன் ஆன்மா என்னும் எண்வகைவடிவங்களையுடையவரே! நீலகண்டரே! மங்களசாகரமே! வேண்டுவார் வேண்டியாங்கு ஈவோய்! காசைநகரவாசரே! தேவரீருடைய உபயதிருவடிகளையும் வணங்குகின்றேன். மன்மதனைவென்றோய்! சுரேச! பிரமப்பொருளே! ஏகரே! இரண்டாநின்றோய்! மூவகையான குணப்பிரிவினால் பஞ்சமூர்த்தி வடிவமுடையோய்! பலவிதமூர்த்த பேதமானவரே! நெற்றியிலுள்ள அக்கினிக்கண்ணினால் விளங்குபவரே! காசை நகரவாசரே! தேவரீருடைய உபயதிருவடிகளையும் வணங்குகின்றேன். என்று இன்னும் பலவாறாக அகத்தியமுனிவர் தோத்திரஞ்செய்து நின்றனர்.

சூதமுனிவர் சொல்வது:—

இந்தவிதமாய் அகத்தியமுனிவரானவர் துதிசெய்து சிவத்தியானத்திலிருந்தனர். இச்சமயத்தில் அவ்வகத்தியமுனிவர் பிரீதியாகிய மனத்தையுடையராயிருந்தனர். பின் மூர்த்திமானாகிய பரமேசுவரன் அம்பிகையோடும் கல்யாணவடிவினராய் இலிங்கத்தினின்றும் வெளிப்பட்டு அவ்வகத்தியமுனிவருக்குத் தரிசனங்கொடுத்தருளினார். அச்சுந்தரமாகிய திருவருவக்கோலத்தைத் தரிசனஞ்செய்து, எல்லாவுலகங்களையும் மோகிக்கச்செய்வதாய், பார்வதியாரோடும் கூடியதாய், சோதியாய் பிரபையாய்விளங்கும் சர்வதீர்த்தேசுவரரைப் பூமியில்தண்டம்போல விழுந்து கும்பிட்டு ஆனந்தக்கண்ணீர்சொரிந்து கைகளைக்குவித்து அஞ்சலிசெய்து நின்றனர். அவ் அகத்தியரைப்பார்த்து அந்தணனே! உன்மனதில் உள்ளகாரியம் என்ன என்று மகேசன் சந்தோஷமாகிய வாக்கியத்தைக் கேட்டருளினர்.

அகத்தியமுனிவர் சொல்வது:— சுவாமி! தேவரீருடைய பாதாம்புயத்தினைத்தரும் பத்தியைத்தவிரவேறு மேலானபொருள்யாது

இருக்கிறது? ஆதலினால், தேவரீருடைய திருவடிகளில் எப்பொழுதும் மறவாத பத்தியை அடியேனுக்குத் தந்தருளுக. மகாதேவரே! இன்னும் தவசித்தியையும் அடியேனுக்குத் தந்தருளுக என்று இவ்விதமாய் அகத்திய முனிவர் வரங்கேட்டலும், நம்மிடத்தில் என்றும் மறவாத பத்தியுண்டாகும். இதில் ஐயமில்லை. இந்தத்தலத்தில் சிலகாலம் தவஞ் செய்தால், அத்தலத்தின் மகிமையால் தவம் சித்தி யெய்தும் என்று சிவன் அருளிச்செய்து, பின் மறைந்தருளினர்.

கும்பமுனிவர் சில காலம் பத்தியோடும் தவஞ் செய்துகொண்டிருந்து, அத்தலமகிமையினாலும், அத்தீர்த்தமகிமையினாலும் தவம் சித்தி யெய்தப்பெற்று, அங்கு நின்றும் புறப்பட்டுத் திருக்கேதீச்சரத்துக்குப் போய்ப் பாலாவிதீர்த்தத்தில் விதிப்படி முழுகிக் கேதீசுவரப்பெருமானைப் பூசித்து வணங்கித் துதிப்பாராயினர்.

அகத்தியமுனிவர் தோத்திரஞ் செய்தது:—

கைலாசவாசரே! கௌரீசரே! சரணடைந்தவரிடம் பிரியமுள்ளவரே! மகிமை பொருந்திய மாதோட்டநகரத்தலைவரே! ஈசுவரப் பிரபுவே! அடியேனைக் காத்தருளுக.

கணபதிக்கும் கந்தசுவாமிக்கும் பிதாவே! இடபவாகனே! சங்கரா! மகிமை பொருந்திய மாதோட்ட நகரத்தலைவரே! ஈசுவரப்பிரபுவே! அடியேனைக் காத்தருளுக.

சாமகானப்பிரியரே! ஆனந்தரே! சந்திர சூரிய அக்கினிக் கண்ணரே! மகிமை பொருந்திய மாதோட்ட நகரத்தலைவரே! ஈசுவரப்பிரபுவே! அடியேனைக்காத்தருளுக.

சர்வலோகானந்தரூப! காலகாலவிநாச! மகிமை பொருந்திய மாதோட்ட நகரத்தலைவரே! ஈசுவரப்பிரபுவே! அடியேனைக் காத்தருளுக.

பிரம விஷ்ணு ருத்திர வடிவமானவரே! விந்து நாதமயப் பிரபுவே! மகிமை பொருந்திய மாதோட்ட நகரத்தலைவரே! ஈசுவரப்பிரபுவே! அடியேனைக் காத்தருளுக.

சச்சிதானந்தரூபேசா! சாட்குண்ணிய! பரமேசுவர! மகிமை பொருந்திய மாதோட்ட நகரத்தலைவரே! ஈசுவரப்பிரபுவே! அடியேனைக் காத்தருளுக.

பசு பாசங்களுக்கு வேறானவரே! பசுக்களுக்கு நாயகப்பிரபுவே! மகிமைபொருந்திய மாதோட்ட நகரத்தலைவரே! ஈசுவரப்பிரபுவே! அடியேனைக் காத்தருளுக.

காமேசா! கருணைக்கடலே! விரும்பிய பொருளின் பயனைத் தருவோய்! மகிமை பொருந்திய மாதோட்ட நகரத்தலைவரே! ஈசுவரப்பிரபுவே! அடியேனைக்காத்தருளுக.

விச்சுவரூபராகிய உமக்கு வணக்கம். விச்சுவநாயகரே! உமக்கு வணக்கம். வாசுதேவராகிய உமக்கு வணக்கம். இரதி சுந்தரி! உமக்கு வணக்கம்.

என்னால் ஆயிரம் ஆயிரம் குற்றங்கள் செய்யப்படுகின்றன. உமாமகேசரே! இவன் அடியான் என்று என்னை எண்ணி இவைகளைப் பொறுத்தருளல் வேண்டும்.

சூதமுனிவர் சொல்வது:—

கும்பத்திற் பிறந்த மகாமுனிவராகிய அகத்தியர் இவ்விதமாய் மகாதேவரைத் துதித்து வணங்கி அத்திருக்கேதீச்சரத்தில் ஸ்ரீகண்டம் என்னும் லிங்கத்தையும் தாபித்து வேதாகம விதிப்படி அருச்சனை செய்து செபம் முடித்து வலம் வந்து வீழ்ந்து நமஸ்கரித்துத் தோத்திரஞ் செய்யத்தொடங்கினார்.

அகத்தியர் தோத்திரஞ் செய்தல்.

ஐந்தெழுத்து வடிவாய் அம்பாளோடு கூடியவராய்ச் சகுணமாய் நந்தி தேவரையுடையவராய் விநாயகருக்கும் சுப்பிரமணியருக்கும் தந்தையாய் விளங்கும் சீகண்டேசராகிய உமக்கு நமஸ்காரம்.

ஆதிநாதராய்ச் சாந்தராய் நாதாந்தநிலயராய்க் கங்காதரராய்ச் சுத்தராய் உள்ள சீகண்டேசராகிய உமக்கு நமஸ்காரம்.

சச்சிதானந்த வடிவினராய்ச் சாட்குண்ணிய பரிபூரணராய்ச் சோம சூரியாக்கினி நேத்திரராய் உள்ள சீகண்டேசராகிய உமக்கு நமஸ்காரம் பஞ்சகிருத்தியஞ் செய்யும் பரம் பொருளாய்ப் பரமானந்த மளிப்பவராய்ப் பராசக்தி நேசராய் விளங்கும் சீகண்டேசராகிய உமக்கு நமஸ்காரம்.

விருஷாங்க! விருஷபாரூட! நீறணிந்த திருமேனியா! நமஸ்காரம். சந்திர சூடரும் நித்தியரும் சீகண்டேசருமாகிய உமக்கு நமஸ்காரம்.

திரிபுரங்களை அழித்தவரும் உருத்திரரும் முக்கண்ணரும் திரிசூலப்ப டையினரும் மூவுலகங்களையும் காப்பவரும் சீகண்டேசருமாகிய உமக்கு நமஸ்காரம்.

முதலும் நடுவும் இறுதியுமில்லாதவரும் ஆதாரநிலயரும் ஆதிவியா தி விமுக்தரும் சீகண்டேசருமாகிய உமக்கு நமஸ்காரம்.

ஆதிதேவா! மகாதேவா! எங்கள் குலதீபமே! உமது கடாக்ஷத்தினால் நாங்கள் பேறுடையோம். சீகண்டேசராகிய தேவரீருக்கு நமஸ்காரம்.

விசுவநாதராகிய தேவரீருக்கு நமஸ்காரம். உலகமாதாவாகிய தேவரீ ருக்கு நமஸ்காரம். சகதீசா! என் குற்றங்களெல்லாவற்றையும் பொறுத் தருளல்வேண்டும்.

சூதர் சொல்வது:—அகத்தியமுனிவர் செய்த இத்தோத்திரங்களினா லே மகிழ்ச்சியடைந்த கருணையங்கடலாகிய மகாதேவர் வெளிப்பட்டு அக த்தியரைப் பார்த்து "ஓ அகத்தியனே! நீ நினைத்த வரத்தைத் தந்தோம்" என்று அருளிச் செய்து மறைந்தார். உலகம் யாவற்றுக்கும் நன்மையளி க்கின்ற கடவுள் மறைந்தவுடன் அகத்திய மகா யோகியும் மலயகிரியைய டைந்தார்.

அந்தணர் மணிகளே! இன்னும், பழமையாகிய இதிகாசத்தைக் கேட்பீராக. இதனை யாவன் கேட்கின்றானோ அவன் ஏழையாயினும் பொருளை அடைவான். இதில் சந்தேகமில்லை. முற்காலத்தில் மகாவி ஷ்ணுவானவர் மீறுகி உவர்க்கடலில் வசித்தமையை இலக்குமிதேவி அறி ந்து அவன் பதியை அடையும் நோக்கமாய்க் கரசை என்னுந் திருப்பதியை யடைந்து அதன் வைபவத்தைக்கண்டு மாவலிகங்கையில் பத்தியோடு ஸ்நா னஞ்செய்து பிரபுவாகிய சர்வதீர்த்தேசுவரனை வணங்கித் துதித்துச் சோட சோபசாரங்களோடு பூசித்து ஆயிரத்தெட்டு வில்வஞ் சாத்திச் சிவனது திருவருள் பெற்று மகாவிஷ்ணுவின் மார்பத்திலிருப்பவளாயினள் என்று சூதமுனிவர் நைமிசாரணிய வாசிகளுக்குக் கூறினர்.

கங்கைப் பெருமை யுரைத்த படலம்

முற்றிற்று.

## எட்டாவது

# கங்கா ஸ்நான தானப் படலம்

### இருடிகள் வினவுதல்.

சூதரே! சூதரே!! மகா பாக்கியசாலியே! வியாசரின் மாணாக்கரே! பேரறிவுடையவரே! நாராயணபகவான் ஏன் மச்சாவதாரத்தை எடுத்தார்? அந்த விஷயத்தை முழுவதும் எங்களுக்கு விரிவாகக் கூறுதல் வேண்டும்.

### சூதர் விடை கூறல்.

முனிவர்களே! நீங்கள் அவதானமாய்க் கேளுங்கள்! இரணியன் என்பான் உலகங்களைப் படைத்து இறுமாந்து கெட்ட எண்ணங்கொண்டு நானே கடவுள் என்று இந்திரன் முதலான தேவர்களையெல்லாம் துன்பப்படுத்தி வந்தான். அவனால் துன்பஞ் செய்யப்பட்ட தேவர்களெல்லாரும் வேதங்களைப்படித்துப் போரில் வெற்றிதரத்தக்க மந்திரம் இருப்பதை அறிந்து மனமகிழ்ச்சி கொண்டு அந்த மந்திரத்தை யந்திரத்தில் அடைத்து விதிப்படி பூசித்துத் தமது கையில் ரக்ஷா பந்தனந் தரித்துக் கொண்டார்கள். இவ்விதம் எல்லாத் தேவர்களும் ரக்ஷாபந்தனம் தரித்துக்கொண்டு அச்சமில்லாமல் தேவலோகத்தில் இருந்தார்கள். இச்செய்யலை அசுரர் கண்டு கோபங்கொண்டு தேவர்களுடைய கரத்தில் தரிக்கப்பட்டதாயும் வெற்றியளிப்பதாயும் உள்ள யந்திரகங்கணங்களை யெல்லாம் சுக்கிராசாரியரைக்கொண்டு மாற்றக் கிரியை செய்து அழித்துவிட்டார்கள். தேவர்களை அடைந்து இரணியன் சொற்படி யந்திரங்கள் முழுதையும் அறுத்துக் கடலில் எறிந்து விட்டுப் பின் சந்தோஷமும் பலமுமுடையவராய்த் தமது நகரத்தை அடைந்து இரணியனுக்கு அறிவித்தார்கள்.

அந்தச் சமயத்தில் எல்லாத்தேவர்களும் துக்கங்கொண்டு தக்ஷிணகைலாசத்தை அடைந்து திரிகோணநாயகரைப் பார்த்துத் தோத்திரஞ் செய்தார்கள்.

### தேவர்கள் தோத்திரஞ் செய்வது:—

கைலைவாசரே! கோணேசரே! போற்றி. உலகங்களுக்கு நன்மை செய்பவரே! அம்பிகையின் பிராணநாதரே! ஆதியும் அந்தமும் இல்லோய்!

சங்கரநாதரே! விருபாக்ஷரே! அரவணிபூண்டோய்! அடைக்கலம் புகுந்தவரைக்காக்கும் கருணைக் கடலே! சதாசிவனே! போற்றி போற்றி. நவப்பிரமருக்கு நமஸ்காரம். விஷ்ணுக்களுக்கு நமஸ்காரம். பதினொரு உருத்திரர்களுக்கு நமஸ்காரம், பன்முறை நமஸ்காரம்.

சூதமுனிவர் சொல்லுவது:—

இவ்விதமாக, இந்திரன் தேவர்களோடு அவ்விடத்தை யடைந்தான். அச்சமயத்தில் அங்கே வீற்றிருப்பவரானவர் இந்திரன் முதலிய இமயவர்களை ஆதரவோடு பார்த்து "தேவர்களே! உங்களுடைய துன்பத்திற்குக் காரணம் யாது? அதனைக் கூறுங்கள். உங்கள் துன்பம் விரைவாய் நாசமடையும். இது நிச்சயம்" என்று சொன்னார்.

தேவர்கள் விடை சொல்லுவது:—

கேசவா! நீ கேள். எங்கள் துன்பத்தின் காரணம் இன்னதென்று கூறுகின்றோம்: நாங்கள் கையில் கட்டியிருந்த வெற்றி தரும் யந்திர கங்கணத்தை இரணியனால் ஏவப்பட்ட அசுரர்கள் தங்கள் பலத்தினால் அபகரித்துக் கடல் நடுவில் எறிந்து விட்டுத் தங்கள் ஊர்போய்ச் சேர்ந்தார்கள் என்று தேவர்கள் கூறுதலும், கேசவன் நாம் வரும் வரைக்கும் இவ்விடத்தில் இருங்கள் என்று தேவர்களுக்குச் சொல்லிவிட்டு விரைவாய்ப் பரமசிவனிடஞ் சென்று தேவர்களின் விருத்தாந்தத்தை விண்ணப்பஞ் செய்தான்; விஷ்ணுவினால் சொல்லப்பட்ட அவ்வாக்கியத்தைக் கேட்டுச் சங்கரர் சொல்கின்றார்: முன் உத்தரகைலாசத்தில் இரணியன் என்னும் பெயருள்ள பெரிய அசுரன் ஒருவன் நம்மை வழிபட்டு வரம் பெற்று, நம்மினும் வலிமையுடையவனாயினான்; ஆதலினால், இன்னும் சிலகாலம் பொறுத்திருங்கள்; அதன்பின் உன்னால் அவன் கொல்லப்படுக; தேவர்களுக்கு நன்மை செய்யும் எண்ணத்தோடு இப்பொழுது மச்ச வடிவங்கொண்டு சீக்கிரம் கடல் நடுவிற்சென்று தேவர்களின் யந்திர கங்கணங்களை யெடுத்து வெற்றியுண்டாகும்படி அவர்களிடங்கொடுத்துக் காத்தருளுக என்று ஈசன் அருளிச்செய்யக்கேட்டு, அப்படியே செய்வேன் என்று சொல்லிக் கேசவன் மச்சவடிவங்கொண்டு கடல் நடுவிற் புகுந்து கங்கணங்களெல்லாவற்றையும் எடுத்து அமரர்களிடங்கொடுத்தான். தேவர்கள் சே

சவுறற் கொடுக்கப்பட்ட கங்கணங்களைப்பெற்றுக்கொண்டு, சந்தோஷித் தர்களாய்ச் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து விட்டுணு மூர்த்தியைத்தோ த்திரஞ்செய்யத்தொடங்கினார்கள்.

கமலை நாயகரே! தேவரீருக்கு நமஸ்காரம்; அன்பர்களிடம் பிரிய மானவரே! தேவரீருக்கு நமஸ்காரம்; பகவானே! விஷ்ணுவே! அடி யேங்களைக் காப்பாற்றுதல் வேண்டும்; கருடக்கொடியோய்! தேவரீரு க்கு வணக்கம்; அசுர சங்காரரே! தேவரீருக்கு வணக்கம்; தேவரைக் காப்போய்! தேவரீருக்கு வணக்கம்; உலகத்திற்குத் தலைவரே! தேவரீ ருக்கு வணக்கம்; அவனி நாயகரே! தேவரீருக்கு வணக்கம்; சங்கானது சத்தியானது நான்காவதாய் அபின்ன வடிவமாயிருக்கும். அந்தச் சத்திக ளுக்குள் நீயும் ஒரு சத்தியன்றோ? புருடோத்தமனே! பின்னரும், நீ அச்சங்கர நாராயணனும் அன்றோ இருக்கின்றாய்? என்று இவ்விதமா ய்த் துதிக்கின்ற தேவர்களோடும் விஷ்ணுவானவர் சிற்சபையை அடைந் தனர். பின், அந்தணர்களே! இந்திரன் முதலான இமயவர் யாவரும் சுவர்க்க லோகஞ் சென்றார்கள்.

மற்ச வடிவமாகிய பெரிய சரீரமானது கேசவனால் விடப்பட்டு மலைவ டிவாய் எல்லாராலும் காணப்படுவதாய்ப் பெரிய அற்புதமாய் விளங்கிற்று. அதுமுதல் அம்மலை மற்சேந்திரகிரி என்று விளங்குவதாயிற்று. அம்மற் சேந்திரகிரி என்னும் பெயர் பாவங்களைப் போக்குவதாய் விளங்காநிற்கும்.

அவ்விடத்தில் அம்மகாகிரி மற்சேந்திரகிரி என்னும் பெயர் பொரு ந்தியதாய் அம்மற்சவடிவோடு தென்கயிலைக்கு நிருதி திக்கில் சர்வலோக ங்களுக்கும் உபகாரமுள்ளதாய் இருந்தது. அம்மலையைக் கண்டமாத்திரத் தினால் மகாபாதகங்கள் நாசமடையும். அவ்விடத்தில் செபம் செய்வதா லும் தானங் கொடுத்தலாலும் விஷ்ணு சாயுச்சியம் கிடைக்கும். இந்த விதமாய் மற்சவதாரமானது கேசவனால் முற்காலத்தில் செய்யப்பட்டது.

இந்தக் கைலாசத்தின் பக்கத்திலிருக்கும் கந்தமலையை ஒருவனடை ந்து கந்தப்பெருமான் பாதங்களை வணங்கினால் கந்த லோகத்தை அடை வான். இன்னும் கேளுங்கள்! கங்கையின் ஸ்நானப் பெருமையையும் தானப் பெருமையையும் கூறுகின்றோம். விடியல் வைகறையில் நித்திரை

விட்டெழுந்து கால் கழுவிக்கொண்டு ஆசமனஞ்செய்து காலைத்தோத்திரஞ்செய்தல்வேண்டும். பிரமன் விஷ்ணு ருத்திரன் சூரியன் சந்திரன் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சூரியபுத்திரன் ஆகிய இவர்கள் நமக்கு நற்பொழுதைத் தரல்வேண்டும். பிருகு வசிட்டர் கபிலர் ஆங்கீரசர் மனு புலத்தியர் புலகர் கோபதர் இரைப்பியர் மரீசி சியவனர் தக்ஷர் முதலான யாவரும் நமக்கு நற்பொழுதைத் தரல்வேண்டும். சனற்குமாரர் சனந்தனர் சநாதனர் இரசாதல முதலிய ஏழு என்று சொல்லப்பட்ட இவர்கள் எல்லாரும் நமக்கு நற்பொழுதைத் தரல்வேண்டும். எழுகடல்கள் ஏழுகுல பருவதங்கள் இருடியர் எழுவர் ஏழுதீவுகள் ஏழுவனங்கள் ஏழுலோகங்கள் ஆகிய இவையெல்லாம் நமக்கு நற்பொழுதைச் செய்தல் வேண்டும். கந்த குணமுள்ள பிருதிவியும் இரதகுணமுள்ள அப்புவும் உருவகுண முள்ள தேயுவும் பரிச குணமுள்ள வாயுவும் சத்த குணமுள்ள ஆகாயமும் மகான் என்னும் தத்துவமும் ஆகிய இவைகளும் நமக்கு நற்பொழுதைத் தரக்கூடியதாய்ச்செய்தல் வேண்டும். விஷ்ணுவுக்கு மனைவியாகிய பூமிதேவியே! எனது கால்கள் தீண்டுதலைப் பொறுத்தருளுக. உனக்கு நமஸ்காரம் என்று பூமிதேவியைப் பிரார்த்தித்து, மெள்ள வெளியே சென்று, ஆறு துரோண தூரம் நிருதி திக்கை அடைந்து, வஸ்திரத்தினால் தலையைச் சுற்றி வலக்காதில் பூணூல் தரித்துக் கொண்டு மல சலங்கழித்தல் வேண்டும்

வழியிலும் பாலை நிலத்திலும் நதியிலும் நதத்திலும் தேவசந்நிதியிலும் அந்தணர்சந்நிதியிலும் கேதாரத்திலும் சேறுவிலும் சுத்த மான வீட்டிலும் மரத்தடியிலும் மாநிழலிலும் மலையின்மேலும் நதிக்கரையிலும் தேவாலயசமீபத்திலும் மல சலங்கழித்தல் கூடாது. பகலில் வடக்கு முகமாகவும் இரவில் தெற்கு முகமாகவும் இருந்து, பூமியைப் புல்லினால் மறைத்து மல மூத்திரங்களைக் கழிக்கக் கடவன். தேவர் கந்தருவர் இயக்கர் இராக்கதர் இவர்கள் சுற்றிலும் நீங்கச் செய்து அந்தப்பூமியில் மல மூத்திரங் கழித்தல் வேண்டும்.

மௌனியாய் இருந்து, முயற்சியினால் பெருமூச்சு விட்டவனாய் மல மூத்திரங்களை விடல் வேண்டும். ஆண்குறியைக் கையினால் மேலே தூக்கிக் கொண்டு சௌசஞ் செய்தல் வேண்டும். சுத்த மாகிய மண்ணையெடுத்

துக் குதத்தைக் கழுவுதல் வேண்டும். புற்றிலும் உவர்நிலத்திலும் மார்க்கத்திலும் மண்எடுத்தல் கூடாது. நீரில் சௌசஞ் செய்தல் கூடாது. பாத்திரத்தில் எடுக்கப்பட்ட தண்ணீரினால் சௌசஞ்செய்தல் வேண்டும்.

சானுகலம் வரையில் நீர்க்கரையை ஒதுக்கிவிட்டு அப்பாலிருந்து கொண்டு வலக்கரத்தால் நீரையெடுத்து இடக்கரத்தால் சௌசஞ் செய்தல் வேண்டும். பின் அத்தலத்தை நீரினால் சோதிக்க வேண்டும். சோதியாவிடில் அசுத்தனாவான்.

குறியில் ஒரு முறையும் குதத்தில் ஐந்து முறையும் இடக்கரத்தில் பத்து முறையும் இருகால்களில் ஏழு முறையும் இருகைகளில் ஐந்து முறையும் மண்ணினால் சுத்தி செய்தல் வேண்டும்.

குறியில் ஒருதரமும் கால்களில் மூன்று தரமும் மூத்திர சௌசம் செய்தல் வேண்டும். மண் எல்லா சௌசத்துக்கும் நெல்லிக்கனி அளவென்று கூறப்படும். சௌசம் செய்யும் இடத்தை ஆதியிலும் அந்தத்திலும் சோதித்தல் வேண்டும். இந்தச் சௌசம் இல்லறத்தாருக் குரியது. பிரமசாரிக்கு இருமடங்கும் வானப்பிரஸ்தருக்கு மும்மடங்கும் சந்நியாசிக்கு நான்மடங்கும் சௌசம் அநுட்டித்தல் தக்கது. பகலில் விதித்தபடியே இரவிலும் சௌசம் செய்தல் வேண்டும். பெண்களும் சூத்திரர்களும் முன் போலவே செய்யத்தக்கது. யாவரும் மனசுக்குச் சுத்தியுண்டாகும் வரைக்கும் சௌசம் செய்தல் வேண்டும்.

யாவருக்கும் இரவில் சௌசம் பாதியென்று கூறப்படுகின்றது. வியாதியாளர்க்கும் சக்தியற்றவர்க்கும் பாதியாசாரம் அனுசரித்தல்தக்கது. மலமோசனஞ் செய்தவன் பன்னிரண்டு தரமும், சலமோசனஞ் செய்தவன் ஆறுதரமும் வாய் கொப்பளித்தல் வேண்டும். தலையிலும் கழுத்திலும் வஸ்திரத்தைச் சுற்றிக்கொண்டு ஆசமனஞ் செய்தல் கூடாது. அப்படிச் செய்தானேல், அம்மடாத்துமா ஸ்நானத்தால் சுத்தி பெறுவான். அறியாமையினால் பூமிக்கு எதிர் முகமாய் ஆசமனஞ் செய்தால் மறுபடியும் ஆசமனஞ் செய்யச் சுத்தமடைவான். தெற்கு முகமாயும் மேற்கு முகமாயும் இருந்து ஆசமனஞ் செய்தல் கூடாது. அறிந்து செய்தால் ஸ்நானத்தால் சுத்தி இல்லை. அறியாமல் செய்தால் சுத்தியுண்டு. முழுந்

கால் அளவினதாகிய சலத்தில் நின்று இடக்கையினால் சலத்தைத் தொட்டுக்கொண்டு வலக்கையினால் வடக்கு முகமாகவாவது கிழக்கு முகமாகவாவது இருமுறை ஆசமனஞ் செய்தல் வேண்டும்.

இனி, தந்த சுத்தி செய்யும் விதி கூறப்படும். பட்ட மரம் பாளைக்கோல் கை விரல் செங்கல் கரி சாம்பல் மணல் என்னும் இவைகளினால் பல் விளக்குதல் கூடாது. தினந்தோறும் அதிகாலையில் எழுந்து கண்களைத் துடைத்துக்கொண்டு விதிப்படி மல சல விசர்ச்சனஞ் செய்து சௌசம் ஆசமனம் இவைகளை முடித்துக்கொண்டு மிகவும் பரிசுத்தனாய் காஷ்டம் எடுத்துப் பல் துலக்குதல்வேண்டும். நொச்சி மா வில்வம் இச்சி முல்லை கல்லால் எலுமிச்சை கதம்பம் கருங்காலி நாயுருவி பாலுள்ள மரம் முள்மரம் இவை தந்தகாஷ்டத்துக்கு விசேடமானவைகளாம்.

ஓ விருக்ஷராஜனே! ஆயுள் பலம் புகழ் ஒளி சந்ததி பசு தனம் பிரம தேஜசு அறிவு மறதியில்லாமை இவைகளை எனக்கு எக்காலமுங் கொடுத்தல்வேண்டும் என்னும் பொருளையுடைய மந்திரஞ் சொல்லி மரத்திலிருந்து காஷ்டம் ஒடித்தல்வேண்டும். சிறுவிரற்பருமனுள்ளதாய் அந்தணர்க்குப் பன்னிரண்டங்குல நீளமும், அரசர்களுக்கு ஒன்பது அங்குல நீளமும், வைசியர்க்கு ஆறங்குல நீளமும், வேளாளர்க்கு நாலங்குல நீளமும் உள்ளதாய் இருத்தல் வேண்டும். தந்தசுத்தி மெதுவாய்ச்செய்தல் வேண்டும்; விரைவாகச்செய்வது கூடாது. வாயில் உள்ள துர்நாற்றம் நீங்கும்படி பல் துலக்குதல் வேண்டும். பிரதமை பௌர்ணிமை சட்டி சதுர்த்தசி அட்டமி நவமி சங்கிரமணம் சிராத்த தினம் இவைகளிலே காஷ்டத்தினாலே பல் துலக்குதல் கூடாது. திருணத்தையும் இலையையும் அமாவாசை ஏகாதசி இவ்விரண்டுந்தவிர மற்ற நாளிலும் உபயோகப்படுத்தலாம். சலத்தினால் பன்னிரண்டு தரம் வாய் கொப்பளிப்பது ஞாயிற்றுக்கிழமையில் விலக்கப்பட்டுள்ளது. இரண்டு கரங்களினாலும் சலத்தை எடுத்து முகங்கழுவுதல் கூடாது. கழுவுவானேல், அம்மூடன் இரௌரவ நரகமடைவான். நீரில் இருகையை மணிக்கட்டு வரையில் அமிழ்த்திப் பின் கையினால் நீரை எடுத்துக் கிழக்கு முகமாயிருந்து ஆசமனஞ் செய்தல் வேண்டும். பின்பு விதிப்படி ஆசமனஞ்செய்து விடியற்காலத்தில் ஸ்நானஞ் செய்தல் வேண்டும். வருடம் மாசம் நட்சத்திரம் கிழமை முதலானவைகளை நினைத்து, பின்

விஷ்ணுவைச் சிந்தித்து வணங்கி நதிக்குமுன் தேவப்பிராமணர்களைக் கொண்டு சங்கற்பம் செய்வித்தல் வேண்டும். முதலில் வைரவக்கடவுளைப் பிரார்த்தித்தல் வேண்டும். கணேசரையும் சண்முகக் கடவுளையும் இலக்குமி நாராயணரையும் அம்பிகையோடு கூடக் சோமேசரையும் வணங்கித் துதித்துக் குங்குமம் வஸ்திரம் எலுமிச்சம்பழம் பழவகைகள் தாம்பூலம் சந்தனம் புட்பம் அக்ஷதை முதலியவைகளினால் கங்கையைச் செவ்வையாய்ப் பூசித்து விதிப்படி அருக்கியங்கொடுத்துப் பத்தியுடையவனாய், "மகாவலி கங்காய்! உனக்கு வணக்கம். மூவுலகங்களையும் பரிசுத்தஞ்செய்வோய்! உனக்கு வணக்கம்; தேவீ! நீ அருக்கியத்தை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். சொல்லப்பட்ட பலனையுந் தந்தருளவேண்டும். மாணிக்க கங்காய்! சாவேரீ! பரமானந்த வடிவுடையோய்! என்னாற் செய்யப்பட்ட வழிபாட்டை ஏற்றுக்கொள்ளவேண்டும். எல்லாச்செல்வங்களையும் எனக்குத் தந்தருளல் வேண்டும். காவேரி கங்காய்! கல்யாணீ! விரும்பிய பொருளைத் தருவோய்! இந்த அருக்கியத்தை ஏற்றுக்கொண்டு நான் விரும்பிய வரந்தருக" என்று நீரினால் அருக்கியங்கொடுத்து, பூமியில் தண்டம்போல் விழுந்து கும்பிட்டுப் பின்பு கொப்பூழளவு தண்ணீரில் இறங்கி நின்று, ஏழுமுறையேனும் பன்னிரண்டு முறையேனும் ஐந்து முறையேனும் மூன்றுமுறையேனும் ஸ்நானஞ்செய்து பின் ஒரு ஸ்நானஞ்செய்தல் வேண்டும். கேசத்தை ஆமலகத்தினாலும் உடம்பை மண்ணினாலும் பரிசுத்தம் செய்தல்வேண்டும்; மஞ்சட்பொடியினாலே சுத்தஞ்செய்தல் ஆகாது.

சருவ அங்கங்களையும் கோமயத்தினாலே பரிசுத்தஞ்செய்யலாம். ஸ்நானமானது சங்கற்பம் சூக்தபடனம் மார்ச்சனம் அகமருடணம் தருப்பணமென்று ஐந்து அங்கங்களையுடையது. வாருண மந்திரஞ்செபித்து, அதன்பின் சூக்தஞ் செபித்து ஸ்நானஞ் செய்து சிவத்தைச் சிந்தித்தல்வேண்டும். பின், விஷ்ணு காயத்திரியையும் சிவகாயத்திரியையும் செபஞ்செய்து, அதன் பின் மகாமந்திரமாகிய பஞ்சாக்கரத்தையும் அட்டாக்கரத்தையும் செபம் செய்து ஸ்நானம் இடையூறின்றி முடிந்ததன்பொருட்டு விக்கின விநாயகனை வணங்குதல் வேண்டும். பிரணவம் வியாகிருதி சேர்ந்த காயத்திரி சிரசோடு கூடச் சலத்தை எடுத்துச் செபித்து ஒருமுறை மேலே விடுதல்வேண்டும். இப்படிச்செய்யின், பத்துச்சென்மத்திலே செ பாவங்களெல்லாம் கணப்பொழுதில் அழிந்துவிடும்.

கங்கையில் ஒரு முறை ஸ்நானஞ் செய்தால் பிரமகத்தி நீங்கும். ஸ்நானஞ் செய்து உலர்ந்த வஸ்திரத்திலே உடம்பிலுள்ள ஈரத்தை மாற்றி விபூதி தரித்துப் பிராணாயாமம் சந்தியாவந்தனஞ் செய்து முடித்தல்வேண்டும். பின் பஞ்சாக்கர செபமும், காயத்திரிசெபமும் செய்தல்வேண்டும் மாவலி கங்கா ஸ்நானம் போகத்தையும் மோட்சத்தையுங் கொடுக்கும்.

இனி, தானப் பெருமையையுங் கூறுகின்றோம்: கைக்கு அணி தானங்கொடுப்பது; காதுக்கு அணி வேதங்கேட்பது; முகத்துக்கணி வாணி. சித்தத்துக்கு அழகு ஞானம்; அபாத்திர தானத்திலே தரித்திரம் உண்டாகும்; தரித்திரத்திலே பாவம் சம்பவிக்கும்; பாவத்திலே நரகங்கிடைக்கும்; நரகத்தை யடைந்து அனுபவித்துப் பின் தரித்திரனாய்ப் பூமியில் வந்து பிறந்து பெரும் பாவியாவான்.

சற்பாத்திர தானத்திலே செல்வம் உண்டாகும்; செல்வத்திலே புண்ணியம் சம்பவிக்கும்; புண்ணியத்திலே சுவர்க்கங்கிடைக்கும்; சுவர்க்கத்திற் சென்று இன்பத்தை அனுபவித்துப் பின் பூமியில் வந்து செல்வனாய்ப் பிறந்து போகங்களை அனுபவிப்பதோடு, பெரும் புண்ணியங்களையும் ஈட்டுவான்.

ஒருவன் சற்பாத்திரனாகிய வறியவனுக்குத் தானஞ்செய்தாலும், சூன்னியமான சிவலிங்கத்தைப் பூசித்தாலும், அநாதப் பிரேத சம்ஸ்காரஞ் செய்தாலும் அசுவமேத யாக பலனை அடைவான்; ஆதலினாலே, முழுமுயற்சியோடு சற்பாத்திரத்திலே தானஞ் செய்தல் வேண்டும்.

வேதம் அறிந்த பிராமணனுக்கும் வறுமையுள்ள இல்லறத்தானுக்கும் பொருள் கொடுப்பின் அளவற்ற பலன் கிடைக்கும். கங்கையின் கரையிலே, பொற்கொம்பினதாய் வெள்ளிக்குளம்பினதாய் வாலுள்ளதாய்ச் சிறந்த பிருஷ்டமுள்ளதாய்க் கன்றுள்ளதாய் வஸ்திராலங்காரம் உள்ளதாய் இருக்கப்பட்ட பசுவைத் தட்சிணையோடு தானங் கொடுத்தல் வேண்டும் பசுவின் உரோமம் எவ்வளவோ, அவ்வளவு வருட காலம் சுவர்க்கத்தில்

இவ்விதமான பெருமையை யுடையது தானம் என்பதை உணராமல் அநேகர் செல்வமிருந்தும் உலோபிகளாய் மறுமைப்பயனை இழந்து விடுதல் விசனிக்கத்தக்கதேயாம்.

பெருமை பெறுவான். அவனுடைய பிதிரர்கள் சிவலோகத்தில் மகிழ்ந்திருப்பார்கள். அந்தணர்களே! பசு பூமி எள் பொன் நெய் வஸ்திரம் தானியம் சர்க்கரை வெள்ளி இலவணம் என்னும் பொருள்களோடு தானங் கொடுத்து, இயன்றமட்டும் பூரி தண்டுலம் பொன் பயறு உளுந்து தினை கந்த மூல பலம் வாழைப்பழம் மாம்பழம் பலாப்பழம் நாவற்பழம் எலுமிச்சம் பழம் இலந்தைப்பழம் தேங்காய் தாம்பூலம் வெள்ளைச் சர்க்கரை சந்தனம் பால் மோர் தயிர் புஷ்பம் பழம் தேன் இவைகளை மறையவருக்குத் தானங்கொடுப்பின் குறைவற்ற பயனை அடைவான். சேத்திரோபவாசம் தீர்த்த சிராத்தம் செய்து பிண்டம் போட்டுத் திலோதக தருப்பணம் செய்தால், மூர்ட்டன்களையும் நீக்கி ஆயுளைப் பெறுவான். பலகார வகைகளோடும் பாயசத்தினோடும் பிராமணர்களைப் போசனஞ்செய்வித்து அம்பிகையோடுகூட கோணேசரை வணங்குவோருக்குப்போகமும் மோட்சமும் கையிலிருக்கின்றன. இவ்விஷயத்தில் விசாரணை வேண்டியதில்லை. ஒரு மனிதன் தன் சன்மத்தில் எவ்வெவ்விடங்களில் இருந்தானேனும் சிங்களதேசத்தில் சென்று மாவலி கங்கையில் முழுகிக் கோணேசரையும் அன்போடு தரிசிப்பின், தன் கோடி குலத்தினரை மேன்மைபெறச்செய்வான். ஒரு மனிதன் அன்புடன் அமுதகளி என்னும் தீர்த்தத்தில் முழுகினும் அமிருதத்தன்மை (மரணமில்லாமை) அடைவான். இதில் சந்தேகமெய்தவேண்டிய காரணம் இல்லை.

யாவன் சமனை மலையை யடைந்து, முருகக்கடவுளின் பாதங்களைத் தரிசிக்கின்றானோ அவன் எல்லாப்பாவங்களையும் நீக்கிக் கந்தலோகம்பெறுவான். ஒருவன் சிவனொளிபாத மலையில் உற்பத்தியாகி வருகின்ற கங்கையில் அடைந்து அதில் தோய்ந்து சிவனது பாதங்களைத் தரிசித்தால், சிவபதமடைவான். பாவங்களைப் போக்குகிற இச்சரித்திரத்தைப் படிப்பதினாலும் கேட்பதினாலும் எல்லாப் பாவங்களும் நீங்கப்பெற்றுக் கங்காஸ்நான பயனைப் பெறுவான்.

**கங்கா ஸ்நான தானப்படலம்**

முற்றிற்று.

## ஒன்பதாவது

# கதிர்காம மகிமை உரைத்த படலம்.

சூதமுனிவர் சொல்வது:—

நைமிசாரண்ணியவாசிகளே! கேளுங்கள். இனி, கதிர்காமமகிமையைக் கூறுகின்றோம்:—இதனைக் கேட்பவன் யாவனோ அவன் எல்லாப் பாவங்களாலும் விடப்படுவான். இவ்விஷயத்தில் சந்தேகம் வேண்டாம்.

## தாரக சங்காரம்.

முன்னொரு காலத்தில் சிவபெருமானிடத்தில் தோன்றியவராகிய சுப்பிரமணியப் பெருமான் தேவகாரியார்த்த சித்தியின் பொருட்டுச் சிவனுடைய உத்திரவைப் பெற்று, தேவசேனாதிபதியாகி மனோவேக மென்னுந் தேரிலேறி வாயுதேவன் சாரதியாகித் தேரைச் செலுத்தப் பிரம விஷ்ணு இந்திரன் முதலிய தேவர்களோடும், தேவ இருடிகளோடும் வீரவாகு முதலான வீரர் இலக்கத்தொன்பது பேர்களோடும் பூதசேனாதிபதிகள் நூற்றெண்பதின்மர்களோடும் இரண்டாயிரம் வெள்ளம் பூதசைன்னியங்களோடும் கூடினவராகி, வெள்ளியங்கிரியை விட்டு நீங்கி மாயாபுரியை யடைந்தார். இந்தச் சங்கதியைக் கேட்டவுடனே தாரகன் என்னும் பெயரையுடைய அசுரன் பெருங்கோபங்கொண்டு சேனைகளோடும், கிரௌஞ்சாசுரனோடும், சண்முகக்கடவுளுக்கு எதிரில் சென்று, அக்கடவுளோடு போர் புரிந்தான். பின், சண்முகப்பெருமானும் கோபங்கொண்டு எதிர்த்துப் போர் புரிந்தார். ஒருவரை யொருவர் வெல்லும் விருப்பமுடையவர்களாகிய இருவருக்கும் பெரும்போர் விளைந்தது. இப்பெரிய போரினாலே இருவரும் பெருங் கோபமுடையவர்களாய்ப் பகிரண்டத்தை யடைந்து, அங்கே பெரும்போர் விளைத்தார்கள்.

அப்பொழுது இந்திரன் முதலான இமயவர் யாவருங் கந்தக்கடவுளினது பிரியமாகிய காரணத்தினாலே, கார்த்திகை விரதம் போன்றதும், மிக்க பலனை அளிக்கத்தக்கதும், மேலானதும் ஆகிய சட்டி விரதத்தைத்

தொடங்கி, மண்டலம் கும்பம் விம்பம் என்னும் மூன்றிடத்திலும், சட்டி வரையில் கற்பவிதிப்படி மந்திரத்தோடு அறுமுகக்கடவுளைப் பூசைசெய்து வழிபட்டுவந்தார்கள். அக்கடவுள் அங்கு பிரசன்னமாகி, உங்கள் விரதத்தையும் பூசையையும் ஏற்று மகிழ்ந்தோம். உங்களுக்கு வேண்டிய வரத்தைக் கேளுங்கள் என்ன, "சுவாமீ! கொடியோனாகிய இத்தாரகனைக்கொன்று எங்களைக் காத்தருளவேண்டும்." என்று வேண்டினார்கள். முருகக்கடவுள் அத்தேவர்கள்மீது திருவருள் சுரந்து, "அஞ்சாதீர்கள்! நாம் அவ்வாறே செய்வோம்" என்று திருவாய்மலர்ந்தருளிப் பின்பு, அத்தாரகனை எதிர்த்துச் சமர் செய்தார். தாரகனும் நான்முகன் படை நாரணன் படை முதலியவைகளை ஏவ, அவை முருகக்கடவுளின் பக்கத்தில் வந்து நின்றுவிட்டன. பின் தாரகன் சிவப்படையை ஏவினான். அதனை முருகக்கடவுள் செங்கையாற் பற்றினார். தாரகன் இனி மாயையினாலே வெல்லுதல் வேண்டும் என்றெண்ணிக் கிரவுஞ்சாசுரனைத் துணையாகக் கொண்டு பல மாயைகளைச் செய்தான். சிவகுமாரர் தாரகனையும் கிரவுஞ்சத்தையும் வேலாயுதத்தினாலே விரைவில் விளையாட்டாகவே சங்காரம் செய்தருளினார். நைமிசாரண்ணியமுனிவர்களே! இவ்விதம் சங்காரஞ்செய்தவுடன் தேவர்கள் பூமாரி பொழிந்து ஆரவாரித்துக் கந்தப்பெருமானை நோக்கி, சுப்பிரமணியனே! என்று பெருங் கூக்குரல் செய்து தோத்திரஞ் செய்தனர்.

## கந்தப்பெருமான் கதிர்காமம் சென்றமை.

பின்பு, சுப்பிரமணியக் கடவுள் அவ்விடத்திலிருந்து புறப்பட்டுத் தேவகிரியை அடைந்தார். அந்தணர்களே! அந்தத் தேவகிரியில் தேவர்களாலே பூசிக்கப்பட்டு அத்தினத்தில் அங்கே எழுந்தருளியிருந்தார். மறுநாள் சூரியோதயசமயத்தில் சுப்பிரமணியப்பெருமான் அங்கிருந்து புறப்பட்டுத் தேவர்களோடு திருச்சேய்ஞலூரை யடைந்து சிவனைப் பூசித்து வழிபட்டுப் பாசுபதப்படையைப் பெற்றனர். பின், அக்கருணாநிதியாகிய பகவான் தேரிலேறிப் புண்ணிய தலங்களெல்லாவற்றையுந் தரிசனஞ்செய்துகொண்டு திருச்செந்தூரை அடைந்தார்.

வேற்படைக்கரத்தினராயும் என்றும் அழியாதவராயும் விளங்கும் சண்முகக்கடவுள் அசுரர் பிறப்பையும் அவர்கள் தவஞ்செய்து எல்லாராலும் வெல்லுதற்கரிய பெருவரம் பெற்று, தேவரை வருத்தப்படுத்தி வருடு

விருத்தாந்தங்களை எல்லாம் வியாழ பகவானாலே விரிவாய் அறிந்துகொண்டு, இந்திரனுக்கு அபயங்கொடுத்து, வீரவாகுவை அசுரர் தலைவனாகிய சூரபன்மனிடம் தூதனுப்பி அவனுடைய மனக்கருத்தைத் தெளிந்துகொண்டு மகேந்திர நகருக்கு எழுந்தருளத் திருவுளங்கொண்டார். திருவுளங்கொண்டு, திருச்செந்தூரை விட்டுப் புறப்பட்டு ஆகாய வழியாய்ச் சென்று சைனிய வெள்ளத்தினோடு கதிர்காமத்தை அடைந்து மாணிக்க கங்கா நதி தீரத்திலே ஏமகூடம் என்னும் ஆலயத்தை விசுவகன்மனைக்கொண்டு இயற்றுவித்து அவ்வாலயத்திலே எழுந்தருளியிருந்தனர்.

## சூர சங்காரம்.

சுப்பிரமணியக்கடவுள் ஏமகூடத்தில் வந்து தங்கியிருத்தலைச் சூரன் கேள்விப்பட்டு மிகவுங்கோபங்கொண்டு பானுகோபன் முதலான புத்திரர்களையும், தருமகோபன் முதலான மந்திரிமார்களையும், சேனாபதிகளையும், சிங்கமுகாசுரன் முதலிய சகோதரர்களையும் நால்வகைச் சேனைகளோடும் சென்று முருகக்கடவுளுடன் போர் செய்யும்படி ஏவுதலும், அவர்கள் எல்லாரும் போர் செய்யும் விருப்பமுடையவர்களாய்ப் போர்க்களத்தை அடைந்தார்கள். வீரவாகுதேவர் முதலானவர்களும் கோபமுடையவர்களாய் அவ்வசுரர்களோடு யுத்தஞ்செய்தார்கள். அப்பெரிய போரினாலே மூன்று லோகவாசிகளும் கலக்கமடைந்தனர். அப்பொழுது வீரவாகு தேவரானவர் மற்றைய தம்முடைய வீரர்களோடுகூடப் பராக்கிரமத்தினாலே அசுர சேனையை அஸ்திரங்களினாலும் சஸ்திரங்களினாலும் நாசப்படுத்தினார். அது கண்டு சிங்கமுகாசுரன் வீரவாகுதேவரோடு போர்செய்தான். செய்து, வீரவாகு தேவர் முதலானவர்களை மாயா பாசத்தினாற் கட்டி உதயகிரியின் சிகரத்தில் உள்ள ஒரு குகையிற் கொண்டுபோய் வைத்துவிட்டான்.

பின்பு, சுப்பிரமணியக்கடவுளோடு எதிர்த்துச் சமர் செய்ய மாயா ரூபங்கொண்டு சேனைகளை அள்ளி விழுங்கினான். அக்கடவுள் கோபங்கொண்டு வில்லை வளைத்து நாணேற்றி ஐந்து பாணங்களைத் தொடுத்து மார்பில் ஒன்றும் நெற்றியில் நான்குமாகத் தைக்கும்படி செலுத்தினார். அப்பாணங்கள் சென்று அவ்வாறு தைத்தலும், அவன் மூர்ச்சை யடைந்து கீழே விழுந்தான். விழுதலும், சுப்பிரமணியப்பெருமான் அநேகாயிரம்

பாணங்களை எவி அவனுடைய சேனைகளைச் சங்காரஞ்செய்தார். வீரவாகு தேவர் முதலான வீரர்களையும் மாயா பாசத்தினின்றும் விடுவித்தார். பின் சிங்கமுகாசுரன் மூர்ச்சை தெளிந்து எழுந்து பெருங்கோபத்தோடு எதிர்த்துப் போர் செய்தான். அறுமுகக்கடவுள் அளவில்லாத பாணங்களை எவி, அவனுடைய தலைகளையும் கைகளையும் ஆயிரத்தெட்டு முறை அறுத்தறுத்து விழுத்தினார். ஒரு முகமும் இரு கரங்களும் ஒழிய மற்றையவைகளை யெல்லாம் வெட்டி வெட்டி வீழ்த்த வீழ்த்த மீண்டும் மீண்டும் அவைகள் முன் போலவே முளைத்து முளைத்து வந்தன. அது கண்டு சண்முகப்பெருமான் கோபங்கொண்டு உங்காரஞ்செய்து உரப்பினார். உரப்புதலும் அவை பின் உண்டாகாமல் உள்ளே அடங்கின. அதனால் அவன் கோபமும் மானமுங் கொண்டு சிங்கநாதஞ் செய்து தண்டு ஒன்றை ஏந்தி எதிர் செல்லுதலும் முருகக்கடவுள் குலிசப்படையை எவி அவனைச் சங்கரித்தருளினார். அது கண்டு தேவர்கள் ஆனந்தங்கொண்டு பூமாரி பொழிந்து துதித்தார்கள்.

தன் தம்பியாகிய சிங்கமுகாசுரன் போர்க்களத்திலே இறந்து விழுந்தான் என்பதைச் சூரபன்மன் அறிந்து கவலைக்கடலுள் மூழ்கி அடியற்ற மரம் போல நிலத்திலே விழுந்து புரண்டு புலன் கலங்கிப் பலவாறு புலம்பிப் பின்பு தெளிந்து, சினங்கொண்டு பலவிடங்களிலும் பரந்து கிடக்கும் தனது பெருவலியுடைய சேனைகளைச் சமரக்களத்திற்கு வரும்படி செய்து முருகக்கடவுளோடு சமர் புரியும்படி புறப்பட்டான்

சூரபன்மனானவன் அழகிய ஓர் இரதத்திலேறிப் பலவகை வாத்தியங்கள் முழங்கவும், அசுர சைனியங்கள் தன் பக்கத்தில் சூழ்ந்து வரவும், அறுமுகக்கடவுள் இருக்குமிடத்தை அடைந்து, தனது படைகளைத் தூண்டிப் பூத சேனைகளோடும் வீரர்களோடும் போர் புரியும்படி ஏவினன். அசுரசைனியங்கள் வேல் வாள் தண்டு கதை முதலிய ஆயுதங்களினாலே முருகக்கடவுளுடைய சேனைகளைத் தாக்குதலும், அவர்களும் இவர்களுடன் எதிர்த்து யுத்தஞ்செய்தனர். இரண்டு பக்கத்திலும் பெரும் போருண்டாயிற்று. பூதசேனைகளும் வீரர்களும் அவுணரோடு சமர் செய்ய ஆற்றாமல் ஓடினார்கள். அதுகண்டு வீரமொய்ம்பன் வில்லை யேந்தி வளைத்து நாணேற்றி எதிர்த்துச் சரமாரி பொழிந்து அவுணர்களின் தலை புயம் மார்பு கை கால் முதலானவைகளை அறுத்து மலைபோலக் குவித்து ஆரவாரம்

செய்தான். அவனை அவுணசேனைகள் வந்து வளைத்துப் பலவகை ஆயுதங்களையும் பொழிந்து எதிர்த்துப் போர் புரிந்தார்கள். அவன் நெடுநேரம் போர் புரிந்து அச்சேனசமுத்திரத்தைக் குறைக்கவியலாமையினால் கந்தக் கடவுள் பக்கத்தில் வந்து நின்றான். பூதப்படை வீழ்ந்ததும், வீரமொய்ம்பனும் தம்பிமாரும் வருந்தி மீண்டதும், அவுணப்படை செய்யுஞ் செயலுங்கண்டு, கந்தசுவாமியானவர் புன்முறுவல் செய்து, நீண்ட ஒரு வில்லைக் கையில் ஏந்தி வளைத்து நாணொலி செய்து அளவில்லாத அம்புகளைப் பூட்டி அவுணப்படைமேற் செலுத்தினார். அவை சென்று கொடிகளையுங் குடைகளையும் படைகளையும் யானைகளையுந் தேர்களையும் அவுணர் முடிகளையும் விழும்படி அட்டன.

எம்பிரான் விட்ட சரமாரியால் அவுணப்படைகள் மரம்போற சாய்ந்தன. குதிரைக்கூட்டங்கள் கடலிலுள்ள திரைகள் போல எழுந்து விழுந்தன. இரதங்கள் மலைபோற்சாய்ந்தன. யானைகள் கருமுகிற்கூட்டங்கள் போல் விழுந்தன. கவிகைகள் சந்திர சூரியர் சாய்ந்து விழுந்தாற்போல் விழுந்தன. பிரமன் மால் இந்திரன் ஆகிய தேவர்கள் அதனைக்கண்டு ஆனந்தங்கொண்டனர். அச்சமயத்தில் முருகக்கடவுள் வாயுவாகிய சாரதியை நோக்கி அவுணப்படை இருக்கும் இடமெல்லாம் இரதத்தை விடுக்குதி என்றார். அவ்வாறே சாரதியும் அவுணப்படை இருக்கும் இடமெல்லாம் இரதத்தைச் செலுத்தினான். முருகக்கடவுள் அவுணப் படை மாயும்படி, வில்லிலிருந்து ஆயிரம் ஆயிரமான கணைகளைத் தூண்டி அவுணர்களுடைய கைகளையும் மார்பையுந் தலைகளையும் அறுத்துப்பிணமலையாய்க்குவியும்படி செய்தார். இரத்த வெள்ளம் கடல்போலப் பெருகியது. அப்பிண மலைகளை நாய்கள் கடித்துண்டன. நரிகள் பிடுங்கித் தின்றன. கூளிகள் தின்று கூத்தாடின; யானைகள் காலொரு புறமும் கை யொரு புறமும் கழுத்தொரு புறமும் தலை யொரு புறமும் வாலொரு புறமும் கொம்பொரு புறமும் முதுகொரு புறமுமாகத் துணிபட்டு விழுந்தன. குதிரைகள் தலையுங் காலும் வாலும் பல்லும் உடலும் வெவ்வேறு துண்டங்களாக்கப்பட்டுப் பல பக்கங்களிலுஞ் சிதறி விழுந்தன. அங்குள்ள சேனைகளெல்லாம் இவ்விதமாக அழிதலும், மற்றைய அண்டங்களிலுள்ள அவுணப்படைகளெல்லாம் வந்து மொய்த்தன; அவை யாவற்றையும் முருகக்கடவுள் கண்டதுண்டமாக்கினார். பின்பு, மற்றைய அண்டங்களிலுள்ள அவுணப்படை

களும் இவ்வாறே வரும் என்றெண்ணி அண்ட கோளகையின் வாயிலைச் சரங்களினாலே அடைத்தருளினார்.

பின்பு, அண்ட முழுதும் நிறைந்து கிடக்கும் அவுணப் பிண மலைகளைத் திரு நோக்கத்தினாலே வெந்து நீறாகும்படி செய்தார். இவைகளைச் சூரபன்மன் உணர்ந்து கோபங்கொண்டு நமது சேனையை அலைத்த பகைவனைத் தேவர்களோடு கணப்பொழுதினுள்ளே முடிப்பேன் என்றான். முருகக்கடவுள் தமது தேரை விரைவாகச் செலுத்தி அவ்வசுரன்முன் எதிர்ப்பட்டார். சூரபன்மன் அறுமுகக்கடவுளைக் கண்களாற்கண்டு வெகுண்டு மகா மேருவை யொத்த வில் ஒன்றை ஏந்தி வளைத்து நாணேற்றினான். பூதரும் வீரருமாகிய சேனைகள் அவனை வளைத்துப் பலவகை ஆயுதங்களை வீசி ஆர்த்தனர். சூரன் வில்லிலிருந்து பல கணைகளை ஏவி அச்சேனைகளை வருத்தினான். அதனால் பூதசேனைகளில் அநேகர் இறந்தனர்; அநேகர் கை கால் அறுந்து மெலிந்தனர்; பலர் மயங்கி விழுந்தனர்; பலர் அஞ்சி ஓடினர்; ஓடவும் அஞ்சிப் பலர் மாறு வேடம் பூண்டனர். இப்படிப் பூதர்கள் அழிதலும், இலக்கத்தெட்டு வீரரோடு வீரவாகுதேவர் தோன்றி எதிர்த்து வில்லை வளைத்துச்சூரன்மேல் கணைமாரி பெய்தார். அவை அச்சூரன்மேற்பட்டு ஒன்றுஞ்செய்யாது வீழ்ந்தன. சூரபன்மன் தன் சிலையிலிருந்து நூறு கோடி பாணங்களைத் தூண்டி வீரர் விடுஞ் சரங்களைத் துணித்து, அவர்கள் ஏறி வந்த இரதங்களையும் சிலைகளையும் அழித்தான். அதன்பின் அவர்களின் தோள்களிலும் மார்பிலும் சிரத்திலும் கரத்திலும் ஆயிரம் ஆயிரமான கணைகளைச் செலுத்தி இரத்த வெள்ளம் பெருகும்படி செய்தான். இலக்கத்தெட்டு வீரரும் எதிர் நிற்க ஆற்றாமல் திரும்பினார். அப்பொழுது வீரவாகு தேவரானவர் சினங்கொண்டு அப்பகைவன் தேர்மேல் பாய்ந்து அவன் வில்லை வாளினால் துணித்தார். அதனால் சூரபன்மன் கோபங்கொண்டு வீரவாகுதேவரின் மார்பில் கையினாலே புடைத்தான். புடைத்தலும் வீரவாகுதேவர் அயர்ந்து விழுந்தார். தூதனைக் கொல்லுதல் ஆகாதென்று எடுத்து ஆகாயத்தில் வீசினான். அவர் மீண்டு கந்தசுவாமியின் பக்கத்தில் வந்து சேர்ந்தனர். சூரபன்மன் மற்றொரு வில்லை யெடுத்தான்; முருகக்கடவுளும் நீண்டதாகிய ஒரு வில்லை ஏந்தினார். சூரபன்மன் இருபதிலக்கம் பாணங்களை ஏவினான். முருகக்கடவுள் சில கணைகளைத் தூண்டி அவற்றை யறுத்தருளினார். அசுரன்

பின்னும் பல கணைகளை விட்டான். கடவுள் அவைகளையுஞ் சிதைத்தனர். சிதைத்த பின்னும் அத்தீயோன் சரங்களை விடுத்தான். கந்தவேள் நூறு கணைகளால் அவற்றை யழித்து அவன்மேல் எழுநூறு வாளிகளை ஏவினார். அசுரன் அவற்றை யறுத்து இரண்டாயிரம் சரங்களைத் தூண்டினான்; கடவுள் இரண்டாயிரம் வாளிகளால் அவற்றை யறுத்துப் பின்னும் இரண்டாயிரம் கணைகளை அவன்மேல் விட்டார். கந்தமூர்த்தி விடும் பாணங்களை அசுரன் சிதைக்க, அசுரன் விடும் பாணங்களைக் கந்தமூர்த்தி சிதைக்க, இவ்வாறே யாவரும் அஞ்சத்தக்க யுத்தமானது நெடுநேரம் நடைபெற்றது.

பின்பு அசுரன் முருகக்கடவுள் ஏறி வந்த இரதத்தின் கொடியினை அறுத்துக் கணைகளால் அவர் திருமேனியை மறைத்து, வெற்றிச் சங்கத்தை எடுத்து ஊதினான். முருகக்கடவுள் அக்கணைகளைச் சிதைத்து அவனேறிய பெரிய தேரின்மேலுள்ள கொடியை அறுத்துக் கடலிலே தள்ளினார். அப்பொழுது பானுகம்பன் தனது ஆயிரம் வாயிலும் ஆயிரம் சங்கங்களை வைத்து ஊதினான். அது கண்டு, நாராயணனது சங்கமும் முழங்கியது. தேவர் யாவருங்கூடி அக்கினி தேவனை முருகக்கடவுளது தேரிற் கொடியாய் இருக்கும்படி ஏவ, அவனும் அத்தேர்மேல் கோழிக் கொடியாகி நின்று கூவி அண்டங்கள் வெடிபட ஆர்த்தான்.

பின்னர், சூரனாகிய அசுரன் ஆகாயத்திலே செல்ல முருகமூர்த்தியும் அங்கே சென்று தாக்கினார். சூரபன்மன் மண்ணிலே வந்தான்; முருகக் கடவுளும் மண்ணிலே வந்து எதிர்த்தார். சூரன் மறைந்து கடல் நடுவில் ஒளித்தான். முருகவேள் அங்குஞ் சென்று சமர் புரிந்தார். சூரன் மாயையினால் மறைந்து மாதிர முடிவிலே ஒளித்தான். கடவுள் அங்கும் போந்தனர்.

பின்பு, மேருவினும் வைகுந்தத்தினும் அண்ட கோளகையின் மேலுள்ள வாயிலினும் செல்ல முருகக்கடவுள் அங்கங்கு சென்று சமர் புரிந்து சூரபன்மன் ஏறிய தேரை அம்பினால் சிதைத்து அழித்தார். உடனே இந்திரஞாலத்தேரை உன்னினான். உன்னலும், அது வந்தது; வரவுஞ் சூரபன்மன் அதன்மேல் ஏறிச் சமர் செய்தான். பின்பு கந்தமூர்த்தியினாலே அடைக்கப்பட்ட மற்றைய அண்டங்களின் வாயிலே உடைத்து அங்கு

ள்ள சேனைகளைக் கூவி யழைத்து அவை சுற்றி வர, வந்து எதிர்த்தன. முருகக்கடவுள் அவற்றை நோக்கி அழல் எழ விழித்தலும், அவை யெல்லாம் வெந்து நீறாயின. அண்டத்தின் அப்பாலுள்ள சேனைகள் வந்து சூழ்ந்து கந்த மூர்த்தியை எதிர்க்க, அவற்றை நோக்கி உங்காரஞ்செய்து உரப்பினார்; அதனால் அவை யாவும் அழிந்து தூளாயின. பின்னும், அதன் மேலுள்ள அண்டத்திலிருந்து அவுண சேனைகள் வந்து சூழ்ந்து எதிர்த்தன. கரங்களிலுள்ள கணிச்சி சூலம் சக்கரம் தண்டு எழு என்னும் ஐந்து படைகளையும் முருகவேள் நோக்கி "நம்மைச் சூழ்ந்து நிற்கும் இவ்வவுண சேனைகளையும் அப்பாலண்டங்களிலுள்ள அவுணசேனைகளையும் அழித்து இங்கே வாருங்கள்" என்றார்.

அவ்வாறே அப்படைகள் பலபல வடிவங்கொண்டு அங்கே சூழ்ந்து நின்ற சேனையையும், மற்றைய ஆயிரத்தேழு அண்டங்களில் நிறைந்திருக்கும் அவுணசேனையையும் அழித்து மீண்டன. சூரபன்மன் சக்கரப்படை ஒன்றை விட்டான். அதனைக் கடவுள் செங்கையினாலே பற்றினார்; மாயா வித்தையினாலே பல பல வடிவங்கள் கொண்டான்; சேதனப் பகழி பூட்டிக் கடவுள் அம்மாயா வடிவங்கள் எல்லாவற்றையும் அழித்தார், அவுணன் மேலுள்ள ஒவ்வோரண்டங்களினுஞ் சென்றான்; கடவுள் அவ்வண்டங்கள் தோறும் அவனைத் தொடர்ந்து சென்று, சமர் இழைத்தார். பின் இவ்வண்டத்திலுள்ள மகேந்திரம் வந்து சேர்ந்தான்; ஆறுமுகக்கடவுள் அவனை விடாது வந்து சேர்ந்தனர். அப்பொழுது இங்கிருந்த அவுணசேனை சூரபன்மனைச் சூழ்ந்து ஆரவாரஞ்செய்தன.

அது கண்டு, முருகப்பெருமான் இவர்கள் முயற்சி நன்று! நன்று!! என்று நோக்கிப் புன்முறுவல் செய்ய, முன்னாளிலே திரிபுரங்கள் வெந்து நீறாயினாற்போல அவ்வவுணப்படை வெந்து நீறாயின. அது கண்டு, சூரபன்மன் கவலை கொண்டு "தம்பிமார் மைந்தர் அமைச்சர் மற்றுள்ள சேனைகள் யாவரும் முடிந்தனர்; மிகுந்திருந்த சேனைகள் யாவும் இப்பொழுது முடிந்தன; யானே தனியனாயினேன்! இனி யாது செய்வேன்?" என்று பெருமூச்சு விட்டு, மாயையின் சூழ்ச்சியினால் இந்திரஞாலத்தேரை விடுத்து மந்தாகிரியைக் கொண்டுவரும்படி செய்ய, அதனால் அம்மலையில் உள்ள அமுதத்தின் காற்று வீச, யுத்தகளத்தில் அதுவரையில் இறந்திருந்த

அவுணப்படை எல்லாம் உயிர் பெற்றெழுந்தன. அது கண்டு முருகக் கடவுள் "சங்கார காலத்திலே யுயிர்த்தொகை யனைத்தையும் முடிவு செய்கின்ற சிவப்படையை எடுத்து இவ்வவுண சேனை முழுவதையும் அழித்துவாக் கடவாய்" என்று கட்டளை செய்து அனுப்பினர். அப்படை யெழுந்து போய் அவுணசேனையை ஒருங்கே யழித்து இந்திரஞாலத் தேர்மேலிருந்த மந்தரகிரியையுந் துகளாக்கி முருகவேள் பாங்கரில் வந்திருந்தது. சூரபன்மன் சினங்கொண்டு இந்திரஞாலத்தேரை ஏவிப் பூதரையும் வீரரையும் கவர்ந்து கொண்டுபோய் அண்டகோளகை யுச்சியில் வைத்திருக்கும்படி செய்தான். சுப்பிரமணியக்கடவுள் ஒரு அம்பை ஏவி அத்தேரைப் பற்றி வரும்படி செய்து இலக்கத்தொன்பது வீரரையும் பூதசேனைகளையும் விடுவித்து, அவ்விந்திரஞாலத்தேரையும் அவுணன்பால் மீண்டு போகாமல் தம்மருகுநிற்கும்படி செய்தார். பின்னும், அசுரன் பலவாறு யுத்தஞ்செய்தான். கந்தமூர்த்தி இரண்டாயிரம் சரங்களால் அவன் ஏறிய சிங்கத்தை யடித்து வீழ்த்தினர். அசுரன் சக்கரவாகப்புள்ளாக வந்து எதிர்த்தான். முருகப்பெருமானது கையிலிருந்த வில்லை அழித்துவிடும் எண்ணங்கொண்டு வந்த சக்கரவாகப்புள்ளை வாளினல் முருகக்கடவுளானவர் வெட்டினர். சூரன் புள் வடிவத்தை விட்டு, நிலம் நீர் நெருப்பு வளி யென்னும் நான்கு பூத வடிவங் கொண்டான். பெருமான் அவ்வடிவங்களையெல்லாம் அழித்தார். பதினெண் கணங்கள் ஆயினன்; அவ்வடிவங்களையும் அழித்தார். பிருதிவி முதலான நாற்பெரும் பூதங்கள் பதினெண் கணங்கள் என்னும் இந்த வடிவங்களை மாயையினலே தரித்துக் கந்தக்கடவுளின் முன்பு இருந்த சூரபன்மனை அந்த ஆறுமுகப்பெருமான் புன்சிரிப்புடன் பார்த்து, அநேகம் பாணங்களினல் அவ்வடிவங்களை அழித்து, அற்புதமாகிய தனது பெரிய விசுவரூபத்தைச் சூரபன்மனுக்குப் பண்டைய புண்ணியப்பெருமையினல் காட்டியருளினர்.

சுப்பிரமணியப்பெருமான் சமனை யென்னும் பருவதத்தில் வலப்பாதத்தையும் அக்ஷபருவதத்தில் இடப்பாதத்தையும் வைத்தவராயும், எண்ணில்லாத முகங்களும், எண்ணில்லாத விழிகளும், எண்ணில்லாத கரங்களும், எண்ணில்லாத செவிகளும், எண்ணில்லாத நாசிகளும் உள்ளவராயும், அநந்தகோடி சூரியப்பிரகாச முள்ளவராயும், அநந்தவிதமான ஆடைகளும் ஆபரணங்களும் மாலைகளும் சுகந்தங்களும் அணிந்தவராயும், சருவாண்ட

ங்களும் ஒவ்வோரவயவங்களில் ஒடுங்கிப்பரந்திருக்க வைத்தவராயும் தோன்றக் கண்டான். முருகக்கடவுள் அவனுக்குச் சிறிது ஞானமுதிக்கும்படி அருள் செய்தார். சூரபன்மன் அவ்விசுவரூபத்தைத் தரிசித்தவுடன் ஆனந்த பரவசனாய் உரோமஞ் சிலிர்ப்ப அதிசயமடைந்து அவ்வடிவை மனத்தினால் வணங்கி நின்று, "தேவாதிதேவரது இத்திருமேனியிலே சகல தேவர்களையும் சகல பூதங்களையும் பிரமன் மால் உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளையும், சகல முனிவர்களையும், சகல உரகர்களையுங் கண்டேன். இவ்வடிவின் ஆதியையும் நடுவையும் அந்தத்தையும் கண்டிலேன்; முன் செய்த தவப்பயனால் எனக்கு இதுதரிசனமாயிற்று. அன்றி, வேறு எவர்க்கும் இது காண முடியாது; தூதாக முன்னர் வந்தோன் இவரை விருப்பும் வெறுப்பும் இன்றி நின்ற பராபர முதல்வர் என்றன்றோ பகர்ந்தான்; அவன் பகர்ந்தவற்றை யெல்லாம் மெய் என்று துணிந்திலேன்; இப்பொழுதுதான் இவரே ஈசர் என்னுந் தன்மை கண்டேன். அம்ம! யான் பெற்ற அண்டங்கள் யாவும் இவரது பாத ரோமத்தில் அடங்கி நின்றன. சிங்கமுகனாகிய எனது தம்பியும் இரணியனும் அரிபிரமர்களினால் அடியு முடியுந் தேடி யறியப்படாத பரமன் இவரேயாம் என்றதையும் இன்றே உண்மை யென்று கண்டேன். இவருடைய வடிவத்தைத்தரிசித்தவுடன் மாறுபட்டெழுந்த கோப முற்றுந் தணிந்தது. யுத்தஞ் செய்ய வேண்டு மென்னுங் கருத்தும் ஒழிந்தது; மயிர்க்கால் தோறும் புளகம் உண்டாயிற்று; கண்களில் ஆனந்தவருவி பொழிகின்றது; இடையறாத மெய்யன்பு செனித்தது; மனங் கசிந்து உருகுகின்றது; என்பெல்லாம் உலையிடைப்பட்ட மெழுகு போன்றன; அகந்தை யொழிந்தது; ஞானம் உதித்தது; யான் செய்த தவப்பயனாலன்றோ இவ்வாறெய்தக் கிடைத்தது; என்னுடைய பாதங்கள் இவரை வலம் வருதல் வேண்டும்; கைகள் தொழுதல் வேண்டும்; தலை தாழ்ந்து வணங்குதல் வேண்டும்; வாய் வாழ்த்துதல் வேண்டும்; யானுந் தீமையிலிருந்து நீங்கி இவருக்கு அடிமைப்பட்டு வாழுதல்வேண்டும்; ஆயினும் மானம் ஒன்றே யன்றோ என் னெஞ்சைத்தடுத்தது." - என்றிவ்வாறு கூறித் துதித்து நின்றான். முருகமூர்த்தி அவ்விசுவ ரூபத்தை மறைத்து மயின்மீதூர்ந்த பழைய வடிவங்கொண்டருளி அவனுக்குத் தாம் அளித்த ஞானக்கண்ணையு மாற்றிப் பழைய ஊனக்கண்ணை அவன் பெறும்படி செய்தார். அப்பொழுது சூரபன்மன் பழைய கோபமும் பகையுங் கொண்டு முடி துளக்கி நகைத்துச் "சிறுவனாகிய இக்கள்வன் சமர் செய்ய மாட்டா

மல் மாயையால் என்னை மையல் செய்தான். இவனைப் போர் செய்து மெல்லக் கொல்வேன்; இந்தப் போரை மூட்டிய வானவரை இப்பொழுதே உயிர் குடிப்பேன்." என்று மாயைச்செயலினால் இப்பூமியிலும் வானத்திலும் நிறைந்த பேரிருள் வடிவங்கொண்டான். பின், அவ்விருளின் நடுவில் பல தலைகளும் பல கைகளும உள்ள ஒரு சரீரமுடையவனாய்த் தேவரை வாரி யுண்ணும்படி மேலே விண்ணிடைச் சென்றான். தேவர்கள் அதனை யுணர்ந்து அஞ்சி, முருகக்கடவுளைச் சரணடைந்து பலவாறாகத் துதி செய்து, "எம்பெருமானே! எங்களைக் காத்தருளல்வேண்டும்" என்றிரந்தார்கள்.

தேவர்களது வேண்டுதலையும் அக்கொடியோனது வல்லமையையும் ஆறுமுகப்பெருமான் உணர்ந்து, திருக்கரம் ஒன்றிலிருக்கும் அழகிய வேற்படையை நோக்கி, விரைவில் இவன் உடலைப் பிளந்து உயிரை யுண்டு வருவாயாக என்று அச்சூரபன்மன்மேற் செல்ல விட்டார். அவவிருதலை ஞாங்கர் ஆயிரகோடி சூரியப்பிரகாசந்தாங்கி எழுந்து செல்ல, அவன் கொண்ட பேரிருள் வடிவம் முழுவதும் அழிந்து போயிற்று.

பின்பு, வேற்படை அவ்வாறு வருதலைச்சூரபன்மன் கண்டு மாயையினால் ஒன்று கருதி, விரைந்து கடலின் நடுவிற் போய்ப் பாதாளமளவும் புதைந்த அடியும் ஆகாயமளவும் நீண்ட முடியும் பூமி முழுவதும் நிறைந்த கிளைகளும் உள்ள மாமரமாகி எவரும் அஞ்சத்தக்கவாறு நின்றான். அஃது இலக்கம் யோசனை விசாலமான பருமனுடையது; வச்சிரம்போலும் வயிரமுடையது; மிகவும் பெரியது. அப்படியான மாமரவடிவங் கொண்ட சூரபன்மனது செயலை முருகக்கடவுள் தூண்டிய வேற்படை கண்டு சீற்றங்கொண்டு விரைந்து சென்று அம்மாமர வடிவைத் தடிந்தது. சூரபன்மன் மீண்டுந் தன் பழைய வடிவைத் தாங்கிச் சினங்கொண்டு உடைவாளை உருவி முருகக்கடவுளோடு போர் செய்யும்படி வந்தான். அவ்வேலாயுதம் சூரபன்மனது மார்பைப் பிளந்து உடலை இருகூறாக்கிக் கடலிலே தள்ளி ஆகாய கங்கையிலே போய் முழுகிப் புனிதமாகி மீண்டு பரமகருணாநிதியாகிய ஆறுமுகக்கடவுளது திருக்கரத்தில் வந்திருந்தது. இருகூறாகிய சூரபன்மனது உடற்பகுதி இரண்டும் சேவலும் மயிலுமாகிச் சினங்கொண்டு முருகக்கடவுளை நோக்கிப் போர் புரியும்படி வருதலும், அக்கடவுள் திருவருள் நோக்கஞ்செய்து அவனது மயலாயை தன் முங்களைப் போக்கி ஆட்

கொண்டு, சேவலைக் கொடியாகித் தேர்மேல் இருக்கும்படி விடுத்து, மயிலை ஊர்தியாகக்கொண்டு நடாத்தினர். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். சேவலும் மயிலுமாய் நின்ற தேவர் பழைய வடிவைத்தாங்கினர். பிரமன் மால் இந்திரன் ஆதிய தேவர்களும், இலக்கத்தொன்பது வீரரும், பூதசேனையும் குகப்பெருமானை வந்து சூழ்ந்து வணங்கித் துதித்து ஆராவாரித்தனர். குகப்பெருமான் தேவாதியோருக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்துச் சயந்தனாதி தேவரைச் சிறையினின்றும் விடுவித்து, மகேந்திர புரியை வருணனுக்கு விருந்து செய்து, தேவரும் வீரரும் பூதரும் புடைசூழ்ந்து வரக் கதிர்காமகிரியை அடைந்தருளினர்.

## கதிர்காம கிரியில் தேவர்கள் கதிர்காமநாதரை வழிபாடு செய்வது.

கதிர்காமகிரியில் கந்தவேள் சென்று, "இங்கே நாம் வசித்தற்பொருட்டுச் சிறந்த நகரத்தையும், அழகிய கோயிலையும் விரைவில் நிருமிப்பாயாக" என்று விசுவகன்மனுக்குக் கட்டளையிட்டார். தேவத்தச்சனாகிய விசுவகன்மன் அவ்வாணையைச் சிரமேற்கொண்டு, அதிவிசித்திராலங்காரம் பொருந்திய மாடமாளிகைகள் கூடகோபுரங்கள் மண்டபங்கள் வாய்ந்ததும், மாட மாளிகைதோறும் அழகிய கொடிகள் அசைந்தாடவும் இரத்தின தோரணங்கள் தொங்கவும் நவரத்தினங்களிழைத்த படிகள் இலங்கவும் பல சாளரங்கள் நிலவவும் பெற்றுச் சிறப்புறுவதும் ஆகிய பல வீதிகள் உள்ளதும் குளிர்ந்த சோலைகளும் தடாகங்களும் அமையப்பெற்றதுமாகிய ஒரு நகரத்தைச் சிற்பநூல் விதிப்படி இயற்றி அந்நகரத்தின் நடுவில் சகல சித்தியையும் அருள வல்லதும் கோடி சூரியப்பிரகாசம் உள்ளதும் நவரத்தினங்களாலே குயிற்றப்பட்டதும் மங்களம் வாய்ந்ததுமாகிய சிந்தாமணி என்னும் ஆலயத்தை யமைத்து இந்திரநீலத்தினால் ஒரு சிங்காதனமும் ஆக்கினன்.

கந்தவேள் இரதத்தினின்றும் இறங்கி மால் அயன் இந்திரன் சயந்தனாதிய தேவர்களோடும் வீரவாகு முதலிய வீரர்களோடும் பூதவீரரோடும் கதிர்காம கிரியின்மேல் உள்ள அந்நகரத்தினுள்ளே புகுந்து வீதிகடோறும் உலாப்போந்து அவ்வீதிகளினழகைக்கண்டு மகிழ்ந்து சிந்தாமணி ஆலயத்தினது கோபுரவாசலைக் கடந்து உள்ளே சென்று மண்டபங்களையும் வீதி

களையுங் கண்ணுற்று, அக்கோயிலின் நடுவில் அமைந்துள்ள இந்திரநீலசிங்காசனத்தின்மேல் ஏறி வீற்றிருந்து, ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருவிழிகளும் பன்னிரண்டு திருக்கரங்களும் இரண்டு திருவடிகளும் இலங்கப் புன்னகை புரிந்து பெருங்கருணையோடு ஆனந்தமான திருக்கோலங் காட்டித் தேவர்க்கும் முனிவர்க்கும் பூதர்க்கும் அற்புத தரிசனங்கொடுத்தருளினர். யாவரும் அப்பெருமானுடைய அருமைத் திருக்கோலத்தைக் கண்களினாலே கண்டு வணங்கி, ஆனந்தமும் அதிசயமும் அடைந்து துதி செய்தார்கள்.

அப்பொழுது இந்திரன் முதலான தேவரும் முனிவரும் பெருமானை வணங்கி, ‘‘எம்பெருமானே! மகா மகிமை பெற்ற அண்ணலே! உமைக்கு மைந்தரே! தேவரீரை இங்கே பூசித்து வழிபடல் வேண்டும் என்னுங் காதலைக் கொண்டோம்; அதன்பொருட்டு இக்கதிர்காம மலையின் மேலே ஒரு சிறந்த தீர்த்தம் உண்டாக்கித் தரல்வேண்டும்.’’ என்று வேண்டிக்கொண்டார்கள். பரம கருணாநிதியும் கங்கை மைந்தருமாகிய அக்கதிர்காமநாதர் வீரவாகுவை யழைத்து எல்லாவுலகங்களும் உய்யும்பொருட்டு இம்மலையின் மேலே புனிதமாகிய தீர்த்தமொன்றை உண்டாக்குவாய் என்று கருணையுடன் ஆஞ்ஞாபித்தார். வீரவாகு அவ்வாணையைச் சிரமேற்கொண்டு மலையின்கண் தன் கரத்திலிருந்த கதையினால் மோதினார். அவ்வாறு மோதியவிடத்து ஒன்பது குண்டுகள் உண்டாயின. முன்னே சிவபெருமான் தனக்கு அருள் புரிந்த ஆஞ்ஞையை நினைந்து கங்கையானவள் அவ்வொன்பது குண்டுகளினின்றும்புறப்பட்டு எழுந்து புனிதம்பொருந்திய புண்ணியதீர்த்தமாயினாள். இந்திரன் முதலிய தேவரும் முனிவரும் அதைக்கண்டு ஆனந்தமும் அதிசயமுங்கொண்டு, அத்தீர்த்தத்தைக் கரங்களினாலே தொட்டுச் சிரசிலே தெளித்துப் புனிதமுற்றனர். பின்பு, கதிர்காமகிரீசரை அக்கங்கா தீர்த்தத்தினாலும் பஞ்சகௌவியத்தினாலும் பழவகைகளினாலும் சுகந்த திரவியங்களினாலும் மஞ்சனம் ஆட்டிப் பொன்னாடை புனைந்து நவமணிப் பூண் சாத்தி மாலைகளணிந்து அலங்கரித்து, நைவேதனம் தூபம் தீப முதலிய பலவகை உபசாரங்களாலும் ஆராதனை செய்து வழிபட்டனர். பின் நிலத்தில் விழுந்து வணங்கி எழுந்து நின்று சிரசின்மேலே அஞ்சலி செய்து ஆனந்தவருவி பொழிந்து மெய்யன்போடு ‘‘தேவாதிதேவரே! சகல லோக நாயகரே! தேவர் யாவராலுந் தொழப்பட்டவரே! சகல மந்திரங்களையும் வடிவமாகக் கொண்டவரே! சாந்தரே! உமக்கு நமஸ்காரம்.

செந்தாமரை மலர் போன்ற திருமுகங்களாறும் சிவந்த திருமேனியும் நவரத்தின கிரீடமும் உள்ளவரே! அபயம் வாள் வேல் அம்பு என்பவைக ளை இடத்திருக்கரத்திலும் வரதம் குலிசம் வில் கேடகம் என்பவைகளை வலத்திருக்கரத்திலும் தரித்தவரே! நிருமல சொரூபரே! கிரவுஞ்சகிரியைப் பிளந்தவரே! தேவரீரைச் சரணடைந்தோம்.

வரதம் அங்குசம் கொடி கட்கம் வில் அபயம் ஞானம் பாசம் சக்கரம் வேல் வாள் அம்பு தோமரம் என்பவைகளைத் தரித்திருப்பவரும், கோடி சூரியப்பிரகாசரும், பன்னிருகரத்தரும், தாரகனை யழித்தவரும், சிவகுமா ரருமாகிய தேவரீரைச் சரணடைந்தோம்.

ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களும் உள்ளவரும், வர தம் அபயம் வச்சிரம் வேல் வில் பாசம் அம்பு சூலம் வாள் கதை என்பவை களைத் தரித்தவரும், சிங்கமுகாசுரனைச் சங்கரித்தவரும், ஈசருமாகிய தேவ ரீரைச் சரணடைந்தோம்.

ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களும் உள்ளவரும், சிவ ந்த நிறத்தினரும், கிரீடம் புனைந்தவரும், அபயம் வரதம் கேடகம் வச்சிரம் சூலம் தாமரை சக்கரம் அம்பு வில் வாள் வேல் மணி யென்னும் இவற் றைக் கரங்களிலே தரித்தவரும், தேவசேனாதிபதியும், மயில் வாகனரும், சூரபன்மனைச் சங்கரித்தவரும் ஆகிய தேவரீரைத் துதிக்கின்றோம்.

பலவகை ரூபமுடையவரும் பலவகை ஆயுதங்களைத் தரித்தவரும் பல வகை ஆபரணங்கள் அணிந்தவரும் பலவகை நாமமுடையவரும் ஆகிய தே வரீருக்கு நமஸ்காரம்

என்று பலவாறு கதிர்காமகிரீசனைத் தோத்திரஞ்செய்தனர். அவர்கள் செ ய்த பூசையையும் தோத்திரங்களையும் அக்கடவுள் ஏற்று மகிழ்ந்து "நீங்கள் விரும்பிய வரத்தைத் தருவோம் கேளுங்கள்" என்றனர். தேவர்கள் வண ங்கி நின்று "எம்பெருமானே! யாவருந்தரிசித்து வணங்குமாறு இந்த மலை யின்மேல் தேவரீர் எப்பொழுதும் எழுந்தருளியிருந்து எல்லாவுயிர்கட்குஞ் சருவ சம்பத்துக்களையும் ஈந்தருளல்வேண்டும்" என்று வேண்டினார்கள்.

கதிரை நாயகர் மகிழ்ச்சியடைந்து "நீங்கள் விரும்பிய வண்ணமே வர மளித்தோம். இந்த மலையிலே விட்டு நீங்காது என்றும் ஆனந்தமாய் எழு ந்தருளியிருப்போம்; எவர் இந்த வெகங்கா தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து

நம்மைப் பூசித்து வணங்குவாரோ அவருக்கு இம்மையில் வேண்டிய போகங்களெல்லாவற்றையும் அளித்து, மறுமையிலே நித்தியானந்த வாழ்வாகிய முத்தியையும் அருளுவோம்'' என்று திருவாய்மலர்ந்தருளினார். பின்பு, அகிலலோக தயாநிதியும் சிவகுமாரரும் சருவைசுவரிய சம்பன்னருமாகிய கதிர்காமநாதர் தேவர்கள் எப்பொழுதும் பூசிக்க அங்கே சில காலம் எழுந்தருளியிருந்தார். அசுரரை நிக்கிரகஞ் செய்து தேவருக்குப் பூரணானுக்கிரகஞ்செய்தமையால், அக்கதிர்காம கிரீசருடைய பெருங்கருணைத்திறம் எம்மால் விளம்பற்பாலதன்று. சுப்பிரமணியப் பெருமான் எழுந்தருளியிருக்குந் தலங்களினும் கொண்டருளிய மூர்த்தங்களினும் இதுபோல்வதொன்று உலகத்தில் இல்லை. விரும்பிய விரும்பிய பேறுகளெல்லாம் இங்கே எய்தலாம், இது சத்தியம்! சத்தியம்!! முக்காலுஞ் சத்தியம் !!! என்பதாய் நைமிசாரண்ணியவாசிகளுக்குச் சூதமுனிவர் அருளிச்செய்தார்.

## தெய்வயானையம்மை திருமணம்.

பின்பு, சூதமுனிவர் நைமிசாரண்ணிய வாசிகளை நோக்கிச் சொல்லுகின்றார்:—பெருந்தவமுடையீர்! கிருபாசமுத்திரமாகிய அச்சங்கரகுமாரர் கதிர்காமசைலத்தில் என்றும் விட்டு நீங்காது ஆனந்தமாய் எழுந்தருளியிருப்போம். எவர் இந்த நவகங்கா தீர்த்தத்தில் ஆடிப் பாடி நம்மைப் பூசித்து வணங்குவாரோ? அவருக்கு நாம் போகமோக்ஷம் இரண்டும் அளிப்போம் என்று அருளிச் செய்து, கதிர்காம சைலத்தின்கண் சில காலந் தங்கியிருந்து, பின்னர் சேனைகள் தம்மைப் புடை சூழ்ந்து சேவிக்க, அவ்விடம் விட்டுத் திருச்செந்தூரை யடைந்து, அங்குள்ள ஆலயத்தில் இரத்தினசிங்காசனத்தின்மிசை எழுந்தருளியிருந்தனர். ஆசனத்தின்மிசை வீற்றிருக்கும் அக்குமாரப்பெருமானை இந்திராதி தேவர்கள் யாவரும் மெய்யன்போடு பதினாறுவித உபசாரங்களுஞ் செய்து பூசித்தார்கள் கடவுள் அப்பூசையை ஏற்று மகிழ்ந்து, பின் யாவரும் புடை சூழ அவ்விடத்தினின்றும் எழுந்தருளித் திருப்பரங்குன்றை யடைந்து அங்கே மிக்க மகிழ்ச்சியோடு வீற்றிருந்தருளினார்.

தேவர்களுக்கு அரசனாகிய இந்திரன் தன்னை நெடுங்காலம் வருத்திய பகைவராகிய சூரபன்மன் முதலிய தானவர் குழுவைச் சங்கரித்துத் தன்னை வாழ்வித்த அக்கடவுளுடைய கருணைத்திறத்தை நினைத்து அதற்குக்

கைம்மாருகத் தன் மகளாகிய தெய்வயானை யம்மையாரைத் திருமணஞ் செய்து கொடுக்க வேண்டுமென்று கருதி, அவர் திருமுன் சென்று வணங்கி "எம்பெருமானே! தேவரீர் விருப்பு வெறுப்பற்ற ஞான சொரூபியாயினும் உயிர்த்தொகை யுய்யுமாறு அடியேன் பெற்ற புதல்வியாகிய தெய்வயானை யம்மையைத் திருமணஞ் செய்தருளல் வேண்டும் இஃது அடியேனுடைய விண்ணப்பம்" என்று பிரார்த்தித்தான். எல்லாப் பொருள்களையுந் தமது உடைமையாகக்கொண்ட அப்பரம்பொருள் பெருங்கருணையுடையவராய்ப் புன்னகை செய்து அவ்வாறே ஆகுக வெனத் திருவாய் மலர்ந்தருளினார். இந்திரன் மகிழ்ச்சியடைந்து தன்மகளை அங்கே அழைத்து வரும்படி செய்து எங்கும மணவோலை அனுப்பி மால் அயன் முதலிய தேவரும் தேவ மாதரும் முனிவரும் முசுகுந்தன் முதலிய அரசரும் வந்து திருமணச்சாலையில் சூழ்ந்திருக்க, தான் பெற்ற மகளாகிய தெய்வயானை யம்மையாரைச் சிவகுமாரருக்குத் தாரை நீர் வார்த்துத் தத்தம் செய்தான். சுப்பிரமணியப்பெருமான் சருவான்மாக்களும் உய்யும்படி அவ்வம்மையாரை ஏற்று மங்கலநாண் பூட்டி வேதவிதிப்படி அங்கிவினை முடித்து அம்மி மிதித்து அருந்ததி காட்டி இவ்வாறு மணச் சடங்கை முடித்துத் திருமணஞ்செய்தருளினார். பின்பு தெய்வயானையம்மையாரோடு வீற்றிருந்து தேவர் முனிவர் முதலிய யாவருக்குந் திருவருள் புரிந்து இந்திரன் முதலிய தேவரை விண்ணுலகிற் குடியேற்றி அங்கிருந்து புறப்பட்டுத் திருக்கைலை மலையை அடைந்து பார்வதிபரமேசுவரர்களை வணங்கி விடைபெற்றுக் கந்தவெற்படைந்து அங்கே தெய்வயானை அம்மையாரோடு வீற்றிருந்தருளினார்.

## வள்ளி நாயகி திருமணம்.

பின்பு தமக்கு மிகவும் பிரியமாகிய திருத்தணிமலையை அடைந்து அங்கே சில பகல் தங்கினார். அப்பொழுது நாரதமுனிவர் கந்தசுவாமி திருமுன்னர் வந்து "எந்தாய்! வள்ளிமலையின் ஒரு பக்கத்திலே மான் வயிற்றிற்பிறந்து வேடர் மகளாய்த் தினைப்புனங் காத்து ஒரு கன்னியிருக்கின்றனர். அக்கன்னிகையின் சிறப்பை யான் சொல்ல வல்லவன் அல்லன். தேவரீருக்கே அக்கன்னிகை உரிமையுடையவராவர். தேவரீர் அக்கன்னிகையைத் திருமணஞ் செய்தருளல் வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தார்.

சண்முகக்கடவுள் அங்காரதர் சொன்னதையும் வள்ளிநாயகி தம்மை நோக்கித் தவஞ்செய்தலையும் உணர்ந்து, வள்ளிமலையை யடைந்து அங்கே சில திருவிளையாடல் செய்து வள்ளிநாயகியை மகிழ்வித்து, பின்பு வேடர்கள் தொழ வள்ளிநாயகியைத் திருமணஞ்செய்து திருத்தணிகை மலையை யடைந்து, சில நாள் வைகி, கந்தவெற்பிற் சென்று இச்சாசத்தியுங் கிரியா சத்தியுமாகிய வள்ளி தெய்வானை யம்மையாரோடு எழுந்தருளியிருந்து ஞான சத்தியாகிய வேற்படையையும் உடையவராய் எல்லாவுயிர்கட்கும் போக மோட்சங்களை யளித்துக் கருணைபுரிந்தனர்.

## சண்முகப்பிரான் மீண்டு கதிர்காமகிரி அடைதல்.

* கந்தமலையில் எழுந்தருளியிருந்த சண்முகக்கடவுள் தெய்வயானை யம்மையார் வள்ளிநாயகியார் என்னுந் தேவியர் இருவருக்குங் கதிர்காமத்தின் பெருமையை எடுத்தோதி, அத்தலம் தமக்கு மிகவும் உவந்ததாதலையும் விளம்பினார். அம்மையார் இருவரும் "சுவாமி! யாங்களும் அத்தலத்தைக்கண்டு அங்கு வசிக்க விரும்புகிறோம்; ஆதலால், தேவரீர் எங்களோடு அங்கே எழுந்தருள இசைதல் வேண்டும்" என்றனர். சுப்பிரமணிக்கடவுள் அதுவே எமக்கும் விருப்பமாகும் என்று மகிழ்ந்து அத்தேவிமார் இருவரோடும் தேவர் வீரர் பூதர் முனிவர் முதலானவர்களோடும் புறப்பட்டு வழிக்கொண்டு தேவகிரியை அடைந்து, பின் பல தலங்களையுங் கடந்து சமுத்திர தீரத்தை யடைந்து, மரக்கலத்தில் பிரயாணஞ் செய்தலில் விருப்புடையவராய் ஒரு திருவிளையாட்டாக விசுவகன்மனை நோக்கி, நாம் அனைவரும் ஏறி இக்கடலைக்கடந்து செல்வதற்கு ஏற்ற ஒரு மரக்கலத்தை இயற்றக்கடவாய் என்றனர், விசுவகன்மனும் அக்கணமே மனத்தாற்சங்கற்பித்து மிகப்பெரியதும் அழகுடையதுமாகிய மரக்கலமொன்றை இயற்றினன். சுப்பிரமணியக்கடவுள் விளங்குகின்ற திருமுகமுடையவராய் மகிழ்வுற்று, யாவரோடும் அம்மரக்கலத்திலேறிச் சமுத்திரத்தைக் கடந்து சிங்களதேசத்தை அடைபவராய் அச்சிங்களதேசமாகிய இலங்கையின் வடபாகத்திலிருக்குங் கடற்கரையை யடைந்து அதிலிறங்கினர். காங்கேயன் இறங்கிய காரணத்தினால் அத்துறை எல்லாவுலகங்களிலும் இப்பொழுதும் காங்கேயன் துறை என்று சொல்லப்பட்டுவருகிறது.

---

* இ[illegible] கதிர்காமமும் [illegible] கந்தபுராணத்தில் இல்லை. இதின் வி[illegible]

கார்த்திகேயப்பெருமான் விசுவகன்மனை நோக்கி "இங்கே நாம் தங்குவ தற்கு இயைந்த ஓர் ஆலயத்தை இயற்றுக" என்று கூறுதலும், விசுவகன் மனும் அப்படியே ஓர் ஆலயத்தை இயற்றினான். சுப்பிரமணியக் கடவுள் அவ்வாலயத்தில் எழுந்தருளுதலும் தேவர்கள் அக்கடவுளை அங்கே பூசை செய்து வழிபட்டனர்.

பின்பு கந்தக்கடவுள் அங்கிருந்து மரக்கலமேறிக் கந்தவனத்தையடைந்து அங்கே விசுவகன்மாவினால் ஆக்கப்பட்ட அழகிய கோவிலில் எழுந்தருளியிருந்து தேவர்கள் பூசிக்க ஏற்று அருள் புரிந்து, ஞானசத்தியாகிய வேற்படை தரித்தவரும் அநகருமாகிய பெருமான் அவ்விடத்தைவிட்டு மரக்கலமேறிச்சென்று மகிமை வாய்ந்த தட்சிணகைலாசத்திலுள்ள கந்தமலை சமனாசலம் கண்டகீவடகாந்தாரம் சம்மோதகிரி (உகந்தமலை) இவை முதலான பருவத க்ஷேத்திரங்களை அடைந்து அவைகளில் இறங்கியிருந்து அங்கங்கே உலகமுய்யும்படி சில சில காலம் வைகித் தேவர்களால் வழிபடப் பெற்று, பரிவாரங்களுடன் கூடினவராய்க் கதிர்காமகிரியையடைந்து உலகமுய்யும்படி அங்குள்ள சிந்தாமணி ஆலயத்தில் வள்ளி தெய்வயானை என்னும் இருவரோடும் தேவர் முனிவர் வீரர் முதலிய எல்லாரும் போற்றிசைப்ப எந்த நாளும் எழுந்தருளியிருக்கின்றனர்.

கந்தப்பெருமான் ஏறிச் சென்ற மரக்கலம் உகந்தமலைக்கணித்தாகிய ஓரிடத்தில் நிறுத்தப்பட்டு இப்பொழுதும் சிலை வடிவமாய்க் காணப்படுகின்றது. இப்படலத்தைப் படிப்பவருக்கு மகாபாதகங்கள் நாசமடையும்; எல்லா இட்டசித்திகளும் கைகூடும்; இதனைக் கேட்போர்க்கு நினைந்தவை எல்லாங் கிடைக்கும் என்று சூதபௌராணிகர் கூறினார்.

**கதிர்காம மகிமை யுரைத்த படலம்**

**முற்றிற்று.**

## பத்தாவது
# கதிர்காம கிரி மகிமை உரைத்த படலம்.

அப்பொழுது நைமிசாரண்ணிய வாசிகளாகிய முனிவர்கள் சூதரைப் பார்த்து, "தவமுதல்வரே! கதிர்காம கிரியின் மகிமை விசித்திரமும் அற்புதமும் உள்ளது. எங்களுக்கு இன்னும் திருத்தி யுண்டாகவில்லை. மிகவும்

விரிவாய்க் கேட்கும்காதலுடையோம்; அவ்வாமே தேவரீர் விரித்துக்கூறி யருளல்வேண்டும்'' என்று வேண்டினார்கள்.

சூதபுராணிகர் இருகரங்களையுஞ்சிரமேற்கூப்பி அஞ்சலி செய்து மெய்யன்போடு அம்முனிவர்களை நோக்கிக் கூறுகின்றார்:—முனிவர்களே! நீங்கள் எல்லீரும் கதிர்காம சைலத்தின் மகிமையைக் கேட்பீராக. யாவன் கதிர்காம கிரி மகிமையைக் கேட்கின்றானோ? அவன் எல்லாப்பாவங்களினின்றும் நீங்கப்பெறுவான். இதில் சந்தேகமே இல்லை.

## கதிர்காம கிரி மான்மியங் கேட்டோர் வரலாறு.

ஆதியிலே கதிர்காம மலையின் மகிமையைத் திருக்கைலாசத்தின்கண் பரமசிவன் பார்வதி தேவியாருக்கு அருளிச்செய்தார். பின்பு விட்டுணுமூர்த்தி ஆதிசேடனுக்கும் கருடனுக்கும் உரைத்தார். பிரமதேவர் இந்திரனுக்குக் கூறினார். விநாயகர் தமது பத்தர்களாகிய கணங்களுக்கு அருளிச்செய்தார். சுப்பிரமணியர் அகத்தியருக்குபதேசித்தார். பிருங்கி நாரதருக்குக் கூறினார். மகாகாளர் பிருகுவுக்குக் கூறினார். காசிபர் கௌசிகருக்குக் கூறினார். ததீசி கண்ணுவருக்கும் புலகருக்குங் கூறினார். சைமினி குருக்ஷேத்திரவாசிகளுக்குக்கூறினார். மார்க்கண்டேயர் மற்றுமுள்ள முனிவர்களுக்குபதேசித்தார். பராசரர் வேதவியாசருக்குக் கூறினார். நந்திதேவர் சனகாதியர்க்குபதேசித்தார். வேதவியாசர் சுகருக்கும் துர்வாசருக்குங் கூறினார். இவ்வாறு பரமசிவனாலும் தேவர்களாலும் முனிவர்களாலும் உரைக்கப்பட்டுப் பாரம்பரியமாய் வந்தது இக்கதிர்காம மான்மியம். நான் இதனை உங்களுக்குக் கலைமகள் கடாட்சத்தினாலே கூறுகின்றேன்.

கைலாசம் மந்தரம் மேரு குலகிரி கந்தமாதனம் நிடதம் சந்திரகிரி சிருங்கிமலை இமயம் கதிர்காம கிரி என்னும் இவைகளெல்லாம் மகிமையினாலே தம்முள் சமமாகிய உத்தம புண்ணிய மலைகளாம். அம்மலைகளுள்ளே கதிர்காம மலை மகா உத்தமமானது. இம்மையிலே விரும்பிய போகங்களையும் மறுமையிலே வீடு பேற்றையும் அளிக்கும். ஆகையால் இத்தகுதி பொருந்திய கதிர்காம கிரிமகிமையைக் கவனமாய்க்கேளுங்கள் என்றுதாய் முனிவர்களைப்பார்த்துச் சூதர் சொல்லத்தொடங்கினார்.

பிள்ளையார் மலை வீரவாகுமலை தெய்வயானை யம்மை மலை வள்ளியம்மை மலை ஆகிய இவைகளும் பிற மலைகளுமாகிய இவற்றின் நடுவிலே சோமன் சூரியன் அக்கினி என்னும் முச்சுடர்களின் சோதிபெற்று உலகுக்கெல்லாம் பேரொளியாய் விளங்குவது கதிர்காம மலையென அறிக. சமுத்திரங்களும் மலைகளும் நதிகளும் நதங்களும் தலங்களும் மகாப்பிரளயகாலத்திலே இலயமடைந்து போகின்றன. மகாசங்காரக்கடவுளாகிய சிவபெருமான் ஒருவர் மாத்திரம் எப்படி இலயமடைவதில்லையோ அப்படியே கதிர்காமதலமும் இலயமடைவதில்லை. அம்மலைச்சிகரத்திலே மதங்கொண்ட யானைகள் பல சஞ்சரிக்கும்; பச்சை மயில்கள் பல தோகை விரித்தாடும்; நாணற்புல் வனமாய் அடர்ந்திருக்கும்; இரத்தினமயமாகிய கமலங்கள் மலர்ந்து அழகு செய்யும். இப்படிப் பலவகைச் சிறப்புடைய அ அம்மலையின் சிகரம், பாதலமுதல் ஆகாசமளவும் நீண்டு அழிவின்றிச் சராசரமனைத்தும் சூழப்பெற்று மருங்கில் உள்ள அரிபிரமாதி தேவர்களாலே பூசித்து வணங்கப்படுந் தன்மை யுடையதாய் விளங்கலால், அம்மலை நீலகண்டாகிய பரமசிவனைப்போலிருக்கும்; உயரத்தினாலும் பருமையினாலும் எல்லா மலைகளையும் விட மேன்மை பெற்றது; பலவகை இரத்தினங்களும் விளைகின்ற அம்மலை மின்னல் பொருந்திய பல கரிய மேகங்களினாலே மறைக்கப்பட்டிருத்தலால், இலக்குமி நாதனாகிய விஷ்ணுவையும் போலும். திசைகளாகிய நான்கு முகங்களும் வேதவொலியும் தாவர முதலிய சிருட்டிப்பொருள்களும் பல தீர்த்தங்களும் சகல மந்திரங்களும் மின்னல் வாய்ந்த மேகங்களாகிய உபவீதமும் மான்தோலும் தன்னகத்தே விளங்கப்பெறுதலால், வேதாவாகிய நான்முகனைப்போல விளங்கா நிற்கும். அடி முடி காணாது அரியும் அயனுந் தேடும்போது சகல லோகங்களையுங் கடந்து அப்பாற்சென்று சோதிவடிவாய்ப் பிரகாசித்த சிவனைப் போல இவ்வுலகிற் பெருஞ்சோதி வடிவாய் விளங்குவது அச்சோதிஷ்காம சைலம் எனவுணர்க. சிகரத்திலே சந்திரனையுடைமையால் உமாதேவி போல விளங்கும். உமாதேவியும் இலக்குமியும் சரசுவதியும் வசிக்கப்பெறுதலால், அவர்கள் வாழுங் கயிலை வைகுந்தம் சத்தியலோகம் என்னும் உலகங்கள் போல்வது. சித்தர்கள் வாழப்பெற்று ஒளஷதங்கள் பொருந்தப்பெறுதலினாலே, தென்றிசையில் அகத்தின் வாழும் பொதியமலைபோல அக்கினி திக்கில் சோதிஷ்காம கிரி பிரகாசிக்கும்; சமுத்திர நடுவில் இருந்து விண்ணவர் துன்பத்தை யொழித்தமையாலும் [illegible]

பயன் அளித்தமையினாலும் அது மந்தரமலையை நிகர்க்கும்; அசுரர் நுழைவதற்கரியதாயும் தேவர் வாழ்தற்குரியதாயும் பொன்போன் றிலங்குவதாயுமிருத்தலால் மேருவை நிகர்க்கும்.

அம்மலைச் சிகர நடுவில், அநேக கோடி சூரியப்பிரகாசம் பொருந்தி விளங்குஞ் சிந்தாமணி ஆலயத்தில் நவரத்தின மயமான சிங்காசனத்தில் வள்ளிநாயகி தெய்வயானை யம்மை சமேதராய் அநேக கோடி சூரியப்பிரகாசத்தோடு கதிர்காம கிரீசர் எழுந்தருளியிருக்கின்றார். அம்மலையிலே பிள்ளையாரும் அவர் கணங்களும், ஐயனாரும் அவர் கணங்களும், வீரபத்திரரும் அவர் கணங்களும், வைரவக்கடவுளும் அவர்களும், காலாக்கினி ருத்திரரும் அவர் கணங்களும், வீரவாகு தேவரும் அவர் கணங்களும், அயன் அரி அரன் சரசுவதி இலக்குமி உமை இந்திரன் இந்திராணி முப்பத்துமுக்கோடி தேவர் அட்டவசுக்கள் மருத்துவர் இருவர் நட்சத்திரங்கள் கிரகங்கள் கந்தருவர் அரம்பையர் சித்தர் சாரணர் கின்னரர் அசுரர் இயக்கர் பைசாசர் இராக்கதர் சத்த கன்னியர் சயை விசயை வசிட்டர் முற்கலர் அகத்தியர் மார்க்கண்டேயர் பராசரர் வியாசர் சுமந்து பிருங்கி மரீசி கௌதமர் ததீசி சைமினி கர்க்கர் நாரதர் காசிபர் பிருகு சுகர் கபிலர் ஆரிதர் புலகர் கௌசிகர் சனகர் முதலான யோகியர்கள் நவசித்தர்கள் ஆகிய யாவரும் எப்பொழுதும் சுப்பிரமணியப்பெருமான் ஆடுகின்ற ஆனந்த தாண்டவ தரிசனஞ்செய்து ஆனந்தக்கடலிலாழ்ந்து கசிந்துருகும் உள்ளத்தவராய் மெய்யன்போடு வசிக்கின்றார்கள். அம்மலைபோல மேன்மையுள்ள மலையொன்று உலகத்தில் வேறு எங்கும் இல்லை. அதன் மகிமையை எடுத்துச் சொல்ல ஆதிசேடனாலும் பிரம தேவனாலும் முடியாதென்றால், மனிதருள்ளே எவர் சொல்ல வல்லவர்? அம்மலை சுப்பிரமணியக் கடவுள் வடிவமாய் மங்கலமாய் விளங்காநிற்கும். தவத்தினால் இணையின்றி அது விளங்கும், முனிவர்களே! இதுவரையிலும் கதிர்காம கிரி மகிமையை எடுத்துக் கூறினோம். இனி, உலகமெங்கும் பெரும் புகழ் பெற்ற கதிர்காம நகர வைபவத்தைக் கூறுவோம். நீங்கள் பத்தியோடு கேளுங்கள் என்று சூதமுனிவர் சொல்லத்தொடங்கினார்.

## கதிர்காம நகரச்சிறப்பு.

கதிர்காம நகரம் முக்கோண வடிவமான வீதியையுடையது. அந்நகரத்தின் நடுவிலே பவளத்தூண்கள் நிறுத்திப் பொன்னால் இயற்றி இரத்தி

11

ணங்கள் இழைத்த திவ்வியமாகிய சோதி மண்டபம் ஒன்றிருக்கின்றது. அம்மண்டபத்தின் நடுவில் இந்திரநீலமணியினாற்செய்து பிரகாசமும் பேரழகும் பொருந்திய சிங்காசனத்தின் மேலே தெய்வயானையம்மையார் வள்ளியம்மையார் என்னும் இரு சத்திமாரோடு ஞானசத்திவடிவமாகிய வேற்படையைத் தாங்கிக் கிருபாசமுத்திரமாகிய கதிர்காமநாதர் விளங்குகின்றார். அச்சோதி மண்டபத்தின் எதிரிலே எல்லா இலக்கணமும் வாய்ந்த வள்ளியம்மை மண்டபம் இருக்கின்றது. அதன் அருகிலே மேன்மை பொருந்திய சமாதியோக மண்டபம் ஒன்றிருக்கின்றது. விநாயகருக்கும் பரமசிவனுக்கும் உரிய வேறு மண்டபங்களும் அங்குள்ளன. வீரவாகு முதலான வீரருக்குரிய மண்டபங்களும் இருக்கின்றன. கந்தர் ஆலயத்துக்குத் தென்றிசையிலே அந்தணர்களுக்குரிய இருக்கைகள் உள்ளன. மேற்குத்திசையிலே சைவர்களுக்குரிய சித்திர மண்டபங்கள் இருக்கின்றன. வட திசையிலே திருக்கலியாண மண்டபம் ஒன்றுளது. கோவிற்பணி செய்யும் அந்தணர்களுக்கும் உருத்திர கணிகையருக்கும் ஏனைய வருணத்தாருக்கு முரிய இருக்கைகளும் இருக்கின்றன. அடியார்களால் வீதிதோறும் அமைக்கப்பட்ட பல மண்டபங்களும் உள்ளன.

## மாணிக்க கங்கை.

கதிர்காம நகரத்திலே புண்ணிய நதியாகிய மாணிக்க கங்கை பாய்ந்துகொண்டிருக்கும். அந்நதி கிழக்குக் கடலை நோக்கிச் செல்லாநிற்கும்; சந்தனம் அகில் யானைக்கொம்பு முதலியவைகளையும் அலைக்கரங்களால் அள்ளிக்கொண்டு செல்லும். இரத்தின நிறமுள்ள பலவகை மீன்கள் அந்நதியில் வசிக்கும். தெளிந்த நீருள்ளதாய் மனமகிழ்ச்சி யளிப்பதாய் இருக்கும். அந்நதியானது சங்கு சக்கரம் கதை பதுமம் வாள் என்பவைகளைத் தரித்தலாலும் எல்லாவுயிர்களையுங்காக்கும் இயல்பினாலும் வைணவியாகிய கங்கைபோல விளங்கும். பகையின்றி வாழும் யானை முதலிய மிருகங்களையும் இனிய குரலுள்ள குயில் முதலிய பறவைகளையும் மேலான மரச்சோலைகளையும் தன்னகத்துட்கொண்ட இருகரைகளையுடையது. மிகவேகமின்றி மெல்லெனச்செல்லும் இயல்பினது. அயன் மால் அரன் என்னும் மும்மூர்த்திகளும் அவரவர் தேவிமாருடனும் பதினெண்கணங்களுடனும் அந்நதி தீரத்தில் வாசஞ் செய்கின்றனர். பாண்டிநாடு சேரநாடு சோழநாடு கொங்கணதேசம் மாளவதேசம் குடகு பப்பரம் தெலுங்கு வங்

கும் கலிங்கம் என்னும் தேசங்களிலும் வேறு தேசங்களிலும் இருந்து நான்மறை வேதியர் முதலானோர் தங்கள் தங்கள் மனைவிமாரோடு வந்து கதிர்காம தலத்தில் வசித்து இப்புண்ணிய நதியில் நியமமாய் முழுகி நித்திய கன்ம முடித்து காமேசன் என்னும் பெயருள்ள அந்தப் பெருமானை வணங்கித் துதித்துப் பல விரதங்களை அனுட்டித்துக்கொண்டு இட்டசித்திகளை இப்பொழுதும் பெற்றுவருகின்றனர். சண்முகக்கடவுளின் மகிமையினுலே இந்த மாணிக்க கங்கையிலே மூழ்கித் தலவாசமும் மூர்த்தி தரிசனமுஞ் செய்தவர் விரும்பிய பேறுகளெல்லாம் பெற்று ஆனந்தமாய் வாழ்ந்துகொண்டிருப்பர். ஆதலால் இத்தலத்துக்கு நிகரான தலம் உலகத்தில் வேறில்லை யென்று சூதமுனிவர் கூறினர்.

அப்பொழுது நைமிசாரண்ணிய முனிவர்கள் சூதரை நோக்கி இத்தலத்தில் வந்து அவ்விதம் மூர்த்தி தல தீர்த்த விசேடத்தால் திருவருள் பெற்றுய்ந்த தொண்டர்கள் சரித்திரத்தையும் அறிய விரும்புகின்றோம். அதனைச் சொல்லியருளவேண்டும் என்று கேட்டார்கள். சூதர் மகிழ்ச்சியடைந்து, முனிவர்காள்! இத்தலமகிமையை விளக்கும் புராண சரிதையை உங்களுக்குச் சொல்வேன். அதனைக் கேட்பதால் எல்லாத் தீவினைகளும் ஒழிந்து பெரும் புண்ணியமுண்டாகும் என்று சொல்லலுற்றனர்.

## அபகீர்த்தி முத்தி பெற்றமை.

சோழமண்டலத்திலே திருவாஞ்சியம் என்னும் நகரத்திலே அந்தணர் குலத்திலே பிறந்த அபகீர்த்தி என்பவன் ஒருவன் உளன். அவன் தன் குலத்திற்குரிய ஒழுக்கந் தவறித் தீயொழுக்கமுடையவனாகிப் பிறர் மனைவியரை நயத்தல் பிறர் பொருளைக் கவர்தல் பெரியோரை நிந்தித்தல் பொய் சொல்லல் கொலை செய்தல் கட்குடித்தல் என்பவைகளைச் செய்பவனாகி அகங்காரங்கொண்டு திரிந்து சேரமகாராசனுடைய நட்பைப் பெற்று அந்நாட்டுக் குடிகளைத் துன்பப்படுத்தி வந்தான். அன்றி, அரசனுக்குக் குருவாயும் மந்திரியாயுமிருக்கும் பேற்றையும் பெற்றுக்கொண்டான். அவன் குடிகளுக்குச் செய்த பெருங்கொடுமைகள் எவராலும் பொறுத்தற்கரியனவாய் இருந்தன. அதனால் அக்குடிகள் யாவருந் துன்பப்பட்டு அரசனுடைய அரமனைவாசலை யடைந்து தம் வரவைத் தெரிவித்து ஆஞ்ஞை பெற்று அரச சபையை யடைந்து அரசனை வணங்கி, "எந்தாய்! அமைச்சனாய் வந்த தீயோனாகிய அபகீர்த்தி செய்கிற கொடுஞ்செயல்களி

னாலே நாங்கள் எல்லாம் இந்நாடு நகரங்களை விட்டு அயல் நாட்டுக்குப்போகும் எண்ணங்கொண்டோம்; அவன் செய்யுங் கொடுமைகளைப் பொறுக்கமுடியாதவர்களாய் இருக்கின்றோம்'' என்று ஓலமிட்டார்கள்.

அது கேட்டு அரசன் கோபத்தினாற் கண் சிவந்து தூதரைப்பார்த்துக் கொடும் பாவியாகிய அபகீர்த்தி என்பவனை இப்பொழுதே நம் நாடுநகரங்களில் இருக்கவொட்டாமல் வெளியே துரத்திவிடுங்கள் என்று கட்டளையிட்டான். தூதர்கள் விரைந்து சென்று அவனைப் பிடித்துக் கொண்டு போய் அந்நாட்டின் எல்லைக்கப்பால் துரத்திவிட்டனர், அவ்வாறு துரத்தப்பட்ட அபகீர்த்தி சேரநாடு கடந்து மரக்கலமேறிக் கடல் கடந்து சேதுமத்தியிலிருக்கும் மாதோட்ட நகரை அடைந்தான் அவன் பின் அங்குள்ள திருக்கேதீச்சரத்தில் வாசஞ் செய்துகொண்டு மறையவர் வேடத்தினை மாற்றி வணிகர் வேடங்கொண்டு அரிசி பஞ்சு எள் எண்ணெய் முதலிய பண்டங்களை விற்று வியாபாரஞ்செய்துவந்தான். அதனால் அவனுக்குப் பொருள் வந்து சேரவும், அம்மூடன் மதுபானஞ் செய்து வெறிகொண்டு பெருந்திரவியங்களையும் ஆடை ஆபரணங்களையும் பரத்தையர்களுக்குக்கொடுத்து மையல் வலையில் அகப்பட்டுத் திரிந்தான். பின் கைப்பொருள் குறைந்து வறுமை தலைப்படுதலும், விலை மாதர் அவனை வெறுத்துக் கைவிட்டார்கள். அபகீர்த்தி அவ்விலைமாதர் ஆடைகளையும் ஆபரணங்களையும் திரவியங்களையும் களவுசெய்தும், பிரமகத்தி முதலிய பாவங்களைச் செய்தும் அலைந்து திரிந்தான். பின் அந்தத் திருக்கேதீச்சரத்தினின்றும் அகன்று காட்டை யடைந்து பசியினாலுந் தாகத்தினாலும் வருந்தி யலைந்து முடிவில் வேதாகமங்களினாலும் புராணேதிகாசங்களினாலும் போற்றித் துதிக்கப்படுந் தெட்சிணகைலாசமாகிய திருக்கோணமலையை அடைந்தான். யாவரேயாயினும் மனத்தில் எண்ணினாலும் கண்டாலும் வசித்தாலும் இறந்தாலும் அவர்கள் செய்த பாவங்களையெல்லாம் நீக்கிவிடும் மகிமை பெற்றது அத்தலம் என்றறிக.

அங்கே முன் செய்த நல்வினையினாலே ஆலயத்தை யடைந்து அபூருவமாகக் கோணேச தரிசனங் கிடைக்கப்பெற்று அக்கோவிலின் பக்கத்திலுள்ள ஓர் இடத்திலிருந்துகொண்டு பிச்சை யெடுத்து உண்டு வயிறு வளர்த்துவந்தான். அக்கொடிய பாதகன் ஒரு நாள் அருகிலுள்ள புலைச்சேரியிற் சென்று, பிச்சை யெடுத்துண்டு, மது மாமிசங்களையும் உண்

இளமைப் பருவம் உள்ள ஒரு மங்கையைக் கண்டு காமுற்றுத்தன்னை மணஞ்செய்துகொள்ளும்படி கேட்டான். அவள் உடன்படாமல் மறுத்துவிட்டாள். அவன் பின்னும் பலமுறை வேண்டினான்; அவள் சிறிதும் உடன்படவில்லை; பல தந்திரோபாயங்கள் செய்தான். அதன்பின் அவள் இரங்கி அபகீர்த்தியைப்பார்த்து "வணிகனே! நான் புலையர் குலத்திற் பிறந்து வளர்ந்து மணஞ் செய்து வாழ்ந்து பின் என் காதல் நாயகனை யிழந்து கவலையுடன் பிறரை விரும்பாமல் இருக்கின்றேன். நீயோ ஆடாதது செய்யத் துணிந்தனை; ஆயினும் ஒன்று கேள்: உயிர் நீங்குமளவும் நேசமாய் விட்டுப் பிரியேன் என்று கோணேசர் சந்நிதியிலே சத்தியஞ்செய்துதரல்வேண்டும்; அப்படிச் செய்வாயாகில், உன் விருப்பப்படி இணங்குவேன்" என்றாள். அபகீர்த்தி அவளைப்பார்த்து, "பெண்ணே! உன் தந்தை தாயர் யாவர்? அவர் எங்குளர்?" என்று வினவினான். அதற்கு அவள்: "வேங்கடகிரிக்கு அயலிலுள்ள ஓரூரில் இயங்கன் என்னும் புலையன் ஒருவன் இருந்தான்; அவனே என் தந்தை; என் தாய் சிங்காரகீர்த்தி யென்பவள்; அவள் தன் கணவனிடத்து மிக்க அன்புள்ளவள்; அவளுடைய வயிற்றில் நான் பிறந்தேன்; என் பெயர் விடகுமாரி" யென்றாள். அவன் அவைகளைக்கேட்டுக் களிகூர்ந்து கோணேசர் சந்நிதியில் அவளோடு போய் அவளுடைய கையைத் தொட்டு "பெண்ணே! நான் உயிர்போமளவும் உன்னை விட்டகலேன் உன்மேலாணை. இது சத்தியம். என் சொல்லை உறுதி என நம்பு" என்று ஆணையிட்டான்.

பின், இருவரும் மனமகிழ்ந்து புலைச்சேரியிலுள்ள தம் மனையையடைந்து கூடிக்களித்து இணைபிரியாமல் சுகமாய் வாழ்ந்தார்கள். சிலகாலஞ் சென்றபின், அவர்களுக்கு ஒருபுதல்வனும் இருபுத்திரிகளும் பிறந்தார்கள். அவர்கள் இளமைப்பருவம் அடைந்தபின் புலையர்மரபில் அவர்களுக்கு மணஞ் செய்வித்தான். பின், அக்கொடியோனாகிய அபகீர்த்தி மனைவியைக் கொன்று, தன் புதல்வியர்களையும் மருமகளையும் பெண்டாளத்தொடங்க, அதைக் கண்டு அவன் மகன் தன் தகப்பனாகிய அபகீர்த்தியை அடித்து வீட்டை விட்டுத் துரத்தினான். அவ்வபகீர்த்தி அங்கிருந்து புறப்பட்டுப் பல திசைகளிலுஞ் சுற்றித் திரியும்போது கதிர்காமத்துக்குப் போகும் பிராமணர் முதலானவரோடு கூடி அவர்களுக்குச் சுமைதூக்கிக்கொண்டு முன் செய்த நல்ல தவப்பயனால் மகா தலமாகிய கதிர்

காமத்தை யடைந்தான். அங்கே சிறிது நல்லுணர்ச்சி தோன்றி அத்தல த்தின் மேன்மையை யுணர்ந்து மகிழ்ச்சி கொண்டு புண்ணியவடிவமாகிய மாணிக்க கங்கையிலே தீர்த்தமாடிக் கதிர்காமநாதருடைய திருக்கோயிலே அடைந்து சுவாமி தரிசனஞ்செய்து துதித்துக்கொண்டு அத்தலத்தினது தென் திசையிலே படுத்துக்கொண்டான். அங்கே அவனுக்குச் சுரநோய் உண்டாயிற்று. ஏழு நாள் சுரநோயினாலே பீடிக்கப்பட்டான். பின், அவ ன் எட்டாநாள் மரணம் அடைந்தான்.

பின்பு, யமதூதர் பாசம் வாள் முதலிய படைகளைக் கையில் ஏந்தி னவர்களாய்ப் பற்களை நெறுநெறெனக் கடித்துக்கொண்டு கோபத்தோடு எதிரில் வந்து அவனைப் பிடித்துப் பாசங்களினாலே இறுக்கிக் கட்டினார் கள். அப்பொழுது வீரவாகுதேவரால் அனுப்பப்பட்ட குகதூதர்கள் பல படைக்கலங்களை ஏந்தி விரைவாக வந்து யமதூதரை உறுக்கி, அவர்கள் கட்டிய பாசத்தை அறுத்து, இத்தல மகிமையினாலே இவன் செய்த பாவ ங்கள் ஒழிந்தன; இவனைக் கந்தலோகத்துக்குக் கொண்டு செல்லுவோம் என்றுரைத்து அழகிய ஒரு விமானத்தில் ஏற்றிக்கொண்டு சென்றார்கள். யமதூதர் குகதூதரோடு எதிர்த்து அவரைத் தடுத்து "பிறந்தநாள் முத லாக அளவில்லாத மகாபாதகங்களைச் செய்தவனும் தீய செயலுடையவ னும் நரகத்தை யடையவேண்டியவனுமாகிய இவனை எங்கள் பாசத்தினி ன்று விடுவித்து நீங்கள் கொண்டுபோவது என்ன காரணம்? இவனை விட் டுவிட வேண்டும்; கொண்டு செல்லவிடோம்; உங்களுக்கு நாம் அஞ்சோம்; எங்கள் செயலிலே குற்றம் வரமாட்டாது" என்றார்கள். அவர் உரை த்த மொழிகளைக் கேட்டுக் குகதூதர் தம்மிற்றாழ்ந்தவருக்கும் அறிவீனரு க்கும் தருமத்தைப் போதிப்பவன் எவனோ அவன் பாம்புக்குப் பால் வார் த்தவன் அடையுங் கதியை யடைவான்; ஆதலினால் உங்களுக்கு நியாயஞ் சொல்வது நீதியன்று என்று சொல்லிச் சினங்கொண்டு கண்கள் சிவந்து தங்களில் ஒரு தூதனை அனுப்பிச் சித்திரகுப்தரை அழைத்துவரும்படி செய்து அவரை நோக்கி அபகீர்த்தி என்னும் இவ்வேதியன் செய்த புண் ணிய பாவங்களை எங்கள் முன்னே விரிவாய் எடுத்துக் கூறும் என்றார் கள். சித்திரகுப்தர் குகதூதரைப்பார்த்து இவன் பிறந்தநாள் முதல் எண் ணில்லாத கொடும் பாவங்களையே செய்திருக்கின்றான். இவன் செய்த புண்ணியப்பகுதியில் ஒன்றேனும் எங்கள் கணக்கில் எழுதப்படவில்லை என்றனர். குகதூதர் அதுகேட்டு நகைத்து நீங்கள் இவன் செய்த புண்

ணியத்தை எழுதாமல் பாவத்தை மட்டும் எழுதிக்கொண்டீர்கள்; மிகவும் நன்று! நும் செயல் மிக வியக்கத்தக்கதேயாம்! மார்க்கண்டேயர் சுவேதகேது சிலாதனர் முதலானவர்களுடைய நிகழ்ச்சியைத் தூர்ப்புத்தியுடைய நீங்கள் அறிந்திலீர் போலும்! அக்காலத்து யமனுக்கு நேர்ந்த அவமானத்தையும் மறந்தீரோ? அறிவில்லாதவர்களே! இவ்வந்தணனுடைய புண்ணியத்தைப் புகலுகின்றோம் கேளுங்கள்: சுப்பிரமணிய மூர்த்திக்கு எப்பொழுதும் உவந்த வாசஸ்தானமாயும் பிரளயகாலத்தும் அழியாததாயும் உள்ள கதிர்காமதலத்தின் எல்லையில் வாசஞ் செய்த புண்ணியவசத்தினாலும், மாணிக்க கங்கா தீர்த்தத்தில் முழுகிய மகிமையினாலும், கதிர்காம நாதரைத் தரிசித்து வணங்கித் துதித்தமையினாலும், இக்கதிர்காமதலத்தில் இறந்தமையினாலும் இவ்வபகீர்த்தியென்னும் வேதியன் தன் பாவங்கள் நீங்கி விஞ்ஞானமுடையவனாகிக் கந்தலோகத்தை யடையும் பேற்றையுமுடையனாயினன். புண்ணியமுடையவனேயாயினும் பாவியேயாயினும் இத்தலத்தில் உயிர் நீங்கப்பெற்றால் அவன் கந்தலோகத்தையடைவான். இதில் சிறிதும் ஐயமில்லை என்னும் மறைமொழியை நீவிர் அறிந்திலீர் போலும்! இவன் செய்த பாவங்களெல்லாம் பெரு நெருப்பிலகப்பட்ட பஞ்சுப்பொதிபோல இவன் செய்த இப்புண்ணியங்களால் அழிந்து போயின என்றனர். அவ்வுரை கேட்ட யமதூதர் அவனைப் பற்றுங்கருத்தைவிட்டு மீண்டு இருப்பிடஞ் சென்றனர். குகதூதர் அம்மறையவனை விமானத்துடன் கொண்டுசென்று கந்தலோகத்திற் சேர்ந்தார்கள். அவன் கதிர்காம தல மகிமையால் அக்கொடும்பாவங்களினின்று நீங்கிச் சுத்தனாகி அக்கந்தலோகத்திலுள்ள கணங்களில் ஒருவனாய் நெடுங்காலங் கந்தமூர்த்தியின் சாமீப பதவியைப்பெற்று வாழ்ந்து முடிவில் கந்தசுவாமியின் கருணையினாலே நித்தியானந்தவாழ்வாகிய பரமுத்தியையும் அடைந்தான் என்பதையச் சூதமுனிவர் நைமிசாரண்ணியவாசிகளுக்குக் கூறினார்.

## கதிர்காமகிரி மகிமை யுரைத்த படலம்

முற்றிற்று.

## பதினொராவது

# கதிர்காம தல விசேடப் படலம்.

### வேட்டுவக் கள்வர் முத்தி பெற்றமை.

நைமிசாரண்ணிய முனிவர்கள் சூதரை வணங்கி, கற்கதாமிர்தத்தை உண்ணும் எங்களுக்கு இன்னும் ஆசை அதிகமாகின்றது; திருப்தி யுண்டாகவில்லை; ஆதலால் ஓ சுவாமீ! இன்னமும் சோதிஷ்காம மகிமையை அடியேங்களுக்கு அருளிச்செய்தல்வேண்டும் என்று கேட்டனர், உடனே சூதமுனிவர் மனமகிழ்ந்து சொல்கின்றார்:—

முன்னொரு துவாபரயுகத்திலே சிங்களதேசத்திலே சூரிய வமிசத்திலே சிங்கபூபாலன் என்னும் அரசன் அத்தேசத்தைப் பரிபாலனஞ்செய்து கொண்டிருந்தான். அவன் புத்திமானானபடியால் தன் தேசத்தில் வாழுங்குடிகள் யாவரையும் அன்போடு அரசாண்டு தன் புதல்வரைப்போல வைத்துப் பாதுகாத்துவந்தான். அக்காலத்திலே வேடர் குலத்திற் பிறந்தவரும் எவர்க்குந் துன்பஞ்செய்பவருமான கள்வர் பலர் ஊர்கடோறும் ஒவ்வொரு நாளும் போய்த் திரவியங்களையும் தானியங்களையும் ஆடை ஆபரணங்களையும் கொள்ளை யடித்தும் வழிச்செல்லும் அந்தணர் முதலானவரை ஆயுதங்களினாலே வெட்டிக் கொள்ளை யடித்துத் துன்பப்படுத்தியும் மகா கொடியவர்களாய்த் திரிந்தனர்.

மநு நெறி தவறாது அரசாளும் சிங்கபூபாலன் பொல்லாக்கள்வர் செய்யுந் தீமையைக் கேள்விப்பட்டு அடங்காச் சீற்றங்கொண்டு அவர்களைத் தேடிப்பிடித்து வரும்படி உத்திரவு செய்தான். அக்கள்வர் அதனை யறிந்து பயந்து ஓடி இருளடர்ந்த ஒரு பெருங்காட்டில் நுழைந்து மலைக்குகையில் ஒளித்திருந்தனர். அப்படி யிருந்துகொண்டு காலி நகரத்திற் போய்ப் பல திரவியங்களையுங் கொள்ளையிட்டார்கள்; பின் கதிர்காமதலத்துக்குச் செல்லும்படி யாத்திரையாய் அவ்வழி வந்த பெண்கள் பலரைக்கண்டு மோகங்கொண்டு அவர்களைப் பிடிக்கும்படி பின் தொடர்ந்தனர்.

மாதர்கள் கள்வர் செயலைக்கண்டு நடுங்கி மனந்தடுமாறி அச்சத்தோடு மலைப்பக்கமாய் ஓடி யொளித்தனர். கள்வர் அம்மாதரைத் துரத்திக்

கொண்டு பின்னே சென்றனர். மாதர் விரைந்தோடிக் கதிர்காம தலத்தை யடைந்தனர். அடைந்து கந்த மூர்த்தியைத்துதித்து இக்கள்வர் கையில் அகப்படாமல் எங்களைக் காத்தருளல் வேண்டுமென்று ஓலமிட்டனர். கதிர்காமநாதர் அப்பெண்கள்மேல் இரங்கித் தமதருளால் அக்கள்வர் கையிலகப்படாமலிருக்கும்படி காத்தருளினூர். கதிர்காமதலத்தின் மகிமையால் கள்வர் அத்தலத்தினுள்ளே செல்ல முடியாமல் அதன் எல்லைப்புறத்திற் சமீபத்திலுள்ள வேறொரு மலையில் வசித்திருந்தனர், சில காலஞ் சென்றபின் அக்கள்வர் மரணமடைந்தனர். அப்பொழுது யமதூதர் விகாரவடிவத்தோடு அக்கள்வருயிரைக் கவர்ந்து போகும்படி வந்தனர்.

கதிர்காமநாதர் கருணை மேற்கொண்டு வீரவாகுவை நோக்கி, நமது கதிர்காமத்தின் அயலிலுள்ள மலையிலே மரிக்கும் பேறுபெற்ற அக்கள்வர் உயிரை யமதூதர் கொண்டு செல்லாவண்ணந்தடுத்து, நமது கந்தலோகத்தையடைவிக்கும்படி நமது தூதரை விடுப்பாயாகவென்று கட்டளையிட்டனர். அக்கட்டளைப்படி வீரவாகு ஸ்ரீகதூதரிற் சிலரை யனுப்ப, அவர்கள் அவ்விடம் வந்து யமதூதரை யெதிர்த்து முசலம் வாள் கதை சூலமுதலிய படைகளினாலே தாக்கிப் பின்னிட்டோடும்படி செய்து அவ்வேட்டுவக்கள் வருயிரைச் சூரியனைப்போலப் பிரகாசிக்கும் அழகிய விமானங்களில் ஏற்றி யழைத்துக்கொண்டு கந்தலோகஞ் சென்றனர். பின் அக்குக தூதரால் அடித்துத் துரத்தப்பட்ட யமதூதர் உடம்பெல்லாம் புண்ணாய் இரத்த வெள்ளம் ஆறாய்ப் பெருக வருந்தி யமதருமனிடம் போய் "அண்ணலே! எங்கள் தொழிற்பெருமை மிக நன்றாயிருக்கின்றது! குக தூதர் எங்களை மிகத் துன்பப்படுத்தி அடித்துத் துரத்திவிட்டனர்" என்று தங்கள் துன்பத்தைக் கூறி முறையிட்டனர். அதைக் கேட்ட சூரியகுமாரனை யமதருமன் நகைத்து அவரை நன்றாய்ப் பார்த்து ஆலோசனை செய்து விரைந்து கந்தமூர்த்தியிடஞ் சென்று மகிமை பெற்ற அக்கடவுளை வணங்கி, "மேன்மை பொருந்தியவரும் வேதங்களால் அறியக்கூடாதவரும் சாந்தரும் சோதிசொரூபரும் ஆதிதேவரும் சருவலோக நாயகரும் படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களைச் செய்பவரும் ஆகிய உமக்கு நமஸ்காரம்; சுந்தரப்பெருமானே! என்னைக் காத்தருளல் வேண்டும்; கருணை செய்து எனது விஞ்ஞாபனத்தைக் கேட்டருளவேண்டும்:

வேட்டுவராகிய கொடியோர் சிலர் பிறந்தநாள் முதல் மரணமடையுமளவும் களவு செய்தும் கொள்ளை யிட்டும் பிரமகத்திசெய்தும் வேறு பல

12

பாவங்கள் புரிந்தும் திரிந்தனர்; அவர்களிடத்தே புண்ணியம் எள்ளளவு மில்லை; அப்பெரும் பாதகர் மரித்தபொழுது எனது தூதர் அங்கேபோய் யாவரையும் பாசத்தாற் கட்டி இழுத்துக் கொண்டு வருங்கால், குகதூதர் வந்து என் தூதரை யடித்துப் பாசக்கட்டை யறுத்து விடுவித்து அவரை இங்கே கொண்டுவந்தனர்; இது முறையாமோ!'' என்று ஓலமிட்டனன். முருகக்கடவுள் புன்முறுவல் செய்து "தருமராசனே! நீ புகன்றவையெல்லாம் வாய்மையே; ஆயினும் ஒன்று கூறுதும்; அதைக் கேள்: உலகத்திலே செல்வமிகுதியினாலே சிலர் அகந்தை கொண்டு அறிவில்லாதவராவர்; நீயும் அவ்வாறே மதங்கொண்டு இவ்வாறு கூறினை! முன்னே மார்க்கண்டேயர் முதலிய சிவனடியாரை அவர் செய்த புண்ணியத்தை யறியாமல் வருத்திப் பின் தண்டனை யடைந்தாய்! அறிவில்லாதவனே! இப்பொழுதும் அவ்வாறே செய்ய முயன்றாய்! ஆயினும் மிக இரங்கி உன் பிழையைப் பொறுத்தனம்'' என்றார்.

தருமராசன் கந்தமூர்த்தியை வணங்கி "எம்பெருமானே! பாவிகளினாலே கதிர்காம தலம் எப்படித் தரிசிக்கப்படும்? அப்பாவிகள் எவ்வாறு முத்தியடைவர்? அதனை யருளிச்செய்ய வேண்டும் என்றனன். சுவாமி அவனை நோக்கி "தருமராசனே! கேள்: அக்கள்வர் மாதர் மோகத்திற் சிக்குண்டு கதிர்காம தலம் வந்து அங்கே மரித்தமையால் அவர்களுடைய மூவகைப்பாவங்களும் ஒழிந்துபோயின; எனதருளுக்கும் அவர் இடமாயினர்; அதனால் முத்தியும் பெற்றனர். அறிவிலாய்! இதுமுதல் நாம் சொல்லுமாறு நடக்குதி; யாவராயினும் தம் வாழ்நாளினிடையே கதிர்காமத்துக்கு எப்பொழுதாயினும் வரினும், எம்மைத் தரிசிக்கினும், எம்மை நினைக்கினும், கனவிலேனும் எம்மைக்காணினும், கதிர்காமதலத்தில் மரிக்கினும், அவரைக் கிட்டியும் பாராது ஒழிகுதி. அத்தன்மையோர் பெரும் புண்ணியம் பெறுதலால், எனது கந்தலோகத்தில் வாழ்தற்கே யுரியவராவர். ஆதலால், விரைவாக உனது யமபுரம் போகுதி'' என்று ஆஞ்ஞாபித்தார். அப்பொழுது யமதருமன் கோபத்தோடு அப்படியே செய்கின்றேனென்று சொல்லி வணங்கிக் கொண்டு புறப்படுதலும், விநாயகர் நந்திதேவர் வீரவாகு மாசாத்தன் வீரபத்திரர் மகாகாளன் முதலாயினோர் யமதருமன் கந்தசுவாமிக்குமுன் உரைத்த கோபமொழிகளைக்கேட்டுச் சீற்றங்கொண்டு, இவனைப் பிடி அடி கட்டு வெட்டு குத்து என்று சொல்லிச் சூழ்

ந்து பாசத்தாற் கட்டி முசல முதலிய படைகளால் நன்ருக அடித்துத்துன் பஞ்செய்தனர். யமதருமன் ஒவ்வோரடிக்கும் வருந்திச் "சுவாமீ! என் பிழையைப் பொறுத்தருளுக; கிருபாசமுத்திரமே! அறிவில்லாது தேவரீ ருடைய சந்நிதியில் இவ்வாறுரைத்தேன், என்பால் கிருபை செய்தருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தான். அக்கடவுள் இரங்கி அவனை விட்டு விடும்படி கூற, அவர்களும் அவ்வாறே விட்டுத்துரத்தினர். பின் எவருங் காணுமல் ஒளித்தோடினுன். ஓடும்பொழுது வழியிலே தன் தூதரைக் கண்டு "நாம் முருகக்கடவுளுடைய மகிமையைச் சிந்தியாமல் இன்று செய்த செயலால் பெரும் பழி பாவங்களை யடைந்தோம்; இனி அத்தலத்தி ல் எவர் வசித்தனரோ, எவர் மரித்தனரோ, அவருக்கு அருகிலும் நாம் அணுகலாகாது; இவ்வாணை கடந்து செல்லின், நமது அரசும் இழந்து உயிர் நீங்கவும் வரும்" என்று சொல்லிக்கொண்டு அத்தூதரோடு தனது யமபுரத்தை யடைந்தான்.

அந்த நாள் முதல் அத்தலத்தில் வசித்த புண்ணியமாந்தருகே யம தூதர் செல்வதே யில்லை. இஃது உண்மையாம்! என்று சூதமுனிவர் உரைத்தனர். நைமிசாரணியமுனிவர் உணர்ந்தமுற்று இத்தல மகிமை கேட்கக்கேட்க அமையாமல் இன்னுங் கேட்கும் அவா மிகுதலால் மற்று ள்ளவைகளையுஞ் சொல்லியருளவேண்டும் என்றனர். சூதமுனிவரும் மகி ழ்ந்து சொல்லுகின்ருர்.

## பாவதீபன் அருள் பெற்றமை.

சிங்கள தேசத்திலே குளக்கோட்டு மகாராசன் நீதி தவருமல் அரசா ண்டு வரும் நாளில் அவனுக்குப் பாவதீபன் என்ெருரு மைந்தன் பிறந்தா ன். அவ்விராசகுமாரன் இளமைப்பருவமடைந்தபின் கோபதீபன் என் னும் மந்திரி குமாரனேடு கூடித் தூர்த்தனுய்த்திரிந்தான். அவன் தன் குலப்பெருமையை எண்ணுன்; நீதி முறை யோரான்; அரசுரிமை நாடா ன்; தருமம் இதுவென்று உன்னுன், அடாத செயலே செய்து திரிந்தா ன். அவன் கற்புடை மகளிரைக்கிட்டி அவர் கற்பை யழிக்க முயன்றான் அதனுல் அந்நகரவாசிகள் துன்பமடைந்து நீதி தவருமல் அரசாண்டுவருங் குளக்கோட்டு மன்னனது ஆளுகையில் இவ்வகை அநீதியும் வா நேர்ந்த தேயென்று கவலை கொண்டு, அரசன்பாற் சென்று யாவற்றையுங் கூறி

முறையிட்டனர். அரசன் புத்திரவாஞ்சையால் ஒன்றையும் யோசியாமல் நீதி தவறிச் சினங்கொண்டு யாவரையும் பிடித்துச் சிறைப்படுத்தினான்.

அப்பொழுது அவன் அருகிலிருந்த மந்திரி அரசனை வணங்கி "அண்ணலே! நீ குடிகளைக் காக்குங் கடமையுடையவன் அன்றோ? இப்பொழுது முறை தவறி இவ்வாறு செய்தல் நீதியாகுமோ? ஆலோசனை யின்றி எதனையுஞ் செய்யலாகாதே! மன்னன் ஒருபாற் கோடின் உலகம் எவ்வாறு நடைபெறும்? நீயே இவ்வாறு செய்தால் இக்குடிகள் இனி யாரிடஞ் சென்று முறையிடுவர்? இதனை நன்றாக ஆலோசனை செய்யக்கடவாய்" என்றனன். அம்மந்திரியின் வார்த்தையைக்கேட்ட அரசன் ஓ மந்திரீ! எனக்கு அருமையாக ஒரே மைந்தனுளன்; அவன்மேல் இவர் யாவரும் பெருங்குற்றத்தைக் கற்பித்தனர். இவர் கற்பித்த குற்றத்துக்கு ஏற்ற தண்டனையை நான் இவர்க்குச்செய்தேன் என்றான். மந்திரி பின்னும் அரசனுக்குப் பலவிதமான நற்புத்திகளையும் நீதியையும் எடுத்தோதி இனியவார்த்தை சொல்லி இரந்து கேட்டு அவர்களைச் சிறைச்சாலையினின்று விடுவித்தான். பின் அவர்கள் நாம் இனி இங்கே வாழுதல் தகுதி யன்றெனவெண்ணி அந்நகரை விட்டுப் புறப்பட்டுக் கதிர்காம நகரத்தையடைந்தனர்.

அப்பொழுது மூர்க்கனான அப்பர்வதீபன் நடந்த வரலாறுகளையெல்லாம் கேள்வியுற்றுத் தன் சேனைகளோடு மந்திரி குமாரனையும் அழைத்துக்கொண்டு அம்மகளிரை நச்சிக் கதிர்காம நகரஞ் செல்ல வெண்ணிப் புறப்பட்டான். புறப்பட்டுப்போகும்பொழுது இடைவழியிலே புற்றடர்ந்த ஒரு பெருங்காட்டில் அவனுடைய சேனைகளிற் சிலரை அரவந் தீண்ட அதனையும் பாராமல் எஞ்சிய சேனைகளோடு சென்று கதிர்காம நகரத்தையடைந்தான். அக்கொடியோன் வரவைக்கண்ட உத்தம மகளிர் நடுங்கி ஆலயத்தினுள்ளே புகுந்து அக்கடவுளைச் சரணடைந்தனர்.

பாவதீபன் கதிர்காமதலத்தில் மிதித்தவுடனே தன் பொல்லாக்குணங்களெல்லாம் நீங்கப்பெற்று நல்ல சித்தமுள்ளவனாய்க் கதிர்காமநாதரைத் தரிசிக்கவேண்டு மென்னுங் காதல் கொண்டு மந்திரி குமாரனோடு திருக்கோவிலை யடைந்து கந்தமூர்த்தியைக் கண்களாரக்கண்டான். கண்டவுடனே நெஞ்சங்கசிந்துருக உரோமஞ் சிலிர்ப்ப ஆனந்தவருவி பொழிய மெய்யன்போடு வழிபட்டுத் தோத்திரங்கள் பாடி அத்தலமகிமையைப்புகழ்ந்து

பின் சேனைகளோடு மீண்டு தன் நகரத்தை யடைந்தான். அங்கே நற்குண நல்லொழுக்கங்களோடு சில காலம் வாழ்ந்து பின் முடிவு காலம் வர உயிர் துறந்தான். அவனுயிரைக் கவர்ந்து செல்லும்படி நமன் தூதர்கள் வருதலும், குகதூதர் வந்து அவர்களைத் துரத்தி அவனைத் தம் விமானத்தின்மேல் ஏற்றி யழைத்துக்கொண்டு போய்க் கந்தலோகத்திற் சேர்த்தனர். பொல்லாக் குணங்கள் பல படைத்தவராயினும் இத்தலத்தை யடைந்தால் அக்குணங்களெல்லாம் நீங்கப்பெற்று நல்லவராய்க் கந்தமூர்த்திக்கு ஆளாகி, எங்கே சென்று வாழினும், எங்கே சென்று மரிக்கினும், கந்தலோகத்தை யடைவார் என்பதை இதனால் அறியக்கடவீர். முனிவர்களே! இக்கதிர்காம மகிமையை எடுத்துச் சொல்ல வல்லவர் யாவர் என்று சூத முனிவர் கூறினர்.

## தேவர் கலி வலி வென்றமை.

பெருந்தவமுடையீர்! செவிகளுக்கு அமிருதம் பொழிவதை யொத்த இனிய கதை யொன்றைச் சொல்லுகிறேன். முன்னொரு காலத்தில் பிரமன் முதலான தேவர் யாவரும் கைலைமலையை யடைந்து சிவபெருமானை வணங்கி ஒரு விண்ணப்பஞ்செய்வாராயினர்.

தேவாதிதேவரே! லோகநாயகரே! படைத்தல் முதலிய முத்தொழில்களையும் புரியும் பதிப்பொருளே! கிருதயுகம் திரேதாயுகம் துவாபரயுகம் என்னும் மூன்று யுகங்களிலும் மூவுலகங்களிலும் வாசஞ்செய்திருக்கின்றோம். இப்பொழுது முன்னே மனைவியும் பின்னே சுமை சுமந்துகொண்டு பெற்ற தாயும் வர இவ்வுலகத்திலே கலிராசன் வந்துவிட்டான்; பிருதிவி வீரியமற்று ஔஷதி பலமில்லாததா யிருக்கின்றது. நீசர் பெருமை பெற்று விளங்குகின்றனர். அரசர் குடிகளது பொருளைப் பறித்தலிலேயே எப்பொழுதுங் கருத்தாயிருக்கின்றனர். பிராமணர் தமக்குரிய கருமத்தை யிழந்து விபரீத கருமங்களைச் செய்பவராயிருக்கிறார்கள்; மனையாள் தன் கணவன்மேல் மிக வைரங்கொண்ட சித்தமுள்ளவளாய் இருக்கிறாள்; மைந்தர் பிதாவை நிந்திப்பவராயினர். இப்படிப் பலவிதமான மாறுபாடு கொண்டு விளங்கும் இக்கலியுகத்திலே தருமம் காடுபோய் ஒளித்துவிட்டது. ஆதலால், இனி நாங்கள் எங்கே செல்லக் கடவோம்; இக்கலியிலே நாங்கள் கலி வலியிலகப்படாது தப்பி வாழத்தக்க நல்ல ஒரு புண்ணியதலத்தை வகுத்தருளல் வேண்டும் என்று இரந்து கேட்டனர்.

அவரது வேண்டுகோளைக் கேட்ட சிவபெருமான் தேவர்களே! எம பிரிய குமாரனாகிய சுப்பிரமணிய மூர்த்திக்கு உரிய தலங்கள் பலவிருக்கின்றன. அவற்றுள் மிக உத்தமமானதும், அவன் எப்பொழுதும் விட்டு நீங்காமல் வசிக்கப்பெற்றதும், அவனுக்கு மிக உவப்புடையதுமான கதிர்காமம் என்னும் மலையொன்று இருக்கின்றது. அம்மலையின் பக்கத்திலே மிக்க இன்பத்தை விளைவிப்பதும், கதிர்காமம் என யாவராலும் புகழப்படுவதும், எமக்கும் மிகப்பிரியமானதுமான தலம் ஒன்றிருக்கின்றது; கலி மன்னனும் நோய்களும் யமனும் அத்தலத்தையடைவதில்லை; அங்கு வசிப்போரைப் பாவங்கள் சென்றடையா; வசிக்கப் பெறுவோர் பெரும் புண்ணியமுடையோர். ஆதலால், நீங்கள் யாவரும் அங்கே சென்று முனிவர்களோடு சுகமாய் வாசஞ்செய்யக்கடவீர் என்று அருளிச்செய்தார்

பிரமன் முதலான தேவர் சிவபெருமானுடைய திருவாக்கைக்கேட்டு, மகிழ்ந்து கதிர்காமததை யடைந்து அங்கே சுகமாய் வசித்துக் கொண்டு கலி வலியிலகப்படாதிருக்கின்றனர்.

## வணிகர் தனம் பெற்றமை.

மதுராபுரியிலே வணிகர் குலதிலகன் ஒருவன் மனைவி மைந்தர் நட்பினர் என்பவரோடு கூடிச் சிறப்புற்று வாழ்ந்து அளவில்லாத தனம் தானியமுதலிய செல்வங்களையும் உடையவனாயிருந்தான். அவன் வாணிகத்தினாலே பெரும்பொருள் ஈட்டிப் பலவகை இரத்தினங்களையுந்தேடி நெடுங்காலம் சுகமாக வாழ்ந்து, முதுமைப் பருவம் வந்தகாலத்துச் சிவபத்தி விசேடத்தினால் சிவலோகமடைந்தான்.

அவ்வணிகனுக்கு இரண்டு புத்திரரும் மூன்று புத்திரிகளும் இருந்தனர்; அவருள் ஒருவன் பெயர் அளகேசன்; மற்றொருவன் பெயர் சந்திரமான், புதல்வியர் மூவரும் முறையே நாகவல்லி ஏமவல்லி இரத்தினவல்லி யென்னும் பெயருடையோர். தந்தையை யிழந்து வாழும் அவர்களுடைய செல்வத்தைக்கண்ட கள்வர் சிலர் ஒரு நாள் இரவிலே மனையுட்புகுந்து எல்லாப்பொருள்களையுங் கொள்ளையிட்டுச்சென்றனர். மறுநாள் உதயத்தில் அப்புதல்வரிருவரும் அரசன்பாற்சென்று தம் பொருள் கொள்ளைபோன செயல்களைப் பெருங்கவலையோடு சொல்லி முறையிட்டனர். அரசன் அக்கள்வரைத்தேடியும் பயன்படாதொழிந்தது. அதனால் அவ்விரு

ரும் பெருங்கவலையோடு அங்கயற்கண்ணி பங்கராகிய சோமசுந்தரக் கடவுளுடைய சந்நிதியையடைந்து தம் மனத்துன்பத்தை யோதி முறையிட்டனர். கிருபைக்கடலும் உலகம் உய்தற்பொருட்டுப் பல திருவிளையாடல்களைச் செய்தவருமான சோமசுந்தரக்கடவுள் அவர்மேல் இரங்கிப் புன்முறுவல் செய்து, அவருக்குக் காட்சி கொடுத்து, வணிக புத்திரரே! சிங்களம் என்னும் புண்ணியதேசத்திலே கதிர்காமம் என்றொரு தலம் இருக்கின்றது. உலகத்திலுள்ள தலங்களெல்லாவற்றினும் அஃது உத்தமமானது. சகல வேதங்களாலுந் துதிசெய்யப்பெற்றது. அங்கே எமது குமாரனாகிய சுப்பிரமணியன் மிகுந்த களிப்போடு எப்பொழுதும் விட்டு நீங்காமல் வாசஞ்செய்துகொண்டிருக்கிறான். நீங்கள் அங்கே சென்று அவனைத் தரிசித்து உங்கள் குறைகளை முறையிடுவீராகில், அக்கணமே அவன் உமது விருப்பப்படி அருள்புரிவான் என்று அருளிச்செய்தார்.

வணிக மைந்தர் அப்பெருமானுடைய திருவாக்கைக் கேட்டு மனத்துயர நீங்கி மதுரையை விட்டுப் புறப்பட்டுப் பெருமகிழ்ச்சியோடு மரக்கலம் ஏறிக் கடலைக்கடந்து சிங்களதேசத்தையடைந்து கதிர்காமதலத்திற்போய் ஆடிமாச மகோற்சவகாலத்தில் இரதாரூடராய்க் கதிர்காமநாதர் வீதியில் எழுந்தருளி வரக் கண்டு நிலமுற விழுந்து வணங்கித் தோத்திரஞ் செய்து பிறவித்துன்பத்துக்கு மூலமான சகல பாவங்களையும் விட்டு நீங்கி அக்கடவுளது அநுக்கிரகத்தினாலே சகல ஐசுவரியங்களையும் பலவகை இரத்தினங்களையும் பெற்றுக்கொண்டதுமன்றி மெய்ஞ்ஞானத்தையும் பெற்றனர்.

அவ்வாறு இருமைச்செல்வமும் பெற்ற அவர் அங்குநின்றும் புறப்பட்டுக் கடல் கடந்து மதுராபுரியை யடைந்து தம்மைச் சார்ந்தவரோடும் சுகமாய் வாழ்ந்திருந்தனர். கதிர்காமநாதரது திருவருளால் இம்மைக்கு வேண்டிய செல்வமும், மறுமைக்கு வேண்டிய ஞானமும் அவர்களுக்கு ஒருங்கே கிடைத்தன என்று பின்னும் சூதமுனிவர் சொல்கிறார்

## மாதர் அருள் பெற்றமை.

யூகபுரத்திலே உள்ள பெண் ஒருத்தி வியபிசார முதலிய தீயொழுக்கமுடையவளாய் எங்குந்திரிந்து முன்செய்த புண்ணியவசத்தினாலே கதிர்காம தலத்தை யடைந்தாள். அங்கே மாணிக்ககங்கையிலே ஆடிக் கதிர்காமநாதர் சந்நிதியையடைந்து சுவாமி தரிசனஞ்செய்து தான் அதுவரையி

லே செய்த பாவங்களை நினைந்து கவலை கொண்டு பலவாறு தோத்திரஞ் செய்து, எம்பெருமானே! தேவரீரை வணங்கப்பெற்ற புண்ணியத்தினால் அடியேன் அறியாமையினாலே செய்த சகல பாவங்களும் நீங்கும்படி திருவருள் பாலிக்கவேண்டும். தேவரீருக்கு அடைக்கலம்! அடைக்கலம்!! என்று கண்ணீர் வார்ந்து தேம்பித் தேம்பி யழுது வேண்டினாள். கதிர்காம நாதர் அவள்மேல் இரங்கிச் சகல பாவங்களையுந் தீர்த்து ஞானத்தையு மருளினார். அவள் அந்த ஞானம் பெற்று நிட்டை கூடி முத்தியடைந்தாள்.

இன்னும், புத்தளத்திலுள்ள ஒரு கன்னியும், நிகும்பலாபுரத்திலுள்ள சில மாதரும் கதிர்காமத்தை யடைந்து காமேசரை வழிபட்டு அவரருளால் ஞானம் பெற்று முத்தியடைந்தனர்.

பாவம் புரிந்தோராயினும் புண்ணியஞ்செய்தோராயினும் கதிர்காம தலத்துக்கு வந்தால், அப்பொழுதே போகமோட்சங்களைப் பெறுகின்றனர். எவர் கதிர்காமத்தை நினைந்து புறப்பட்டுக் கதிரைநாயகரை மறவாமல் விநாயகமலையை யடைந்து நியமத்தோடு கணேச தீர்த்தத்தில் ஆடி, நித்திய கரும முடித்துக்கொண்டு விநாயகக்கடவுளைப் பதினாறுவித உபசாரத்தோடு பூசித்து விடைபெற்று அன்போடு கதிர்காம நாதரைச் சிந்தித்துக்கொண்டு கதிர்காம மலையை யடைந்து நவகங்காதீர்த்தத்தில் முழுகிச் சுவாமி சந்நிதியை யடைந்து அம்மலையின்மேலுள்ள சிந்தாமணி யாலயத்தில் வீற்றிருக்கும் அக்கடவுளை வழிபட்டுத் துதிக்கின்றனரோ அவர் இவ்வுலகில் நெடுங்காலம் சுகமாக வாழ்ந்து முடிவில் நித்தியானந்த முத்தியையும் அடைவர். எவர் நவகங்காதீர்த்தத்திலே ஆடிக் கதிர்காமகிரீசரை வணங்கி இயன்ற பொருளை அந்தணருக்குத் தானஞ்செய்வாரோ, அவர் எல்லாப்போகங்களையும் நுகர்ந்து பின் கந்தலோகத்தையும் அடைவார். எவர் மாணிக்கசங்கையில் மூழ்கிக் கதிர்காமதலத்தில் எம்பெருமானைத் தரிசித்து வழிபடுவரோ, அவர் போகமோட்சங்களைத் தப்பாது பெறுவர். எவர் இப்புராண கதையை எப்பொழுதும் அன்போடு ஓதுவாரோ, அல்லது கேட்பாரோ, அவர் விரும்பிய பேறெல்லாம் பெற்றுச் சிவன்முத்தராவர் என்றிவ்வாறு சூதமுனிவர் அருளிச்செய்தனர்.

## கதிர்காம தல விசேடப்படலம்

முற்றிற்று.

முதற்காண்ட முற்றிற்று.

உ

சிவமயம்.

# தட்சிண கைலாச புராணம்.

## இரண்டாங் காண்டம்.

### பன்னிரண்டாவது

## சப்பிரகாம மகிமை உரைத்த படலம்.

முனிவர் வினவுதல்.

நைமிசாரண்ணிய வாசிகளாகிய முனிவர்கள் சூதபுராணிகரைப்பார்த்துப் பெரிய முனிவரே! எந்தக் கதையைக் கேட்பதால் ஞானம் உண்டாகுமோ? பாவங்கள் ஒழியுமோ? அப்படியான மகிமை பொருந்திய சப்பிரகாமத்தின் மான்மியத்தை எங்களுக்குக் கூறியருளல் வேண்டும் என்பதாய்க் கேட்டார்கள்.

சூதமுனிவர் சொல்வது:—

சூதர் ஆனந்த பரவசராய் உரோமங்கள் புளகங்கொள்ளவும் கண்ணீர் சொரியவும் நாவினின்றும் குழறுபடையாய் வருகின்ற சொற்களினாலே அக்கதையைக் கூறத்தொடங்கினர். முனிவர்களே! மங்களமாகிய நல்ல புராண சரித்திரங்களைக் கேட்பதில் விருப்பமுள்ள உங்களால் நல்ல கதை நன்கு கேட்கப்பட்டது; இப்பொழுது சப்பிரகாம புராணத்தைக் கூறுகிறோம் கேளுங்கள்.

முற்காலத்திலே தசரத குமாரனாகிய இராமபிரான் போர்க்களத்தில் அரக்கர்களுக்கரசனாகிய இராவணனைச் சங்காரஞ் செய்துவிட்டு, இலக்குமணனோடும் சீதாதேவியாரோடும் ஆஞ்சநேயரோடும் வானர சேனை சூழப் பெற்றவராய் மனக்களிப்புடன் வேடர் வசிக்குங் காட்டின்கண் வந்துசேர்ந்தனர். அக்காட்டின்கண்ணே வேடர்கள் இராம பிரானைக் கண்டு போர்

13

செய்ததனாலுண்டாகிய களைப்பு நீங்கும்படி கந்தமூலபலங்களைக் கொடுத்து அவரை யுபசரித்தார்கள். அப்பொழுது இராமபிரானும் வேடர்களை நோக்கி, "ஓ வேடர்களே! நீங்கள் நமக்கு மிகவும் உபசாரஞ்செய்தீர்! நாம் உங்களுக்கு யாது செய்தல் வேண்டும்?" என்று கேட்டார். இவ்விதமாய் இராமன் கேட்டபோது வேடர்கள் சொல்கின்றார்:—தேவேசா! கருணையங்கடலே! இரகு குலத்திற் பிறந்தோய்! தேவரீர் அடியேங்களைப் பாதுகாத்துக்கொண்டு இவ்விடத்திலேயே வாசஞ்செய்தல் வேண்டும்; அதுவே எங்களுக்குச் செய்யவேண்டிய கைம்மாறாகும் என்று வேடர்கள் பிரார்த்தித்தார்கள். இவ்விதம் வேடர்கள் வேண்டவும், இராமபிரான் மனச்சந்தோஷத்துடன் வேடர்களுக்குத் தம்முடைய பாணம் ஒன்றைக் கொடுத்துச் சொல்கின்றார்: நம்மாற் கொடுக்கப்பட்ட இப்பாணமானது நமது வடிவமானது; நமக்கு மிகவும் பிரியமானது, அன்பு பொருந்திய மனத்தினாலே உங்களால் இப்பாணமானது தாபித்துப் பூசை செய்து வழிபாடு செய்யத்தக்கது. அரசர் கள்வர் காட்டமுல் இவைகளால் எக்காலமும் பயமுண்டாகாது என்று சொல்லி இரகு குலத்திற் பிறந்த இராமன் வேடர்களிடங் கொடுத்துவிட்டு, அந்தக் காட்டில் இருக்கும் பரமசிவனைக் குகனோடு வணங்கித் துதித்துப் பின்பு கவேலமலையை அடைந்தார். அங்கே கணப்பொழுது தங்கி யிருந்து, அதன்பின் சமனமலையை யடைந்தனர். அங்கே பாதாங்கிதம் வணங்கித் திரிகோணமலைக்குச் சென்றார்.

சப்பிரகாமத்தில் இராமபிரான் தன் பெயரால் இராமலிங்கம் என்று ஒரு சிவலிங்கந் தாபித்து வணங்கினார். சப்பிரகாமதலம் மனிதர்க்கு எல்லாப் பாவங்களையும் அழிக்கும்; நினைத்தவைகளை யெல்லாங் கொடுக்கும்; ஆயுளையும் ஆரோக்கியத்தையும் பெருக்கும்; அச்சப்பிரகாமதலத்தையடைந்து இராமலக்குமணர்களை அன்போடு வணங்கிப் பூசிப்பவன் இம்மையில் விரும்பிய பொருள்களையெல்லாம் அனுபவித்து மறுமையில் வைகுண்டத்தையும் அடைவான்.

வாயு புத்திரனாகிய அனுமானை வணக்கஞ்செய்து வடை நிவேதனஞ் செய்பவன் எல்லாப் பீடைகளும் நீங்கினவனாகி, விரும்பிய பொருள்களை யெல்லாம் அடைவான் என்று சூதர் கூறினார்.

## சப்பிரகாம மகிமை யுரைத்த படலம்

முற்றிற்று.

## பதின்மூன்றாவது

# அநுராசபுர மகிமை உரைத்த படலம்

சூதமுனிவர் கூறுகின்றார்:—

முனிவர்களே! இப்பொழுது உங்களுக்கு அநுராசபுர மகிமையைச் சொல்லுகின்றோம் கேளுங்கள். முன் ஒரு காலத்திலே வங்க தேசத்திலே சிங்கவாகு என்னும் பெயர் கொண்ட அரசன் ஒருவன் இருந்தான். அவ்வரசனுக்கு மூன்று குமாரர் பிறந்தனர். விசயன் சுமித்தனன் பந்துவாசன் என்று அம்மூவருக்கும் பெயர் வழங்கும். அம்மூவரும் பிரதாபமும் பெலமுமுடையவர்கள். அம்மூவருள் விசயன் என்பவன் துட்டர்களோடு சேர்ந்து, எப்போதும் நல்லோருக்குத் துன்பஞ் செய்து அதிக மூடனாயிருந்தான். இச்செயலை வங்கதேச ராசன் கேள்விப்பட்டுப் பரிவாரங்களோடு கப்பலில் ஏற்றி விசயனைத் துரத்திவிட்டான். எந்தத்தேசத்துக்கேயாயினும் நமது தேசத்தினின்றும் ஓடிப்போவாய் என்று பிதாவினால் துரத்தப்பட்ட விசயகுமாரன் மனக்கவலையும் ஆலோசனையுமுடையவனாய் இலங்காபுரியில் சேது மத்தியிலிருக்கும் புத்தளம் என்னும் பெயருள்ள சமுத்திரக்கரையை அடைந்து அதில் இறங்கியிருந்து அந்தவிடத்தில் தம்பன் என்னும் பட்டணத்தை யுண்டாக்கி அதில் ஒரு கோட்டையையும் கட்டுவித்தான்.

பின்பு, விசயராசன் குவேனி என்னும் செல்வக் குமாரத்தியை விவாகஞ்செய்து அவளிடம் இரண்டு புத்திரர் பிறக்க மனமகிழ்ந்து அப்புத்திரர் இருவரும் அரசுக்குரிய இலக்கணமில்லாமலிருத்தலை யுணர்ந்து மனவருத்தங்கொண்டு பாண்டியனது குமாரத்தியை விவாகஞ்செய்துகொண்டான். அவளிடம் புத்திரப்பேறில்லாமலிருந்தது; அரசன் அவள் மலடியாயிருத்தலை யுணர்ந்து கவலைப்பட்டு நான் மரணமடைந்தால் இராச்சியம் அரசனில்லாததாய் இருக்குமேயென எண்ணித் தன் தம்பியை வரும்படியாகத் தன் வங்கதேசத்துக்கு ஓலை யனுப்பினான்.

இப்படி யிருந்தகாலத்தில் வங்கதேசத்தில் இவன் பிதாவாகிய சிங்கவாகு இறந்துபோனான். உடனே இவனுக்குத் தம்பியாகிய சமிந்தனன்

விரைவாய் அரசனுகி இராச்சியபாரம் வகித்து அரசாண்டுவந்தான். விசய ன் அனுப்பிய ஓலையைச் சமிந்தனன் படித்துப்பார்த்து மனக்களிப்படை ந்து தன் தம்பி பந்துவாசனை அனுப்பிவைத்தான். இதன்மத்தியில் வியா தி வசப்பட்டு விசயன் மரணமடைந்தான். அரசன் மரணமடையவும் உப நீசன் என்னும் மந்திரி இராச்சிய பாரம் வகித்து அரசபரிபாலனஞ் செய் துவந்தான். மந்திரியினுலே பரிபாலிக்கப்பட்டுவருகின்ற அரசைத் தான் கைப்பற்றிக்கொண்டு பந்துவாசன் சனங்களுக்கு மகிழ்ச்சி செய்து பரிபா லித்துவந்தான். அவன் தான் விவாகஞ்செய்வதற்காகப் பாண்டியராசனு க்குத் திருமுகம் அனுப்பி விவாகம் பேசி முடிவு செய்து விரைவில் பாண் டிய ராசன் கன்னிகையை மனைவியாய்க்கொண்டு அவ்விடத்தில் அவனு டன் வாழ்ந்திருந்தான். அவனைக் காணும்படி சியாலனும் தம்பன் நகாஞ் சென்று ஒருவர்க்கொருவர் சுகம் வினவிப் பின் சியாலனேடு சில காலம் வசித்துக்கொண்டிருந்தான்.

அவ்விடத்தில் ஒரு நகரத்தை யுண்டாக்க விரும்பி இங்கும் அங்கும் தேடிப் பார்த்து நகரம் அமைத்தற்கு நல்ல இடம் காணப்படாமையினுலே இராச குமாரன் பெருந் துக்கமடைந்து அடிக்கடி சிவாலயங்கள் எங்கும் போய்ச் சிவனை வணங்கித் துதித்து வழிபட்டு அதிக பத்தியுடையவனுய் இடைவிடாது சிவத்தியானஞ்செய்து சிவாலயத்திலேயே நித்திரை செய்ப வனுயினன். முனிவர்களே! இப்படி யிருக்குநாளில் ஒருநாள் நித்திரையி லிருக்கும் அரசனிடத்தில் முனிவர் வேடங்கொண்டு சென்று கருணையங் கடலாகிய சிவபெருமான் சொல்கின்றூர்;—ஓ அரசனே! நீ இடங் காா ணமாகத் துக்கமடையாதே; அபயம் என்னும் பெயருள்ள பெரிய தீர்த்த மும் வெள்ளரசமரமும் எந்த இடத்தில் இருக்கின்றனவோ? அந்த இட த்தில் சுயம்புவாகிய சிவலிங்கம் இருக்கின்றது. அரசனே! அந்தவிடத்தி ல் நீ எப்பொழுதும் வாசஞ்செய்; அவ்விடம் வெற்றி மிகுதற்குக்காரண மாகும் என்று கருணையங்கடலாகிய பகவான் அருளிச்செய்து மறைந்த னர்; அரசன் விரைவாய் நித்திரைவிட்டெழுந்து சொப்பனத்தில் கண்ட வற்றை நினைந்து சிவனைப் பலவாறு துதித்து வணங்கி விரைந்து அவ்வி டத்திற் சென்று ஒரு நகரத்தை இலக்கணம் பொருந்தியதாய்ச் சிற்ப சாத் திர விதிப்படி கட்டி முடித்து நல்ல தினத்தில் நல்ல இலக்கினத்தில் சாந் தி சம்புரோக்ஷணமுதலானவைகள் வேதங்களைக் கரை கண்ட பிராமணர் களைக்கொண்டு செய்து முடித்தான். அதற்கு அநுராதபுரம் என்று பெய

௧

ரும் இட்டான். அது முதல் அந்த நகரம் உலகத்தில் அனுராதபுரம் என்று பெயர் வழங்குவதாயிற்று. அந்தச் சிவாலயமானது விதிப்படி கட்டப்பட்ட பிராகாரத்தோடு கூடியது; உயரமாகிய கோபுர முதலானவைகளோடும், நன்மை வாய்ந்த மண்டபங்களோடும், பரிவாரதேவர்களோடும் அமைக்கப்பட்டது. அரசன் சுவாமிக்கு அநுராசபுரேசர் என்றும், அம்பிகைக்கு விஜயாம்பிகை என்றும் நாமஞ் சூட்டினான்.

இன்னும், அவ்வரசன் சுவாமிக்கு நித்திய பூசைக்கும் நைமித்திக பூசைக்கும் கிராமங்களும் விளைநிலங்களும் திரவியமும் ஏற்படுத்தி வைத்துப் பிராமணர்களால் நித்திய நைமித்திக பூசைகளை விதிப்படி நடத்தி வந்தான். சிவபூசை மகிமையினால் அவ்வரசன் அதிக தருமசிந்தனை யுள்ளவனாய், தானே பட்டாபிஷேகஞ் செய்து அந்த நகரத்தை அரசாட்சி புரிந்து வந்தான்.

ஒரு மனிதன் தன் வாழ்நாளில் மனத்தை யடக்கிப் பரிசுத்தனாகி, அபயமென்னும் பெயருடைய மகா தீர்த்தத்தில் விதி தவறாமல் ஸ்நானஞ் செய்வானேல், அவனும் சோமவார அமாவாசையில் வெள்ளரசப்பிரதட்சிணமும் பிரதோஷ சிவராத்திரியில் உபவாசமிருந்து புலன் அடக்கி நியமத்தோடு சிவதரிசனமுஞ்செய்பவனும் உடனே சுகமுடையவனாய் மனைவி மக்கள் தனம் என்னும் இவைகளை யுடையவர்களாய் இம்மையில் சுகத்துடன் வாழ்ந்து, முடிவில் சுவர்க்கத்தை யடைந்து இந்திர செல்வத்தில் முழுகிப் பின் பரமுத்தியையும் பெறுவர் என்று நைமிசாரண்ணியவாசிகளுக்குச் சூதமுனிவர் சொல்லியருளினார்.

அநுராச புர மகிமை யுரைத்த படலம்
முற்றிற்று.

---

பதினொன்காவது

## வாரிவனலிங்க மகிமை உரைத்த படலம்

சூத முனிவர் சொல்வது:— இனி வாரிவனேச லிங்கப் பெருமையை விளம்புகின்றோம்; ஆதரவுடன் கேட்பீராக. முற்காலத்தில் சோழ வளநாட்டிலே மிகவும் புகழ்படைத்த திருவாஞ்சியப்பதியிலே வைசிய குலத்தி

லே விருபாக்கன் என்பவன் ஒருவன் இருந்தான். அவன் சிவபத்திமானு யும், சிவபூசாதுரந்தரனுயும், அந்தணர்களுக்கும் முனிவர்களுக்கும் சந்நியா சிகளுக்கும் எப்பொழுதும் பிரியஞ்செய்பவனுயும் இருந்தான். அவன் மே ற்சொன்ன அந்தணர் முதலியோர்களுக்குத் தனம் தானியம் இரத்தினம் வஸ்திரம் ஆபரணம் என்பவைகளை நாடோம் தானங் கொடுத்து வருவான் சிவபெருமான் ஒரு நாள் அவனது பத்தியைச் சோதிக்கும்படி மறையவர் வேடந் தரித்து அவ்விருபாக்கன் சமீபத்தை யடைந்தார்

அவ்விருபாக்கன் அந்தணரை எதிர்கொண்டழைத்து நல்வரவு கூறி, ஆசனத்தில் இருத்தி அருக்கிய பாத்தியங்களினுலே விதிப்படி பூசித்துப் பல முறை நமஸ்காரஞ்செய்து கை கட்டி வாய் புதைத்து அவர் முனபு நின்முன். அந்தணர்: வணிகர்களுட் சிறந்தோய்! மகா பாக்கியசாலியே! அடியார்க்கு நன்மை செய்யும் விருப்பமுடையோய்! உன் புகழை அநேக மாய்க் கேள்விப்பட்டுத் தரித்திரனுகிய யான் இங்கே வந்தேன்; எனக்கோ வீடு இல்லை; பொருள் இல்லை; வஸ்திரம் இல்லை; வேறு யாதொன்றுமே இல்லை, என் மனைவி மக்கள் முதலானவரோ மூன்று நாளாய்ப் பட்டினி கிடக்கிறார்கள். ஆகையினுலே வீடு முதலானவைகளை எல்லாம் எனக்குத் தரல் வேண்டும். தருவாயேல், சுகமுண்டாம்; தாராயேல், மரண முண்டா கும். இது திண்ணம் என்றிவ்வாறு பிராமணோத்தமர் சொன்னுர்.

மறையவர் சொன்ன இச்சொல்லைச் செவ்வையாய் அதிபத்திமானு கிய விருபாக்கன் கேட்டு, வீட்டையும் விளைநிலத்தையும் பொருளையும் தா னியத்தையும் மறையவருக்கு மிகவும் பிரியத்தோடு தத்தஞ்செய்து கொடு த்தான். அந்தணர் களிப்புடன் யாவற்றையுந் தாண்ம் வாங்கிக் கொண்டு மறைந்துவிட்டனர். பின் விருபாக்கன் அந்தணரைக்கண்டிலன்; மறை யவர் வேடங்கொண்டு சம்புவே இங்கு வந்தவர் என்று நினைத்துச் சந்தோ ஷமான சித்தமுடையவனுய் விருபாக்கன் பலவாறு கடவுளைத் தோத்திர ஞ்செய்து, தேவதன்னியன் யான் என்று சிந்தித்து, பின் அவ்வணிகோ த்தமன் தன் மனைவி விசாலாட்சியைக் கூப்பிட்டு, வீடு முதலிய எல்லாப் பொருள்களும் என்னுல் உத்தமனுகிய வேதியனுக்குத் தானங்கொடுக்கப்ப ட்டுவிட்டன, ஆதலினுல் நீயும் இவைகளையெல்லாம் நீக்கிவிடுக; அவ்வா று செய்யாவிட்டால் பாவஞ் சம்பவிக்கும் என்று சொல்லவும், அம்மாது சிரோமணியும் நாயகன் சொன்னவற்றைக் கேட்டு வீடு முதலானவைகளை

நீக்கிவிட்டு வெறுமையாய் நின்றாள். அந்த மனைவி விசாலாட்சியோடும் விருபாக்கன் கடற்கரையை அடைந்து வேதாரண்ணியேசுவரனை வணங்கிக்கொண்டு கப்பலில் ஏறிக் கடல் கடந்து காங்கேயன் துறையை யடைந்து யாழ்ப்பாணத்தில் வந்து சேர்ந்து வாசஞ் செய்துகொண்டிருந்தான். அங்கு சில காலம் வசித்துப் பின் அதனருகில் இருக்கும் கொடிகாமத்துக்குப்போய் அவ்விடத்தில் நிலையாய்க் குடியிருந்தான்.

விருபாக்கன் சீவனஞ்செய்து உயிர் வாழ்தற்குத் தன் சாதித் தருமமாகிய வியாபாரத் தொழிலைச் செய்ய முயற்சி கொண்டு எந்த வகையான வியாபாரத்தொழிலைச் செய்யலாமென்று ஆலோசனை செய்தான். கொடிகாமத்தில் பசுவின்பால் அதிகம் விருத்தியாகி யிருத்தலையும், பசுக்கள் ஏராளமாய் இருத்தலையும் உணர்ந்து நான் பால் வியாபாரஞ்செய்து சீவித்தலே தக்கது; அதுவும் இவ்விடத்திற் செய்வதே மிகப்பொருத்தமானது என்பதாய் மனதில் திட்டஞ்செய்துகொண்டு அதனால் மனத் திருத்தியையும் அடைந்து அவ்விருபாக்கன் ஒருநாள் பால் வாங்கி ஒரு குடத்தில் நிறைத்து அப்பாற்குடத்தைத் தன் தலைமேல் வைத்துச் சுமந்துகொண்டு கடைவீதியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும்பொழுது இடைவழியில் பாற்குடம் தவறி விழுந்து உடைந்துவிட்டது. அவன் திரும்பிவந்து மறுபடியும் பால் வாங்கிக் குடத்தில் நிறைத்துச் சுமந்து சென்றான். இரண்டாவது முறையும் அக்குடம் முன்போல உடைந்துபோய்விட்டது. அது கண்டு, அவன் மனக்கவலை கொண்டு ஆ! ஆ! இஃது என்ன ஆச்சரியம்! என்று அந்த இடத்தைக்கவனித்தான்.

## விருபாக்கனுக்குச் சிவலிங்கந் தரிசனமாதல்.

விருபாக்கவணிகன் பாற்குடங்கள் விழுந்து கட்டப்பட்ட அந்த இடத்தில் நாற்புறங்களையும் கவனமாய்ப்பார்த்த சமயத்தில் மகானுபாவனாய்ப் பகவானாய்ப் பிரபுவாய் விளங்கும் பரம்பொருள் சகளம் நிஷ்களம் சகளநிஷ்களம் என்னும் மூவகை வடிவங்களுள் ஒன்றாய் உள்ள சகள நிஷ்களவடிவமாகிய சிவலிங்கத்திருமேனியாய்ச் சிவஞானச்செல்வம் பொருந்திய பக்குவியாகிய அவ்வணிகனுக்குக் கொடிகளின் மத்தியில் விளங்கித்தோன்றினார். பேறிவுடைய அவ்விருபாக்கன் சிவலிங்க வடிவத் தரிசனமானவுடன் தன்னறிவு மயங்கி மூர்ச்சையாகிப் பின்பு பரம்பொருளின் திருவரு

னினால் சிறிது நல்லறிவு விளங்கித்தோன்றவும், எழுந்து நின்று கண்களி னின்றும் ஆனந்த வெள்ளம் பெருக மேலாகிய தோத்திரங்களினாலே ஈச னைத் துதிப்பானாயினான்.

ஐந்தெழுத்தாயினார்க்கு வணக்கம், அம்பிகை பாகர்க்கு வணக்கம், அடியார் வினைந்தவை யளிப்பவர்க்கு வணக்கம், ஆதி நடு வந்தமிலா வருவ ருக்கு வணக்கம், அருஞ் சிவலிங்க வடிவாயினார்க்கு வணக்கம்.

குணமாயினார்க்கு வணக்கம், குணியாயினார்க்கு வணக்கம், வானவடி வர்க்கு வணக்கம், அரவப்பூணூலணிந்தவர்க்கு வணக்கம், அருஞ்சிவலிங்க வடிவாயினார்க்கு வணக்கம்.

கபாலந் தரித்தவருக்கு வணக்கம், கட்வாங்க அபய கரத்தினர்க்கு வணக்கம், சைவல்லியந் தருவார்க்கு வணக்கம், தேவலிங்க வடிவாயினார்க் கு வணக்கம்

என்று சொல்லித் தோத்திரஞ்செய்து சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்தான். அவன் அந்த நாள் தொடக்கம் பரமசிவனுக்குப் பாலபிடேகஞ் செய்து வருவானாயினன்.

## வாரிவன லிங்கம் மழை வெள்ளத்தில் மறைந்தமை.

விருபாக்கன் இவ்விதம் நாடோறும் நியமமாய் அன்போடு பால் அபி டேகஞ் செய்துவருங்காலத்தில் ஒருநாள் பரமசிவன் விருபாக்கனுடைய பத்தியைச் சோதித்து உலகத்தாருக்கு அறிவிக்க வெண்ணிக் கற்பமுடிவு காலத்தில் உண்டாகும் பிரளயம் போல மழை அதிகம் பெய்யும்படி செய் தார். இருண்டெழுந்து மின்னி முழங்கி மழை அதிகம் பெய்தமையினா லே வெள்ளம் பெருகி ஐந்து குரோசம் வரையில் மூடியிருந்தது. இப்ப டியிருத்தலை விருபாக்கனுணர்ந்து மிகவுந் துக்கமடைந்து மனத்தில் அவ ன் எண்ணியது என்னவெனில்,—நான் வழக்கமாய்ச் செய்து வரும் பால பிடேக சிவபூசை நடைபெறாவிட்டால் இறந்து விடுதல் வேண்டும் என்ப தேயாகும். அவன் இவ்விதமாய் எண்ணிக்கொண்டு பத்துத் திக்கையுஞ் சுற்றிப் பார்த்தான்.

## வைரவ சூலம் வெள்ளம் வற்றச் செய்தமை.

அச்சமயத்தில் கருணையங்கடலாயும் பக்தர்களுக்கு அனுக்கிரகஞ்செ ய்வதில் விருப்பமுள்ளவராயும் இருக்கின்ற மகாதேவர் மகிழ்வோடு வைர

னரைப்பார்த்துச் சொல்கின்றார்:—ஓ வைரவா! கேள். நமது க்ஷேத்திரம் வெள்ளத்தினால் மூடப்பட்டுளது, நமது அன்பனோ மிகவுந் துக்கமடைந் திருக்கிறான்; நமது பூசை செய்யப்படாவிட்டால் அவ்வன்பன் உடனே தன்னுயிரை விட்டுவிடுவான்; ஆதலினால் நீ விரைந்து சென்று தண்ணீர் வற்றுதற்குச் சூலப்படையை ஏவி நீரை வற்றச் செய்வாயாக என்றனர். பரமசிவன் அருளிச்செய்த இந்த வாக்கியத்தைக் கேட்டு வைரவக்கடவுள் பிரளயகாலத்திலுண்டாகும் அக்கினிக்குச் சமமாகிய சூலப்படையை அவ வெள்ளப்பெருக்கில் எறிந்தார். அச்சூலமானது கடல் வெள்ளத்தை எவ் விதம் இராமபாணமே வற்றச்செய்ததோ அவ்விதமாய்க் கணப்பொழுதில் வெள்ள முழுவதையும் உண்டு வற்றச்செய்தது. வெள்ளம் வடிந்தவுடனே அவ்விடம் முன்போல் ஆயிற்று.

## விருபாக்கன் வாரிவனலிங்கத்துக்குப் பாலபிடேகஞ் செய்து பூசித்தமை.

விருபாக்ஷ வணிகன் வைரவ சூலத்தினால் வெள்ளஞ் சுவறிப்போய் வாரிவனேசலிங்கம் வெளிப்பட்டுத் தோன்றுதலைக் கண்டு அதிகம் மன மகிழ்ச்சி கொண்டு வாரியப்பரை அணுகிப் பாற்கும்பங்களை எடுத்து விதி ப்படி அபிடேகஞ்செய்து அருச்சனையம் புரிந்து வாரிவன நாதரைப் பல வாறு புகழ்ந்து தோத்திரஞ் செய்வான்:

தேவரே! தேவேசரே! தேவரீருக்கு வணக்கம், லோகசங்கரரே! தேவரீருக்கு வணக்கம், பார்வதி நாதரே! தேவரீருக்கு வணக்கம், லோக சாட்சியே! தேவரீருக்கு வணக்கம்.

உலகங்களைப் படைத்தவரே! தேவரீருக்கு வணக்கம், உலகங்களைக் காப்பவரே! தேவரீருக்கு வணக்கம், உலகங்களை யழிப்பவரே! தேவரீருக்கு வணக்கம், பிரகாசராகிய தேவரீருக்கு வணக்கம்.

ஓ பார்வதீசரே! கருணாகரரே! ஏழைகளுக்கு உறவாயிருப்பவரே! ஸ்ரீ கண்டரே! நெற்றியங்கண்ணரே! கைகளில் குழுதமும் அபயமும் மழுவும் தரித்தவரே! அன்பர்களின் துன்பங்களை யழிப்பவரே! முனிவர் யாவரா லும் தோத்திரஞ் செய்யப்படுபவரே! வாரிவனேசரே! எப்பொழுதும் உம் மையே சரணடைந்துளேன்.

நைமிசாரண்ணியமுனிவர்களே! இஃவிதமாய் விருபாக்கன் மகாதே வரைத் தோத்திரஞ்செய்து அதுமுதல் நாடோறும் எவ்வித இடையூறுக முமின்றி வாரிவனேசருக்குப் பாலபிடேகஞ் செய்து வழிபட்டு வந்தான்.

தனக்குத் துணைசெய்து பனையில் எழுந்தருளியிருக்கும் வைரவக்கடவு ளிடத்துப்பேரன்புடையவனாய் வடை நைவேதனஞ்செய்து பூசித்து வண ங்கித் துதிக்கத்தொடங்கினான்.

## விருபாக்கனுக்கு வைரவர் வரங் கொடுத்தல்.

பூதத்தலைவராகிய தேவரீருக்கு வணக்கம், பீமரூபராகிய தேவரீருக்கு வணக்கம், சிவபுத்திரராகிய தேவரீருக்கு வணக்கம், காலாக்கினி ருத்திர ரூபராகிய தேவரீருக்கு வணக்கம், விரும்பிய பொருள்களை யெல்லாந்தரு ப ருக்கு வணக்கம், புரந்தரருக்கு வணக்கம், கலியாணருக்கு வணக்கம், புருடர்க்கு வணக்கம், வணக்கம்.

பிரசித்தருக்கு வணக்கம், பரிசுத்தருக்கு வணக்கம், பரப்பிரம வடிவி னர்க்கு வணக்கம், படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளென் னும் ஐந்தொழிற்கும் சாட்சியாயிருப்பவருக்கு வணக்கம்,

என்று இந்தவிதமான பல தோத்திரங்கள் சொல்லித் துதித்து வணங்குத லும், வைரவக்கடவுள் அவனுக்கு வெளிப்பட்டுக் காட்சிகொடுத்தருளினர். அவன் பேரன்புடையனாகிப் "பகவானே! தேவரீர் அடியார்களாகிய எங் களுக்கு நாங்கள் நினைத்த வரங்களை யளித்துக்கொண்டு இவ்விடத்திலே யே எழுந்தருளியிருத்தல் வேண்டும்" என்று தாழ்மையுடன் வேண்டினா ன்; அவன் வேண்டுதலுக்கிரங்கி வைரவக்கடவுள் "நீ விரும்பியவாறே செய்கின்றோம்" என்று அவனுக்கு வரங்கொடுத்து மறைந்தருளினர்.

## விருபாக்கன் முத்தி பெற்றமை.

விருபாக்கன் தனக்கு வைரவக்கடவுள் வரங்கொடுத்து மறைந்தபின்பு சிலகாலம் அவ்விடத்திலேயே இருந்து தவம் புரிந்து இவ்வுலக வாழ்வைத் துறந்து இந்திரபதத்தில் இன்பமனுபவித்துப் பின் சாலோகம் சாமீபம் சாரூப முத்திகளையும் பெற்று முடிவில் என்றும் அழிவில்லாததாகிய சிவசாயுச்சியத்தையும் பெற்றான்.

## பயன்.

இச்சரித்திரம் பரிசுத்தமானது; பாவங்களை யெல்லாம் அழிப்பது; இதனைக் கேட்போருக்கு இம்மைப்பயனாகிய போகத்தையும் மறுமைப்பயனாகிய மோட்சத்தையும் அளிப்பது; யாவன் ஒருவன் தன் வாழ்நாளின் நடுவில் மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் புறவிந்திரியம் ஐந்தையும், மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அகவிந்திரியங்கள் நான்கையும் அடக்கிப் பரிசுத்தனாகி, பிரதோஷம் சிவராத்திரி சோமவாரம் என்னும் விசேடகாலங்களில் அன்புடன் வாரிவனேசலிங்கப்பெருமானை அருச்சித்து வணங்கி உபவாசம் இருப்பானே அவன் பாவங்களெல்லாம் அக்கினியிலே பஞ்சுப்பொதி யழிதல்போல வெந்தழிய இம்மையில் இன்பமனுபவித்து வாழ்ந்து மறுமையில் பாமுத்தியையும் அடைவான் என்று நைமிசாரண்ணிய முனிவர்களுக்குச் சூத புராணிகர் திருவாய்மலர்ந்தருளினர்.

### வாரிவன லிங்க மகிமை யுரைத்த படலம் முற்றிற்று.

---

பதினைந்தாவது

# யமுனை மகிமை உரைத்த படலம்

### இருடிகள் வினவுல்.

சூதரே! சூதரே! பெரும் பாக்கியசாலியே! வியாசரின் மாணாக்கரே! பெரும் புத்திசாலியே! யமுனை என்னும் பிரசித்தமான புண்ணியநதியின் மகிமையை உங்களுக்குச் சொல்வேன் என்று முன் நீர் எங்களுக்குச் சொன்னீரன்றோ? பெரிய முனிவரே! பாவத்தையழிக்கும் பெருமை வாய்ந்த யமுனை நதி இலங்கைக்குச் சென்றது ஏன்? அந்த நதி அங்கே போய் இருந்த விடம் யாது? அவைகளை விரிவாய் எங்களுக்குச் சொல்லுதல் வேண்டும் என்று இருடிகள் சூதரைக் கேட்டார்கள்.

### சுசங்கீதன் நல்லூரில் அரசாண்டமை.

சூதமுனிவர் விடை கூறல்:—முனிவர்களே! இனி யமுனை நதியின் மகிமையைக் கூறுகின்றோம்; கவனத்துடன் கேளுங்கள்! சேதுவிலிருந்து பன்னிரண்டு யோசனை தூரத்துக்கு அப்பால் ஈசானதிக்கில் முற்காலத்தி

லே சுசங்கீதன் என்னுங் கந்தருவன் ஒரு நகரத்தை உண்டாக்கி அதற்கு வீணகாபுரம் என்று பெயரிட்டு சோழதேசத்திலிருந்து அந்தணர் முதலிய வர்களை அழைத்து வந்து குடியிருத்தி இராச்சிய பரிபாலனஞ் செய்து கொண்டிருந்து முப்பது வருடஞ்சென்றபின் கந்தருவ நகரஞ்சென்றான் அவ்வரசனுக்குப் புத்திரன் இல்லாமையால் அந்நகரம் அரசனை இழந்து விட்டதே யென்று மந்திரி கவலை கொண்டு பாண்டிய தேசம்போய்ப் பாண்டியராசனைக் கண்டு தன் விருத்தாந்தத்தைத் தெரிவித்துக்கொண்டான். அதாவது யாழ்ப்பாண நகரத்தைச் சுசங்கீதராசன் அரசு செய்ததும் இப்போது அவன் இறந்துபோனதும் அவனுக்குப் புத்திரன் இல்லாமையால் அரசு செய்வதற்கு அரசன் இல்லாமலிருப்பதும் ஆகிய இவைகளையெல்லாம் எடுத்துச்சொன்னான்; பாண்டிய பூபதியே! நீ கிருபை செய்து உன் புத்திரருள் ஒருவன் என் இராச்சியத்தை ஆளுதற்குத் தரல்வேண்டும் என்றும் பாண்டியராசனைக் கேட்டுக்கொண்டான்.

## கூழங்கையாரியன் பட்டத்துக்கு வந்தது.

பாண்டியராசன் மந்திரியை நோக்கி "மந்திரீ! நம் புத்திரர் யாவரும் பாடசாலையிற் கல்வி கற்றுக்கொண்டிருக்கின்றனர்; நீ பாடசாலைக்குப் போய் நம் புத்திரருள் மிகவும் புத்திசாலியாகிய ஒருவனை ஏற்றுக்கொள்வாய்" என்றான். இவ்விதம் பாண்டியன் கூறக்கேட்டு, மந்திரி பாடசாலையிற் சென்று அரசிளங்குமரரைக் கண்டு பிதா சொன்னதை அவர்களுக்குக் கூறிப் புத்திசாலியாகிய ஒரு அரசகுமாரனைத் தான் அழைத்துக்கொண்டு யாழ்ப்பாணத்துக்குத் திரும்பி வந்துசேர்ந்தான். கொண்டுவந்த அரசகுமாரன் பேர் சிங்காரியன் என்பது. மந்திரி யாழ்ப்பாணத்திலே நல்லூரிலே அரமனை ஒன்று அமைத்து நல்ல நாளில் நல்ல லக்கினத்தில் பட்டாபிஷேகஞ்செய்து கூழங்கையாரிய சக்கரவர்த்தி என்று அவனுக்கு நாமஞ் சூட்டினன். கூழங்கையாரிய சக்கரவர்த்தி இராச்சியத்தை வகித்துக் கொடையினாலும் தண்ணளியினாலும் செங்கோன்மையினாலும் சிறந்து விளங்கினன்; மறையவர்களிடத்திலும் வேதங்களை யுணர்ந்த சுரோத்திரியர்களிடத்திலும் பேரன்பு பாராட்டினன்; தன்னுயிர்போல மன்னுயிரையுங் காப்பாற்றினன்.

இப்படியிருக்குங்காலத்தில், முன் செய்த ஊழ்வினை வசத்தினாலே அரசன் பிணிகளுக்கரசெனும் பெருநோயாகிய கய ரோகத்தின் வாய்ப்ப

ட்டு மிகவும் வருத்தமடைந்து சிவனை வழிபட்டுத் திருவருள்பெற்று இந்நோயை மாற்றுவதன்றி வேறு செய்வது யாதொன்றுமில்லை என்று சிந்தித்துத் தன் அரமனையை யகன்று, சட்டநாதர் கோவிலை வந்தடைந்து சட்டநாதக்கடவுளை அல்லும் பகலும் இடையறாது தியானித்து வழிபட்டு வருவானாயினன். இப்படி வழிபாடு செய்துவருங் காலத்தில் ஒரு நாள் அரசன் நித்திரையிலிருக்கும்போது சட்டநாதக்கடவுள் அந்தணர் வேடங்கொண்டு சொப்பனத்தில் தோன்றி, "அரசனே! உனது நோய் நீங்கும் வழியை நாம் சொல்லுகின்றோம் கேள்; நாம் சொல்லுபவை யாவும் உன்னால் நன்கு கவனிக்கப்படவேண்டும்.

வேதாந்தங்களைச் சற்றுணர்ந்த பெரியோர் தருமம் மூன்று வகைப்படும் என்று கூறுவர். அவை மனத்தாற் செய்யப்படுவதும் வாக்காற்செய்யப்படுவதும் காயத்தாற் செய்யப்படுவதுமாகும். சத்தியம் பொறுமை சிவஞானம் இந்திரிய நிக்கிரகம் எல்லாப்பிராணிகளிடத்தும் இரக்கமுடைமை ஆர்ச்சவம் தருமசிந்தனை இராகத்துவேஷமில்லாமல் மனஞ் சுத்தமாயிருத்தல் என்னும் இவை யாவும் மானத தருமங்களாம். திருவைந்தெழுத்தை மானதமாய் எண்ணுதல் மானத தருமங்களுள் மிக மேலாகிய தருமமாகும்; அது மனம் பரிசுத்த மெய்துதற்குரிய காரணமெனவுணர்க. பல பிரிவுகளையுடைய செபஞ் செய்தல் முதலான தருமங்கள் வாசிக தருமங்களாம். சிவலிங்க பூசை பிரதட்சிணம் நமஸ்காரம் பூக்கொய்தல் அபிடேகத் திருமஞ்சனங் கொணர்தல் திருவலகிடுதல் திருமெழுக்கிடுதல் திருநந்தனவனம் வைத்தல் தலயாத்திரை செய்தல் முதலான தருமங்கள் காயிகங்களாம். இவ்வாறு மூவகைத் தருமங்களும் இவையெனவுணர்ந்து கொள்க இம்மூன்றும் விரைவிற் பயன்தரும்.

இவைகளுள் தீர்த்த யாத்திரை செய்வது மிகவும் மேலானது; மகா ஐசுவரியந் தருவது, ஆதலினாலே பெரும் ஐசுவரியத்தை உடனே விரும்புவோன் முயற்சியெடுத்தேனும் தீர்த்த யாத்திரை செய்தல் வேண்டும்; தீர்த்த யாத்திரையானது போகத்தையும் மோட்சத்தையும் இட்டசித்தியையும் தவறாமற் கொடுக்கும்.

கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்கள் எல்லாம் சிவவடிவமெனவுணர்ந்துகொள்க. உலகவின்பங்களை மயங்கி அனுபவிக்கின்ற சாதாரண மனிதர்கள் யாவரும் புண்ணிய தீர்த்த ஸ்நானத்தினாலேயே அனுக்கிரகிக்கப்ப

டுகின்றார்கள். கங்கை முதலான புண்ணிய தீர்த்தங்களில் ஆடுதற்கு எவனும் உரியவனாவான். எல்லாத் தீர்த்தங்களிலும் ஆடுதலினாலுண்டாகும் பலன் யமுனையில் ஆடுதலினாலே கிடைக்கும். எல்லாப் புண்ணிய தீர்த்தங்களை வும்விட யமுனையே மேலானது; அதில் ஆடின சனங்களுக்குப் புண்ணியம் மிகவுங் கிடைக்கும். ஆதலினாலே யமுனையில் ஆடி எல்லாத் தீர்த்த பலனையும் அடைந்து மேன்மை பெறலாம். இதில் சந்தேகம் வேண்டாம்.

ஆதலினால், இப்பொழுது நாம் இதன் அக்கினி திக்கில் இருக்குங் கூபத்தில் யமுனா நதியை வரவழைப்போம்; அரசனே! நீ அந்த யமுனா நதியில் விதிப்படி ஸ்நானஞ்செய்யக்கடவாய். அந்த ஸ்நானப்பெருமையினாலே உனக்குள்ள கயரோகம் நீங்கிவிடும்; இது நிச்சயம்" என்று சொல்லி மறைந்தருளினர். அரசன் சொப்பனம் நீங்கிச் சீக்கிரம் எழுந்தான். ஆ! ஆ! இஃதென்னையோ அதிசயம்! மறையவரைக் கண்டிலேன், சொப்பனத்தில் காணப்பட்ட மறையவர் சிவபெருமானாரே. இதில் ஐயமில்லை என்று இவ்விதம் மனத்தில் எண்ணி மகிழ்ந்து ஈசனைத் துதிப்பான்:

நீலகண்டராகிய உமக்கு வணக்கம், கருணாகரரே! உமக்கு வணக்கம், லோகநாதராகிய உமக்கு வணக்கம், சட்டநாதராகிய உமக்கு வணக்கம்.

பார்வதி மணவாளரே! உமக்கு வணக்கம், அன்பரிடம் பிரியமுள்ளவரே! உமக்கு வணக்கம், பூதநாதராகிய உமக்கு வணக்கம், சட்டநாதராகிய உமக்கு வணக்கம்.

விடையேறுபவரே! உமக்கு வணக்கம், உலகத்துக்குச் சுகஞ்செய்பவரே! வணக்கம், வேதியர் வேடங் கொண்டு தோன்றிய சட்டநாதருக்கு வணக்கம்.

கருணையங்கடலே! வணக்கம், சந்திரசேகரா! வணக்கம், காலகாலருக்கு வணக்கம், சட்டநாதருக்கு வணக்கம், சுகுணாம்பிகையே! தேவரீரை வணங்குகின்றேன். நல்லூர் வாசருக்கு வணக்கம், தேவருக்கு வணக்கம் வணக்கம்.

என்று இந்த விதமாய் அரசன் தோத்திரஞ்செய்து வணங்கிச் சிவத்தியானத்திலிருந்தான்.

அந்தணர்களே! சட்டநாதப்பெருமான் அவ்வரசனைப் பிரியஞ்செய்யும்படி காளிந்தி நதியை மனத்தினால் நினைத்தனர். அப்போது காளிந்தி

நதி உலகத்தைப்பரிசுத்தஞ் செய்பவளாய்ச் சுழல்களோடும் ஆமைகள் மற்சங்கள் குமுத மலர்கள் பாசிக்கொத்துக்கள் முதலானவைகளோடும் திசைகடோறு முழங்கிக்கொண்டு கடவுளாணையைச் சிரமேற்றாங்கி முக்கோண வடிவமாகிய கூபத்தில் வந்து தோன்றினாள். இந்த அதிசயத்தை நல்லூரிலிருக்கும் சனங்களெல்லாரும் கண்டு மிகவும் ஆனந்தமடைந்தார்கள். அக்கூபமானது அது முதல் இவ்வுலகத்தில் யமுனை என்று அழைக்கப்பட்டுவருகிறது. முனிவர்களே! இது சத்தியம் என்று நான் உங்களுக்குச் சொல்கின்றேன்.

பின், சட்டநாதப்பெருமான் கிருபையினாலே அரசன் அந்த யமுனையில் விதிப்படி சங்கற்பம் பண்ணி ஸ்நானஞ்செய்து கோதானம் பூதானம் இரணிய தான முதலான பல தானங்களை அந்தணர்களுக்குக் கொடுத்து மகிழ்ந்து சட்டநாதக்கடவுளுக்கும் விசேடமான பூசைகளும் நடத்திவந்தான். அவனுக்கிருந்த கயரோகமும் உடனே அவனை விட்டு விலகியது. அரசன் பல காலம் சுகமாய் இராச்சியத்தை ஆண்டுவந்து சட்டநாதக்கடவுளின் திருவடி நிழலை யடைந்தான்.

யாவன் ஒருவன் யமுனை என்று ஒரு முறை தன் வாயினாற் சொல்லித் தன் ஆயுள் மத்தியில் பத்தியோடு விதிப்படி ஸ்நானஞ் செய்வானோ? அவன் அடையும் புண்ணியப் பயனை எடுத்துச் சொல்ல ஆதிசேடனாலும் முடியாது; அவன் இம்மையில் எல்லாப் பேறுகளையும் பெற்று மறுமையில் மோட்சத்தையும் அடைவான். இது போன்ற தலம் முன்னு மில்லை. இனி உண்டாகப்போவதுமில்லை என்று சூதமுனிவர் நைமிசாரண்ணிய வாசிகளுக்குக் கூறினார்.

யமுனை மகிமை யுரைத்த படலம்

முற்றிற்று.

## பதினாறாவது

# முனீசுவர வைபவமுரைத்த படலம்

நைமிசாரண்ணிய வாசிகள் சூதமுனிவரை வினவுதல்:—

வேதவியாசரின் மாணாக்கரே! மகா பாக்கியசாலியே! எல்லா சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்தவரே! முனீசுவர வைபவத்தைச் சொல்லுவதற்கு நீரே தகுந்தவர். எக்கதையைக் கேட்பதால் ஞானமும் ஈசுவர பத்தியும் உண்டாகுமோ? அப்படியான கதையைக் கேட்பதற்கு எங்களுக்கு ஆசை அதிகரிக்கின்றது.

சூதமுனிவர் விடை கூறல்—

முனிவர்காள்! முனீசுவர தலப்பெருமை முழுவதையும் இப்பொழுது உங்களுக்குச் சொல்கின்றோம். உலகத்துக்கு நன்மை செய்யும் விருப்பத்தினால் முற்காலத்திலே பிரமதேவரால் முனீசுவர தலத்தில் சிவலிங்கந் தாபிக்கப்பட்டது. சுயம்புவாகிய பிரமன் தாபித்த காரணத்தினால் அந்த லிங்கம் சுவாயம்புவம் என்று சொல்லப்படும். அது அடியார்களுக்கு வேண்டியவைகளையெல்லாம் அளிக்கத்தக்கது. அந்த முனீசுவர லிங்கத்தினைத் தரிசனஞ் செய்யினும் நினைப்பினும் பாவங்களெல்லாம் உடனே அழிந்துவிடும்.

இனி, அந்த முனீசுவர தல மகிமையானது நம்மால் சுருக்கமாய்க் கூறப்படும். புண்ணிய தலங்கள் எல்லாவற்றுள்ளும் சிவதலம் விசேடமாகும். சிங்களதேசத்திலே சேதுமத்தியிலே பல தலங்கள் உள்ளன. முனிவர்களே! அவைகளுள்ளும் மூன்று தலங்களே முக்கியமானவை. அம்மூன்றின் பெயர்களை முறையாற் கூறுகின்றோம்.

பரமார்த்தமாகிய தெட்சிணகைலாசமானது அன்பர்களுக்குப் போக மோட்சம் இரண்டையுங் கொடுக்கும். அங்கேயுள்ள சிவலிங்கம் கோணேசுவர மகாலிங்கம் எனப்பெயர்பெறும். கேதீசுவரதலமானது நினைப்பதாலேயே விரும்பியவைகளையெல்லாந் தரும்; அங்கே உள்ள சிவலிங்கம் கேதீசுவர மகாலிங்கம் எனப்பெயர்பெறும். இது முனிவர்களால் வழிபடப்படுவது. முனீசுவர தலமானது கேட்பதாலேயே சருவசித்திகளையும் கொடுக்கும். அங்குள்ள லிங்கம் சுயம்பு. அதன் பெயர் முன்னைநாதலிங்க

மன்று சொல்லப்படும். மிகவும் மேன்மையானது; பிரமன் விட்டுணு மகேந்திரன் முதலியோர்களால் பூசிக்கப்பெற்றது; சருவ சித்திகளையுந் தருவது. அதனால், முனீசுவர தலமானது மேலான தலங்களெல்லாவற்றுள்ளும் மிக மேலான தலமென அறிந்துகொள்க. முன்ன காதேசுவரம் என்னும் பெயரோடு முனீசுவரம் என்று வேறொரு பெயரும் அதற்குண்டு; அம்முனீசுவர தலத்தில் சித்தாமிருதம் என்னும் மகா தீர்த்தம் ஒன்றிருக்கின்றது. அது பாவமாகிய விறகுக்கு அக்கினியாகும்; எல்லாத் தீர்த்தங்களிலும் அதிகமானது; மேலான அற்புதமுள்ளது; சுயம்புலிங்கத்தின் விசேடத்தினாலும் அத்தலத்தின் மகிமையினாலும், அத்தீர்த்த மகிமையினாலும் சாம்பசிவன் அத்தலத்தில் எப்பொழுதும் சாந்நித்தியராயிருக்கின்றார். ஆதலால், அத்தலம் மிகவும் மேலானது; அவ்வுத்தம தலம் கேட்டமாத்திரத்தில் விரும்பியவற்றையெல்லாந் தரும்; நிரந்தர வாசத்தினால் மேலாகிய சிவசாயுச்சியத்தையுங் கொடுக்கும்.

காசி முதலாகிய தேசங்களிலே சரீரமுடிவில் முத்தி கிடைக்கும் என்பதாய்க் கூறப்படுகின்றது. இந்த முனீசுவர தலத்திலோ மனிதர்களுக்குச் சீவன் முத்தி கிடைக்கும்; ஆதலினால் மூவுலகங்களிலும் முனீசுவர தலத்துக்கொப்பாகிய தலம் வேறொன்றுமில்லை. மகா பாதகங்களாகிய பஞ்சுப்பொதிகளுக்கு அக்கினி போன்றது. ஆதலினன்றோ உலகத்தினர் யாவரும் எவ்வகைப் பாவங்களையும் நீக்கும்பொருட்டு அத்தலத்தினையடைகின்றார்கள். அறியாமையினாலேனும் மோகத்தினாலேனும் தற்செயலினாலேனும் அத்தலத்தை ஒருவன் அடைவானேல், உடனே அவன் சருவ பாவங்களினாலும் விடப்படுவான்.

## இராமன் பிரமகத்தி நீங்கப் பெற்றமை.

முற்காலத்திலே இராமன் இராவணனைக் கொன்று தன் தேசத்தை நோக்கிச் செல்லும்போது வழியில் பிரமகத்தியும் அவனைப் பின்பற்றித் தொடர்ந்தது. அப்பிரம சாயை அச்சத்தைத் தருவதாய், கையில் இருப்புலக்கையை யுடையதாய்ப் பின் தொடர்ந்து வந்து இராமன் முனீசுவரத்தைக் கண்டவுடன் அச்சாயை மறைந்துபோய்விட்டது. மேலும், எறும்பு முதல் யானை இறுதியாயுள்ள எல்லாச் சீவ செந்துக்களும் அவ்விடத்திலே முத்தியை அடைகின்றன.

## காசியிற் செய்த பாவம் இத்தலத்தில் நீங்கியது.

காசிப்பதியிற் செய்த பாவம் இந்த முனீசுர சிவதலத்தில் நீங்கியிருக்கின்றது. அச்சரித்திரத்தை இப்போது உங்களுக்குச் சொல்கின்றோம்; முனிவர்களே! நன்றாய்க் கேளுங்கள்.

சமித்துக்களும் பூக்களும் தருப்பைகளும் நிறைந்து தவஞ் செய்யத் தகுந்தவிடமாய் விளங்காநின்றதும், தருப்பையினாற் செய்து விடப்பட்ட நேமி சென்று தங்கிய காரணத்தினால் நைமிசம் என்று பெயர் பெற்றதும் ஆகிய சிறப்பு வாய்ந்த தவவனத்திலே பகவானாகிய சௌனக மகாமுனிவரானவர் ஒரு யாகஞ்செய்யத் தொடங்கினார். அந்த யாகசாலையிலே மகாத்துமாக்களும் பாவம் நீங்கப்பெற்றவர்களும் ஆகிய முனிவர்கள் பலரும் வந்து ஒன்றுகூடினார்கள். விசுவாமித்திரன் வசிட்டன் சமதக்கினி காசியபன் அகத்தியன் வாமதேவன் பாரத்துவாசன் பராசரன் என்பவர்களும், இவர் போலும முனிவர் வேறு பலரும் சௌனகரின் சமீபத்தை யடைந்தொருவருக்கொருவர் சுகம் வினாவிக்கொண்டு சந்தோஷமாய்க் கூடியிருந்தார்கள். சத்தியவதியின் குமாரராகிய வியாச யோகீசுவரர் அப்பொழுது அவ்விடத்தை யடைந்தார். அடைந்த வியாச முனிவரைக் கண்டு முனிவர்களெல்லாரும் நாவினின்றும் வருகின்ற குழறுபடையாகிய வார்த்தைகளினாலே சுவாகதங்கில என்று நல்வரவு வினாவி ஆசனத்தில் வீற்றிருக்கச் செய்து அருக்கியம் பாத்திய முதலியவைகளினாலே பூசை செய்து வணங்கினார்கள். வியாசமுனிவர் கண்களினின்றும் ஆனந்த வருவி சொரிய ஆசனத்தின்மீது எழுந்தருளி யிருக்கவும் அவரை வணங்கித் தமக்குண்டாகிய சந்தேகத்தை அவரிடங் கேட்பாராயினர்.

### இருடிகள் வினாவுதல்.

பகவானே! சருவ சாத்திரார்த்தங்களையும் உணர்ந்தவர்களுட் சிறந்தோய்! உலகத்திற்குக் கருத்தா யாவர்? சிவனா? அல்லது விட்டுணுவா? நீரே இவ்வினாவுக்கு விடை சொல்லத் தகுந்தவர் என்று சௌனகர் முதலாகிய இருடிகள் வினாவினர். இருடிகளின் வினாவைக் கேட்டு வேதவியாச மகாமுனிவர் இருடிகளே! கேளுங்கள்: எல்லாச் சாத்திரங்களின் கருத்தும் விட்டுணுவே உலக கருத்தா; பிறர் ஒரு காலத்தும் கருத்தர் அல்ல,

என்பதே என்றார். இவ்விதம் வியாசர் கூறக்கேட்டு, சௌனகர் முதலாகிய மகா இருடிகள் ஓ வியாசரே! நீர் இங்கே சொல்லிய இதனை நாங்கள் ஒருபோதும் நம்பமாட்டோம்; உமது வாக்கை நாங்கள் மெய்யென்று நம்ப வேண்டுமானால், முனிவரே! நீர் காசியிற்சென்று விசுவநாதர் சந்நிதியில் சத்தியம் பண்ணிச் சொன்னால் மெய்யென்று அங்கீகரிப்போம் என்றார்கள். வியாசர் அப்படியே செய்வேன் என்று உடன்படுதலும், முனிவர்கள் எல்லாரும் காசியில் போய் கங்கையில் முழுகிச் சந்தியாவந்தனம் சிவபூசை முதலியவைகளை முடித்துக்கொண்டு விசுவேசர் சந்நிதியையடைந்து பிரார்த்தனை செய்துகொண்டிருந்தனர்.

பின்னர் வியாசரும் கங்கையில் முழுகி விதிப்படி ஊர்த்துவபுண்டரந் தரித்துத் துளசிமாலையும் பூண்டு விட்டுணுவின் திருநாமங்களைச்சொல்லிப் பஜனை செய்பவராகி, இப்படி வேடங்கொண்ட மாணாக்கர்களோடுங் கூடினவராகி, விசுவேசர் சந்நிதியையடைந்து கைகளை மேலே தூக்கிக்கொண்டு கோஷ்டி மத்தியில் நின்று, "வேத சாத்திரங்களினால் உணர்த்தப்படும் பரம்பொருள் கேசவனேயாகும்; கேசவனைத் தவிர வேறு பரம்பொருள் இல்லை." என்று பெருங் குரலோடு சத்தியஞ்செய்தார்.

இதனைத் திருநந்திதேவர் கேட்டுப் பெருங்கோபங்கொண்டு சிவனது ஆணையினாலே மேலே தூக்கிய கை கீழிறங்காமல் தம்பிக்கக்கடவது என்பதாய்ச் சாபமிட்டார். நந்திதேவர் இட்ட சாபத்தினாலே வியாசருடைய கை உடனே தம்பித்துவிட்டது. விட்டுணு இதனைக் கேள்விப்பட்டு மறைவாய் விசுவேசர் சந்நிதியையடைந்து வேதவியாசரைக் கண்டு பின் வருமாறு கூறினர். அது வருமாறு:—வியாசனே! எனது வசனத்தை ஒருவழிப்பட்ட மனத்தோடு கேள்: நானே உலக கருத்தா; எனக்குக் கருத்தா மகேசுவரன்; தேவாதிதேவராகிய அவருக்குக் கருத்தா ஒருவனும் இல்லை. இதற்குச் சாட்சி பஞ்சாக்கர மகா மந்திரம் இருக்கின்றது. அம்மகாமந்திரத்தை உனக்குச் சிவப்பிரீதியின் பொருட்டு மகிழ்வோடும் உபதேசிக்கின்றேன் என்று அவ்வியாசருக்குணர்த்தி, நாராயணன் அம்மகாமந்திரோபதேசத்தையும் செய்து மறைந்தார். இவை யாவற்றையும் கண்டு சௌனகர் முதலானவர்கள் சிவனை வணங்கிக் கொண்டு காசியினின்றும் அகன்று தங்கள் தங்கள்வனத்துக்கேகினார்கள். வியாசமுனிவரோ தூக்கிய கரங்கள் இரண்டும் கீழே தொங்கவிடமுடியாமல் தூக்கியபடியே

நமஸ்கரித்து நிற்கப்பெற்று, விசுவேசரை இருதயத்தில் செவ்வையாய்த்தியானித்துப் பூசித்துப் பாவனை பக்தி யோகத்தினாலே தோத்திரஞ் செய்யத் தொடங்கினார்

## வியாசர் விசுவேசரைத் துதித்தல்.

கங்கா நதியின் அலைகளால் அழகு செய்யப்படுகின்ற சடைத்தொகுதியையுடையவரும், கௌரியினால் எப்போதும் அணி செய்யப்படுகின்ற வாமபாகத்தை யுடையவரும், நாராயணனிடத்துப் பிரியமுடையவரும், மன்மதனை கொண்ட அகந்தையை யகற்றியவரும், காசி நகரக்கிறைவரும் ஆகிய விசுவநாதரைத் துதிக்கின்றேன்.

விருப்பு வெறுப்பு முதலான குற்றங்களில்லாதவரும், சகுண அநுராகமுள்ளவரும், வைராக்கியத்துக்கும் சாந்திக்கும் இருப்பிடமானவரும், பார்வதி சகாயரும், மாதுரியம் தைரியம் இவைகளுக்கு நிலைக்களமானவரும், நஞ்சணி கண்டரும் காசி நகர்க்கிறைவரும் ஆகிய விசுவநாதரைத் துதிக்கின்றேன்.

ஒளி வடிவினரும் சகள நிஷ்களரும் இரண்டாவதற்றவரும் சச்சிதானந்தரும் அபராசிதரும் அப்பிரமேயரும் பலபல வுயிர்களாயினவரும் சகுண நிர்க்குணரும் ஆதிதேவரும் காசிநகர்க்கிறைவரும் ஆகிய விசுவநாதரைத் துதிக்கின்றேன்.

பூதங்களுக்கு அதிபரும் அரவணியும் அங்கத்தினரும் புலித்தோலாடை தரித்தவரும் சடிலரும் முக்கண்ணரும் பாசம் அங்குசம் அபயம் வரதம் சூலம் எந்திய கையினரும் காசி நகர்க்கிறைவரும் ஆகிய விசுவநாதரைத் துதிக்கின்றேன்.

ஆசையை நீக்கிப் பர நிந்தையையும் தன் நிந்தையையும் அகற்றிப் பாவத்தில் விருப்பத்தை மாற்றி மனத்தை யொடுக்கிச் சமாதியிலிருக்கும் நல்லோர் இருதய கமல நடுவில் எழுந்தருளுகின்றவரும் மேலானவரும் காசி நகர்க்கிறைவரும் ஆகிய விசுவநாதரைத் துதிக்கின்றேன்.

சந்திரனை யணிந்த முடியினால் விளங்குபவரும் நெற்றியிலுள்ள அக்கினிக் கண்ணினால் மன்மதனை எரித்தவரும் செவிகளில் அரவக்குண்டலங்களை யணிந்து விளங்குபவரும் காசிநகர்க்கிறைவரும் ஆகிய விசுவநாதரைத் துதிக்கின்றேன்.

வேகமாகிய மதயானைகளுக்குச் சிங்கமாய்த் தனுசபுங்கவ பன்னகங்களுக்கு நாகாந்தகமாய் மரண சோக பயமாகிய காட்டுக்குக் காட்டழலாய்க் காசிப்பதிக்கிறைவராய் விளங்கும் விசுவநாதனைத் துதிக்கின்றேன்.

என்று இந்தவிதமாய்த் துதித்து வணங்கிப் பத்தியோடு தலை வணங்கிப் பொறுத்தருள்க பொறுத்தருள்க பொறுத்தருள்க என்று மூன்று முறை சொல்லி நின்ற வியாசரைப்பார்த்துக் கிருபாநிதியாகிய விசுவேசர் பிரசன்னராகி அஞ்சவேண்டாம் என்றருளிச்செய்தார். துன்பத்தை யகற்றுகின்ற அவ்வசனத்தைக்கேட்டு வியாசமகரிஷி மிகச் சந்தோஷமடைந்தார்.

சூதர் சொல்வது:—காசி விசுவநாதப் பெருமான் கிருபையினாலே வியாசமுனிவருடைய கைகள் முன்போலாயின. வியாசர் சர்வாங்கங்களும் பூரிக்கப்பெற்றுச் சிவபூசையை மேற்கொண்டார். வேதங்களைக் கரைகண்ட பிராமணர்களினாலே விசுவேசருக்கு அங்க சுத்தி செய்து கங்கா தீர்த்தங் கொண்டுவந்து திருமஞ்சனம் ஆட்டுவித்து ஆடை சாத்தி ஆபரணங்கள் அணிந்து மாலை சூட்டித் தூப தீபங்காட்டித் திருவமுது நைவேத்தியஞ் செய்து தோத்திரஞ்சொல்லி வலம் வந்து வணங்கிப் பூமியிலே அடியற்ற மரம்போல விழுந்து நமஸ்காரஞ்செய்து வரம் பெற்று வெளியில் வந்து திருநந்திதேவரை வணங்கி நின்று, நந்தியந்தேவே! மகா பாக்கிய சாலியே! சருவ தருமங்களையும் விசாரித்தறிந்தவரே! சிவாபராததோஷத்தை மாற்றுதற்குரிய உபாயத்தை அடியேனுக்குக் கூறுவாய் என்பதாய் வேதவியாசர் கேட்டலும், நந்திதேவர் சொல்கின்றார்: வியாசரே! உமக்கேற்பட்ட பாவத்தை நீக்கும்பொருட்டுப் பிராயச்சித்தஞ் சொல்லுவோம். கவனமாய்க் கேட்பீராக. மகாபாதகங்களுக்குப் பிராயச்சித்தஞ் சிவார்ச்சனையே அது தவிர வேறு பிராயச்சித்தம் யாதுளது? ஆதலினாலே நீர் சிவார்ச்சனையே செய்தல்வேண்டும். எவ்விடங்களிற் செய்த பாவங்களும் புண்ணிய தீர்த்தத்தில் அகலும். புண்ணிய தீர்த்தத்திற் செய்த பாவம் வாராணசியில் நசிக்கும். வாராணசியில் புரிந்த பாவம் அநுபவத்தினாலன்றி நீங்காது. அநுபவித்தே தொலைக்கவேண்டும். பிராணிகளினாலே செய்யப்பட்ட புண்ணியத்துக்கும் பாவத்துக்கும் அழிவில்லை. முனிவரே! எம்மாற் சொல்லப்பட்டது சத்தியமே. சிவாநுக்கிரகமுள்ளவர்களுக்கு யாதுதான் அசாத்தியம்? ஒன்றுமில்லையன்றோ! எல்லாம் செய்துமுடிக்கத்தக்கதே.

பழமையாகிய தானங்களில் எங்கும் நிறைந்திருக்கும் பரமசிவனை யாவருக்கும் விரும்பியவைகளை யெல்லாங் கொடுக்கும்படி சாந்நித்தியமாய் விளங்குகின்றார். ஆகையினாலே முற்காலத்திலே முனீசுவர தலம் என்பது பிரமதேவராற் பூசை செய்யப்பட்டது. கன்னியா குமரிக்குக் கிழக்கு, இராம சேதுவுக்குத் தெற்கு, காமாசலத்துக்கு வடமேற்கு, திரிகோணமலைக்குத் தென்மேற்கு இந்த எல்லைக்குள் முனீசுவர தலம் இருக்கின்றது. வியாசரே! அவ்விடத்தில் சிவானுக்கிரகத்தினாலே சித்திகள் யாவும் சித்தியடைகின்றன. வேறு தலங்களில் வெகு காலத்தினால் சாதிக்கப்பட்டவை எவையோ? அவை தபோபலத்தினால் உடனே சித்திக்கின்றன. விரும்பியவைகளை யெல்லாம் முனீசுவரத்தில் சிறிது தவத்தினாலடை—தல் திண்ணம். அங்கே சென்று மாயாநத தீர்த்தத்தில் விதிப்படி சங்கற்பஞ் செய்து தோய்ந்து உபவாசமாய் இந்திரியங்களை அடக்கி வேதாகம விதிப்படி ஒரு சிவலிங்கந் தாபித்து அதற்கு வியாசேசுவரம் எனப் பெயர் புனைந்து பதினாறுவித உபசாரங்களுடனே பூசை செய்து வழிபடுக; செபதியானாதி கருமங்களையும் அன்போடு செய்க. இவ்விதஞ் செய்து சிவபிரானை மகிழ்விப்பாயாக, இந்தச் சிவபூசை மகிமையினாலே அறியாமற்செய்த பாவமானது அக்கினியினாலே பஞ்சுப்பொதி அழிவதுபோல வெந்தழிந்துவிடுதல் சத்தியம் என்று திருநந்திதேவர் கூறினார்.

வியாசர் திருநந்திதேவர் கூறிய சிவநிந்தையை நீக்கும் பிராயச்சித்த விதியைக் கேட்டுச் சம்மதம் உடையவராய் அப்படியே செய்வேன் என்று சொல்லிக் காசிப்பதியை விட்டுப் புறப்பட்டுச் சிவதலங்களெங்கும் போய் வணங்கித் துதித்துச் சம்பிரமத்தினாலே முனீசுவர தலத்தை யடைந்து, பெரிய அற்புதமாகிய விமானத்தையுங் கோபுரத்தையுங் கண்டு வணங்கிக் கொண்டு, நகரத்தினுள்ளே போய் மகாலிங்கத்தைத் தரிசித்து மாயாநத தீர்த்தத்தை அடைந்தனர்; அம்மாயாநத தீர்த்தமோ முன்னாளில் பரமசிவனது சிரசில் இருந்து, பின் சிவனது ஆணையினால் இங்கே வந்து நதி வடிவங்கொண்டு போகத்தையும் மோட்சத்தையும் அளிக்கும்.

வியாசர் அங்கே சித்த வேடங்கொண்டு சித்தமுனியாய் இருக்கின்ற சிவனை வணங்கி அவர் அநுஞ்ஞை பெற்று வேதப்பிராமணர்களால் மந்திர விதிப்படி ஸ்நானஞ் செய்து தேவர்களுக்கும் பிதிரர்களுக்கும் இருடிக

ளுக்கும் தருப்பணஞ்செய்து பின் கரையில் ஏறி ஆடை யுடுத்து விபூதி உருத்திராக்க தாரணஞ்செய்து சித்த மடஞ் சார்ந்து விதிப்படி பிராமணர்களைப் பூசை செய்து தானங்கள் கொடுத்துப் பிராமண போசனமுஞ்செய்வித்துத் தேவதைகளுக்கு மிகவும் பிரியத்தை யுண்டாக்கினர்.

## வியாசர் ஏழு தீர்த்தங்களையும் வழிபாடு செய்தல்.

இனி, வேதவியாச முனிவர் தேவாலயத்தை அடைந்து புண்ணிய தீர்த்தங்களைத் தரிசித்தனர். சிவ தீர்த்தம் சிவனுக்கு முன்னர் இருக்கும். அக்கினி திக்கில் விநாயக தீர்த்தம் இருக்கும். தெற்குத்திக்கில் துவட்டா தீர்த்த மிருக்கும் நிருதி திசையில் வைரவ தீர்த்தம் இருக்கும். மேற்குத் திசையில் சந்திர குண்ட மிருக்கும். வாயு திசையில் விஷ்ணு தீர்த்தமும், வடதிசையில் துர்க்கா தீர்த்தமும் இருக்கும். ஆக இவை ஏழும் ஏழு தீர்த்தங்களெனவுணர்க. சிவ தீர்த்தம் கடவுளாலேயே உண்டாக்கப்பட்டது. கலியுகத்துக்கு முன் ஆதிகாலத்தில் கிழக்கு முதல் வடக்குவரையும் தத்தம் பெயர்களோடு ஏழு திசைகளிலும் ஏழு தீர்த்தங்கள் உள்ளன, அவைகள் ஆன்மாக்களுக்குப் போகமும் மோட்சமுங் கொடுக்கும். இத்தீர்த்தங்க ளேழையும் வேதவியாசர் பூசித்து வணங்கி நமஸ்காரஞ் செய்தார்.

## வியாசமுனிவர் சித்தாமிருததீர்த்தத்தில் ஆடித் தேவியை வணங்குதல்.

இனி, சித்தாமிருத தீர்த்தத்தின் பெருமையைச் சொல்லுவோம்:— சித்தாமிருதம் அளவில்லாத பெருமையை யுடையது; சிவனுக்கு ஈசான பாகத்திலுள்ளது; அமிர்தம் போல்வது; மனிதர்களுடைய நோயையும் வறுமையையும் நீக்கும்; விரும்பிய பேறுகளை யெல்லாம் உடனே தரும்; பிரமஞானத்துக்கு முக்கிய சாதனமாகும்; மக்களையும் மக்களுக்கு மக்களையுங் கொடுக்கும்; மனிதர்களுக்கு மனத்திலுள்ள துன்பங்களை நீக்கும்; ஒரு முறை தோய்ந்தால் மனிதர்க்கு அறம் பொருள் இன்பம் வீடுபேறெனும் நாற்பொருள்களையுந் தரும்; கணங்களினாலே வேண்டப்பட்டு முனீசுவரனாலேயே மூலலிங்க அபிடேகத்துக்காகவே ஏற்பாடு செய்யப்பட்டது; சூலபாணியினால் சித்தாமிருத தீர்த்தம் எனப்பெயரிடப்பட்டது. வியாச முனிவர் முனீசுவர ஆலயத்தின்கண் உள்ளே நுழைந்து, மேலே

சொல்லப்பட்ட சித்தாமிருத தீர்த்தத்தில் சங்கற்பஞ் செய்து அகமருடண மந்திரம் செபித்து ஸ்நானஞ் செய்து முடித்துச் சரீரமுழுவதும் திருவெண்ணீற்றை உத்தூளனமாகவுந் திரிபுண்டரமாகவுந் தரித்துந் தலை கழுத்துப் புயம் இவைகளில் உருத்திராக்க வடம் பூண்டு நினைத்தவற்றையெல்லாந் தருகின்ற சித்தி விநாயகரை வணங்கி, வேற்படை யேந்திய ஆறுமுகப்பெருமானைக் கும்பிட்டுக் கூத்தும் ஆடி, சுந்தரியாகிய மகாதேவியைத் தரிசித்து வணங்கிப் பூசித்துப் பன்முறை விழுந்து கும்பிட்டுத் தோத்திரஞ் செய்வாராயினர்.

மகிமை பொருந்திய முனீசுவர தலத்தில் இருப்போய்! மிகவும் ஒளி செய்கின்ற இரத்தினாபரணங்களால் அழகு வாய்ந்தோய்! முனீச வசனுயிருக பானப் பிரியாய்! குமரனைப் பெற்றோய்! அடியேனைச் சீக்கிரம் காத்தருளுக.

ஸ்ரீ வித்தையே! எல்லாமறிந்தோய்! பலவகை ஆசனங்களில் இருப்போய்! அடியார் விரும்பியவாறளிக்கும் வல்லமையுடையோய்! பகைவர் செய்யுந் தீமையை நீக்குவோய்! இந்திரன் முதலிய இமையவர் வணங்குந் திருவடிக் கமலங்களை யுடையோய்! குமரனைப் பெற்றோய்! அடியேனைச் சீக்கிரங் காத்தருளுக.

எல்லாவற்றுக்கும் முழுமுதல்வியே! வித்தை வடிவுடையோய்! வழிபடுவோருக்கு அருள் புரிவோய்! சுந்தரி! நிலவுகின்ற கற்பகப் பூங்கொடியே! மேன்மை யுடையோய்! குமரனைப் பெற்றோய்! அடியேனைச் சீக்கிரங் காத்தருளுக.

சருவேசுவரனுக்குப் பிரியமானவளே! சகலாகமங்களிலும் இருப்போய்! சங்கீத சாஸ்திரங்களில் வல்லபமுடையோய்! தேவலோகத்தாருய் வணங்குந் தேவியே! வளர்கின்ற தனபாரங்களை யுடையோய்! குமரனைப் பெற்றோய்! சீக்கிரம் அடியேனைக் காத்தருளுக.

இவ்விதமான தோத்திரங்களினால் அன்போடு துதித்துக் கண்களில் ஆனந்த நீர் பெருக நின்றனர். அப்பொழுது வடிவழகியம்மையார் அவருக்குப் பிரசன்னமாகித் தன் திருவடித்தாமரையில் இடையறாத பத்தியையும் அணிமா முதலான எட்டுவகைச் சித்திகளையும் அளித்தார்.

வேதவியாசர் அம்பிகையின் அநுக்கிரகம் பெற்றுப் பின் சிவசந்நிதியை யடைந்து இடபத்தின்முன் நமஸ்கரித்துத் துவாரபாலகரையும் வணங்கிக் கொண்டு நந்திதேவரையும் வணங்கினார். பின்பு, மகிழ்ச்சியுடையவராகி, திவ்வியமாகிய விமானத்தின் கீழ் வீற்றிருக்கின்றதும், இலிங்கங்களுக்கெல்லாம் சமட்டியானதும், ஆதிலிங்கமும் முத்தி தரும் அற்புதவடிவமுள்ளதும் ஆகிய திருமூலட்டான மூர்த்தியைத் தரிசித்து வணங்கிப் பத்தியினாலே பரவசப்பட்டவராயினார்.

இனி, வியாச பகவான் மூலலிங்க மூர்த்தியை வணங்கித் துதித்து விதிப்படி சோடசோபசாரங்களோடும் பூசை செய்து பிரகாரங்களை வலமாக வந்து முதலில் வணங்கி, திருவுருத்திர மந்திரங்களினாலே மகேசனை நன்கு கும்பிட்டுப் பலவித தோத்திரங்களினாலே துதித்து லிங்கத்தை ஞானவடிவமாகத் தியானித்துப் பூசையை நிறைவேற்றி மனமகிழ்வுடையவராகிப் பிரதட்சிணஞ்செய்து சிவலிங்கத்தின் முன்னிருக்கும் இடபத்தை விழுந்து கும்பிட்டுத் திவ்விய தீர்த்தத்துக்கிருப்பிடமாகிய அண்டத்தைத் தொட்டு, நந்தியின் இருகொம்புகளுக்கிடையில் லிங்கத்தைத் தரிசனம் பண்ணிக்கொண்டு மந்திரங்களுக்கெல்லாம் ஆதியாய்ப் பாவங்களை யழிப்பதாய் விளங்கும் ஐந்தெழுத்தைச் சிவ சிவ அரகா அரகா அரகா என இரண்டு மூன்று தரம் உரக்கச்சொல்லிக் கருணைநிதியாகிய மகேசனைத் தியானித்துத் தோத்திரங்களினாலே துதிப்பாராயினர்.

## வியாசர் முனீசுவரரைத் துதித்தல்.

முனீசுவர தலத்திலிருப்பவரே! முன்னநாதன் என்னும் பெயருள்ள சங்கரா! வேண்டியவைகளை யெல்லாங் கொடுப்பவரே! தேவரீரையே எப்பொழுதுஞ் சரணமடைவேன்.

சருவலோக நாயகரே! வடிவழகியம்மை சமேதராய் விளங்கும் பிரபுவே! முன்னநாதரே! தேவரீரையே எப்பொழுதுங் கதியாய்ச் சரணம் அடைவேன்.

சருவ சங்கடமாகிய சமுத்திரத்திற்கு வடவாமுகாக்கினியாயிருப்பவரே! அடியார்களின் சந்தாபமாகிய பஞ்சுக்கு அக்கினியே! முன்னநாதரே. தேவரீருக்கு நமஸ்காரம்.

16

முன்னைநாதரே! சருவஞ்ஞரே! மகா இருடிகளால் சேவிக்கப்படுவோய்! சம்புவே! உமது திருவடிகளையே எப்பொழுதும் சரணமடைவேன். எனக்குச் சுகமுண்டாதல் வேண்டும்.

முனீசுவர தலத்துக்கு நாயகரே! முன்னைநாத மகா பிரபுவே! பத்தர்களுக்கு மகிழ்ச்சி புரிவோய்! அடியேனைக் காத்தருளுக கருணாநிதியே!

முன்னை நாதருக்கு நமஸ்காரம், சுகந்தருபவருக்கு நமஸ்காரம், காலகாலருக்கு நமஸ்காரம், சருவரூபிக்கு நமஸ்காரம்.

இந்த விதமாகவும் இன்னும் பலவிதமாகவும் முன்னைநாதரைத் துதித்து வணங்கி நின்றார். இப்படிச் செய்த தோத்திரத்தினாலே வடிவழகியம்பாள் சமேதராகிய முன்னைநாதர் பிரசன்னமாயினர். கோடி சூரியர் உதித்தாற்போல விளங்குபவராய் சச்சிதானந்த வடிவினராய் வரத அபய கரங்களால் விளங்குபவராய் வடிவழகியம்பாள் சகிதராய் இடபவாகனத்தின்மேல் தரிசனமாகி, வியாச! உனக்கு வேண்டிய வார்த்தைக் கேள் தருகின்றோம் என்று முன்னைநாதர் அருளிச்செய்யக்கேட்டு வியாச முனிவர் கண்களினின்று ஆனந்த வெள்ளம் பெருகத் துதி செய்வாராயினர்.

தேவதேவ! மகாதேவ! தேவேச! கருணாநிதி! சிவாபராத தோஷத்துக்கு நிவிர்த்தி யாது? அருளிச்செய்க என்று கேட்டலும், சிவன் மகா பாதகங்களுக்குச் சிவலிங்கார்ச்சனை அன்றி வேறு பிராயச்சித்தம் யாதும் இல்லை. ஆகையால், நீ சிவலிங்கார்ச்சனை செய்யக்கடவாய், இந்த இடத்திலிருந்து அக்கினி திக்கில் இரண்டு குரோச தூரத்தில் மனத்திற்கிசைவாகிய தபோவனம் ஒன்றிருக்கின்றது. அவ்விடத்திற்சென்று சிவாலயமும், தவமடமும், தீர்த்தமும் உன் பெயரால் இயற்றுக. அஃது அறியாமற் செய்த பாவங்களை நீக்கும்; பாவமாகிய விறகுக்கு அக்கினியாகும் என்றிவ்வாறு சிவபெருமான் கூறி மறைந்தருளினர்.

வியாசமுனிவர் அவ்விடம் போய் வியாச மடம் என்று தன்பெயரால் ஒரு மடங்கட்டுவித்து வியாசேசம் என்று ஒரு சிவலிங்கமும் பிரதிட்டை செய்து, வியாச தீர்த்தம் என ஒரு தீர்த்தமும் உண்டாக்கினார். வேதப் பிராமணருக்கும் வறியவருக்கும் சிவனடியாருக்கும் பத்தியோடு பசுக்களையும் பூமியையும் பொன்னைத் தானங் கொடுத்துத் தவ முனிவரையும் யோகிகளையும் அந்தணர்களையும் அமுதுசெய்வித்தார். பின் வியாசமுனி

வர் ஸ்நானம் சந்தியாவந்தனம் செபம் ஓமம் சிவார்ச்சனை என்னும் இவை களைச் செய்து முடித்துத் தியானயோக சமாதியிலிருந்து நாள் தோறும் பாவம் நீங்கப்பெற்றார். இப்படிச் சில்காலம் வாசஞ்செய்து பின் காசிப் பதிக்குப் போய், அங்கே விசுவநாதரை வணங்கிக்கொண்டு தன் தலைனத் துக்குச் சென்றனர்.

சூதமுனிவர் கூறுகின்றார்:—

இந்தல மான்மியத்தையும் தீர்த்தமான்மியத்தையும் ஒருமுறை கேட் பின் மனிதர்க்குப் போகமும் மோட்சமும் கிடைக்கும்; இதனை அன்புட னே படிப்போர் இம்மையில் மனைவி மக்களோடு எல்லாப் பேறுகளையும் அடைந்து மறுமையில் மோட்சமும் பெறுவர்.

முனீசுவர வைபவ முரைத்த படலம்

முற்றிற்று.

---

## பதினேழாவது

# இராமன் பிரமகத்தி நீங்கிய படலம்.

முனிவர்கள் வினவுதல்.

சூதபுராணிகரே! நீர் அருளிச்செய்த கதையாகிய அமுத பானத்தி னாலே எங்களுக்குத் திருத்தி யுண்டாகவில்லை. ஆதலால், மகா பாக்கிய சாலியே! ஓ சுவாமீ! நீர் தசரத குமாரனாகிய இராமன் முனீசுவர தல தரிசனத்தினாலே பிரமகத்தி நீங்கப்பெற்றுத் தன் அயோத்தி மாநகரத்தை அடைந்தானென்று முன் எங்களுக்குச் சுருக்கமாய்ச் சொன்னீர். இப் பொழுது அக்கதை முழுவதையும் எங்களுக்கு விரிவாய்க் கூறுவீராக என் று நைமிசாரண்ணிய முனிவர்கள் கேட்டனர்.

சூதர் விடை சொல்வது:—

முனிவர்களே! கவனத்தோடு கேளுங்கள். முன் சுருக்கமாய்ச் சொ ல்லிய சரித்திரத்தை இப்பொழுது விரிவாய்க் கூறுகின்றோம். இராமச் சந்திரன் அரக்கராசனாகிய இராவணனைப் போர் செய்து கொன்று, அவ ன் தம்பியாகிய விபீஷணனுக்கு அரசுரிமையைக் கொடுத்துத் தான் விரீ

ஷணனோடும் இலக்குமணன் சீதாபிராட்டி முதலானவர்களோடும் வானர சேனைகளோடும் புட்பகவிமானத்தில் ஏறிக்கொண்டு தன் அயோத்தி நகரை நோக்கிப் புறப்பட்டு வரும்போது பிரமகத்தியும் விடாமல் பின் தொடர்ந்து வந்தது. பிரமசாயை கருநிறமுடையதாய்க் கையில் தண்டமேந்திக்கொண்டு விகார முகத்துடன் இராமபிரானை விடாது பின்பற்றி வருத்தியது. இராமன் முனீசுவர தலத்தை யடைதலும் பிரமகத்தி விலகி விட்டது. அது கண்டு இராமபிரான் இது என்ன விந்தை! என்று அதிசயங்கொண்டு அவ்விடத்தைக் கவனித்தபோது அங்கே நந்தனவனங்களும் பூஞ்சோலைகளும் சிவதலமும் இருக்கக்கண்டு, விமானத்திலிருந்து பூமியிலிறங்கி முனீசுவரத்தை அடைந்து தீர்த்தத்தில் தோய்ந்து முன்னைநாதரைப் பூசித்து வணங்கித் துதித்தலும், அப்பெருமான் வடிவழகியம்பாளோடு இடபவாகனத்தின்மேல் தோன்றிக் காட்சி கொடுத்தார்.

## இராமன் முன்னைநாதரைத் துதித்தல்.

மான் மழு வேந்தியவராய் மோட்சவின்பந் தருபவராய்க் கருணையங் கடலாய்ச் சிட்டர்களிடம் பிரியம் உள்ளவராய்ச் சிவநிந்தையை நீக்குபவராய் வறுமையையுந் துக்கத்தையுந் தொலைப்பவராய் ஐந்தெழுத்தின் பொருளாய் விளங்கும் முன்னைநாதருக்கு நமஸ்காரம்.

சய சய தேவ மகாதேவ! சய சய தேவீ மகாதேவீ ! சய சய தேவருக்கு மேலோய்! சய சய சர்வசுரேசுவரீ! என்றிந்த விதமாய் இராமபிரான் துதித்து வணங்கி, தேவ தேவ! மகாதேவ! பத்தருக்கருள்வோய்! அடியேனுடைய பாவம் நீங்கும்படி கிருபை செய்க. தயாநிதியே! என்று வேண்டி நின்றனன்.

## ஈசுவரன் இராமனுக்கு அருளிச்செய்வது.

இந்தவிதமாய் இராமன் ஈசனை நோக்கிப் பிரார்த்தனை செய்து நிற்கும்போது அவனுக்குச் சிவபிரான் அருளிச்செய்கிறார்:—இராசேந்திரனாகிய இராமனே! நீ கேள். பிரயகத்தியினாலே விடுபடுவதற்குப் பிராயச்சித்த விதியால் சிவலிங்கம் பிரதிட்டை செய்வாய். சேதுமத்தியிலிருக்குஞ் சிங்கள தேசத்திலே சிவதலங்கள் பல உள்ளன. அவற்றுள் மூன்று தலங்கள் விசேடமானவை. அவை மகா பாதகங்களை நீக்குவனவாம். அம்மூன்றும் எவையெனில்—முனீசுவரமெனவுங் கோணேசுவரமெனவுங் கேதீச

வாமெனவுமுணர்க. இம்மூன்று தலங்களிலும் மூன்று லிங்கங்களைச் செய்து இராமநாதன் என்னும் பெயரினால் விதிப்படி பிரதிட்டை புரிந்து பத்தியினாலே சோடசோபசாரங்களோடும் பூசை செய்யக்கடவாய். அவ்விதம் செய்வாயேல், உன்னுடைய பாவங்கள் யாவும் முற்றும் நீங்கிவிடும் என்று சிவபிரான் அருளிச் செய்தார். அதற்கு இராமன் பிரபுவே! எந்தத் தானத்தில் மகாலிங்கம் பிரதிட்டை செய்வது? அருளிச் செய்தல் வேண்டும் என்றான். இதன் வடதிசையிலுள்ளதும் கங்கையினால் விளங்குவதும் ஆகிய மாருவதி யென்னும் புண்ணிய பூமியில் சிவலிங்கந் தாபிப்பது உத்தமம் என்று பரமசிவன் அருளிச்செய்து லிங்கத்தில் மறைந்தருளினர். சிவபிரான் அருளிச்செய்த இத்திருவாக்கைக் கேட்டு இராமன் மனச்சந்தோஷத்துடன் அச்சிவன் குறிப்பிட்ட தானத்தை யடைந்து விசுவகன்மனைக்கொண்டு ஓர் ஆலயங் கட்டுவித்து அதில் பொன்னாற் செய்யப்பட்டதும், பீடத்துடன் கூடியதும், இலக்கணம் அமைந்ததும், இராமநாதன் என்று பெயரிடப்பட்டதும், உத்தமமானதும் ஆகிய சிவலிங்கத்தினைச் சௌமிய வாரமும் ஜ்யேஷ்ட சுக்கில திருதியையும் புனர்வசு நட்சத்திரமுங் கூடிய சுபதினத்தில் சுபமுகூர்த்தத்தில் பரிவாரங்களுடன் பிரதிட்டை செய்தார்.

பின்பு, சுத்தி ஐந்துஞ் செய்து வேதங்களை யுணர்ந்த பிராமணர்களைக் கொண்டு சிவனுளிபாதத்தில் உற்பத்தியாகின்றதும் அதிநின்மல பரிசுத்தம் பொருந்தியதும் ஆகிய மாயாசுத தீர்த்தத்தைக் குடங்களிலெடுத்துவரச் செய்து வேதாளியங்கள் பரப்பி அவற்றின்மீது தீர்த்தகும்பங்களை வைத்து விதிப்படி பூசை செய்து பரிவார தேவர்களோடும் சிவனைப் பூசித்துச் செபம் ஓமம் முதலியவைகளையும் பிராயச்சித்த விதானத்தாற் செய்து முடித்து அபிடேகஞ் செய்து ஆவினைத்தாட்டித் திருவொற்றாடை சாத்தி ஆபரணங்கள் அணிந்து பூமாலை சூட்டிச் சந்தனஞ் சாத்தித் தூபதீபங் காட்டி நைவேத்தியம் நிவேதித்துப் பானீயங் கொடுத்துத் தருப்பணஞ்செய்து பதினாறுவகையுபசாரங்களோடும் பரமசிவனைப் பூசை செய்து இஷ்டமானவைகளைப் பிரார்த்தித்து வேண்டிய வரங்களையும் பெற்றான்.

பின், இராமன் பரிவாரங்களோடு திரிகோண சிகரத்தை அடைந்து ஜ்யேஷ்ட சுக்கில பஞ்சமியில் இரத்தின லிங்கம் பிரதிட்டை செய்தார். அதன்பின் திருக்கேதீச்சரத்திற்குப் போய் அங்கே ஜ்யேஷ்ட சுக்கில சத்

தமியில் வெள்ளி லிங்கம் பிரதிட்டை செய்தார். இந்த லிங்க மூன்றையும் நினைப்பவன் யாவனோ அவன் சிவசாயுச்சியமடைவான்.

சமுத்திரத்தின் வடகரையில் ஜ்யேஷ்ட சுக்கில தசமியும் அத்த நட்சத்திரமும் கூடிய சௌமிய வார சுபதினத்தில் சுபமுகூர்த்தத்தில் உலக நன்மையின் பொருட்டும் மகாபாதக நீக்கத்தின்பொருட்டும் உத்தமமாகிய மணலாற்செய்யப்பட்ட லிங்கத்தைத் தாபித்துப் பூசித்து வணங்கிக்கொண்டு தன் பரிவாரங்களோடும் புறப்பட்டு இராமபிரான் அயோத்திமாநகரஞ் சேர்ந்தான் என்று சூதமுனிவர் அருளிச்செய்தார்.

சூதர் சொல்வது:—

முனிவர்களே! கேண்மின். எல்லாவுலகங்களுக்கும் நன்மை செய்யும்பொருட்டுச் சுபமாகிய மாயாநதக் கரையில் இராமநாதன் என்னும்பெயருடைய சிவலிங்கம் இப்பொழுதும் இருக்கின்றது. மாயாநத தீர்த்தத்தில் விதிப்படி ஆடிப் பிதிரர்களுக்குத் தருப்பணஞ்செய்து தசதானங்களும் வழங்கி இராமலிங்கத்தை வணங்குபவன் சாயுச்சியப் பேறு அடைவான் என்பது சத்தியம்.

ஒரு மனிதன் தன் வாழ்நாளுள் இராமலிங்கத்தை நினைப்பானாயின், அவனுடைய பாவங்களெல்லாம் தொலையப்பெற்று, அவன் சிவலோகத்தில் மகிமை பெறுவான். இப்படலம் பரிசுத்தமும் பாவங்களைப்போக்குவதும் கலிதோஷங்களை நீக்குவதும் சுபந்தருவதுமாகும். இதனை ஒருமுறை கேட்பதால் இவ்வுலகத்தில் சர்வ சங்கடங்களும் நீங்கிச் சுகமாய் வாழ்ந்து சரீர முடிவில் மோட்சமும் அடையலாம்.

மாயாநத தீர்த்தத்தில் முழுகி இராமபிரான் தாபித்த இராமலிங்கத்தை வணங்குவோன் மனத்தில் நினைத்த போகங்களை யெல்லாம் அனுபவித்து முத்தியையும் அடைவான்.

## இராமன் பிரமகத்தி நீங்கிய படலம்

முற்றிற்று.

## பதினெட்டாவது
# சுயம்புநாதப் படலம்.

### முனிவர்கள் வினவுதல்.

வேதவியாசருக்கு மாணாக்கராய் மகாபாக்கியசாலியாய்ச் சருவ சாஸ்திரங்களையுங் கற்றுணர்ந்தவராய் விளங்குஞ் சூதரே! பாயிரத்திலே சுயம்பு க்ஷேத்திரம் என்று உம்மாற் கூறப்பட்டதன்றோ? அத்தல விசேடத்தையும் கேட்க விரும்புகின்றோம் என்று நைமிசவன வாசிகள் சூதரை வினவுதலும், சூதர் சுயம்புநாத க்ஷேத்திர மகிமையைச்சொல்லத்தொடங்கினர்.

முனிவர்களே! உங்களால் இப்பொழுது இக்கேள்வி நன்கு வினவப்பட்டது. ஆகையால், கேட்பதால் பாவங்களெல்லாவற்றையும் அழிப்பதாயும், தரிசிப்பதால் மோட்ச சாதனமாயும் விளங்குகிற சுயம்புநாத தலமான்மியம் நம்மால் இங்கே உங்களுக்குச் சொல்லப்படும். நீங்கள் யாவரும் அன்புடன் கேளுங்கள்: உத்தமமாகிய சுயம்புநாத க்ஷேத்திரமானது தட்சிணகைலாசமாகிய திருக்கோணமலைக்கு வடக்கு இராமசேதுவுக்குக் கிழக்கு ஆகிய இந்த எல்லைக்குள் இருக்கின்றது.

### வைரவன் சுயம்பு லிங்கத்தைக் கண்டது.

முன்னொரு காலத்தில் வைரவன் என்னும் பெயருள்ள வேளாளன் ஒருவன் மிகவுந் தரித்திரனாயும், வேளாண்மை செய்து சீவனஞ் செய்பவனாயும் இருந்தான். மக்களும் மனைவியும் தானும் தன் ஆடு மாடுகள் யாவற்றையும் தனக்குரிய வேளாண்டொழிலாற் பொருளீட்டிப் பாதுகாத்து வந்தான். ஒரு நாள் வைரவன் காட்டை வெட்டித் திருத்தித் தானியங்களை விளைதக்க எண்ணி, அதற்குரிய கோடாலி கத்தி மண்வெட்டி முதலானவைகளைக் கொண்டு காட்டை யடைந்து மரங்களையுங் கொடி செடிகளையும் வெட்டி யழித்து நெருப்பு மூட்டி அவைகளை யெரித்து அழித்தனன்; அப்படி அழித்தபோது ஓரிடத்தில் நடுவில் சிறிதிடம் எரியாமல் சுற்றி நாற்புறமும் எரிந்திருந்தது. அது கண்டு வைரவன் மிகவும் அதிசயங்கொண்டு சுற்றி எரிந்து நடுவே கொஞ்சம் இடம் எரியாமல்

ற்குக் காரணம் யாது என்பதை அறியுங் கருத்துடையவனாய் அந்த இட த்திலே போய்ப் பார்த்துக் கைக்கோடாலியால் ஒரு முறை வெட்டினான். வெட்டியபோது அந்த இடத்திலிருந்து இரத்தம் வெள்ளமாய்பெருகிற்று அவன் அங்கே கவனித்துப்பார்க்கவே அவ்விடத்தில் ஒரு சிவலிங்கமிருக்க வுந் தான் வெட்டிய வெட்டு அச்சிவலிங்கத்தின் சிரசிற் பட்டமையினாலே இரத்த வெள்ளம் பெருகிவருதலையுங் கண்டான்.

முனிவர்களே! கேட்பீராக. அவ்வேளாளன் உடனே அச்சங் கொண்டு இஃது என்ன அதிசயம்! என்று சிந்தித்தப் பின், இந்த விருத்தாந் தத்தைத் தன் சனங்களுக்குப் போய் அறிவித்தான். இவன் சொல்லக் கேட்ட சனங்களெல்லாரும் உடனே அவ்விடத்தை வந்தடைந்து சிவலிங் கமிருக்கவும் இரத்தம் பெருகி வடியவுங் கண்டு, மிகவும் ஆச்சரியப்பட்ட னர்; எங்களை ஈடேற்றும்பொருட்டன்றோ தயாநிதியாகிய சிவனே இவ் விடத்தில் வெளிப்பட்டார் என்று மனத்தில் சந்தோஷப்பட்டு ஒருவரோ டொருவர் பேசிக்கொண்டார்கள். பின் அவர்கள் யாவரும் தங்கள் தங்க ள் ஆபரணங்களைக் கழற்றி இவை சிவனுக்குரியவை யென்று சிவார்ப்ப ணஞ் செய்துவிட்டுத் தங்கள் அறிவுக்கேற்றவாறு பலவகையாகத் தோத் திரஞ்செய்து வலம் வந்து நமஸ்காரஞ் செய்து "ஓ! அன்பர்களுக்கு அநு க்கிரகஞ் செய்வதில் விருப்பமுள்ளவரே! அடியேம் அறியாமையினாலே செய்த குற்றங்களை யெல்லாம் பொறுத்தருள்க என்று மும்முறை கூறிப் பணிந்து விடை பெற்றுக்கொண்டு தங்கள் இருப்பிடஞ் சென்றனர்.

பு அந்த நாட்டை அரசு செலுத்தி வரும் வன்னிய ராசன் இவ்வதிசய சம்பவத்தைக் கேள்விப்பட்டு மந்திரிக்கு அநுமதி செய்ய மந்திரி போய் இவைகளை அறிந்து ஒரு சிவாலயங்கட்டுவிக்க எண்ணிச் சிற்ப நூலில் வல் லவர்களாகிய சிற்பிகளைத் தருவித்துச் சிவாகம விதிப்படி கருப்பக்கிரகம் அருத்த மண்டபம் மகாமண்டபம் முதலானவைகளையும் பிராகாரம் கோபு ரம் முதலானவைகளையும் பரிவாரதேவர் ஆலயங்களையும் அமைத்து ஆதி சைவப்பிராமணர்களைக் கொண்டு சித்திரை மாதத்தில் சித்திரா பௌர்ணி மையில் சோமவார சுபதினத்தில் நல்ல முகூர்த்தத்தில் பிரதிட்டை செய் து கும்பாபிடேகம் நடத்தி நித்திய பூசையும் நைமித்திய பூசையும் முறை ப்படி நடத்திவந்தான். எந்நாளும் பூசை திருவிழா நடைபெறும்படி வே ண்டிய விளைநிலங்களையுங் கிராமங்களையும் ஏற்படுத்தினான்.

தானே தோன்றிய காரணத்தினால் அந்த லிங்கம் தான்தோன்றிநாத லிங்கமென்று பெயர் பெற்றதெனவுணர்க. வன்னிய பூபதி தான்றோன்றியப்பருக்கு இவ்விதம் ஆலயங்கட்டிக் கும்பாபிடேகஞ் செய்து ஆதிசைவப்பிராமணர்களைக் குடி யிருத்தி நித்திய நைமித்திய காமிய பூசைகளைச் சிவாகம விதிப்படி நடத்தி அப்பூசைகளுக்கு வேண்டிய திரவியமும் விளைநிலங்களும் கிராமங்களும் சர்வமானியமாய் விட்டு என்றும் அழியாதபடி செய்து, தானும் புத்திர பௌத்திர சந்தானப் பெருக்கத்தோடு சுகமாய் வாழ்ந்தனன்.

முனிவர்களே! அவதானத்துடன் கேளுங்கள்! மேற்கூறிய வைரவனுந் தான்றோன்றிநாதர் மகிமையினால் அஷ்ட ஐசுவரியங்களோடும் புத்திர பௌத்திரர்களோடும் சுகமாய் வாழ்ந்து சிவலோகமெய்தினான்.

## அகத்திய முனிவர் பூசித்தது.

முற்காலத்தில் அகத்தியமுனிவர் இமயமலையரசன் புத்திரியின் திருக்கலியாணத்தின்போது பரமசிவனது அநுமதிப்படி பொதிய மலைக்குப் போகும் பயணத்தில் திருக்கோணமலையென்னுந் தெட்சிணகைலாசத்தை யடைந்து மாவலி கங்கையில் முழுகி விதிப்படி நித்திய நைமித்திய கன்மங்களை முடித்துக் கைலாச பதியை வணங்கித் துதித்து விடை பெற்றுக் கொண்டு அவ்விடமிருந்து புறப்பட்டு இந்தச் சுயம்புநாத க்ஷேத்திரத்தை யடைந்து சுயம்புலிங்கப்பெருமானைப் பூசித்து வணங்கிக்கொண்டு, பின்பு திருக்கேதீசுவர தலத்தை யடைந்து அங்கே சுவாமி தரிசனஞ் செய்து, பின் பொதியமலை அடைந்தார். ஆதலால் இத்தலத்துக்கொப்பாகிய தலம் உலகத்தில் இல்லை.

இப்படலத்தைப் படிப்பதால் எல்லாப் பேறுகளும் கிடைக்குமென்று சூதர் அருளிச்செய்தார்.

சுயம்புநாதப் படலம்

முற்றிற்று.

17

## பத்தொன்பதாவது

# நவசைலப்படலம்.

சூத முனிவர் சொல்வது:—

நைமிசாரண்ணியவாசிகளே! இப்போது உங்களுக்கு நவசைலமான்மியத்தைச் சொல்லுகின்றோம்; நீங்கள் எல்லீருங் கவனமாய்க் கேட்பீராக. நவசைலமானது யாழ்ப்பாணத்திலே அழகு வாய்ந்த புத்தூரென்னும் பதியிலே பூமிக்கு மேல் சிறிது உயரமாயும் ஐந்து குரோச விசாலமுள்ளதாயுமிருக்கின்றது. நவசைலத்தின்மேல் ஒரு குகையும் இருக்கின்றது. அது மங்களகரமானது. அதன் கந்தர மத்தியில் நீலரத்தினத்தினால் அலங்கரிக்கப்பட்டமையினால் அழகு வாய்ந்து விளங்கும் சிங்காசனத்தின்மீது விநாதரூபரும் தேவரும் தாரகப்பிரமமும் சாசுவதரும் உமாதேவியாருடன் கூடி யிருந்து உலகத்துக்குச் சுசஞ்செய்பவரும் ஆகிய சங்கார் இடப்பாகத்தில் விநாயகரும், வலப்பாகத்தில் சுப்பிரமணியரும், மற்றும் நந்தி பிருங்கி மகா காளர் ஐயனார் முதலானவர்களுஞ் சூழ்ந்திருக்க, மகாதேவராய் உலகங்களுக்கு அநுக்கிரகஞ் செய்யும் விருப்பத்துடன் எழுந்தருளியிருந்தனர்.

இவ்வாறிருக்குந் தருணத்தில் பாதாளத்திலுள்ள கங்காதேவி சிவனது ஆஞ்ஞைப்படி அதிக பிரவாகத்தோடும் இரைச்சலோடும் மீன்முதலிய நீர்வாழ்செந்துக்களோடும் தாமரைமுதலிய பலவகைப்புட்பங்களோடும் அலை சூழ்ந்த குமிழிகளோடும் மலையைப் பிளந்து அதிவேகமாய்த் தடாகத்தில் வந்து தோன்றி விளங்கினள். கருணையங்கடலாகிய மகேசுவரன் கங்கையின் தோற்றத்தைக் கண்டு, தமது திருக்கரத்தினால் அக்கங்கையை எடுத்து விந்து அளவு சடையில் தரித்துக்கொண்டு மிச்சத்தை மேலே விட்டு மங்களமுண்டாகுகவென ஆசீர்வதித்து அத்தேவதேவேசுவரன் கங்கா தரிசனத்தினால் வசஞ்செய்யப்பட்ட புத்தியுடையவராயினர். அவ்வுமை மணவாளர் இப்பொழுதும் அக்குகையிலிருக்கின்றனர். அந்த நவகிரிக்கொப்பு இதன் முன்னும் இல்லை; இனி உண்டாகப் போவது மில்லை. பராசரர் முதலான முனிவர்கள் பிரமநிஷ்டாபரர்களாய் அங்கே வசிக்கின்றார்கள். முனிவர்களே! வேறிடத்தில் வெகு காலத்தினால் சாதிக்கத்தக்கது அவ்விடத்தின் மகிமையினால் உடனே சித்தியாகும். யாவன் ஒருவன் தனது

* இஃது உலகவழக்கில் நவக்கிரி என்று வழங்கப்பட்டு வருகிறது.

வாழ்நாளின் இடையில் இக்கங்கையைப் பார்க்கின்றனே அவன் தன் நூறு கோடி குலத்துடன் சிவனோடு கூடி மகிழ்ச்சி யடைவான்.

அருத்தோதயம் பஞ்ச பருவம் மகோதயம் ஆவணி மாதம் தைப் பூசம் மாசி மகம் சந்திர சூரிய கிரகண முதலான புண்ணியகாலங்களில் ஸ்நான தான முதலியன செய்பவன் புலனொடுங்கிப் பரிசுத்தனாவான்; அவன் அடையும் புண்ணியப்பயன் இன்னதென்று சொல்லப் பிரமதேவனாலும் முடியாது இச்சரித்திரம் பாவத்தைப் போக்கும்; புண்ணியத்தை நல்கும்; நீண்ட வாழ்நாளும் உண்டாகும், இதனைப் படிப்பவருங் கேட்பவருஞ் சிவ சாயுச்சியம் பெறுவர்.

நவசைலப்படலம்

முற்றிற்று.

---

## இருபதாவது
# அசுவகிரிப்படலம்

சூதமுனிவர் சொல்வது:—

முனி, அசுவகிரியின் விசேடத்தைச் சொல்வோம்: முன் ஒருகாலத்தில் கைலாசபதியானவர் விளங்காநின்ற திருமுகங்களை யுடையவராய உலகத்தாருக்கு நன்மை செய்யும் விருப்பத்தினால் வேதமாகிய குதிரையைப் பார்த்துக் கூறுகின்றார்: வேத சொரூபமாகிய குதிரை யென்னும் பேரறிவுடையோய்! நீ உலகத்தாருக்கு இதஞ்செய்யும்படி நமது தெட்சிணகைலாச கிரிக்கு மேற்குத் திக்கில் பத்து யோசனை தூரத்தில் வாசஞ் செய்யக்கடவாய் என்று அம்பிகாபதியானவர் வேதக்குதிரைக்குக் கட்டளையிடவும், அக்குதிரையும் சிவனது ஆணையைச் சிரசின் மேல் தாங்கிக் குறிக்கப்பட்ட இடத்தை யடைந்து மலை வடிவமாய் அசுவகிரியென்னும் பெயருடன் இருந்தது. அறிஞர்களே! அக்கிரி மான்மியத்தை எடுத்துக் கூறுதற்கு நாம் வல்லமையுடையோமல்லோம்; அப்படியிருந்தாலும் அறிந்தவரையில் இப்போது உங்களுக்குச் சொல்லுகின்றோம்: சித்தர் முனிவர் சாத்தியர் விசுவதேவர் அச்சுவினிதேவர் வித்தியாதரர்முதலானவர்கள் அதில் எப்பொழுதும் வாசஞ்செய்கிறார்கள். சஞ்சீவனியும், அநேகமாய்

கண்டகிவடம் எனு மரங்களும், சோதிவடிவமாகிய மரங்கள் கருநெல்லி மரங்கள் வெள்ளரசமரங்கள் சுவான தருக்கள் சாயாவிருட்சங்கள் பஞ்சவர்ணக்கிளிகள் கபிலைப்பசுக்கள் முதலியனவும் இவை போன்றவை பலவும் அம்மலையில் உள்ளன. அவை இராத்திரிகாலத்திற் பல தீபங்கள் போல விளங்காநிற்கும். இவற்றுள் முக்கியமாகிய சில பொருள்களின் பயன் இன்னதென்று கூறுகின்றோம். மறையவர்களே! கண்டகி வடவிருட்சத்தின் பால் காயசித்தியைக் கொடுக்கும். சோதி விருட்சத்தின் பழத்தைக் குறித்துச் சொல்லுதற்கு நாம் வல்லமை யில்லாமலிருக்கிறோம். இராத்திரியில் எப்பொழுதும் கற்பாந்தத்திலுள்ள அக்கினியைப்போல விளங்கும். கருநெல்லிக்கனியை உண்பவன் காமரூபியாகுதல் திண்ணம். வெள்ளரசமரத்தின் பூசை சருவ தருமார்த்தங்களையுங் கொடுக்கும். சுவான தருவின் பாலை யுண்ணும் மனிதன் உடனே சித்த புருடன் ஆவன்; இவ்விஷயத்திற் சிறிதும் சந்தேகம் வேண்டாம்.

இந்தக் குதிரைமலையில் கருணைக்கடலாகிய மகேசுவரன் சித்தவேடமுடையவராய் இருக்கின்றார். அந்தணர்களே! அந்தச் சித்தவேடச்சிறப்பைக் கூறுகின்றோம் கேளுங்கள். கேயூர நூபுராதிகளினால் அலங்கரிக்கப்பட்ட இரண்டு திருவடிகளை யுடையவராய், புலித்தோலினாலே கௌபீனந் தரித்துக் கட்வாங்கம் விளங்குங் கரத்தினராய், திருவெண்ணீற்றை உத்தூளனமாக உடல் முழுதும் அணிந்தவராய், மகாமேருவைப்போல உன்னதமுடையவராய், பிரகாசிக்கின்ற சடைகளை யுடையவராய், மிகவும் பரிசுத்தமாகிய படிக குண்டலங்களினால் மனோகரமுடையவராய், புன்முறுவல் பூத்து விளங்குந் திருமுகத்தினராய், முல்லை யரும்பு போன்ற பற்களை யுடையவராய், வெண்மையாகிய என்புமாலை பூண்ட திருமேனியினராய், அரையில் விசித்திரமாகிய ஒட்டியாணந் தரித்துப பதினாறு வயசு கொண்டவராய், சௌம்மியராய், யோகபட்டந் தரித்தவராய், தட்சிண கரத்தில் பொற்பிரம்பு பிடித்து இவ்வித திருக்கோலங்கொண்டு உலகங்களுக்குச்சுகஞ்செய்பவராகிய சங்கரர் சித்தராய் அந்த அசுவகிரியில் வீற்றிருக்கிறார்.

சூதர் சொல்வது:—அந்த அசுவகிரிக்குச் சமமாகிய கிரி மூவுலகத்திலும் இல்லை. இதனைக் கேட்பவன் யாவனோ அவனும் இதனை நித்தியம் சொல்லுபவன் யாவனோ அவனும் உடனே சுகத்தையடைவர். நீண்ட ஆயுளையும் பெறுவர். ஆத்தும சம்பத்தையும் பொருளையும் அடைவார்கள்.

காட்டழலினாலும் கள்வராலும் புலிமுதலியவற்றாலும் சூழப்பட்டவர் அவற்றினின்றும் விடப்படுவார்கள். இது சத்தியம். இவ்விஷயத்திற் சந்தேகம் வேண்டாம் என்று சூதபுராணிகர் நைமிசாரண்ணியவாசிகளுக்கு அருளிச் செய்தார்.

அசுவகிரிப் படலம்

முற்றிற்று.

---

# இருபத்தொராவது
# வல்லிபுர வைபவ முரைத்த படலம்

சூதமுனிவர் சொல்வது:—

நைமிச வன வாசிகளே! இப்பொழுது உங்களுக்கு இலக்குமி விலாசமுள்ள வல்லிபுரம் என்னும் விட்டுணு தலத்தின வைபவத்தினைக் கூறுகின்றோம்; அவதானத்தோடு கேட்பீராக.

## விட்டுணு மீன் வடிவங்கொண்டு இரக்ஷா கங்கணம் எடுத்தமை.

ஆதி காலத்திலே பிரத்தியட்சமான கடவுளும் இலக்குமி நாயகரும் ஆகிய நாராயண மூர்த்தியானவர் இரணியன் என்னும் பெயலரயுடைய கொடியோனாலே வருத்தமடைந்த தேவர்கள் தங்களைப் பாதுகாக்கும்பொருட்டுக் கையில இராட்சா கங்கணங்கள் கட்டியிருந்தார்கள். இரணியன் தேவர்களின் செயலை அறிந்து தமது தூதர்கள் சிலர் வழியாக அக்கங்கணங்களை அபகரிக்க எண்ணங்கொண்டு தூதர்களை ஏவவும், அவ்வசுர தூதர்கள் தேவர்களுடைய கங்கணங்களை யெல்லாம் கடலில் எறிந்துவிட்டார்கள். தேவர்கள் கங்கணங் கிடைக்கும்படி பரமசிவனை நோக்கி முறையிடப் பரமசிவன் விட்டுணு மூர்த்திக்குக் கங்கணங்களை எடுத்துத் தேவர்களுக்குக்கொடுக்கும்படி அனுமதி செய்தார். அன்பர்களைக் காக்கும் பெரு விருப்பம் உடையவராய், வசுதேவருக்குக் குமாரராய், உலகங்களுக்குத் தலைவராய் விளங்கும் விஷ்ணுமூர்த்தியானவர் மீன் வடிவமுடையவராகி அசுர தூதர்களினாலே எறியப்பட்ட கங்கணங்களைக் கடலிலிருந்து எடுத்து வல்லிபுர தலத்தின் கடற்கரையில் வைத்துவிட்டுப் பின்னர் அவர் அக்கடலில் மறைந்துவிட்டார்.

## லவல்லி என்னும் மாது விஷ்ணுவாகிய குழந்தையைத் தொட்டிலில் நித்திரை செய்வித்தமை.

பின்னர் ஒரு நாள் அவ்விஷ்ணு மூர்த்தியானவர் ஒரு திருவிளையாட்டினால் வல்லிபுர தலத்துக்குச் சமீபமாய் வலைஞர்கள் மீன் பிடிக்கும்போது அவர்களுடைய வலைத்தொடரில் பிரவேசித்து மிக்க கோலாகலத் தொனி செய்தார். இதனைக் கண்டு வலைஞர்கள் அதிகங் கோபமடைந்து உலகங்களை இரட்சிக்கின்ற ஈசராகிய அந்த மீனைப் பிடிக்கும்படி விருப்பங்கொண்டார்கள். இந்த அதிசயமாகிய நிகழ்ச்சியை ஆனந்தத்தோடு பார்க்கும்படி சனங்களெல்லாரும் அங்கே வந்து நிறைந்தார்கள். முனிவர்களே! அந்த மீன் குதித்துக் குதித்து உலாவி லவல்லி என்னும் பிரசித்தப் பெயரையுடைய ஒரு கன்னிகையின் மடித்தலத்தில் மகிழ்வுடன் வந்து விழுந்தது. பின்பு, அவ்வேளையில் பேரொளியையுடைய மீனுருவைத் தரித்த விஷ்ணு மூர்த்தியானவர் மனிதப்பிள்ளைபோலத் தோற்றினார். அந்த லவல்லி என்பவள் சந்தோஷத்தோடு கூடியவளாகிப் பிரியத்தோடு அப்பிள்ளையை ஏந்திக்கொண்டு வெயிலினாலே மிகவும் வாடினவளாதலால், ஒரு மரத்தின் அடியிற் சென்று மகிழ்ச்சியோடு விரைவிலே தன் சேலையினால் தொட்டிலைச் செய்து, அத்தொட்டிலின்கண்ணே அக்குழந்தையைச் சயனிக்கச்செய்து தொட்டிலாட்டற்குரிய பாட்டுக்களைப்பாடி அப்பிள்ளையை நித்திரை செய்வித்தாள். இந்நிகழ்ச்சியைக் காண வந்தவர்கள் எல்லாரும் நல்ல ஆச்சரியமடைந்தவர்களாகி அக்குழந்தையைத் தரிசித்தார்கள். அறுகம்புல்லின் முளை போலும் பச்சையாகிய நிறமுடையவரும், பீதாம்பரமுடுத்தவரும், துளசி மாலை யணிந்தவரும், ஸ்ரீவற்சமென்னும் திருமறுமேவும் மார்புடையவரும், நான்கு புயங்களோடு கூடியவரும், இடக் காத்திற் சக்கரத்தையும் வலக்காத்திற் சங்கையுந் தரித்து ஆதிசேடனாகிய கட்டிலிற் சயனிப்பவரும், வரதத்தையும் அபயத்தையும் பொருந்திய கைகளையுடையவரும், ஊர்த்துவ புண்டரத்தினாலே அலங்காரமுடையவரும் என்று சொல்லப்படும் இவ்விதமாகிய இலக்குமி வாச திவ்விய விஷ்ணுவின் சுவயரூபத்தை அக்கன்னிகை தரிசித்து மோகமாகிய ஆகுலமுற்றாள். அறிவினாற் சிறந்த முனிவர்களே! இந்த அற்புத நிகழ்ச்சியை முறை முறையே ஒவ்வொருவர் வழியாகக் கேள்வியுற்று, உவப்போடு கூடி, அவ்வூரில் வாழ்கின்றவர்களெல்லாரும் அவ்விடத்திலே வந்து சேர்ந்தனர். அவர்களெல்லா

ரும் மகிமை யுடைய தேவரும் வாசுதேவரும் உலக நாயகரும் ஆகிய அக் கடவுளைத் தரிசித்தனர்; சந்தோஷ சாகரத்தில் அழுந்தி ஒருவரோடொருவர் தங்களுக்குள்ளே இவ்விதமாய்ப் பேசிக்கொள்வாராயினர்.

நாங்கள் தனவந்தராயினோம், நாங்கள் தனவந்தராயினோம், எங்களுக்கிரட்சிப்புண்டாகும் பொருட்டாகவே சங்கு சக்கரங்களைத் தரித்தவரும் தேவரும், பகவானும், உயிர்களைக் காப்பவரும் ஆகிய விஷ்ணுமூர்த்தி பிரசன்னமாயினர் என்று அன்புகூர்ந்து களிப்புடன் துதிக்கத்தொடங்கினர்.

மற்ச வடிவினருக்கு நமஸ்காரம், ஆமை வடிவினருக்கு நமஸ்காரம், பன்றி வடிவினருக்கு நமஸ்காரம்.

தேவர்களுக்குச் சுகங்கொடுப்பவருக்கு நமஸ்காரம், பிரமசாரியாகிய வாமன வடிவினர்க்கு நமஸ்காரம், சூரியவமிசத்தரசர்களையழித்த பரசுராம ராமாவதாரமானவருக்கு நமஸ்காரம்.

கலப்பைப் படையேந்திய பலராம ரூபருக்கு நமஸ்காரம், கிருஷ்ணாவதாரமானவருக்கு நமஸ்காரம். நரசிங்கரூபருக்கு நமஸ்காரம், கற்கி ரூபருக்கு நமஸ்காரம்.

இவ்விதம் பத்துப் பிறப்புடையவரும், வல்லிபுரத்தி லெழுந்தருளுகின்றவரும் ஆகிய தேவரீருக்கு நமஸ்காரம் தேவரீருக்கு நமஸ்காரம் தேவரீருக்கு நமஸ்காரம்.

எக்கடவுள் எல்லாவுயிருள்ளும் சூக்கும ரூபத்துடன் கலந்திருக்கின்றாரோ அப்படிப்பட்ட தேவரீருக்கு நமஸ்காரம்.

அன்பர்களைக் காப்பாற்றும் அருட்கடலாயுள்ளவரே! வணக்கம் வணக்கம்; தேவரீருக்கு வணக்கம் வணக்கம் வணக்கம்.

தண்டத்தையும் சங்கையுந் தரித்தவரே! தேவரீருக்கு வணக்கம் வணக்கம்; எப்பொழுதும் விரும்பியவைகளைக் கொடுக்கின்றவரே! தேவரீருக்கு வணக்கம் வணக்கம்.

பெரிய சக்கரத்தைத் தரித்தவரே! தேவரீருக்கு வணக்கம் வணக்கம்; மகரனே! எம்மாற் செய்யப்பட்ட எல்லாப்பிழைகளையும் பொறுத்தருளுக.

திருப்பாற்கடலில் துயிலுகின்றவரும், அகன்ற தாமரைக் கண்ணையுடையவரும் பெயர் மாத்திரம் மிச்சமாயிருக்கும்படி மகாபலிச்சக்கரவர்த்

தியின் வைபவங்களை யடக்கினவரும் பற்பல சராசரங்களைப் படைக்கும் பிரமதேவருதித்த உந்திக்கமலத்தை யுடையவரும் பரம புருடரும் ஆகிய தேவரீருக்கு நமஸ்காரம்.

முனிசிரேஷ்டர்களே! அச்சனங்கள் யாவரும் மகான்மாவும் பகவானும் சனங்களால் இஷ்டசித்திபெற வேண்டப்படுகின்றவரும் ஆகிய விஷ்ணுமூர்த்தியை இவ்வாறே துதித்துப் பெருமகிழ்ச்சி கூரு முள்ளத்தவராயிருந்தார்கள்.

பின்னர், இவ்வண்ணம் இருக்கும்போதே பகவானும் இலக்குமிக்கு நாயகரும் ஆகிய விஷ்ணுமூர்த்தியானவர் எல்லாவுலகத்தாருங்காண மறைந்து முன்போல மச்சரூபமுடையவராகிக் கடலினுள் மூழ்கினார். அங்கு நின்ற அவர்களெல்லாரும் மயக்கமாகிய வியாகுலமடைந்தவர்களாகி அருமையான தவத்தைச் செய்தார்கள்.

## வல்லிபுர தல சக்கரப் பிரதிஷ்டை வரலாறு.

இந்த நிகழ்ச்சியை உத்தம தேவராகிய விஷ்ணுமூர்த்தி திருவுள்ளத்தட்கொண்டு, ஒரு பிராமணவடிவங்கொண்டு அங்கே எழுந்தருளி அத்தவத்தினரை நோக்கி இவ்வாக்கை அருளிச்செய்வாராயினர். தவச்செயலால் மகிமை பெற்ற அன்பர்களே! நீங்கள் அஞ்சவேண்டாம்! இஃது உங்களுக்குக் கொடுக்கப்படுகின்றது; எல்லாப் படைக்கலங்களினுஞ் சிறந்தோங்கும் இச்சக்கராயுதத்தை மிக்க பிரீதியுடன் நல்ல சுபதினத்தில் சுபலக்கினத்தில் சுபமுகூர்த்தத்தில் விதிப்படி பிரதிட்டை செய்து நித்திய நைமித்திக காமிய பூசைகளை நடத்தி வழிபடக்கடவீர். முனிவர்களே! இச்சக்கராயுதத்தைப் பூசித்தால் விரும்பிய எல்லாவற்றையும் நீங்கள் அடைவீர்கள் என்று கூறி அந்தப் பிராமணோத்தமர் மறைந்தனர். அறிஞர்களே! அவர்கள் யாவரும் பேராசை யுடையவர்களாய் அடிக்கடி விஷ்ணுமூர்த்தியைத் துதித்துத் துதித்துச் சக்கராயுதத்தை வாங்கிக்கொண்டு விரைவிலே மகிழ்வோடு நகரை யடைந்து ஓர் ஆலயத்தை அமைத்து விதிப்படி சக்கராயுதத்தைப் பிரதிட்டை செய்து முறை தவறாது பூசை நடத்திப் புத்திர களத்திரங்களோடும் திரவிய சம்பத்துக்களோடும் மிக்க பத்தியுடையவர்களாய் எல்லாரும் அந்நகரிலே வாழ்ந்திருந்தனர்.

# வல்லிபுரத்தில் லவல்லி நாக சாபம் நீங்கிப் புத்திரப் பேறு பெற்றது.

## முனிவர்கள் வினவுதல்.

சகல சாத்திரங்களின் பொருளுண்மை யுணர்ந்த சூதரே! விஷ்ணுபகவான் மச்சரூபமாகிக் கன்னிகையின் மடித்தலத்திற்சென்று யாது காரணத்தினாலே தங்கினார்? அவளுடைய மடித்தலத்திலே திருமகள் நாயகராகிய விஷ்ணுமூர்த்தி குழந்தை யுருவமாகியுந் தங்கினாரல்லவா? அக்காரண முழுவதையும் அவள் வைபவத்தையும் சாதுவே! முனிசிரேட்டரே! விரிவாக எங்களுக்குச் சொல்லியருளல்வேண்டும் என்றிவ்வாறு முனிவர்களாலே கேட்கப்பட்ட சூதர் அவர்களை நோக்கிச் சொல்வாராயினர்.

முனிவர்களே! முன் ஒருகாலத்தில் லவல்லி யென்னும் பெயரையுடைய சிறந்த ஒரு கன்னிகையானவள் வைசியகுலத்திற் பிறந்தவள்; பேரழகமைந்த யௌவனப்பருவத்தை யுடையவள்; நெடுங்காலமாகப் புத்திரப் பேறில்லாது மலடியாகி யிருத்தலால், மிகவும் மனக்கவலை யுடையவளாகி, அக்காரணத்தை யறியாதவளாகித் தபோநிதியாகிய பிருகுமுனிவரைச் சென்றடைந்தாள். அக்கன்னிகை முனிவரை நோக்கிப் பகவானே! அநேக சாத்திரங்களினுண்மை யுணர்ந்த அறிஞர்களுட் சிறந்தவரே! எக்காரணத்தினால் நான் புத்திரப்பேறு அற்றேன்? என்ன பாவத்தைச் செய்தேன்? கற்புத்தியுடையவரே! எனக்கு மகிழ்ச்சியை வளர்க்குங் குருவே! அக்காரணங்கள் எல்லாவற்றையும் எனக்குச் சொல்லியருளுக என்று அக்கன்னிகையினாற் பிரார்த்திக்கப்பட்டவராய், பிருகு முனிவர் அவளை நோக்கிப் பிரீதியுடன் விடை கூறுவாராயினர்.

பிருகு முனிவர் அக்கன்னிகையை நோக்கி, அழகிய புருவத்தையுடையவளே! அக்காரணத்தை யுணர்த்தும் என் வசனத்தைக்கேள்; நீ முற்பிறப்பிலே அறியாமையினாலே ஒரு பாம்பைக் கொன்றாய்; அந்தப் பாம்பின் சாபத்தினால் உனக்கு இம்மையில் மலட்டுத்தன்மை வந்தது. மங்களகாமுள்ள பெண்ணே! அந்நாக சாபத்தினால் நீ ஏழு ஜென்மம் வரையில் இப்படி மலடியாகவே யிருப்பாய்; அந்நாகசாப தோஷந் தீரும்பொருட்டுப் பரமசிவனைச் சிந்தித்துத் தவஞ்செய்யக்கடவாய். இக்குற்றத்தைத் தீர்க்க வல்லவர் பரமசிவனேயன்றி வேறொருவரும் இல்லை. மிக்க கடோமாகிய

தவச்செயலால் பரமசிவன் பிரசன்னராவார்; அவருடைய தரிசனங்கிடைத்தபோதே உன்னை அச்சாபத்தினின்று நீக்கியருளுவர்; இது நிச்சயம்.

முனிசிரேட்டர்களே! பிருகுமுனிவர் இவ்வாறு உபதேசித்து மௌனியாயினர். கன்னி மிகவு மகிழ்வடைந்து நல்ல மங்களகரமாகிய தவச்சாலையை மிக்க வேகத்தோடு சென்றடைந்து சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்தாள். அவளுடைய கடுந்தவத்தினாலே சிவபிரான் இனிது பிரசன்னராயினர். சிவபிரான் கன்னிகையை நோக்கிப் பெண்ணே! உனக்கு விருப்பமான வரம் யாது? அதனை நீ சொல்லுக; எம்மிடத்திலிருந்து பெற்றுக்கொள்க என்றலும், இதனைக் கேட்டமாத்திரத்தே அக்கன்னி பிரீதியடைந்து, தோத்திரம் பிரதட்சிணம் நமஸ்காரம் என்னும் இவைகளை அன்புடன் செய்து பரமசிவனை நோக்கி, பகவானே! இறந்தகால எதிர்காலங்களிலும் ஆளுந்தன்மை யுடையவரே! அன்பர்களைக் காத்தருளும் பற்றுடையவரே! விபுவே! கொடிதாகிய நாகசாபத்தினால் நான் புத்திரப்பேறு அற்றவளாயினேன்; அச்சாபந் தீரும்பொருட்டுத் தேவரீரே அடியேனுக்குப் புகலிடம்; இதுவே எனக்கு விருப்பமான வரம்; ஆதலால், எவ்வுயிர்க்குஞ் சுகத்தை யுதவும் பெருமானே! அவ்வரத்தை அடியேனுக்குத் தந்தருளுக என்றிவ்வாறு அக்கன்னிகை புத்திரசோகத்தால் சிவபிரானைப் பிரார்த்தித்தாள். முனிவர்களே! பகவானும் அன்புடையார்பாற் பட்சமுடையவரும் கருணாசமுத்திரமும் ஆகிய சிவபிரான் அவன் வசனத்தைக்கேட்டு அக்கன்னிகையைப் பார்த்து அருள் செய்தார்.

சிறுமியே! தனியே புத்திரப்பேறேதுவாக நீ வருந்தவேண்டாம். வல்லிபுரம் என்னும் பெயருள்ள தலத்தில் வல்லி என்னும் பிரசித்த நாமமுள்ளவளாய்ப் பிறந்திருக்கக்கடவாய். பெரும் பாக்கியவதியே! நீயும் உலகத்திலுள்ள அறிஞர் யாவராலும் மதிக்கப்படுவாய் அப்போது பகவானும் வாசுதேவரும் தேவ உத்தமரும் ஆகிய விஷ்ணுமூர்த்தியானவர் தேவகாரியத்தை முடிப்பது காரணமாக மச்ச வடிவந் தாங்குவர்; அப்போது அவர் மச்ச வடிவத்தோடு வேகமாய் உன் மடித்தலத்திற் பாய்ந்திருப்பர்; அவ்விட்டுணுமூர்த்தி பின்னர் உன் மடித்தலத்தில் குழந்தைவடிவமுடையவராவர்; அவருடைய வடிவத்தைத் தீண்டியபோதே நாகசாபந்தீரும். பின் நீ வேறிடத்தில் இம்மையிலேயே வெகு புத்திரர்களோடும் தனதானிய முதலிய சம்பத்துக்களோடும் வாழ்ந்திருப்பாய். இதிற் சந்தேகமேயில்லை என்று

இவ்வாறு தேவதேவராகிய சிவபிரான் திருவாய்மலர்ந்து மறைந்தருளினர் சூதமுனிவர் பின்னும் அவர்களை நோக்கி முனிசிரேஷ்டர்களே! அக்காரணத்தினாலே விஷ்ணுமூர்த்தி மச்சவடிவந் தாங்கினர்; அம்மச்சம் லவல்லிமடியிற் பாய்ந்திருந்தது. பின் முனிவர்களே! அவனும் புத்திர பௌத்திராதி பாக்கியங்களுடன் பொருந்தியவனாய் இவ்வுலகத்திலே இம்மைச்சுகமனைத்தையும் அனுபவித்துத் தேகமுடிவிலே முத்தியையும் அடைந்தான்.

எந்த மனிதன் சென்மமத்தியில் வல்லிபுர மகாதலத்தைப் பார்க்கின்றானோ, அல்லது அதில் வசிக்கின்றானோ, அல்லது அதன் பெருமை முழுவதையும் வாயினாற் சொல்லுகின்றானோ, பஞ்சபர்வங்களிலும் ஸ்ரீஜயந்தியிலும் மற்றும் விசேடகாலங்களிலும் பத்தியோடு பரிசுத்த மனமுடையவனாய்த் தரிசிக்கின்றானோ அவனுக்கு மரணபயம் இல்லை. அவனுக்குச் சரீராரோக்கியம் உண்டாகும். இது நிச்சயம். அவன் இவவுலகத்திலே சுகமனுபவித்துத் தேகாந்தத்தில் விஷ்ணுபதம் அடைவான் என்று நைமிசாரணிய வாசிகளுக்குச் சூதபுராணிகர் திருவாய் மலர்ந்தருளினர்.

## வல்லிபுர வைபவ முரைத்த படலம் முற்றிற்று.

---

## இருபத்திரண்டாவது
# பொன்னாலயப் பெருமை உரைத்த படலம்.

சூத முனிவர் சொல்வது:—

இனி, * பொன்னாலயப்பெருமை நம்மாற் கூறப்படும். மேன்மை பொருந்திய மறையவர்களே! கேளுங்கள். முன் ஒரு காலத்திலே மீன் பிடிக்குந் தொழிலையுடைய வலைஞன் ஒருவன் பொன்னாலயம் என்னும் பதிக்கு மேற்கிலிருக்குஞ் சமுத்திரத்தில் மீன் பிடிக்கும் தன் தொழிலைச் செய்ய நிச்சயித்து ஒருமுறை வலையை வீசினான். அப்பொழுது அவன் வலையினாலே ஒரு ஆமையை அடையப்பெற்றவனாய்க் கரையைச் சேர்ப்பிக்க மிகவுங் கஷ்டப்பட்டும் மேலே தூக்கிக்கொள்ள முடியாதவனா

* பொன்னாலயம் என்பதைப் புன்னாலையென வழங்குவர்.

கிப் போரச்சரியமடைந்து அவ்வூரிலுள்ள தன் சாதியினராகிய வலைஞர்க களைக் கண்டு அதனை அறிவிக்க நினைத்து அங்கே போய் நிகழ்ந்த விருத்தாந்த முழுவதையும் அவர்களுக்கறிவித்தான். அவனாற் கூறப்பட்ட வாக்கியத்தைக்கேட்டு அங்குள்ள சனங்கள் யாவரும் மகிழ்ச்சி கொண்டவர்களாய்ச் சமுத்திரக்கரையை யடைந்து அவ்வதிசயத்தைக் கண்டார்கள்.

அச்சமயத்தில் ஆகாய மார்க்கத்தில் பொன்னொளி வீசும் விமானம் ஒன்றைக் கண்டு அதிசய நிறைந்தவர்களாய், பின் நிலையான மனத்தோடு ஆமையின் பக்கத்தை விரைவாய்ச் சென்றடைந்து பார்த்தசமயத்தில் அவ்வாமை கல்லாயிருத்தலைக் கண்டு, அவர்கள் எல்லாரும் அடிக்கடி ஒருவரோடொருவர் பின் வருமாறு பேசிக்கொண்டார்கள். "இஃது என்ன அதிசயம்! இஃது என்ன அதிசயம்! என்று மோகங்கொண்டு, பின் நிச்சயஞ் செய்து எல்லாரும் ஒன்றாய்க் கூடிப் பேசி முடிவு செய்தனர். எப்படியெனில்:—இந்த மேலாகிய ஆமையோ இலக்குமி பதியே; காணப்பட்ட விமானமும் அவருடையதேயாம். இதில் சிறிதும் ஐயமில்லை. ஆதலால் இனிச் செய்யவேண்டிய காரியம் அதன் பிரதிட்டைக்குரிய க்ஷேத்திரம் இந்த இடத்திலேயே ஏற்படுத்தி நல்ல நாளில் நல்ல இலக்கினத்தில் நல்ல முகூர்த்தத்தில் உத்தம பிராமணர்களைக் கொண்டு வந்து வைகானச தந்திர விதிப்படி பிரதிட்டை செய்யும் காரியத்தை இப்பொழுதே செய்வோம் என்பது.

சூதர் சொல்வது:—

பிராமண சிரேட்டர்களே! இந்தவிதமாய் அவர்கள் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு, பின் தங்கள் தங்கள் இடத்தை யடைந்து சிற்ப நூலில் கைதேர்ந்த பேரறிஞர்களைக் கொணர்ந்து இடம் வகுத்து ஆலயங் கட்டி முடித்து விட்டு பிரதிட்டை செய்யும் ஆசாரியர்களான வைணவ ஆசாரியர்களைத் தருவித்து விதிப்படி பிரதிட்டை செய்து வரதராசப் பெருமான் என்று திருநாமகரணஞ் செய்தார்கள்.

முனிபுங்கவர்களே ! பொன்னுலயேசன் கிருபையினாலே அதிகம் சந்தோஷங்கொண்டவர்களாய் நித்திய பூசையையும் நைமித்திக பூசைகளையும் ஏற்படுத்தி நடத்தி வந்தார்கள். பின்னர் அவ்வலைஞர்கள் எல்லாரும் பொருட்செல்வத்தினாலும் விளைநிலச்செல்வத்தினாலும் நிறையப்பெற்று, அந்த ஊரில் சுகத்துடன் வாசஞ்செய்தார்கள். மேலும், அவர்கள் எண்

ணியவைகளை யெல்லாம் அனுபவித்துப் புத்திரபௌத்திரர்களோடுகூடச் சுகமாய் வாழ்ந்திருந்தனர். இங்கே சொல்லப்பட்ட இவைகளெல்லாம் சத்தியம்! சத்தியம்!!

இவ்விதம் சூதமுனிவரால் சொல்லப்பட்டபோது நைமிசாரண்ணிய வாசிகள் சந்தேகங்கொண்டு அச்சூதமுனிவரை வினவுகின்றனர்: வியாசருடைய மாணுக்கரே! பேரறிவுடையவரே! கலைசரித்திரம் உம்மால் கூறப்பட்டது. பிரபுவும் பகவானுமாகிய விட்டுணு ஏன கூர்மாவதாரம் எடுத்தார்? தாசனுடைய வலையினால் கட்டப்பட்டாரே! அவ்விதம் கட்டினவன் யாவன்? சொல்லப்பட்ட விமானம் யாருடையது? இவைகளையெல்லாம் விரிவாய் எங்களுக்கு அருளிச்செய்தல் வேண்டும்.

சூதமுனிவர் விடை கூறுவது:—

இவ்விதம் நைமிசாரண்ணிய வாசிகள் கேட்ட வினாக்களைத் தாம் கேட்டுத் தலையை யசைத்துக்கொண்டு அவர்களைப் பார்த்துக் களிப்புடனே விடை சொல்ல ஆரம்பித்தார்.

மறையவர்களே! அவதானமாகிய மனத்தோடு கேளுங்கள். முன் ஒரு காலத்திலே துருவாசமுனிவன் இட்ட சாபத்தினால் நீசத்தன்மையடைந்த இந்திரன் சாபவிமோசனத்தின்பொருட்டு அம்முனிவன் திருவடிகளை யடைந்து, ஓ பகவானே! அத்திரிமுனிவன் குலத்திற் பிறந்தோய்! நான் செய்த பிழையைப் பொறுத்துக்கொள்க; என் சாபம் நீங்கும்பொருட்டு ஒருபாயங் கூறியருள்க. நல்லவிரதமுடையோய்! என்றிவ்வாறு இந்திரனாற் பிரார்த்திக்கப்பட்ட முனிவருள் மேலாகிய துருவாசர் தன்னைப் புகலடைந்த இந்திரனைப் பார்த்து மிகவுங் களிப்புடையவனாகி ஓ இந்திரனே! நீ உன் சாபவிமோசன காரியத்தில் துக்கம் அடையவேண்டாம்; சேது மத்தியிலிருக்கும் சிங்களதேசத்திலே பொன்னாலயமென்னும் பட்டணத்திலே வலைஞர் குலத்திலே நீ பிறப்பாய். இஃதுண்மை. சந்தேகம் வேண்டாம். ஜனார்த்தனராகிய வாசுதேவர் ஒரு காலத்திற் கூர்மாவதாரஞ்செய்வார்; உன்னால் வலையினாலே அக்கூர்மம் கட்டப்படும்; இது மெய்; அந்த ஆமையின் அங்கந் தீண்டப்பட்டவுடனே நீ சாபத்தினால் நீங்கப்பெறுவாய் என்று கூறித் துருவாசமுனிவர் விரைவில் தன் இருப்பிடத்தை நோக்கிச்சென்றார்.

பின், துருவாசர் இட்ட சாபத்தினாலே இந்திரன் வலைஞனாய்ப்பிறந்தான. மகா பாக்கியசாலிகளே! இந்திரனாகிய வலைஞனாலேயே கூர்ம வேடங்கொண்ட விட்டுணு வலையினாற் கட்டப்பட்டனர். அறிஞனாகிய வலைஞனுடைய சாபமானது விரைவாய் விஷ்ணுவாகிய ஆமையின் அங்கந் தீண்டப்பட்ட மாத்திரத்தினாலேயே நீங்கிவிட்டது. பின்பு, விஷ்ணு ஆமை வடிவு நீங்கித் தன் வடிவங் கொண்டு விமானத்தை அடைந்தனர். காணப்பட்ட விமானம் இந்திரனுடையது; அவ்வலைஞனும் இந்திரனே. அந்தணர்களே! இவ்வேளையிலே கூர்மாவதாரங்கொண்ட விஷ்ணுவானவர் அறிஞனாகிய வலைஞனுக்குத் தன் சொரூபத்தைக் காட்டிக் களிப்போடும் ஆசீர்வாதம் செய்து மறைந்தருளினார். அவ்விஷ்ணுவின் திருவடிச் சுவடு அவ்விடத்திலேயே இருக்கின்றது; இது மிகவும் பரிசுத்தமானது. (இதற்குத் திருவடி நிலை என்று பெயர்.)

ஆகையினாலே, உங்களுக்குண்டாகிய சந்தேகம் நீங்க நம்மால் நன்கு விளக்கிக் கூறப்பட்டது. அந்தணர்களே! இனி, நீங்கள் சந்தேகத்தினின்றும் நீங்கிக் களிப்போடிருங்கள்.

இப்படலம் விரும்பிய பேறுகளை யெல்லாந் தரும். சிராவணமாசம் கிருஷ்ண பட்சம் அட்டமியாகிய விசேட தினத்தில் பொன்னாலயத்திலே வாசஞ் செய்பவரும் லோக ரட்சகரும் ஆகிய அச்சுதப் பெருமாளை யாவன் ஒருவன் அன்புடையவனாய்த் தன் சென்ம காலத்தினுள் தரிசனஞ் செய்வானேல், அவனுடைய பாவங்கள் அக்கினியினாலே எப்படிப் பஞ்சுப் பொதி அழியுமோ அப்படிப்போல அழிந்துவிடும். அவன் புத்திர பௌத்திரர்களோடு கூடினவனாய்த் தீர்க்காயுளையும் அடைந்து இம்மையிலேயே சகல போகங்களையும் அனுபவித்து வைகுண்டபதியின் கிருபா நோக்கத்தினாலே மறுமையில் வைகுண்ட லோகத்தை யடைந்து விட்டுணுவுடன் களிப்புற்று வாழ்வான் என்று சூதமுனிவர் கோமதி நதி தீரத்திலே நைமிச வன வாசிகளுக்கு அருளிச்செய்தார்.

## பொன்னாலயப் பெருமையுரைத்த படலம்

முற்றிற்று.

**தட்சிண கைலாச புராணத்தில் 22 அத்தியாயங்கள் முடிந்தன.**

# புத்தக விளம்பரம்.


இப்புத்தகம் பெற விரும்புவோர் சங்கானையில் சச்சிதானந்த அச்சுக் கூடத்திலும், யாழ்ப்பாணம் திருநெல்வேலிச் சிவன்கோவில் அருச்சகர் ஸ்ரீமத் ச. சபாபதிக்குருக்கள் அவர்களிடத்திலும், வண்ணார்பண்ணைச் சிவன்கோவிலடியில் சண்முகநாதன் புத்தகக்கடையிலும், தேவகோட்டையில் மெ. லெ. ராம. வீட்டிலும், அடியிற் கண்ட விலாசத்திற்கு எழுதி நம்மிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| இதன் விலை ரூபா | 1 | 50 |
| கிரந்தம் ஷெ | 2 | 00 |
| கதிர்காம புராணம் | 0 | 75 |
| சந்தியாவந்தன ரகசிய | 0 | 25 |

இப்படிக்கு

வித்துவான் - சி. நாகலிங்கபிள்ளை,

வதிரி, கரவெட்டி போஸ்ட, யாழ்ப்பாணம்.


V · S · V · PRESS

இதனை யான் தமிழில் மொழிபெயர்த்து இருபது ஆண்டுகள் சென்றன. வடமொழிப்புராணம் 138ஆம் பக்கத்தில் உள்ள 27ம் சுலோகம் வடமொழி இராமாயண சம்புவிலிருக்கின்றது. மேற்படி புராணம் 64ஆம் பக்கம் 8ம் அத்தியாயம் 39ம் சுலோகமுதல் ஸ்நான விதி கூறும் பகுதிச் சுலோகங்களுட் சில வைத்திய நாத தீட்சிதீயத்தில் ஆன்கிக காண்டத்திலே ஸ்நான விதியுரைக்குமிடத்திலிலுள்ள சுலோகங்களா யும் இருந்தன; இவைகளைப் பார்த்தவுடன் எனக்கு மனக்குழப்பம் அதிகமாய்விட்டது. காலஞ்சென்ற கொழும்பு குமாரசுவாமிக்குருக்கள் தந்த பிரதியில் பதினைந்தாம் அத்தியாயத்தின் முடிவில் பத்துச் சுலோகங்களை எழுதி இவ்வாறு உமாசங்கிதையிலே காணப்படுகின்றன என்றும், அதன் மேல் இருபத்து மூன்று சுலோகங்களை எழுதி இவ்வாறு இராமேசுவர தலமான்மியத்திற் காணப்படுகின்றன என்றும் அதன் மேலும் வேறு ஐந்து சுலோகங்களை வரைந்து இவையும் உமாசங்கிதையிற் காணப்படுகின்றன என்றும் முப்பத்தெட்டுச் சுலோகங்கள் எழுதப் பட்டிருந்தன. இவைகளையும் இவை போன்ற வேறு சிலவற்றையும் நீக்கிவிட்டேன்.

- சி. நாகலிங்கபிள்ளை

ISBN978-955-08775-6-0

9789550877560

Guru Printers, Thirunelvely